
# நித்திலம்

# නිත්තිලම්

## 2015 / 2016



வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை
CSDI பிரிவு வெளியிடும் வருடாந்த சஞ்சிகை.

කලාප අධ්‍යාපන කාර්යාලය - ත්‍රිකුණාමලය
CSDI කොට්ඨාසය ඉදිරිපත් කරන වාර්ෂික සඟරාව

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/ Vipulananda Co.
SCHOOL LIBRARY
RESOURCE CENTRE
TRINCOMALEE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நித்திலம்

# නිත්තිලම්

## 2015 / 2016

**வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை**

CSDI பிரிவு வெளியிடும் வருடாந்த சஞ்சிகை

**කලාප අධ්‍යාපන කාර්යාලය - ත්‍රිකුණාමලය**

**CSDI** කොට්ඨාශය ඉදිරිපත් කරන වාර්ෂික සඟරාව

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பு விபரம்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு .N. விஜேந்திரன்<br>(வலயக் கல்விப் பணிப்பாளர்) |
| பதிப்பாசிரியர் | : | திரு. R. நிமலரஞ்சன்<br>(உதவிக் கல்விப் பணிப்பாளர் – அழகியல்) |
| உதவிப் பதிப்பாசிரியர் | : | திரு. K. செல்வநாயகம்<br>(கோட்டக் கல்விப் பணிப்பாளர் – திருகோணமலை) |
| ஆலோசகர் | : | திரு. K. அரியநாயகம்<br>(பிரதிக் கல்விப் பணிப்பாளர் – நிர்வாகம்) |
| | : | திருமதி .S. வரதசீலன்<br>(பிரதிக் கல்விப் பணிப்பாளர் – அபிவிருத்தி) |
| | : | திருமதி. M. பாலகுமார்<br>(பிரதிக் கல்விப் பணிப்பாளர் – திட்டமிடல்) |
| | : | திரு. S. சிறிஸ்கந்தா<br>(பிரதிக் கல்விப் பணிப்பாளர் – முகாமைத்துவம் ) |
| | : | திருமதி. D.H. மாலினி<br>(பிரதிக் கல்விப் பணிப்பாளர் – சிங்களம்) |
| | : | திருமதி. N.S. திரவியநாதன்<br>(நிர்வாக உத்தியோகத்தர்) |
| | : | திருமதி .R. அமிர்தலிங்கம்<br>(ஆசிரிய ஆலோசகர் - இந்துசமயம்) |
| | : | திருமதி. I. ரகுந்திரராஜா<br>(ஆசிரிய ஆலோசகர் – தமிழ்மொழி) |
| | : | செல்வி. T. சாரதா<br>(ஆசிரிய ஆலோசகர் – சமூக விஞ்ஞானம்) |
| | : | திருமதி. V. ஜெயகணேஸ்<br>(ஆசிரிய ஆலோசகர் – நடனம்) |
| | : | கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் |
| | : | உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் |
| | : | ஆசிரிய ஆலோசகர்கள் |
| | : | வலயக் கல்வி அலுவலகர்கள் |
| நிதி நிர்வாகம் | : | திரு. J. அன்ரன் நிமலேஸ்<br>(கணக்காளர்) |
| உதவி அலுவலகர்கள் | : | திருமதி. F. முஸம்மில்<br>(அபிவிருத்தி உத்தியோகத்தர்) |
| | : | திருமதி. F. வித்தியா தீபராஜ்<br>(அபிவிருத்தி உத்தியோகத்தர்) |
| | : | திருமதி. G. சிவகுமார்<br>(முகாமைத்துவ உதவியாளர்) |
| | : | திரு. K. ராஜா<br>(அலுவலக உதவியாளர்) |
| அச்சுப் பதிப்பு | : | New Sky Printers |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை கல்வி வலயக் கீதம்

வாழ்க.....................வாழ்கவே!
எங்கள்திருமலைக்கல்விவலயம்
வாழ்க...............வாழ்கவே!

பழி இழிபாவ இருள்மறைந்திடவே
தமிழர், சிங்களவர், முஸ்லீம், பறங்கியரும்
அன்போடுஒன்றாய்விழித்தெழுந்திடவே
வாழ்க...............வாழ்கவே!

(எங்கள் திருமலை)

மறிகடலோதம்எழில்நலம்பெருகி
அறிவொளிமாந்தர்அனுதினம்ஊட்டும்
சாகித்ய இசை மலை வான்புகழோங்க!
வாழ்க...............வாழ்கவே!

(எங்கள் திருமலை)

உடலுறு கல்வி உயர்வுடன் ஈந்து
உள்ளங்களெல்லாம்உன்னதம்பெறவே
சீர்பெறஉழைக்கும்திருமலை வலயம்
வாழ்க...............வாழ்கவே!

(எங்கள் திருமலை)

புலன்வழிக்கல்வி பயனுற அளிக்கும்
வினைத்திறன்உறுதிவிளைந்திடும்சமூகம்
கதிரொளிதீபம்கொழித்திடும்திருமலை,
வாழ்க...............வாழ்கவே!

(எங்கள் திருமலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# කලාප ගීතය

ජයවේ ජයවේවා !
අපේ ත්‍රීමලයේ කලාපයයි මේ.
ජයවේ ජයවේවා !
අපේ ත්‍රීමලයේ කලාපයයි මේ.
ජයවේ ජයවේවා !

අඳුරු ලොවේ භය දුරු වී සැනසී//
සැම ජාතීන් සතුටින් එකමුතු වී
දියුණුව වෙත යමු එකම සිතින් අපි //
ජයවේ ජයවේවා !

මුහුදේ රැලි සුන්දර බව වැඩිවී//
සැමදා දියුණුවූ බුද්ධියේ මැණිය
අපේ ත්‍රීමලයේ කලාපයයි මේ.
ජයවේ ජයවේවා !

නැණ ගුණ වැඩිවී දියුණුව සැලසී //
සැම සිත් සැමදින එකමුතු කරමින්
දියුණුව උදෙසා වෙහෙස දරණ ඔබ//
ජයවේ ජයවේවා !

ආර්.ජේ.එම්.රාජපක්ෂ මිය.
ගුරු උපදේශිකා (සංගීත)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Vision

A Community of Efficient and
an Effective Personalitys.

## Mission

Providing Educational Activities to
attain a balanced Personality
with physical ,moral,Cultural
Spiritual and Economic
Standards among the societies

## Motto

Education ,Discipline and
Completeness



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே.........


01. **வாழ்த்துச் செய்தி**

சி. தண்டாயுதபாணி
அமைச்சர்,
கல்வி,தகவல் தொழிநுட்பகல்வி,முன்பள்ளிக்கல்வி,
விளையாட்டு,பண்பாட்டலுவல்கள், இளைஞர்
விவகாரம்,புனர்வாழ்வுமற்றும் மீள் குடியேற்றஅமைச்சு.
கிழக்குமாகாணம்.

02. **Message from the Secretary**

J.S.D.M AsankaAbeyawandena
Secretary,
Ministry of Education, Information Tec. Edu, Pre School
Education, Sports, Cultural Affairs, youth Affairs, and
Rehabilitation & Resettlement,
Eastern Province .

03. **நித்திலம் சிறக்கவாழ்த்துகின்றேன்.**

எம். ரி. எ. நிஸாம்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்
கிழக்குமாகாணம்.

04. வாழ்த்துச் செய்தி

S. மனோகரன்
மேலதிகமாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
கிழக்குமாகாணம்.

05. வாழ்த்துச் செய்தி

A.விஜயானந்தமூர்த்தி
மேலதிகமாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
கிழக்குமாகாணம்.

06. வலயக்கல்விப் பணிப்பாளரின் **வாழ்த்துச் செய்தி**

நடேசலிங்கம் விஜேந்திரன்
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்விஅலுவலகம்,
திருகோணமலை.

07. பதிப்பாசிரியரின் **உள்ளத்திலிருந்து**

இ. நிமலரஞ்சன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்விஅலுவலகம்,
திருகோணமலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. තම පෞරුෂය වර්ධනය කරගෙන විශ්වයට සෙත සලසමු.

ගිරිහඩුසෑය රජමහවිහාරාධිපති,
නැගෙනහිර පළාතේ ප්‍රධාන සංඝනායක,
ශාස්ත්‍රපති දෙව්නුවර වන්දිම නාහිමි.
(ත්‍රි/ කලාප අධ්‍යාපන කාර්යාලයේ ගුරු උපදේශක.)

09. **ஆசிச் செய்தி**

வேதாகமமாணிபிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் J.P
ஆலய பிரதமகுருவும் ஆதீனகர்த்தாவும்,
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளிஅம்பாள் தேவஸ்தானம்,
திருகோணமலை

10. **ஆசிச் செய்தி**

அருட்தந்தைS. அன்ரனிபொன்சியன்
அதிபர்,
தி/புனித சூசையப்பர் கல்லூரி
திருகோணமலை.

11. **ஆசிச் செய்தி**

மௌலவி ஆ.லு. ஹதியத்துள்ளாஹ் (SLPS)
(தேசியநேர்மைத்திறன் வெற்றியாளர் - 2010)
அதிபர்,
தி/ அல் அஸ்ஹர் முஸ்லிம் மகாவித்தியாலயம்
வெள்ளைமணல், சீனக்குடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


**பக்கம்**

**01. திருமலை வலய அலுவலக நிர்வாக நடவடிக்கைகளில் எதிர்நோக்கும் சவால்கள்** 01

திரு. க. அரியநாயகம்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர், நிர்வாகம் (SLEAS)
வலயக் கல்வி அலுவலகம்,
திருகோணமலை.

**02 அன்னை** 10

அ. கௌரிதாசன்

**03 வாசிப்போம் வாழ்வில் வெல்வோம்** 12

கவிதாஜினி
திருமதி.ஷாமினி கணேஸ்
தி/குளக்கோட்டன் த.வித்தியலாயம்
தம்பலகாமம்

**04 சிந்தனைக்கு ஹிட்லரின் சில உபதேசங்கள்** 13

Mrs.Faiz M.Yusry
Teacher
T/Jamaliya Muslim Maha Vid

**05 விந்தையான விஞ்ஞானம்** 14

**06 கல்விப் பிரிவிற்கான அபிவிருத்தி சார்சட்ட நிகழ்ச்சித் திட்டம்** 15

N.விஜேந்திரன்,
வலயக்கல்விப் பணிப்பாளர்
திருகோணமலை

**07 மாணவர்களின் கற்றலின் பெற்றோரின் பங்களிப்பு** 18

திருமதி.கா.அமுதவாசன் BSc, Dip in Eng, PGDE
ஆசிரியர்
வவு/ கந்தபுரம் வாணி வித்தியாலயம்

**08 புதுக்குறள்** 19

விராலி

**09. நல்லாட்சி** 20

திருமதி.சுபாஜினி சுதாகரன் B.A (Hons) Dip.in.Edu
தி/புனித சூசையப்பர் கல்லூரி,
திருகோணமலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 **நயமிகு நாட்டார் இலக்கியங்கள்** 22

செல்வி.ஷஹ்றாமா சக்காப்,
தரம் 11 B
ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி
திருகோணமலை

11 **பாடசாலைகளில் ஒழுக்கம்** 24

திரு.கோ.ேணசப்பிள்ளை சிறீஸ்கந்தா,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்-முகாமைத்துவம்.
வலயக் கல்வி அலுவலகம்,
திருகோணமலை.

12. **நவராத்திரி நாயகியே நீ அருளவேண்டும்** 27

திருமதி. ச. கிருபாகரன்

13. **“අධ්‍යාපනයේ හෙට දවස"** 31

T.P.G.L.තෙන්නකෝන්
ශ්‍රී.ල.අ.ප.සේ.III
සහකාර අධ්‍යාපන අධ්‍යක්ෂක

14. **என்னுடைய உணர்வுகளில்** 34

திருமதி.தேவகி சுனில்
தி/முஹமதியா வித்தியாலயம்,
நிலாவெளி, திருகோணமலை

15 **பாடசாலை மேம்பாட்டுத்திட்டத்தினை வினைத்திறனாக்கும் பாடசாலை சுயமதிப்பீடு** 36

இ.நிமலரஞ்சன்,
(PSIஇணைப்பாளர்)
உதவிக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை

16. **மாணவர்களை போதைப் பொருள் பாவனையிலிருந்து பாதுகாப்போம்** 41

திருமதி.சந்திரகலா சௌந்தரராஜன் (ஆசிரியர்)
தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி,
திருகோணமலை

17 **சொற்பஞ்சம் ஒழித்திடுவோம்** 45

திருமதி.சிவகௌரி மோகன் (ஆசிரியை)
தி/அல் மின்ஹாஜ் ம.ம.வி
மட்கோவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. **பாடசாலை மட்டத்தில் மனிதவள முகாமைத்துவம்** 48

திருமதி I.M. முரளிதரன்
அதிபர் (SLPS)
தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகாவித்தியாலயம்
திருகோணமலை.

19. **இலங்கையின் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வடிவங்களில் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டுப்புறத் தொழிற் பாடல்கள்** 51

எஸ். முத்துமீரான்

20. ***ඉගෙනුම්-ඉගැන්වීම්සාර්ථකකරගැනීමටඉගෙනුම් ආධාරක*** 61

T.P.G.L.තෙන්නකෝන්
සහකාර අධ්‍යාපන අධ්‍යක්ෂක
කලාප අධ්‍යාපනකාර්යාලය
ත්‍රිකුණාමලය

21. **தொடர்பாடலும் தீர்மானம் எடுத்தலும்** 65

திருமதி - மர்ளியா சக்காப்
உதவி அதிபர்
ஜமாலியா மு.மு.வி
திருகோணமலை.

22. **மனத்தடை மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை** 75

A.R.M.பைசல்
BSW (Hons) M.A.Sociology (Kelaniya)
ஆங்கில ஆசிரியர்
தி/தி/அறபாத் மகா வித்தியாலயம்

23. **இஸ்லாம் பயிற்றுவிப்பாளர்களும் அவர்களின் பண்புகளும்** 79

திருமதி.பௌசுல் அமீர் றிஸானா
ஆசிரியர்
தி/ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலயம

24. **මත්ද්‍රව්‍ය නිවාරණය හා අධ්‍යාපනයේ කාර්යභාරය** 84

පී.ඩබ්.එන්.පිගුණසේකර(Dip in NCOE, BA,PGDEM,Med)
සහකාර අධ්‍යාපන අධ්‍යක්ෂ,
මත්ද්‍රව්‍ය නිවාරණ ඒකකය
අධ්‍යාපන අමාත්‍යංශය

25. **"என் பிள்ளை"– சிறுகதை** 85

திரு.அழகுராஜா ஹரிகரன்,
ஆரம்பக்கல்வி (SP-TR), BED Dip SLPS
பிரதி அதிபர்
தி/குளக்கோட்டன் த.வி
தம்பலகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. **கல்வி முகாமைத்துவ தகவல் செயலமைப்பு** 88

திருமதி I.M.முரளிதரன்
அதிபர். ( SLPS )
தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகாவித்தியாலயம்
திருகோணமலை.

27. **"පංති කාමර ඉගැන්වීමේ කාර්යක්ෂමතාවය වැඩි දියුණු කිරීම සඳහා සැළකිය යුතුකරුණු"** 91

T.P.G.L.තෙන්නකෝන්
ශ්‍රී.ල.අ.ප.සේ.III
සහකාර අධ්‍යාපන අධ්‍යක්ෂක

28. **நாட்டுப்புறவியல் பற்றிய ஒரு கண்ணோட்டம்** 94

திரு. மயில் வாகனம் திருச்செல்வம், ஆசிரியர்
தி/தி/புனித சூசையப்பர் கல்லூரி,
திருகோணமலை.

29. **மனவலிமை வேண்டும்** 96

ஜெ.ஹேசிகா
தரம் -13 கலைப்பிரிவு
தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம்

30 **மாறிவரும் உலகம்** 98

குலேஸ்வரன் ஸதுர்ஷன்
தரம் - 09
தி/சாம்பல்தீவு த.ம.வி

31 **தாவர வளங்களை பாதுகாப்போம்.** 100

மு.மு.முகமட் முதா,
தரம் 05,
ஜமாலியா மு.ம.வி
திருக்கோணமலை.

32 **வெளிநாட்டு வேலைவாய்ப்பும் மாணவர் கல்வியும்** 102

திருமதி . அ.விஜயராஜ்
தி/தி/அல்.ஹம்றா.ம.வி
நிலாவெளி.

33. **தலைமைத் தன்மையின் பண்புகளும் கடமைகளும** 105

எஸ்.சுபைர்டீன்
ஆசிரியர்
தி/புனித சூசையப்பர் கல்லூரி
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. උපදේශනය(Conseling) 112

එම් .බී.උදයසිරි
ගුරු උපදේශක(උපදේශනයවෘත්තියමාර්ගෝපදේශන)
කලාප අධ්‍යාපනකාර්යයාලය
ත්‍රිකුණාමලය

35 தீக்குருவி 115

மொகமட் ராபி

36 கொடிமரம் போலவே நிமிரம் செய்வோம். 120

தி.சாந்தகுமார்,
ஆசிரியர்
யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை.

37 எமது கல்வித்துறை எதிர்கொள்ளும் நெருக்கீடுகள் 121

தி.சாந்தகுமார்,
ஆசிரியர்
யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை.

38 வாழ்வது நானல்ல 124

திருமதி.ஜெயவதனி மரியதாஸ்
ISA (R.C + N.R.C)
திருகோணமலை

38 டிஸ்லெக்சியா 126

கணேசபிள்ளை அகிலன்
ஆசிரிய ஆலோசகர் (விசேடகல்வி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

திருகோணமலை கல்வி வலயத்தின் ஆக்கத்திறன் ஆவணப்படுத்தல் தகவல் பிரிவினால் வருடாந்தம் வெளியிடப்படும் எமது பிரதேசத்திற்கேயுரித்தான“நித்திலம்”எனும் பெயரைத் தாங்கி வெளிவரும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

ஆக்கத்திறன் ஆவணப்படுத்தல் தகவல் பிரிவானது திருக்கோணமலை வலயத்தின் கீழ் இயங்கும் சகல பாடசாலைகளினது மாணவர்களதும் ஆசிரியர்களதும் சிறப்பான ஆக்கங்களையும் பல்வேறுவகையான வெளியீடுகளையும் உள்ளடக்கிய ஒரு மலராக வருடாந்தம் மலர்ந்துவருவதனை நாம் அனைவரும் அறிவோம். இருப்பினும் இம்மலரைப் பற்றிய விமர்சனங்களும், பாராட்டுக்களும் அகில இலங்கைரீதியிலும் சர்வதேச மட்டத்திலும் பேசப்படுவதை அறியமுடிகிறது. இம்மலர் பல்வேறு நாடுகளிலும் உள்ள நூலகங்களிலும் காணக் கிடைப்பதும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். இதேபோல இவ்வலயத்தால் காலாண்டுக்கொருமுறை வெளியிடப்படும் “செல்நெறி”என்னும் செய்தித்தாள் வலயரீதியிலும் மாகாண ரீதியிலும் அகில இலங்கை ரீதியிலும் பல்வேறு சாதனைகளைப் புரிந்தவர்களது ஆக்கங்களையும், சாதனைப் புகைப்படங்களையும் தாங்கிவருவதையும், அம்மலரில் மும்மொழிகளிலும் ஆக்கங்கள் இடம் பெறுவதையும் நாம் காணமுடியும்.

பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வியியலாளர்கள், இலக்கிய வல்லுநர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் ஆக்கங்களைச் சுமந்து வருவது இச்சஞ்சிகையின் சிறப்பம்சமாகும். இதன் மூலம் வாசகர்கள் அதிகளவு அறிவையும் தகவல்களையும் பெற்றுக் கொள்ளவதுடன்,எழுத்தாளர்களின் உத்வேகமும் அதிகரிக்கின்றது.

இப்பணியினை மிகவும் நேர்த்தியாக இந்தவலயத்தின் கல்விப் பணிப்பாளரும், அவரோடு இணைந்த மலர்க் குழுவினரும், வலயமட்ட ஆலோசனை குழுவினரும் இணைந்து மேற் கொண்டுள்ளமை பாராட்டுதற்குரியது. இந்தவலயத்தின் சாதனைகளையும், ஆக்கத் திறன்களையும் வெளிக்காட்டும் ஒரு குறிகாட்டியாகவும் இந்தவலயத்தின் செயல்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் ஒரு ஆவணமாகவும் இதனை எம்மால் நோக்க முடியும்.

இம்மலரின் ஆக்கத்தில் ஈடுபட்ட எல்லோருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவிப்பதுடன் “நித்திலம்” சஞ்சிகை ஒவ்வவொரு ஆண்டும் தொடர்ச்சியாக வெளிவர வேண்டும் என்று எனது விருப்பத்தையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

சி. தண்டாயுதபாணி
[illegible]
கல்வி,தகவல் தொழில்நுட்பக் கல்லூரி,முன்பள்ளிக் கல்வி,விளையாட்டு [illegible] அலுவல்கள், இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Message from the Secretary

I am very glad to contribute this message, to the Annual publication "NITHILAM" of Trincomalee Zonal Education Office.

I came to understand that the Zonal Director and the Officers are the highly recognized old School Students, of Trincomalee Education Zone who are excel in Education and Extra Curricular activities. extending my sincere appreciation to those who have taken the active part in the uplift ment of the institution in the midst of various constraints, I congratulate the Zonal Director and his staff or their commitment, devotion and joint effort towards the development and welfare of the students.

The publication of this book will not only give moral boost students and teachers, but will make the parents aware the articles publish by the Zonal Education of Trincomalee which were selected from our own students, Teachers and Staff.

I am sure there will be more and more success and achievement of the Zonal Education of Trincomalee in future also and wish them all success in their journey towards the Educational Cultural and Social at National and Provincial levels.

**J.S.D.M. Asanka Abeywardena**
Secretary
Ministry of Education, Information Technology Education, Pre-School Education, Sports, Cultural Affairs,
Youth Affairs, Youth Affairs and Rehabilitation & Resettlement
Eastern Province.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திலம் சிறக்க வாழ்த்துகின்றேன்



திருமலை வலயத்தினை அடையாளப்படுத்தும் "நித்திலம்" இதழுக்கான வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் நான் மிகவும் மகிழ்வடைகின்றேன்.

பல்இன பல்மத சமூகங்களுக்கிடையே ஒருமைப்பாட்டினை ஏற்படுத்தி ஒருமித்த ஒத்துழைப்புடன் பல்வேறு சாதனைகளை திருமலை கல்விவலயம் படைத்து வருகின்றமை வரவேற்கத்தக்கதாகும். திருமலைகல்வி வலயத்தின் ஆக்கத்திறன் ஆவணப்படுத்தல் தகவல் பிரிவு (CSDI) இதற்கான வேலைத்திட்டங்கள் பலவற்றினை முன்னெடுத்து வருகின்றது. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் மட்டுமன்றி மென்திறன்களை வளர்த்தெடுக்கும்வகையிலான இணைபாடவிதான செயற்பாடுகளிற்கும் அதி உன்னத இடத்தினை வழங்கி வருகின்ற திருகோணமலை கல்வி வலயம் ஏனைய கல்வி வலயங்களுக்கோர் முன்னுதாரணமாக கிழக்கு மாகாணத்திற்கு பெருமைசேர் நித்திலமாக பிரகாசித்து வருவது பாராட்டத்தக்கதாகும். இவ் நித்திலம் இதழ் திருமலை வலயத்தின் வரலாற்று பதிவொன்றாகவும், கல்வி வெளியீடாகவும் முக்கிய இடத்தினை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் இதழினூடாக தம்மை இனங்காட்டியதோடு மட்டுமன்றி ஏனையோர்க்கும் தமது அறிவுத்தேடல்களை பகிர்ந்துகொண்ட அனைவரையும் பாராட்டுகின்றேன். தொடர்ந்தும் இவ்வாறான வெளியீடுகள் திருமலை வலயத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டுமென கேட்டுக் கொள்வதோடு இம்முயற்சிக்கு காரணமான திருமலை வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.N.விஜேந்திரன் மற்றும் மலர்க்குழுவினர் கல்விசார் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்.ரீ.எ.நிஸாம்,
மாகாணக்கல்விப்பணிப்பாளர்,
மாகாணக்கல்வித் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

திருகோணமலை வலயமானது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ,க.பொ.த(சா/த)ப் பரீட்சை, க.பொ.த(உ/த)ப் பரீட்சை , கணித ஒலிம்பியாட் போட்டிகள் ,கணித வினாடிவினாப் போட்டி, தமிழ்மொழித்தினப் போட்டி , ஆங்கில மொழித்தினப் போட்டி முதலியவற்றுள் பெரிய சாதனைகளைக் கடந்த காலங்களில் படைத்து வந்துள்ளது. பல முன்னோடிப் பாடசாலைகளை பரிபாலனம் செய்யும் ஒரு வலயமாகவும் உள்ளது. இவ்வலயத்தின் வரலாற்றில் "நித்திலம்" என்ற சஞ்சிகை ஒரு மலராக மலர்ந்து அதன்பின்னர் ஒவ்வொரு வருடமும் அதன் மணம் மாறாமல் பூத்துக்கொண்டே வருகின்றது.

இச் சஞ்சிகையானது மாணவர்கள் , ஆசிரியர்கள் , கல்விமான்கள் ஆகியோர்களின் ஆக்கங்களைச் சுமந்து வெளிவருகின்றதோடு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படும் மிகவும் பயனுள்ள கருத்துக்கள் கட்டுரைகள் முதலியவற்றை கொண்டமைந்துள்ளமை இதனுடைய சிறப்பம்சமாகும். எனது ஆலோசனையாக மேலும் ஒன்றினை கூறவிரும்புகின்றேன், அதாவது உலகளாவிய ரீதியில் நடைபெறும் மாநாடுகளில் எடுக்கப்படும் கல்வியுடன் தொடர்புடைய தீர்மானங்கள் கொள்கைகள் பிரகடணங்கள் , குறிக்கோள்களும் இம்மலரில் உள்ளடக்கப்படுதல் வேண்டுமென எனது கருத்தினை வழங்குகின்றேன்.

இம்மலரினை முதன்முதலாக வெளியிடுவதற்கான பொறுப்பினை ஏற்று சிறப்பாக செயற்பட்ட வலயத்தின் முன்னாள் பிரதிக்கல்விப்பணிப்பாளர் கலாநிதி சி.சிவநிர்த்தானந்தா அவர்களின் சேவையையும் இங்கே குறிப்பிட வேண்டும். மேலும் இம்மலரினை வெளியிடுவதற்காக பெருமுயற்சி எடுத்துவரும் வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.N.விஜேந்திரன் மற்றும் வலய பணிக்குழுவினரையும் பாராட்டுகின்றேன். இம்மலர் சிறப்பாக வெளிவர எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


திரு.A.விஜயானந்தமூர்த்தி,
மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கிழக்கு மாகாணத்தின் பெருமைக்குரிய பல்வேறு சாதனைகளை அணிகலன்களாக கொண்டுள்ள திருகோணமலை கல்விவலயம் வெளியீடு செய்யும் "நித்திலம்" இதழிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

எமது சான்றோர் விட்டுச்சென்ற அழியாத சொத்துக்களாம் கல்வியும் கலாசார விழுமியங்களும் அவற்றினை ஆழமாய் விழுதெறிய வைக்குமோர் நித்திலம் இதழ் . இந் நித்திலம் இதழை வெளியீடு செய்வதனை தனக்கோர் உயரிய பணியாக ஏற்று திருமலை வலயக்கல்வி அலுவலகம் செயற்படுகின்றமை பாராட்டத்தக்கதாகும். "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்ற சான்றோர் வாக்குக்கேற்ப நித்திலம் இதழ் தன்னகத்தே பல்வேறு உயரிய படைப்புக்களை தாங்கி கல்விப்புலத்திலுள்ளோர் பயனடையக்கூடிய வகையில் வெளிவருகின்றது. சமூக சமய ஒருங்கிணைப்புடன் பல்இன, மதங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் பல்வேறு ஆக்கங்களுடன் இவ் வெளியீட்டினை மேற்கொள்கின்ற திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தின் ஆக்கத்திறன் ஆவணப்படுத்தல் தகவல் பிரிவின் செயற்பாடுகளை நான் பாராட்டுகின்றேன் .

இவை போன்ற வெளியீடுகள் மென்மேலும் மாணவர் கல்விக்கு உறுதுணையாக அமைவதோடு படைப்பாளிகளை ஊக்குவிக்கும் என்ற நோக்கோடு செயற்படும் வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.N.விஜேந்திரன் மற்றும் இவ் இதழினை வெளியீடு செய்வதில் முன்னின்றுழைத்த அனைவருக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.S.மனோகரன் ,
மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலயக்கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



திருகோணமலைக் கல்வி வலயத்தின் நிகழ்வுகளின் பதிவான "நித்திலம்" சஞ்சிகை பாடசாலைகளில் ஆசிரியர்களதும் மாணவர்களதும் செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி பிரதேசத்தில் கல்விச் சாதனைகளையும் புகழையும் பெற்றுக்கொள்ளும் வகையில் ஒவ்வொரு முயற்சியிலும், அனைவரையும் ஒன்றிணைத்துச் செல்லும் முயற்சியில் ஆண்டாண்டு தோறும் ஈடுபட்டு வருகின்றது. கடந்த காலங்களிலும் பல்வேறு தரப்பினர்கள் வாழ்த்துச் செய்தியினை வழங்கியிருந்த போதும், மாகாணக்கல்விப் பணிப்பாளர் அவர்களின் செய்தியிலே "நித்திலம்" நிகழ்கால கல்விச் செல்நெறியின் நிதர்சனமாக இருக்கட்டும் என்ற கருத்து சஞ்சிகை உருவாக்கத்தில் பங்கெடுக்கும் ஒவ்வொருவருக்கும் புத்துணர்வை ஏற்படுத்தியிருக்கின்றதெனக் கூறலாம்.

ஆண்டுதோறும் இதன் கரு உருவாக்கத்திலிருந்து பிரசவம்வரை பல்வேறு போராட்டங்கள், தியாகங்களிருந்தாலும் இதமான சுகப் பிரசவமாக இன ஐக்கியம், சாந்தி, சமாதானம், கௌரவிப்பு , கலை நிகழ்வு என்ற பல்வேறு அனுபவங்களையும், செய்திகளையும், காட்சி நிலையிலும், கருத்து நிலையிலும் வெளிப்படுத்தி வருகின்ற பண்பு மாறாமல் இருந்து வருவது தனிச் சிறப்பு எனலாம்.

எமது வலயத்தின் வரலாற்று ஆவணமாகவும், ஏற்பட்டுவரும் மாற்றங்கள் யாவற்றையும் வெளிப்படுத்துகின்ற தகவல் பலவற்றை சமூகத்திற்கு விட்டுச் செல்கின்ற கல்விசார் நூலாகவும் திகழ்ந்து வருவது பாராட்டுக்குரியது. வாழ்த்துகிறேன்.

நடேசலிங்கம் விஜேந்திரன்,
வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பதிப்பாசிரியரின் உள்ளத்திலிருந்து.....

நித்திலம் கொழிக்கும் திருமலை மாநகரிலே திருமலை வலயக்கல்வி அலுவலகத்தின் கல்விப்பணிக்கோர் எடுத்துக்காட்டு நித்திலம் இதழாகும். திருமலை கல்வி வலயம் பல் இன மத விழுமியங்களை சமத்துவமாய் தனக்குள்ளே ஒருங்கிணைத்து வேற்றுமைகளின்றிய சாதனைகள் பலவற்றினை பெற்றுவருகின்றது. அதற்கேற்றாற்போல் ஆக்கத்திறன் ஆவணப்படுத்தல் தகவல் பிரிவும் CSDI பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

கல்வியும் வியாபாரப் பொருளாகிய தற்காலத்துலகினில் பின்தங்கிய பகுதி மாணவர்களின் கல்வியில் அதீத கருசனையோடு பல்வேறு செயற்பாடுகளை எமது வலயக்கல்வி அலுவலகம் திறம்பட செயற்படுத்தி வெற்றியும் கண்டுள்ளது. அதற்கேற்ப கல்விக்கேற்ற சிறந்த சூழல் ஏற்படுத்தப்படுவது மாத்திரமின்றி பல்வேறு கற்றலுக்கான வசதிகளும் வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டியது கல்விப்பகுதியிலுள்ளோர்களுக்கான தலையாய கடமையாக நோக்கப்படுகின்றது. பாடசாலைக்கல்வியினை பங்காளர்களனைவரும் ஒருங்கே இணைந்து முன்னேற்றுவதனை கல்விஉபாயமாக நோக்கப்படுகின்ற நிலையில். எமது மாணவர்கள் மாத்திரமின்றி ஏனைய கல்விவலய மாணவர்களது கல்விமுன்னேற்றத்தினையும் கருத்தில் கொண்டு எமது வலயத்தினால் வருடாந்தம் இவ் நித்திலம் இதழ் வெளியிடப்பட்டு வருகின்றமை ஓர் முன்னுதாரணமான செயற்பாடாகும். ஆந்தவகையில் பல்வேறு பாடவிதான விடயங்கள் மற்றும் கல்விப்பிரச்சினைகள் ஆய்வுகள் கலாசார விழுமியங்கள் வழிகாட்டல்கள் ஆலோசனைகள் , தொடர்பான பல்வேறு ஆக்கங்களை தாங்கி இவ்இதழ் இவ்வருடமும் வெளிவருகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இவ் நித்திலம் இதழில் தமது முத்துக்களான ஆக்கங்களை படைத்துதவிய அனைத்துள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். எமது செயற்பாடுகளனைத்திற்கும் வழிகாட்டி செயற்படுத்திவரும் எமது மதிப்பிற்குரிய வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.என். விஜேந்திரன் ஐயா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். மற்றும் எமது வலய உத்தியோத்தர்கள் , ஊழியர்கள் அனைவருக்கும் நன்றிகள். இவ் இதழினை அச்சிட்டு வெளியிட உதவிய திரு.டே.பகீரதன் (தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி ஆசிரியர்) அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இப்படிக்கு,
உதவிக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## තම පෞරුෂ වර්ධනය කර ගෙන විශ්වයට සෙත සලසමු

සුචරිතවත් ජීවිතයක් ගත කිරීම සඳහා මනා පෞරුෂයකින් හෙබි අයකු විය යුතු ය. කරණිය මෙත්ත සූත්‍රයේ මේ සඳහා ඔවදන් පහළොවක් (15) ලබා දෙයි. සියලු දෙනාම ජීවිතය අවසන් වන තුරුම ශිෂ්‍යයන් වෙමු.


සක්කෝ - කිසියම් ක්‍රියාවක් කිරීමට හැකියාව තිබිය යුතු ය. උජු අවංක විය යුතු ය. සුජු - අතිශයින් අවංක විය යුතු ය. සුවච - පහසුවෙන් යමක් කියා ඒත්තු ගැන්විය හැකි වීම. සන්තුස්සකෝ - ලද හෙයින් සතුටුවීම. සුභරෝ - පහසුවෙන් පෝෂණය කළ හැකිවීම. අප්පකිච්චෝ - කටයුතු බහුල නොවීම. සල්ලහුක වුත්ති - සැහැල්ලු ගති පැවතුන් ඇති බවය සන්තින්ද්‍රියෝ - සංසුන් ඉදුරන් ඇති බවය. නිපකෝ - නුවණැත්තකු වීම ය. අප්ප ගබ්භෝ - ගොරෝසු දරුණු හැසිරීම නොමැති බව ය. කුලේසු අනනුගිද්ධෝ - ඇලීම් ගැලීම්වලින් යුක්ත නොවීමය. නච ඛුද්දං සමාචාරේ කිඤ්චි යේන විඤ්ඤූපරේ උපවදෙය්‍යුං - ඥාණවන්තයින්ගේ කුඩා හෝ දෝෂාරෝපණයට ලක් නොවන අයෙකු විය යුතුයි යන්න ය.

පමම කරුණු ආගම් භේදයකින් ,ජාති භේදයකින් ,වයස් භේදයකින් , ලිංග භේදයකින් තොරව අනුගමනය කළ හැක්කෙමු. සම්මා සම්බුදුරජාණන් වහන්සේගේ බෞද්ධ දර්ශනය තුළින් විශ්ව මෛත්‍රී සංකල්පය උගන්වනු ලබයි. "සබ්බේ සත්තා භවන්තු සුඛි තත්තා" සියලු සත්වයෝ සුවපත් වෙත්වා යන්නයි. පෞද්ගලිකත්වය වෙනුවෙන් විශ්වයම විනාශ කළ හැකි මිනිසුන් වර්තමානයේ විවිධ ජාතින් විවිධ ආගමිකයන් විසින් ලොවට දායද කිරීම ලෝකයේ ම විනාශයට හේතු වේ. බොදු ඔවදන් තුළින් මනා පෞරුෂයකින් යුක්ත සත්වයෙකු ලොවට දායද කරමු. සැමදා ජීවත් වන බව තේරුම් ගනිමු . පටු ආකල්පවලින් ඈත් වෙමු. ජාති භේදය දුරලමු. ආගම් භේදය දුරලමු. අනන්‍යතාවය රැක ගනිමු. ගම හදමු. රට හදමු. ලොව හදමු.මෙම නිත්තිලම් සඟරාව තුළින් මුළු විශ්මයටම දැනුම ආකල්පය කුසලතාවයන්ගෙන් යුත් පිරිසක් දායද කිරීමට හැකි වේවා. මුළු විශ්වයටම සෙත සලසමු.

හිරිහඬුසෑය රජමහා විහාරාධිපති
නැගෙනහිර පළාතේ ප්‍රධාන සංඝනායක
ශාස්ත්‍රපති දෙවිනුවර චන්දිම හිමි
ත්‍රි/කලාප අධ්‍යාපන කාර්යාලයේ ගුරු උපදේශක

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி....

அகிலாண்டேஸ்வரி அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் அருட்கடாட்சம் கொண்டு திருகோணமலை கல்வி வலயத்தின் ஆக்கத்திறன் ஆவணப்படுத்தல் தகவல் பிரிவு (CSDI) வருடா வருடம் வெளியிடும் நித்திலம் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் நிறைவு கொள்கின்றேன்.

ஆசிரியர்கள் , மாணவர்களின் ஆக்கத்திறன் செயற்பாடுகளை ஏனையோருக்கும் பயன்படுத்தக்கூடிய வகையில் கல்விசார் தகவல்களையும் கட்டுரைகளையும் ஆய்வுகளையும் ஆவணப்படுத்தும் அதிஉன்னத செயற்பாட்டினை செய்வதன் மூலம் திருக்கோணமலை கல்வி வலயமானது ஏனைய கல்வி வலயங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்கின்றது என்பதை அறிந்து மிகவும் பெருமையடைகின்றேன்.

இச்சிறந்த பணியினை செயற்படுத்திவரும் திருக்கோணமலை வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. என். விஜேந்திரன் அவர்களுக்கும் மற்றும் உத்தியோகத்தர்கள் அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் நித்திலம் சஞ்சிகை வெளியீட்டுக் குழுவினர் அனைவருக்கும் பணி சிறக்க எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் திருவருட் கடாட்சம் கிடைக்கப்பெற வேண்டுமென அம்பாளை வேண்டி ஆசி வழங்கி அமைகிறேன்.

வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக்குருக்கள்(JP)
ஆலய பிரதமகுருவும் ஆதீனகர்த்தாவும்,
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி....

"நித்திலம்" சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். திருக்கோணமலை வலயக்கல்விப்பணிமனையால் வெளியிடப்படும் வருடாந்த சஞ்சிகையான நித்திலம் பலரது கவனத்தை ஈர்த்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கல்விப்புலத்திலுள்ளவர்களின் ஆக்கங்களைத் தாங்கிவரும் இச்சஞ்சிகை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கல்வித்தாகம் கொண்ட அனைவருக்கும் அளப் பெரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்பதை மறுக்கமுடியாது. அறிவு, பல்வேறு ஊடகங்கள் ஊடாக பகிர்ந்து கொள்ளப்படுகின்ற போதும் நூல்வாயிலாக மிக எளிதாக பரப்பப்படக்கூடியதாகும். அறிவைப் பகிர்ந்து கொள்ளுதல் என்பது சமூகத்திற்கான தார்மீக பணியாக கொள்ள வேண்டும். அக்கடமையை வலயக்கல்விப் பணிமனை நித்திலக்குழு "நித்திலம் சஞ்சிகை" மூலம் செய்து வருகின்றமையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

நூல் "சஞ்சிகை" வெளியீட்டை ஒரு குழந்தை பிரசவத்திற்கு ஒப்பிடுவதுண்டு. இச் சஞ்சிகையின் தொகுப்பாசிரியர், சஞ்சிகைக்குழு, சம்பந்தப்பட்ட அனைவரின் அயராத உழைப்பிற்கு எனது பாராட்டினை தெரிவித்து கொள்கின்றேன். இவர்களது முயற்சியை இறைவன் என்றும் ஆசீர்வதிக்க வேண்டுமென ஆசித்து நிற்கின்றேன்.

ஆருட்தந்தை. S. அன்ரனி பொன்சியன்
அதிபர்,
தி/தி/ புனித சூசையப்பர் கல்லூரி,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி....

கிழக்கு வானின் உதய தாரகை போல் திருகோணமலை கல்வி வலயத்தினால் வருடா வருடம் வெளியிடப்பட்டு வரும் கல்வித் தாரகை மலரான 'நித்திலம்' சஞ்சிகைக்கு நிறைவான ஆசியினை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். 'அல்ஹம்துலில்லாஹ்' (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே) .

இறைவன் எமக்களித்த செல்வங்களில் எல்லாம் என்றும் அழியாச் செல்வமாம் கல்விச் செல்வத்தினை தம் அன்புச் செல்வங்களுக்கு அமுதாய் ஊட்டும் ஆசான்களையும், அரணாய்த் திகழும் அதிகாரிகளையும், ஊழியர்களையும் தன்னகத்தே கொண்டு தலை நிமிர்ந்து நிற்கும் எமது வலயக் கல்வி அலுவலகத்தின் பணி மகத்தானது. மாண்புமிகு பணிப்பாளர், மாண்புறு சேவையாளர்கள் அனைவரதும் அர்ப்பணிப்பான சேவை பாராட்டப்பட வேண்டியதே. அதிலும் நித்திலத்தின் பிரசவத்துக்காய் நித்திரையில்லாமல் உழைக்கும் நிமலரஞ்சனின் நிகழ்காலம், எதிர்காலம் எழிலாய் அமைய ஆசிக்கிறேன்.

2015ம் ஆண்டின் நித்திலம் சுமந்து வரும் சுவைமிகு சாதனைகள், ஆசான்களின் ஆக்கங்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கான வழிகாட்டல்கள் என பல்வேறு அறிவுரைகளையும் அனைத்து தரப்பினரும் அவதானமாகப் படித்து வாழ்வில் நிதானத்தைக் கடைபிடித்து மூவின மக்களும் சமாதானமாகவும், சகவாழ்வோடும் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.


இது தரணியில் இத்துணை பெரிய சேவைகளைப் புரிந்து வரும் அத்தனை உள்ளங்களுக்கும் நேர்வழி கிடைக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பானாக ஆமீன்.

வஸ்ஸலாம்.

மௌலவி, M.Y.ஹதியத்துள்ளாஹ் (SLPS)
(தேசிய நேர்மைத்திறன் வெற்றியாளர் - 2010)
அதிபர்
தி/தி/ அல் - அஸ்ஹர் முஸ்லிம் மகாவித்தியாலயம்
வெள்ளைமணல், சீனக்குடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமலை வலய அலுவலக நிர்வாக நடவடிக்கைகளில் எதிர்நோக்கும் சவால்கள்.

"கல்வி என்பது கரையில்லாதது", முகத்தில் கண்ணிரண்டுடையவன் கற்றவன், கல்விச் செல்வம் அழிவில்லாதது, கல்வி ஏழு பிறப்பிலும் உதவும் என்றெல்லாம் நம் முன்னோர் கூறிவைத்துள்ளமை, எல்லாக் காலங்களுக்கும் மிகவும் பொருந்துவனவாக இருப்பது இங்கு நோக்கத்தக்கது. திருக்குறள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன் நாலடியார், போன்ற நூல்களில் எல்லாம் அற வாழ்க்கை எவ்வாறு அமையவேண்டும், மனிதன் அவற்றையெல்லாம் எவ்வாறு பின்பற்ற வேண்டும், அதன்மூலம் அவன் இப்பிறவியிலும், அடுத்த பிறவியிலும் எவ்வாறான பலன்களைப் பெறுவான் என்றெல்லாம் வகுத்துக் கூறப்பட்டுள்ளது. "குறுமுனி" என்று அழைக்கப்படுகின்ற அகத்தியர் 4000ம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய "நாடி சோதிடம்" என்னும் ஏட்டுச் சுவடியில் நமது முற்பிறப்பு, இப்பிறப்பு, மற்றும் அதனால் வாழ்க்கையில் ஏற்படும் நன்மை தீமைகள், மற்றும் அதற்கான விமோசனங்கள் எல்லாம் வகுத்து தொகுத்துக் கூறியுள்ளார். இவை எல்லாம் எம் முன்னோர் அருளிச் செய்த அருஞ்செல்வங்களே.

இந்த வகையில் கல்வி, செல்வம், வீரம், இவை மூன்றும் ஒரு மனிதனது வாழ்வில் எவ்வாறான மாற்றங்களை எல்லாம் ஏற்படுத்துகிறது என்பதை நாம் நாளாந்தம் கண்டுகொண்டே இருக்கின்றோம். இவை அனைத்தும் அளவோடு இருந்தால் வளமாக, நலமாக வாழ முடியும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகிவிடும்."அரிது அரிது மானிடராதல் அரிது" என்று ஔவைப்பாட்டி குறிப்பிட்டுள்ளார். மானிடன் ஆறு அறிவுடையவன். அவன் ஏனைய விலங்குகளிலிருந்து வேறுபட்ட நடத்தையுடையவனாக வாழக் கற்றிருக்க வேண்டும். பலர் அவ்வாறு வாழத் தவறியுள்ளமையையும் நாம் நாளாந்தம் காண்கிறோம்.

வாழ்க்கையில் குழந்தைப்பருவம் என்பது இன்பகரமானது. எவ்வித கவலைகளும் இன்றி இன்றைய வாழ்க்கையை இன்பமாகக் கழிக்கும் காலம் அது. நாளை என்பதைப்பற்றியெல்லாம் சிந்திக்காத வயது அது. அப்பருவத்திலே ஆறு வயதானதும் குழந்தையை பாடசாலைக்கு அனுப்பி வைக்கின்றோம். அக் குழந்தை தனது வீட்டுச் சூழலிருந்து ஒரு மாறுபட்ட விரிவடைந்த சூழலுக்குள் நுழைகின்றது. அங்கு பல விடயங்களை குழந்தை அறிந்து கொள்கிறது. இந்த அறியாத பருவத்திலும் பாடசாலைக்கு அனுப்பத் தவறும் பெற்றோர்களும் உள்ளனர். இவர்கள் கல்வியின் பெறுமதியை, மற்றும் சமூக விழுமியங்களை உணரத் தவறியுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். கல்வியை இழக்கும் குழந்தை வாழ்க்கையைத் தொலைத்துவிடும் என்பதை அந்தப் பெற்றோர்கள் உணரத் தவறிவிடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான யதார்த்தமான சூழலில்தான் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். "உலக சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய ஆளுமைப் பண்புகளைக் கொண்ட மாணவர் சமூகத்தினைக் கட்டியெழுப்புதல்" என்பது எமது தூரநோக்காகும். இந்த நோக்கை அடையும் வகையில் எமது குறிக்கோளை அமைத்துச் செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் தேவைப்பாடாகும். கல்விப் புலத்தில் பல கல்விமான்கள் திட்டமிட்டு கல்விச் செயற்பாடுகளை கலைத்திட்டத்தினூடாக சமூகத்தைச் சென்றடைய பல்வேறு நடவடிக்கைகளை அரசுடன் இணைந்து பாடசாலை ஊடாக நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

கல்வியியலாளர்கள் கல்வி நிர்வாக நடைமுறையினை கல்வி அமைச்சு, கல்வித் திணைக்களம்,வலயக் கல்வி அலுவலகம், பாடசாலைகள் என்பனவற்றினூடாக முன்னெடுப்பதன் மூலம், சமூகத்தற்கு வேண்டிய நல்ல பிரஜைகளை உருவாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர். பாடசாலைகளை நிர்வகிப்பதற்கு அதிபர் ஒருவர் நியமிக்கப்படுவார். அவரின் கீழ் பல ஆசிரியர்கள் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். பாடசாலைகள், அதிபர்கள், ஆசிரியர்களை நிர்வகிக்கின்ற வகிபாகத்தினை வலயக்கல்வி அலுவலகம் ஏற்று முன்னெடுக்கிறது. வலயக்கல்வி அலுவலக, நிர்வாக நடைமுறையில் கீழ்வரும் விடயங்கள் முக்கியமாகக் கொள்ளப்படுகிறது.எமது அலுவலக நிர்வாக நடைமுறைகள் நிதிப்பிரமாணம், அரசதாபனவிதிக்கோவைக்கு அமையவே பெரிதும் மேற்கொள்ளப்படுகின்றது.

ஒரு இலக்கினை அடைவதற்கு சகல வளங்களையும் ஒருங்கிணைத்து திட்டமிட்டுச் செயல்படுத்துவது நிர்வாகத்தின் பிரதான பணியாகும். இலக்கை அடைவதற்கு பொறுப்புக்களும், அதிகாரங்களும் நிர்வாகிகளுக்கு வழங்கப்படுவது அவசியமாகும். பொறுப்புக்களை மட்டும் வழங்கிவிட்டு அதனை அமுல் நடத்தக்கூடிய அதிகாரங்கள் கையளிக்கப்படாவிட்டால் நிர்வாகத்தைச் சரிவர நடைமுறைப்படுத்த முடியாது. எனவே ஒருவரிடம் பொறுப்புகளை ஒப்படைக்கின்ற போது அதற்கான வளங்களும், அதிகாரங்களும் வழங்கப்படுவதன் மூலம் இலக்கினை இலகுவில் எட்ட முடியும்.

- ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகளைப் பேணுதல்.
- ஆசிரியர்களுக்குரிய சம்பளங்களையும், சம்பள ஏற்றங்களையும் வழங்குதல்.
- ஆசிரியர்களது பதவி உயர்வு, மற்றும் ஏனைய நலன்களைப் பேணுதல்.
- ஆசிரியர்களுக்குரிய வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல்.
- மாணவர்களின் நலன்களைப் பேணுதல்
- பாடசாலைகளைப் பராமரித்தல்
- அதிபர் ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புதல்.
- பாடசாலை தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- ஆசிரியர்களது தாபன விடயங்களைப் பேணிப் பாதுகாத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தல்.
- கல்வி சாரா ஊழியர்களது தாபன விடயங்களை மேற்கொள்ளல்

இவ்வாறாக இந்நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதும், அலுவலகம் பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழலுக்கு அடிக்கடி தள்ளப்பட்டு வருகிறது. இந்த அலுவலகச் செயற்பாட்டில், நாம் பல்வேறு தரப்பினருடன் கூடுதலான அளவு தொடர்புகளை மேற்கொண்டு வருகின்றோம். மனிதனை முழுமையாகத் திருப்திப்படுத்த முடிவதில்லை. ஒரு தேவை முடிவடைய இன்னொரு தேவையை அவர்கள் முன்வைத்துக் கொண்டே செல்வார்கள்.

- ஆரம்பகால கல்வி நடைமுறைகள் ஒரு வரையறைக்குள் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இன்று சகல அமைச்சுக்களும், நிறுவனங்களும் கல்வித் திணைக்களத்தின் ஊடாகவே தமது நடவடிக்கைகளை முன்னெடுப்பது இலகுவானது என்பதை கண்டறிந்துள்ளனர். சமூகத்திற்காகச் செய்யப்படவேண்டிய பல்வேறு வேலைத் திட்டங்களை பாடசாலைகள் ஊடாகவே முன்னெடுத்துச் செல்லும் நடைமுறை அண்மைக்காலமாக அதிகரித்து வருவதனை நாம் காணமுடியும். ஆனால் அவ்வாறான பணிகள் தனித்தனி அமைச்சின் கீழ் செயற்படுத்த முடியும். இருப்பினும் கல்வி அமைச்சருடன் இணைந்தே மேற்கொள்ளப்படுகிறது உதாரணமாக:

- டெங்கு ஒழிப்பு
- சுற்றாடல் பாதுகாப்பு
- எயிட்சைக் கட்டுப்படுத்தல்
- போதைப்பொருள் ஒழிப்பு
- கரையோரப் பாதுகாப்பு – நகரைச் சுத்தமாக வைத்திருத்தல்

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட சமூகத்தில் உள்ளோரை விழிப்படையச் செய்தல் வேண்டும். இதற்கு பாடசாலை மாணவர்களையும், அதிபர், ஆசிரியர்களையும், பயன்படுத்துவதன் மூலம் அவர்களின் கற்றலுக்கான நேரம் பாதிக்கப்படுவதாக பெற்றோர் முறையிடும் நிலையும் ஏற்படும். நீதித்துறையினரும் இதனைச் சுட்டிக்காட்டுகின்றனர். "உரலுக்கு ஒருபக்கம் இடி, மத்தளத்திற்கு இருபக்கம் அடி" என்பதைப்போல வலயக்கல்வி அலுவலக நிர்வாகம் இருபக்கமும் கோணாமல் செயற்பட வேண்டிய நிலை காணப்படுகின்றது. இது நிர்வாக ரீதியில் ஒரு சவாலாகவே அமைகிறது.

- ஆசிரியர்களை அவர்களது சுயவிபரக்கோவை தொடர்பான விடயங்களையும், ஏனைய விடயங்களையும் மேற்கொள்ள ஏதுவாக திங்கள் பிற்பகலும், புதன்கிழமைகளில் முழு வேலை நாளும் எமது வலயம் அனுமதியளித்துள்ளது. இருப்பினும் படித்தவர்கள் என்றழைக்கப்படும் சமூகத்தை இயக்குகின்ற விசையாகிய ஆசிரியர்கள் பலர் இந்நடைமுறையைப் பின்பற்றத் தவறிவிடுகின்றமையும் ஒரு சவாலாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட ஆசிரியர் வரும் வேளையிலெல்லாம் அவர் யாரை மையப்படுத்தி தேடிவருகின்றாரோ அவர் ஆசனத்தில் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்க்கையுடன்தான் வருவார்கள். அவர்கள் எதிர்பார்த்து வந்த அலுவலர் ஆசனத்தில் இல்லாவிட்டால் நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர்களிடம் பல்வேறு கேள்விகளைக் கேட்டு, அலுவலக வேலையைச் சரிவரச் செய்வதற்குச் சவாலாக, இவர்களது செயற்பாடுகள் அமைவதும் உண்டு.

- பதவி உயர்வு, சம்பள உயர்வு தொடர்பாக அண்மைக்காலமாக நிர்வாக கிளை/சம்பளக்கிளை துரிதமாகச் செயற்பட்டு வருகிறது. இருப்பினும் கடந்த பலவருடங்களாக ஆசிரியர்கள் பதவியில் உறுதிப்படுத்துதல் கிழக்கு மாகாண-உள்ளீர்ப்பு, மற்றும் பரீட்சைப் பெறுபேற்றினை உறுதிப்படுத்தாமை, அரசசார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிய உரியமுறையில் அனுமதிபெற்று விடுவிப்பினைப் பெற்றுச் செல்லாமை, சம்பள உயர்ச்சிப் படிவங்களை வருடாந்தம் கையளிக்காமை போன்ற காரணங்களினால் கனிசமானளவு அதிபர்/ ஆசிரியர்களது சம்பளத்தை மாற்றியமைத்தல், பதவி உயர்வு, போன்றவற்றை உரிய முறையில் மேற்கொள்வதில் எமது கிளை பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கிறது.

இதேபோல கல்விசாரா ஊழியர்களது சம்பள உயர்விலும், பதவி உயர்விலும், பல்வேறு சிக்கல் தன்மைகள் காணப்படுவதும் சவாலாகவே உள்ளது. ஆசிரியர் இடமாற்றம் என்பது பல்வேறு மட்டங்களில் இடம்பெறுகிறது. வலய மட்டம், வேறு வலயம், வேறு மாகாணம் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இருப்பினும் இந்த இடமாற்றங்களை ஒழுங்குபடுத்தப்பட்ட உரிய முறையில் மேற்கொள்வதிலும் நிறையவே நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

- எழுதுவினைஞர் சேவையிலுள்ள ஆளணியினரைப் பொறுத்தவரை அவர்களுக்கு அனுமதிக்கப்பட வேண்டிய சுயவிபரக் கோவைகளின் எண்ணிக்கையைவிட மேலதிகமான அளவினைச் சுமக்கின்ற நிலைமை காணப்படுகின்றது. அத்துடன் இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களுக்குப் பொருத்தமான பதிலீடுகள் இன்மையால் வேலைப் பழுக்கள் அதிகரித்தே செல்கின்றது. இதைவிட பயிற்றப்பட்ட ஆளணியினர் 5 வருடங்களுக்கு ஒரு தடவை இடமாற்றம் பெற்றுச் செல்கின்றபோது ஒரே தடவையில் பெரும் எண்ணிக்கையானோர் எமது அலுவலகத்தலிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் போதும் புதிய ஆளணியினரை எமது அலுவலக தேவைக்கேற்ப பயிற்றுவிப்பதும் சவாலாகவே உள்ளது. இதைவிட இடமாற்றம் பெற்று வருபவர்கள் அர்ப்பணிப்போடு கடமையைச் செய்யத் தவறும் சந்தர்ப்பங்களும் உண்டு.

- உரிய படிநிலையில் ஆசிரியர்களை அமர்த்தல் அவர்களுக்குரிய பதவி உயர்வுகளை வழங்குதல் அதன் பின்னர் அவர்களுக்குரிய நிலுவைச் சம்பளத்தை கணக்கிடல் பின்பு அதனை மாகாணக் கல்வித்திணைக்களத்தில் இருந்து பெற்று உரிய நேரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதும் சவாலாகவே உள்ளது. கட்டம் கட்டமாகவே ஆசிரியர்களுக்கு இந் நிலுவையை வழங்க வேண்டிய சூழலும் காணப்படுகிறது. ஒரு பாடசாலையிலுள்ள குறிப்பிட்ட சிலர் நிலுவையைப் பெற ஏனையோர் தமக்கு கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்தை எம்மிடம் வெளியிடுகின்றனர்.

- பாடசாலையின் வகைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட தரத்திலுள்ள அதிபர்களை நியமிப்பதற்குப் பொருத்தமான ஆளணியினர் எமது வலயத்தில் போதியளவில் இல்லை. இருப்பினும், பாடசாலைகளின் தரத்திற்கேற்ப அல்லது அதற்கு அடுத்த தரத்திலுள்ளவர்களிடமிருந்து வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பங்களை கோரப்பெற்று உரிய முறையில் நேர்முகப் பரீட்சையினை உரிய அதிகாரிகளினால் நாடாத்தப்பட்டு நியமனங்களை வழங்கும் நடைமுறையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருப்பினும் தெரிவு செய்யப்படும் அதிபர்களில் சிலர் அப்பாடசாலைகளை நேர்த்தியான முறையில் நிர்வகிப்பதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அவர்களது சுமையையும் வலய நிர்வாகமே (வகைகூறும் பொறுப்பை) ஏற்க வேண்டிய சூழலும் பெரும் சவாலாகவே கொள்ளவேண்டியுள்ளது.

- குறிப்பிட்ட சில பாடங்களைப் பொறுத்தவரையிலும், கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளைப் பொறுத்தவரையிலும் ஆசிரியர் பற்றாக்குறை என்பது தொடர் கதையாகவே உள்ளது. நியமனம் பெற்று வருபவர்களும் சிறிது காலம் சேவையாற்றிய பின்னர இடமாற்றம் பெற்றுச் சென்றுவிடுகின்றனர். நியமனம் பெறுவோரில் பெரும்பாலானவர்கள் பெண்களாக இருப்பதனால் அவர்களும் பல்வேறு குடும்பச் சுமை காரணமாக இடமாற்றம் அல்லது தற்காலிக இணைப்புப் பெற்றுச் சென்றுவிடுகின்றனர். இதனால் பற்றாக்குறை நிலைமை தொடர்ந்து கொண்டே செல்கின்றன. இதனால் பாடசாலைகளைக் கொண்டு நடாத்துவதும் பரீட்சைப் பெறுபேற்றைத் தக்கவைத்துக் கொள்வதிலும் பாடசாலைகள் பல சவால்களை எதிர்நோக்குகின்றன. இதன் தாக்கமும் வலய நிர்வாகத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தி விடுகின்றது.

- தரம் 5 புலமைப் பரிசில் கொடுப்பனவு, மற்றும் க.பொ.த. (உ/த) ஜனாதிபதி புலமைப் பரிசில் கொடுப்பனவு மற்றும் காலை உணவுக்காக ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்காக பாடசாலைகளுக்கு வழங்கும் நிதியினை உரிய காலத்தில் வழங்குவதில் எமது நிர்வாகம் சவாலையே எதிர்நோக்குகிறது. நாளாந்த வரவினை தவணைக்கு ஒரு தடவை, தவணை விடுமுறைக் காலத்திலாவது ஒழுங்காக வழங்குவதில் சில அதிபர்கள் தவறிவிடுகின்றனர். மாணவர்களது கணக்கிலக்கங்கள் தவறாக எமக்கு வழங்கப்படுகிறது. 18 வயதை மாணவன் அடைந்தவுடன் 18+ என்ற வங்கிக் கணக்கை மாணவர்களுக்கு வங்கி வழங்கும் போது அவர்களது கணக்கிலக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிவிடுகிறது. இவ்வாறான சூழ்நிலைகளால் உரிய காலத்தில் இக் கொடுப்பனவுகளை வழங்க முடியாத நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்படுகின்ற நேரம்.

- உரிய நடைமுறைகளைப் பாடசாலைகள் பின்பற்றத் தவறுகின்றமையும் எமக்குச் சவாலாகவே அமைகின்றன. மூன்றாம் தவணையில் கல்விச் சுற்றுலாவுக்கு அனுமதி கோரல், விளையாட்டுப் போட்டிகளை முதலாந் தவணைக்குள் செய்யத் தவறுதல், மூன்றாந் தவணையில் கருத்தரங்குகளின் அளவினையும் ஆசிரியர் பயிற்சிக் கருத்தரங்குகளின் அளவினையும் அதிகரித்தல், ஏனைய நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு பாடசாலை மாணவர்களைப் பயன்படுத்துதல் போன்ற காரணங்களினால் பரீட்சைகளின் அடைவு மட்டம் குறைவடைய ஒரு காரணமாகிறது. இதுவும் வலய ரீதியான நிர்வாகப் பிரச்சினைகளுக்கு சவாலாகவே அமைகிறது.

- உரிய காலத்தில் அலுவலக நிர்வாகம் தொடர்பான பதில்களை அனுப்பத் தவறுகின்றமையினால் ஞாபகமூட்டல்களும், மேலதிகாரிகளின் கண்டிப்புக்களும் எமக்குச் சவாலாக அமைகின்றது. ஒரு சிலரது பொறுப்பற்ற செயற்பாடுகளும் வகை கூறும் பொறுப்பற்ற தன்மையும் இதற்குக் காரணமாக அமைகின்றது. இதனால் உரிய பதில்கள் உரிய காலத்தில் அனுப்புவதில் சிரமங்கள் எழுகின்றன. சில விடயங்கள் சரியான முறையில் அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தெளிவாகப் பிரிக்கப்படாத நிலையில் யார் பதில் அனுப்புவது என்பதிலும் சரியான முடிவினை எடுப்பதில் காலதாமதம் ஆகிவிடுகிறது.

- அதிபர் அல்லது ஆசிரியர்கள் அல்லது சிற்றூழியர்கள் ஒரு குறிப்பட்ட காலம் கல்விப்புலத்தில் வேலை செய்துவிட்டு வேலையை விட்டுச் சென்றுவிடுகின்றனர், பின்னர் அவர்கள் வேலையிலிருந்து வறிதாக்கப்படுகின்றனர். பின்னர் அவர்கள் மீண்டும் வந்து, தம்மை மீளச் சேவைக்கு அமர்த்துமாறு கோருகின்றனர். அவ்வாறு மீளச் சேவைக்கு அமர்த்துதல் தொடர்பாக காலத்திற்கு காலம் வெவ்வேறு நடைமுறைகளைப் பின்பற்றுவதாலும், அரசியல் செல்வாக்கு காரணமாகவும் நாம் சவால்களை எதிர்நோக்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்ட வேண்டிய நிலமைகளும் ஏற்படுவதுமுண்டு.

- ஒரு ஆசிரியர் தனது சேவைக்காலத்தில் பல மாகாணங்களிலும், பல்வேறு வலயங்களிலும், தமது சேவையினை செய்திருப்பார்கள். ஆனால் உரிய முறையில் விதவைகள் மற்றும் அனாதைகள் நிதியஇலக்கம் பெற்றிருக்கமாட்டார்கள். தற்போது அவர்கள் ஓய்வு பெறவேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது இவர்களுக்கான ஓய்வூதியச் செயற்பாடுகளை முழுமைப்படுத்துவதற்கு பல்வேறு வலயங்களிலும் இவர்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதவைகள் மற்றும் அனாதைகள் நிதிய அறவீடுகளை கோரிப் பெறுவதிலும் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

➤ மனிதர்களுடன் நாளாந்தம் பணியாற்றுவது மிகவும் கடினமாக காரியம், அதுவும் படித்த மனிதர்களுடன் சேவையாற்றுவதில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிவரும். உலகில் கடினமான பணி மனிதனைக் கொண்டு சரியான முறையில் வேலைகளைச் செய்து முடிப்பது. ஏனெனில் ஈடுபாட்டுடன், அர்ப்பணிப்புடன், கடமை தவறாது, ஒழுக்கம், நேர்மையுடன் பணியாற்றுபவர்கள் இன்று குறைந்து வருகின்றது. வேலை செய்பவர்களின் சுயநலத்தன்மை, வீட்டுச் சுமைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள், அரசியல் பின்னணிகள் போன்றன ஒவ்வொருவரையும் தமது பணியினைச் சரிவரச் செய்வதற்குத் தடைக்கற்களாக அமைகின்றன. இவற்றை முறியடித்து அலுவலக வேலைகளை உரிய முறையில் நிறைவேற்றுவதும் சவாலாகவே உள்ளது.

➤ அலுவலகங்களில் பொதுவாக கல்வி, சுகாதாரம் போன்ற துறையில் ஆளணியினரின் எண்ணிக்கை அதிகமாகும். இவர்களின் நியமனம், சேவை, ஓய்வுபெறுதல் போன்ற முப்பரிமாணத்திலும் அதிகளவு பிரச்சினைகளை அலுவலர்கள் எதிர்நோக்குகின்றனர். இதனால் மனதளவிலும், அலுவலக ஊழியர்கள் பாதிக்கப்படுகின்றனர். போதியளவு இடவசதியின்மை, அலுமாரி மற்றும் ஏனைய அலுவலக உபகரணப் பற்றாக்குறை, மனிதனது அடிப்படைத் தேவைகளை (ஆப்ரகாம் மாஸ்லோ குறிப்பிடுவது போன்று) நிறைவேற்றுவதிலுள்ள குறைபாடுகள் இவை அனைத்தும் அலுவலக நிர்வாக நடைமுறையில் தாக்கத்தினைச் செலுத்துகின்றனர். இதைவிட பல அதிகாரிகளுக்கு வேலை செய்ய வேண்டிய நிலைமையும் அலுவலகங்களைப் பாதிக்கின்றது. நாம் நாளை செய்ய வேண்டிய வேலைகளைத் திட்டமிட்டுக்கொண்டு வேலைக்கு வந்தால் அவ்வேலையை விட வேறு வேலையைச் செய்ய நிர்ப்பந்திக்கப்படுதலும் சவாலே.

➤ அலுவலகங்களில் சமனான வேலைப்பகிர்வு இன்மையும், வேலைப்பழுவினை அதிகரிக்கும் செயற்பாடாகவே அமைந்துவிடும். "சுமக்கக் கூடியவரிடமே சுமையை ஏற்ற வேண்டும்" என்ற ஒரு தத்துவம் உள்ளது. அதனால் சுமக்காது இருப்பவர்கள் தப்பித்துக் கொள்ளும் வாய்ப்புகள் அதிகரித்துச் செல்வதும் சுமையை மேலும்,மேலும் சுமப்பவருக்கு சவாலாக அமைவது போல அலுவலகத்திலும் வேலை செய்பவர்களுக்கு சுமைகள் அளவுக்கு அதிகமாக இருப்பதுவும் ஒரு சவாலே.

➤ ஒரு சிலர் தன்னால் இயன்றளவு வேலைகளைச் செய்கின்றனர். ஒருசிலர் வேலை செய்வதைத் தவிர்த்து மற்றவர்கள் மேல் வேலைகளைச் சுமத்துகின்றனர். இதனால் மன உளைச்சலுக்கு அலுவலக ஊழியர்கள் உட்படுவதாகவும் சிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகின்றனர். இதனால் தாம் உளரீதியாகப் பாதிக்கப்படுவதாகவும், மனம் நொந்து வேலை செய்வதாகவும் வேதனை அடைகின்றனர்.

- பாடசாலைகள் தொடர்பாக, அதிபர் அல்லது ஆசிரியர்கள், அல்லது மாணவர்கள் தொடர்பாக வாராந்தம் பல்வேறு முறையீடுகளும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வருவதுண்டு. இம் முறைப்பாடுகளை விசாரித்து அறிக்கையிடுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் குறிப்பிடுவார். இந்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு பயிற்றப்பட்ட விசாரணையாளர்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். இருக்கின்ற ஒரு சில விசாரணையாளர்களைக் கொண்டே விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். மூவர் கொண்ட விசாரணைக் குழுவை நியமித்து ஆரம்ப விசாரணைக்கு திகதி குறிப்பிடுவதிலும், பொருத்தப்பாடுகள் ஏற்படுவது கடினம். அவ்வாறு ஏற்படும் தினத்தில் விசாரணைக்குச் செல்வதற்கு போதிய வாகன வசதி எமது வலயத்தில் இல்லை. வேறு வழிகளில் சென்று விசாரணையை மேற்கொண்டாலும், அதனை அறிக்கைப்படு த்துவதற்கு நேரத்தை ஒதுக்கீடு செய்வதிலும், பல சிரமங்கள் இருக்கின்றன. அறிக்கையினைத் தயாரிக்கும் போது இடையூறுகள் இல்லாத அமைதியான சூழலை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதனை அலுவலக நேரத்தில் செய்வது என்பது கடினமான காரியம். அவ்வாறு அறிக்கையை எழுதி முடித்துவிட்டாலும், அதனைக் கணிணி மயப்படுத்துவதற்கு போதியளவு கணிணிவசதி நிர்வாகக் கிளையில் கிடையாது. ஆகவே இதுவும் ஒரு சவாலாகவே காணப்படுகிறது.

- இவ் வலயத்தில் மூவின மக்களும், மூவினப் பாடசாலைகளும் இருக்கின்றன. பாடசாலைக்கு ஒருவிடயத்தை அறிவிக்க வேண்டுமென்றால் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் கடிதங்களைத் தயாரித்து அனுப்ப வேண்டும். இதற்கு வலயத்தில் மிகவும் பொருத்தமான மொழிபெயர்ப்பாளர்கள் எவருமில்லை. இந் நிலையில் அலுவலர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பாடசாலைகளுக்குப் புரிவதில்லை. இதைவிட அனைத்து அதிபர்களையும் ஒன்றிணைத்து ஒரு விடயம் தொடர்பாக கலந்துரையாடலை நடாத்துவதற்கும் பொருத்தமான மொழிபெயர்ப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் நெருக்கடியை நாம் எதிர்நோக்குகின்றோம்.

- இணையத்தளத்தினூடாக ஓய்வூதிய நடைமுறைகளை மேற்கொள்ள முடியும் என ஓய்வூதியத் திணைக்களம் அறிவித்துள்ளது. இதற்கு ஈடுகொடுத்து எமது ஓய்வூதிய வேலைகளைச் செய்வதற்குரிய வசதிகள் போதியளவு இல்லாமல் இருப்பதுவும் ஒரு சவாலாகவே உள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் நாம் அரச ஊழியர்கள், என்று அரச கடமையினைப் பொறுப்பேற்றோமோ அன்றிலிருந்து அரசுக்கு நாம் கடமைப்பட்டவர்கள். நாம் சேவையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும்வரை கல்விப் பணியில் உள்ளவர்கள் அர்ப்பணிப்புடனும், ஆர்வத்துடனும் மாணவ சமூகத்தின் எதிர்காலநலன் கருதிச் செயற்படவேண்டியது எமது தார்மீகப் பொறுப்பு என்பதனை உணர்ந்து செயற்பட வேண்டும். "நாம் ஒவ்வொருவரும் செய்யும் பணிக்கு அல்லது வேலைக்கு உரிய கொடுப்பனவுகள் இறைவனால் வழங்கப்படும்" என்பதை மனதிலிருத்தி அனைவரும் ஒன்றிணைந்து வலயத்தின் இலக்கை அடைய அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். சவால்களை எதிர்நோக்கி அவற்றுக்கான தீர்வுகளைக் கண்டறிந்து அதனைச் செயற்படுத்துவதன் மூலம், நிறைந்த அனுபவங்களை நாம் பெற்றுக்கொள்ள முடியும். அது ஒவ்வொருவரது தனிப்பட்ட வாழ்க்கைக்கு உதவியாக அமையும். "புத்தியுள்ள மனிதர் எல்லாம் வெற்றி காண்பதில்லை, வெற்றி பெற்ற மனிதரெல்லாம் புத்திசாலி இல்லை", எது நடக்க வேண்டும், எப்போது நடக்க வேண்டும், எப்படி நடக்க வேண்டும், எவ்வாறு நடக்க வேண்டும் என்பதெல்லாம் ஏற்கனவே எழுதப்பட்டுவிட்டன. எனவே "எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது, எது நடக்கின்றதோ, அது நன்றாகவே நடக்கின்றது, எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்" என்ற பகவத்கீதையின் வாசகத்திற்கமைய எமது பணிகளும் எதிர்காலத்தில் நன்றாகவே அமைய வேண்டும். அதுவே ஒரு சமூகத்தின் உயர்வுக்கு உறுதுணையாக அமையும்.

எமது கல்விச் சேவையின் மூலம், இந்த மண்ணில் பிறந்து வளர்ந்த மாணவச் செல்வங்களின் எதிர்காலம் சிறப்புற அமையுமானால் அதனால் சந்தோசப்பட வேண்டியவர்களும் நாமே. அதே போல மாணவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமையாவிட்டால் அதற்கான வகைகூறும் பொறுப்பினையும் இந்தக் கல்விச் சமூகமே ஏற்க வேண்டும். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு எமது கல்விப் பணியில் பொருத்தமான சீர்திருத்தங்களைச் செய்து எதிர்காலச் சவால்களை முறியடித்துச் செயற்பட எமது வலயத்தை தயார்படுத்த வேண்டும். ஒரு நிறுவனத்தின் பலம், பலவீனம், சந்தர்ப்பம், அச்சுறுத்தல், (SWOT ஆய்வு) ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, உரிய தந்திரோபாயங்களை வகுத்துச் செயற்படுவதன் மூலம், எதிர்காலச் சவால்களை வெற்றிகொள்ள முடியும். அதற்கு வலயத்திலுள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் மற்றும், அதிபர், ஆசிரியர்கள், கல்வியின்பால் அக்கறையுள்ள சமூக ஆர்வலர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது காலத்தின் தேவையாகும்.

**திரு. க. அரியநாயகம்,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர், நிர்வாகம் (SLEAS)**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்னை

கருவறை தனிலே மாதம் பத்து
காத்து வளர்த்தவள் அன்னை! – ஒரு
வருமதி பார்த்து சேவைகள் தன்னை
வளங்கா திருப்பவள் அன்னை!

உதிரம் தனையே பாலாய் நாளும்
ஊட்டி வளர்ப்பவள் அன்னை! – தன்
சதிரம் தனையும் சாறாய்ப் பிழிந்து
சேயை வளர்ப்பவள் அன்னை!

சுமையாய் எதையும் எண்ணா நெறியாள்
சுயநலம் அறியாள் அன்னை! – தினம்
இமைகள் மூடா வகையில் விழித்து
இருந்து வளர்ப்பவள் அன்னை!

காலில் எறும்பு கடித்தாற் கூட.
கண்டு துடிப்பவள் அன்னை! – முள்
வேலி போலும் காவல் புரிந்து
சேயை வளர்ப்பவள் அன்னை!

மழலை மொழிகள் கேட்டுத் தினமும்
மகிழ்வு கொள்பவள் அன்னை! – உடல்
அழகு படுத்தி ஆடை உடுத்தி
அழகை ரசிப்பவள் அன்னை!

கல்வி புகட்டித் திறமைகள் கண்டு
களிக்கும் தாய்மை அன்னை! – எமை
அல்லும் பகலும் அன்பாய் அணைத்து
ஆனந் திப்பவள் அன்னை!

அ.கௌரிதாசன்

**என் பாடல்!**

என்பாடல் அத்தனையும் தத்துவம் - வரும்
இளையதலை முறையினர்க்கோர் பொக்கிஷம்!
அன்புவழி எனும், வாழ்க்கைச் சித்திரம்! – பூமியில்
அம்மணமாய்த் திரிவோர்க்கு வஸ்திரம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்குமது நல்லவர்க்கு கௌரவம்! – வாழ்வதில்
அல்லலுறும் மாந்தருக்கு ஔடதம்!
ஒளியூட்டி இருளோட்டும் சந்திரன்! – பாடல்
ஒவ்வொன்றும் உலகுய்யும் மந்திரம்!

வாழ்க்கையதன் வழிசொல்லும் வித்துவம்! – எனது
வரலாற்றின் கதைகூறும் புத்தகம்!
சூழ்கநலம்: என்பாட்டின் ஆசைகள்! - இ∴து
சுயநலத்தார் அறியாத பாசைகள்!

அடிமைவிலங் குடைக்கின்ற சுத்தியல்! – காணும்
அவலத்தை ஓட்டுகின்ற பெரும்புயல்!
மிடிமையுறு மானிடர்க்கு நெம்புகோல்! – மேலும்
மேலாகச் சொல்வதெனில் அம்புபோல்!

சட்டத்தை மதிக்குமென் பாடல்கள்! – யாவும்
சமதர்மச் சிந்தனையின் தேடல்கள்!
கொட்டுமழை, அருவியென ஓடிடும்! – என்றும்
குறைவில்லா யாப்பணிகள் சூடிடும்!

இறையச்சம் தனைநாளும் பேணிடும்! – பால்
இயல்கூற சிறிதளவு நாணிடும்!
குறைவில்லா இல்வாழ்க்கைப் பெட்டகம்! – சுமை
கொண்டேகி, கரைசேர்க்கும் ஒட்டகம்!

காசுக்குக் கரையாத இரும்பது – நல்ல
கலையுள்ளத் தோருண்ணும் கரும்பது!
மாசுபடி யாதசுடர் நெருப்பது! – எனை
மதிக்கின்ற மனிதர்களின் விருப்பிது!

அ.கௌரிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்போம் வாழ்வில் வெல்வோம்

நில்லு நண்பா!
நில்லு நண்பா, நீளக் கனவு கொள்வோம்,
நம் வாழ்வை நாமே உயர்த்திட
நிதானமாய் யோசிப்போம்!

நாளையே
புதிதாய் வரலாறு கொள்வோம் -
வாசிப்பால்
மானுடம் உயர்ந்தது என்போம்:

அகத்தியர் முதல் ஔவையார் வரை
அறிஞர் பலரும்
ஆக்கிய நூல்கள்
வாசித்து அறிவோம்
வாசிப்பால் எம் நிலை
உயரக் காண்போம்!

மதுவை, புகையை, போதைப்பொருளை
இல்லாது ஒழிக்க
வருடத்துக்கு ஒருதினம்

அன்னையர், முதியோர் , ஆசிரியரையும்
அன்போடு போற்றிட
வருடத்தில் ஒருதினம்

பொங்கல், தீபாவளி, வருடப்பிறப்பென்று
பண்டிகை இனிப்பதும்
வருடத்தில் ஒருதினம்

வாசிப்பால் வாழ்க்கையை
உயர்த்தவெனக் குறிப்பறிந்து
வருடத்தில் வருவதோ முப்பத்து ஒரு தினம்!


நண்பா!
இலவசக் கல்வியும் இனிய நூல்களும்
இதமாக உயர்த்தும் நம்நிலை!

இனியும் வேண்டாம்
தாமதம் நமக்கு –
வாழ்வை வெற்றி கொள்ள
வாசிப்போம் வா, வா!

கவிதாஜினி
திருமதி.ஷாமினி கணேஸ்
தி/குளக்கோட்டன் த.வித்தியலாயம்
தம்பலகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிந்தனைக்கு ஹிட்லரின் சில உபதேசங்கள்

- மடையனுடன் விவாதிக்காதே. ஏனெனில் மக்கள் உங்கள் இருவரையும் பிரித்தறிவதில் தவறிழைத்துவிடலாம்
- தோற்றவன் புன்னகைத்தால் வெற்றியாளன் வெற்றியின் சுவையை இழக்கின்றான்
- இழப்பதற்கு இனி எதுவுமில்லை என்றிருக்கின்ற மனிதனிடம் நீ சவால்விடாதே
- ஒரு மனிதன் அவனது தாய் மரணிக்கும் வரை குழந்தையாகவே இருக்கிறான். அவள் மரணித்த அடுத்த கணமே அவன் முதுமை அடைந்துவிடுகின்றான்.
- பின்னாலிருந்து நீ விமர்ச்சிக்கப்பட்டால் நினைத்துக் கொள், நீ முன்னால் இருக்கின்றாய் என்று
- நீ நண்பனாக இரு. உனக்கு நண்பன் இருக்க வேண்டும் என ஆசை கொள்ளாதே
- நீ உன் எதிரியை விரும்பும் போது அவனது அற்பதனத்தை உணர்ந்து கொள்கின்றாய்
- நாம் எல்லோரும் நிலவைப் போன்றவர்கள். அதற்கு இருளான ஒரு பக்கமும் உண்டு
- உனது மனைவியின் ரசனையில் நீ குறைகாணாதே. ஏனென்றால் உன்னையும் அவள்தான் தெரிவு செய்தாள்

**சிந்தனைக்கு**


## வைரமுத்துவின் வைரவரிகள்

- புகழின் பின் நீ போனால் அது பொய்மான். புகழ் உன் பின்னால் வந்தால் அது நிஜமான். அப்போது தான் அதற்கு நீ எஜமான்
- நமது கல்வி விரல்களைத் தான் வேலை வாங்குகிறதே தவிர மூளையையும், மனதையும் முழுமையாக்கவில்லை
- ஓய்வு என்பது புலன்களை மறக்கடிப்பதல்ல, புதுப்பிப்பது
- இருக்கும் தலைமுறைக்கு மாத்திரமல்லாமல், பிறக்கும் தலைமுறைக்கும் பயன்பட்டவர்களைத் தான் வாழ்ந்தவர்கள் என்று வரலாறு கருதுகிறது
- ஒவ்வொரு ஆணுக்கும் ஒரு பெண்ணால் தான் பதவி உயர்வு வருகிறது. அப்பன் என்ற பதவியை அரசாங்கம் தரமுடியாது. மனைவி தான் தர வேண்டும்
- நேரத்தை தள்ளி வைக்கும் ஒவ்வொரு நிமிடத்திலும் உனது வெற்றி தள்ளி வைக்கப்படுகிறது.
- உணர்ச்சிகள் ஆரம்பித்து வைக்க அறிவு வந்து முடித்து வைப்பது தான் காதல்
- அடக்கம் என்று நினைப்பது எதிராளியை மதிப்பது மாத்திரமல்ல. தன்னைத் தானே மதிப்பிட்டுக் கொள்வது
- சிந்திக்கத் தெரியாதவனை மன்னிக்கலாம். சிந்திக்க மறுப்பவனை மன்னிக்க முடியாது
- இன்னோர் உயிருக்கு தீங்கிழைக்காமல் இருப்பது மாத்திரம் அல்ல அகிம்சை. இன்னோர் உயிருக்கு தீங்கு வரும் நேரத்தில் அந்த இம்சையை சகிக்காமல் வாள் ஏந்துவதும் அகிம்சை தான்.

Mrs.Faiz M.Yusry
Teacher
T/Jamaliya Muslim Maha Vid



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விந்தையான விஞ்ஞானம்

கனவுகளையெல்லாம் நனவுகளாக்கி
நனவுகளையெல்லாம் நிஜங்களாக்கி
நிஜங்களைக் கூட நிதர்ஷனமாக்குவதே
விஞ்ஞானம்

நெருப்பில் தொடங்கி
கருவில் விரிந்து தெருவில் ஊர்ந்து
வானில் பறந்து சென்ற
மகிமை கொண்ட
மகத்துவமல்லோ விஞ்ஞானம்

உண்பதில் விஞ்ஞானம்
உடுப்பதிலும் விஞ்ஞானம்
ஊர்வனவும் விஞ்ஞானம்
பறப்பனவும் விஞ்ஞானம்
பார்ப்பதும் விஞ்ஞானம்
படிப்பதும் விஞ்ஞானம்
எங்கும் விஞ்ஞானம் எதிலும் விஞ்ஞானம்
அதுவே விஞ்ஞானம்

நியூட்டன், கலிலியோ, கார்வே முதல்
ஐன்ஸ்டீன், கலாம், ஹிப்போகிரடீனுடன்
நானும் ஒன்றாய் வலம் வர உதவும்
என் ஞானம் விஞ்ஞானம்

வெறும் சோதனையல்ல என் ஞானம்
பரிசோதனையல்லோ விஞ்ஞானம்
நூல் நூற்பதிலல்ல என் ஞானம்
நிஜம், ஜெயிப்பது, அதுவே விஞ்ஞானம்

அணுவைத் துளைத்து நனோ என்றோம்
உடற்கூறு பிரித்து உயிர் காத்தோம்
போலி மனிதன் ஒன்றை றோபோ என்றோம்
விண்ணில் ஒரு வீடு கட்டி ஆய்வுகூடம் செய்தோம்
மனித விரலால் வேலை முடிக்க கணணி செய்தோம்
ஆளில்லா வாகனம், வலுவுள்ள இயந்திரம்
தந்தியில்லா தொடர்பு தாளில்லா கடிதம்
இத்தனையும் செய்தோம் விஞ்ஞானி என்றனர்

கோளமயமே விஞ்ஞானமயமாகிற்று
இதனைப் பெற்றதாலோ

வாழட்டும் விஞ்ஞானம்
வளரட்டும் விஞ்ஞானம்
ஆழட்டும் விஞ்ஞானம்
மலரட்டும் விஞ்ஞானிகள்
படரட்டும் விஞ்ஞானம்
தொடரட்டும் விஞ்ஞானம்

விந்தையான விஞ்ஞான ஒளி
விளங்கட்டும் விண்ணிலும் மண்ணிலும் எல்லோர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Overseas Training Program on School based Management and Teacher Development Thailand & Philippines At the time of Visit Our Zonal Director of Education Mr. N. Vijendren with Eastern Educational Team

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Overseas Training Program on School based Management and Teacher Development Thailand & Philippines . At the time of Visit Our Zonal Director of Education Mr. N. Vijendren with Eastern Educational Team

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Education Sector Development Frame work and Programme ESDFP (2012 – 2016)

## கல்விப் பிரிவிற்கானஅபிவிருத்திசார் சட்டநிகழ்ச்சித் திட்டம்.

இத்திட்டமானது தேசிய கல்விக் கொள்கை அடிப்படையில் எமது நாட்டில் மூன்று கருப்பொருள்களை மையமாகக் கொண்டுகல்வி அபிவிருத்திகருதி நிகழ்த்தப்பட்டுவருகிறது. சுகல பாடசாலைகளும் இவற்றை அறிந்து கொண்டு பாடசாலைகளில் அதன் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

கருப்பொருள் I: Increasing equity of access to Primary and Secondary education
(Theme I): ஆரம்ப, இடைநிலைப் பிரிவின் கல்வியில் சமவாய்ப்புகளை அதிகரித்தல்.

T.1.1 Ensure successful implementation of free education policies
இலவசக் கல்விக் கொள்கையினை வெற்றிகரமாக நடை முறைப்படுத்தல்

T.1.2 Strengthen Non formal Education (NFE)
முறைசாராக் கல்வியை வலுப்படுத்தல்

T.1.3 Strengthen Special Education
விசேட கல்விப் பிரிவை வலுப்படுத்தல்

T.1.4 Increase survival rate
மாணவர் நிலைத்திருக்கும் வீதத்தை அதிகரித்தல்

T.1.5 Strengthen Privena Education
பிரிவேனாக் கல்வியைவலுப்படுத்தல்

T.1.6 Strengthen School Health Programme
பாடசாலைசுகாதாரநிகழ்ச்சித் திட்டங்களைவலுப்படுத்தல்

T.1.7 Flagship Programme :- Transforming 1000 Secondary Schools and 5000 Primary Schools.

T.1.7-1 Expansion of Network of 5000 good quality primaryschools as to ensure equity in access to and participation in primary education
ஆரம்ப பாடசாலைகளுக் கிடையில் வலையமைப்பை உருவாக்கலும் பங்கு பற்றலை உறுதிப்படுத்தலும்

T.1.7-2 Development of a Network of 1000 good quality secondary Schools
இடை நிலை பாடசாலைகளுக் கிடையில் வலையமைப்பை உருவாக்கல்

கருப்பொருள் 2: Improving the quality of Primary and Secondary Education
(Theme 2): ஆரம்ப இடைநிலைக் கல்வியின் தரத்தை மேம்படுத்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(a). Primary Education**

T.2.1 Primary Education Related Development Programme

T.2.1-1 Curriculum revisionand up grading (Primary Education)
கலைத்திட்ட மீள்பார்வையும், ஆரம்ப கல்வியை தரமுயர்த்துதலும்

T.2.1-2 Improve quality of Primary Education
ஆரம்பக் கல்வியின் தரமேம்பாடு

**b). Secondary Education**

T.2.1 Curriculum revision (Secondary Education)
கலைத்திட்ட மீள்பார்வை (இடைநிலைக் கல்வி)

T.2.2 First language & 2nd National language
தாய்மொழிக் கல்வியும், இரண்டாம் தேசியமொழிக் கல்வியும்

T.2.3 Science Education – விஞ்ஞானக் கல்வி

T.2.4 Mathematic Education–கணிதக் கல்வி

T.2.5 English & Foreign language
ஆங்கிலமும், பிறநாட்டு மொழியும்

T.2.6 ICT Education – தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வி

T.2.7 Bilinguals Education - இருமொழிக்கல்வி

T.2.8 Commerce Education - வணிகக்கல்வி

T.2.9 Agriculture Education - விவசாயக்கல்வி

T.2.10. Technical Education - தொழில்நுட்பக்கல்வி

T.2.11. Social Science Education (History, Geography, Civics)
சமூக விஞ்ஞானம், ( வரலாறு, புவியியல், குடியுரிமைக் கல்வி )

T.2.12 . Religious Education - சமயக்கல்வி

T.2.13 Aesthetic Education - அழகியற்கல்வி

T.2.14 Sports and Physical Education - விளையாட்டு, உடற்பயிற்சிக் கல்வி

T.2.15. Child Central Approaches and Peace Education and Communication and Media Studies
மாணவர் மைய அணுகு முறையும், சமாதானக் கல்வியும், தொடர்பாடல் ஊடகக் கல்வியும்

T.2.16. School Library Development
பாடசாலை நூலக அபிவிருத்தி

T.2.17 Tamil Medium and Plantation area School and Muslim School development.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T.2.18 Career Guidance and Counselling orientate General Education towards the World of Work
பொதுக் கல்வி முகாம் வேலை, உலகிற்கான தொழில் வழிகாட்டல், வழிகாட்டல் ஆலோசனை

T.2.19. School Disaster Safety - பாடசாலை அனர்த்தப் பாதுகாப்பு

T.2.20. Teacher Development - ஆசிரியர் அபிவிருத்தி

T.2.21. Quality Assurance- தர உறுதிப்பாடு

T.2.22. National Testing and Evaluation - தேசியமட்டப் பரீட்சித்தல், மதிப்பீடுகள்.

T.2.23. Educational Text book and publication
பாடநூல்களும், அதன் வெளியீடுகளும்.

கருப்பொருள் 3: Strengthening governance and delivery of Education Service
( Theme 3): நல் ஆளுகையினையும் கல்விச் சேவையினையும் வலுப்படுத்தல்

T.3.1 Strengthen balanced control model of SBM Programme for School improvement (PSI)
பாடசாலை மேம்பாட்டு செயற்திட்டத்தினை மேலும் வலுவுள்ளதாக்கல்.

T.3.2 Human Resource Management Development and Capacity Building.
மனித வளங்களை முகாமை செய்தலும் இயலுமைகளை விருத்தி செய்தலும்.

(a). Leadership development - தலைமைத்துவ விருத்தி

(b) Recruitment and development of staff of educational services (SLEAS, SLPS, SLTS, SLTES)- ஆளணியிடல்

(C.) Strengthening of Zonal and Divisional Officers

கல்விச் சேவைக்குரிய ஆட்சேர்ப்பு, சமப்படுத்தல், வலயங்கள், கோட்டங்களை வலுப்படுத்தல்.

**Cross cutting Activity**- Results Based Monitoring and Evaluation
இடையிட்ட செயற்பாடுகள்- பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்டகண் காணிப்பும் மதிப்பீடும்.

CA– 1- Monitoring and Evaluation - கண்காணிப்பும் மதிப்பீடும்
CA– 2- Research and studies - ஆய்வும், கற்கைகளும்.
CA– 3- Education for all - அனைவருக்கும் கல்வி
CA– 4- Public Awareness on education achievement
(கல்வி அடைவுகள் தொடர்பான பொதுமக்கள் விழிப்புணர்வுகள், செயற்பாடுகள்)

மேலே திட்டநடை முறையின் உள்ளடக்கங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றை கிரமமாக பாடசாலைகளில் வினைத்திறனாக செயற்படுத்தி வினைத்திறன் மிக்க பாடசாலையாக மாற்ற முயற்சியெடுப்பது அனைவரதும் தார்மீகப் பொறுப்பாகும்.

N.விஜேந்திரன்,
வலயக்கல்விப் பணிப்பாளர்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்களின் கற்றலில் பெற்றோரின் பங்களிப்பு

உலக மக்கள் அனைவருக்கும் கல்வி முக்கியமானது. செல்வங்களுள் சிறந்து விளங்கும் கல்வி செல்வம் அழிவடையாது ஏழு பிறப்பும் தொடரக்கூடியது.

'கற்கக் கசடறக் கற்பவை கற்ற பின் நிற்க அதற்கு தக' என திருவள்ளுவர் பெருமான் மிக அழகாக கூறியுள்ளார். இத்தகைய சிறப்பு மிக்க கல்வியை பெற்றோர்கள் மாணவர்களுக்கு வழங்குவதில் முன்னின்று உழைக்க வேண்டும். ஒரு பிள்ளையின் கல்வி வளர்ச்சிக்கு அவனது பெற்றோர், குடும்ப அங்கத்தவர்கள், மற்றும் ஏனையோர் பங்களிப்பும் ஆதரவும் இன்றியமையாததாகும். அந்த வகையில் பெற்றோர் மாணவனுக்கு ஏற்றவாறு குடும்ப சூழலை மாற்றியமைக்க வேண்டும்.

குடும்ப சூழலானது மாணவனை ஊக்கப்படுத்துவதாக அமைய வேண்டும். முதலாவதாக சுதந்திரமான இடமாக வீடு மாற வேண்டும். வீட்டின் அமைவானது பிள்ளையின் கற்றலுக்கு ஏற்றதாக அமைக்கப்பட வேண்டும். காற்றோட்டமுடையதானதும் வெளிச்சமுடையதுமான கற்றல் அறையை பிள்ளைக்கு வழங்குவதுடன் உரிய பொருத்தமான தளபாடங்களை வழங்க வேண்டும்.

பெற்றோர் பிள்ளையின் கற்றலுக்கு தேவையான சகல வசதிகளையும் பெற்றுக் கொடுக்க வேண்டும். இதனாலேயே 'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' எனக் கூறப்படுகிறது. ஒரு பிள்ளையின் கல்வி வீட்டிலேயே ஆரம்பிக்கப்படுகிறது. பிள்ளை முறைசாரா கல்வியையும் தாயின் கருவறையிலே ஆரம்பிக்கின்றது. பின் நான்கு வயதை அடைந்தவுடன் முன்பள்ளி செல்ல தயாராகின்றது. அப்போது கூட பெற்றோர் பிள்ளையை உரியவாறு முன் பள்ளியில் சேர்க்க வேண்டும்.


எனவே பெற்றோர் பிள்ளையின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு தமது எல்லா பிள்ளைகளையும் சமமாக பேண வேண்டும். ஒரு நாளைக்கு சில நிமிடங்களேனும் அவர்களுடன் உரையாட வேண்டும். அன்று நடைபெற்ற விடயங்களை வினவ வேண்டும். அவர்கள் வீட்டு வேலைகளில் உதவி ஆர்வத்தை தூண்ட வேண்டும். வாசிப்பு பழக்கத்தை சிறுவயது முதலே விருத்தி செய்ய வேண்டும். பிள்ளைக்கு தேவையான நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவற்றை கொள்வனவு செய்ய வேண்டும். அவர்கள் புதிய அனுபவங்களை பெற்றுக் கொள்ள வாய்ப்பளிப்பதன் மூலம் சுயமாக சிந்திக்கத் தூண்ட வேண்டும். சம வயது பிள்ளைகளுடன் தொடர்புகளையும் நட்பையும் ஏற்படுத்த வாய்ப்பளிக்க வேண்டும். பிள்ளைகளை சமூக மயமாக்கற் செயற்பாடுகளில் ஈடுபடச் செய்வதுடன் விழுமியங்களை கற்றுக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறான ஒரு பிள்ளையின் கற்றலுக்கு பெற்றோர்கள் உதவுவதன் மூலம் அவர்களை வெற்றிகரமான மாணவர்களாக உருவாக்க முடியும். இவ்வாறு மாணவர்கள் உருவாகும் போது நற்சமூகம் உருவாகும். நற்சமூகம் நற்பிரஜைகளை உருவாக்கும். தனிநபர் சமூகத்தையும் சமூகம் தனிநபர்களையுமாக ஒன்றுக்கொன்று நன்நிலை எய்துவதற்கு உந்தப்படும். இவை எல்லாவற்றிற்கும் அடிப்படையானவற்றில் மாணவனின் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாக காணப்படுகிறது.

திருமதி.கா.அமுதவாசன் BSc, Dip in Eng, PGDE
ஆசிரியர்
வவு/ கந்தபுரம் வாணி வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதுக்குறள்

கஞ்சா பொடியொடு கசிப்படித்த காயத்தில்
மிஞ்சாது ஏதும் பின்.

பொய்யுரைத்து பொய்யுரைத்து போகம்விடும் பாவிகட்கு
மெய்புரைக்க நோய்கள் வரும் காண்.

உயிர்போக்கி உடலுண்ணும் குடலென்ன குவலயத்தில்
உடல்தாக்கும் சுடுகாடு தான்.

கண்ணடிச்சு கன்னிகளின் கற்பறுக்கும் கயவருக்கு
கண்ணிவெடி பட்டுதிரும் அது

கட்டார் கனவினிலும் கலியாண மென்றொன்றை
கட்டாள் ஊதாரி ஆகில்.

இறையென்ப துண்டோவென பறைசெய்யும் இழிகுலத்தோர்
சிறைசெல்ல கன்ன மறை.

நெஞ்சறிய வஞ்சகத்தில் லஞ்சமதை பெற்றவர்பின்
நெஞ்சரிய போய்க்கிடப்பர் வாட்டில்.

கொல்லாமை பெரிது அதனிலும் புறஞ்
சொல்லாமை சாலப் பெரிது.

ஈருருளி ஓடுகையில் முன்னாலே சற்று
கண்ணயர்ந்தால் மறலிவரும் பின்னாலே.

மடிக்கணனி முகம்பார்த்து மணிக்கணக்காய் கதைப்பவர்கண்
துடிக்கவொரு நோய்கள் வரும்பின்.

-விராலி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி (Governance)

சர்வதேச அரங்கில் ஜனநாயகம் என்ற எண்ணக்கரு தோன்றி நிலையூன்றியதை அடுத்து காலத்திற்கு காலம் ஜனநாயகம் சார்ந்த பல எண்ணக்கருக்கள் தோன்றி செயற்படுவதுடன் பிரபல்யம் அடைந்தும் வருகின்றது.

அந்த வகையில் இன்று நாம் இலங்கையில் அடிக்கடி பெரும்பாலானவர்களால் பயன்படுத்தப்படும் சொல்லாக நல்லாட்சி அமைகின்றது. எனவே நல்லாட்சி என்றால் என்ன? அதன் தோற்றம் யாது? ஏன் இவ் எண்ணக்கருவின் அவசியம் உணர்த்தப்படுகின்றது? இதன் பண்புகள் என்ன? இதன் பங்குதாரர்கள் யார்? என்ற வினாக்களுக்கு விடை பகர்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

முதலில் நல்லாட்சி என்றால் என்ன? என்பதை நோக்குவோமாயின் ‘ஆளப்படுவோர் குறித்த ஆளுவோரின் தொடர்ச்சியான பொறுப்பு ஒன்றும் தமது உறவுகளை ஒழுக்க நெறி சார் முறையில் அமைத்துக் கொள்வதையும் ஆளப்படுவோரின் மிகச் சிறந்த நலன் கருதி தீர்மானங்களை மேற்கொள்வதையும் அதனை நடைமுறைப்படுத்துவுதையும் உறுதி செய்தல்’ என்று வரைவிலக்கணப்படுத்தலாம்..

நல்லாட்சி என்பது ஒரு புதிய எண்ணக்கரு அல்ல. உலகில் தோன்றிய நதிக்கரை நாகரிகங்கள் நல்லாட்சியின் மிக ஆரம்ப முயற்சியாக அமைந்தது. பின் கிரேக்க காலத்தின் சிந்தனையாளர்களான பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்றோர்களின் சிந்தனைகளில் நல்லாட்சி வலியுறுத்தப்பட்டது. பின் வந்த ரோம காலத்தில் ரோம் நகர அரச நிலையிலிருந்து பேரரசாக மாற்றம் கண்ட போது அங்கு நல்லாட்சியின் அடித்தளம் இடப்பட்டது. பின் மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களால் மக்கள் ஆட்சி, ஜனநாயக சிந்தனை வலுவடைய நல்லாட்சி ஏற்படுவதற்கான சூழல் ஐரோப்பாவில் ஏற்பட்டது. குறிப்பாக இத்தாலியில் மாக்கியவல்லி, பிரித்தானியாவில் கொப்ஸ், லொக் போன்றவர்களின் எழுத்துக்களில் நல்லாட்சி வலியுறுத்தப்பட்டது.

எனினும் முதன் முதலாக இவ் எண்ணக்கரு 1989ல் உலக வங்கியினால் பயன்படுத்தப்பட்டது. ஆபிரிக்க நாடுகளில் ஆட்சி நெருக்கடியினை (Crisis of governance) அடையாளப்படுத்துவதற்காகவே அது பயன்படுத்தப்பட்டது. பின் இவ் எண்ணக்கரு 1990ல் (கெடுபிடி யுத்தம் முடிவடைந்த பின்) நன்கொடை அமைப்புக்களினதும், நாடுகளினதும் முக்கிய கவனத்தை பெற்றது. 1992ல் ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட ‘ஆட்சியும் அபிவிருத்தியும்’ (Governance and development) என்ற ஆவணத்தில் இவ் எண்ணக்கரு மேலும் தெளிவுபடுத்தப்பட்டது. இன்று உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ட்ரான்பரன்சி இன்டனெசனல் (Transparency International) போன்ற நிறுவனங்கள் நல்லாட்சியை நடைமுறைப்படுத்துவதற்காக செயற்படுகின்றன.


இன்று இவ் எண்ணக்கரு ஏன் அதிமுக்கியமாக உணரப்படுகின்றது என்பதை ஆராய்கையில் அதிகாரம் ஒருமுகப்படுத்தப்பட்டு இருத்தல், ஆட்சி முறையின் செயற்றிறன் குன்றிய நிலை, அரசாங்க சேவை அரசியல் மயப்படுத்தல் போன்ற பல காரணிகள் நாட்டின் ஜனநாயக செயன்முறைக்கு பாதகமாக அமைவதால் நல்லாட்சி இன்று நாடுகளிடையே பிரபல்யமாக பேசப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாட்சியின் அடிப்படைப் பண்புகளாவன பங்குபற்றுதல் (Participation) சட்டத்தின் ஆட்சி (Rules of Law) பொறுப்புக் கூறல் (Responsiveness) வெளிப்படைத் தன்மை (Transparency) கருத்தொருமைப்பாடு (Consensus) செயற்றிறனும் வினைத்திறனும் (Efficiency and Productivity) நியாயம் (Fairness) பதிலிருத்தல் (Accountability) போன்றவற்றை கூறலாம். இதனை வரைபு 1.1 ல் காணலாம்.


**படம் 1.1**




அடுத்து நல்லாட்சியின் பங்குதாரர்களை பின்வரும் வரிப்படம் 1.2 இல் காணலாம்

படம் 1.2

**நல்லாட்சியின் பங்குதாரர்கள்**




மேலும் நல்லாட்சி மூலம் பல்வேறுபட்ட பலாபலன்களை நல்லாட்சி அரசுகள் எதிர்பார்க்கின்றன. அவையாவன

1. சமூக நடவடிக்கைகளில் மக்களின் பங்குபற்றல்
2. திடமான அபிவிருத்தி காணப்படுதல்
3. மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய திடமான ஆட்சி
4. சமத்துவமும் நீதியும் வளர்ச்சியடைதல்
5. பால் நிலை சமத்துவமும் சமநிலையும் வளர்ச்சியடைதல் போன்ற பல்வேறு விடயங்களை இங்கு கூட்டிக் காட்டலாம்.

இவ்வாறாக நல்லாட்சியானது எவ்வாறானதொரு பண்புகளையும் படிமுறை வளர்ச்சியையும் பங்குதாரர்களையும் கொண்டே செயற்படுகின்றது என்பதை அறிந்து நாட்டின் நல்லாட்சியின் செயற்பாட்டிற்கு நாம் ஒவ்வொருவரும் பங்காற்ற வேண்டும்.

திருமதி.சுபாஜினி சுதாகரன் B.A (Hons) Dip.in.Edu
தி/புனித சூசையப்பர் கல்லூரி,
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயமிகு நாட்டார் இலக்கியங்கள்

இயற்கையின் அரவணைப்பில், இயற்கையின் அழகில் மூழ்கி வாழ்பவர்கள் கிராமப்புற மக்கள். அவர்கள் இயற்கைச் சூழலுக்கேற்ப வாழ்க்கை நடத்துபவர்கள். அவர் தம் வாழ்வு இன்பமானது. தொழில் செய்வதிலேயே கண்ணுங்கருத்துமாக இருப்பர். தமது தொழில் நிகழ்ச்சிகளில் அலுப்புத் தோன்றாமலிருக்கத் தம் சூழலுக்கேற்றவாறு பாடல்களைப் பாடி, ஆடி மகிழ்வர். அவர் தம் உள்ளத்து எழும் உணர்வுகளை ஒழிவு மறைவுமின்றி நமக்குத் தெரிந்த மொழியிலேயே பாடி விடுவர். யாவும் பேச்சு மொழியும், உள்ளத்தை உள்ள படி பச்சையாகவே கூறும் இயல்பை அவர்களின் இலக்கியங்களில் காணலாம்.

அவை யாவும் ஏடும், எழுத்தாணியும் கொண்டு எழுதப்படவில்லை. அக்கால இலக்கியங்கள் கேள்விச் செவியாகவே மரபு வழியாகக் காலங் காலமாகப் பாதுகாத்து வரப்பட்டன. இனிமையும், அழகும், ஓசை நயமும், உயிர்த்துடிப்பும் உள்ள இலக்கியங்கள் அவை. பிற்காலத் தமிழிலக்கியங்கள் தோன்ற ஆதாரமாக அமைந்தவை. ஒரு நாட்டின் பண்பாட்டை நாகரிகத்தை அறிவதற்கு அந்நாட்டு இலக்கியங்கள் உதவுகின்றன. இந்த வகையில் நயமிகு நாட்டார் இலக்கியங்கள் அக்கால மக்களின் பண்பட்ட வாழ்க்கையையும், போக்கையும், உயர்வையும் அறிய உதவுகின்றன.

'மூங்கில் இலை மேலே தூங்கு பனி நீரே – தூங்கு பனி நீரை வாங்கு கதிரோனே' இதற்கு இணையான பாடல் வேறுண்டோ? இடத்திற்கு இடம் சூழல் சந்தர்ப்பத்திற்கேற்பத் தானாக மலர்வதே நாட்டார் இலக்கியங்கள். உண்மையான உணர்ச்சியின் உந்துதலினாலே பிறந்தவையே நயமிகு நாட்டார் இலக்கியங்கள். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம், பக்திச் சுவை நனி சொட்டும் பெரிய புராணம், பாரதியார் பாடல்கள், தேவார திருவாசகங்கள் யாவும் நாட்டார் இலக்கியங்களை அடியொற்றி எழுந்தவையே என்பது இக்கால நல்லறிஞர் ஆய்வின் வெளிப்பாடாகும். நவீன நாகரிகத்திலே மூழ்கி நமது அரும் பெருஞ் சொத்தாகிய நாட்டார் இலக்கியங்களை புறக்கணித்தலாகாது.

மிக எளிமையான நடையும், பேச்சுத்தமிழும் கலந்த உணர்ச்சிப் பிளம்பை இப்பாடல்களில் காணலாம். வீரர்களின் தீரச் செயல்கள், காதற் பாடல்கள், தொழிற் பாடல்கள், குழந்தைகளைத் தாலாட்டும் பாடல்கள், குழந்தை பிறந்தது முதல் பாடையில் போகும் வரை கட்டங் கட்டமாகப் பெறும் அனுபவங்கள் யாவும் நாட்டார்ப் பாடல்களில் நகைச்சுவையும், உள்ளத்தை கொள்ளை கொள்ளும் வகையிலும் அமைந்துள்ளன. இவற்றை விடப் பொழுது போக்கிற்காக கும்மி, கோலாட்டம், அம்மானை, காவடிச் சிந்து, தெம்மாங்கு, மாரியம்மன் பாட்டு, வில்லுப்பாட்டு, உழவர், உழத்தியர், இடையர், குறவர், மீனவர், வண்டிக்காரர் தாம் தொழில் செய்யும் போது பாடும் பாடல்கள், ஒப்பாரி முதலியன நாட்டார் பாடல்களில் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை பிறந்தால் பெற்றோருக்கு மட்டுமல்ல முழுச் சமூகத்திற்குமே வாழ்வு தரும் ஒரு நிகழ்ச்சியாகக் கொண்டு மருத்துவிச்சி ஒருத்தி பாடுகிறாள்.

'அயலும் புடையும் வாழ வேண்டும்
அன்னமும் சுற்றமும் வாழ வேண்டும்
ஆச்சியும் அப்புவும் வாழ வேண்டும்
அம்மானும் மாமியும் வாழ வேண்டும்'

இப்பாடல் அக்கால மக்களின் பண்பட்ட உள்ளத்தையும் பரந்த மனப்பாங்கையும் அறிய உதவுகிறது. இதே போல் ஒரு மனைவி தன் கணவன் இறந்த போது புலம்புகிறாள்.

'முத்துப் பதித்த முகம்
முதலிமார் மதித்த முகம்
தங்கம் பதித்த முகம்
தரணிமார் மதித்த முகம்'


இதே போன்று எத்தனையோ உணர்ச்சிகளை வெளிப்படுத்தித் தன் துயரை எடுத்துக் காட்டுகிறாள். இது போன்று அழகிய உயிரோட்டமான நயமிக்க நாட்டார் இலக்கியங்கள் இன்னும் பல உண்டு. இவற்றைக் காப்பது தமிழ் மக்கள் கடமையாகும்.

எனினும், நெடுங்காலமாக நாட்டார் இலக்கியம் புறக்கணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க குறைபாடாகும். வையகத்து மானிட வாழ்விலும் தாழ்விலும் மக்கள் வாழ்க்கையோடு தொடர்பு பூண்ட நாட்டார் பாடல்கள் பன்னெடுங் காலமாகப் பாமர இலக்கியம் எனப் படித்தவர்களால் ஒதுக்கப்பட்ட நிலை இருந்தது. ஆனால் இன்றைய கால கட்டத்தில் பல்கலைக்கழக உயர்மட்டக் கல்விக்குரியதாக நாட்டார் இலக்கியம் மிளிர்வது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இந்நயமிகு நாட்டார் இலக்கியத்தை பாதுகாப்பது நமது கடமையாகும்.

செல்வி.ஷஹாமா சக்காப்,
தரம் 11 B
ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலைகளில் ஒழுக்கம்

கடந்த காலங்களில் ஒழுக்க விழுமியங்கள் தொடர்பான பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும் அண்மைக் காலங்களில் நாட்டின் பலபாகங்களிலும் பாடசாலைகளில் இடம் பெறுகின்ற நிகழ்வுகளால் இதற்கு மேலும் வலுவூட்ட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது.

**அதிபர் ,ஆசிரியர் ஒழுக்கம் :**

பாடசாலை அதிபர்கள் ,ஆசிரியர்களுக்கென ஒழுக்கக் கோவைகள் வகுக்கப்பட்ட பொழுதிலும் இது தொடர்பான பூரணமான அறிவுபலருக்கு இல்லாமையால் திருப்தி அற்றநிலைமைகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

அதிபர்கள் கல்வி நிறுவனத்தின் தலைவர்கள் என்றவகையில் அவர்களுக்கு இவ்விடயம் தொடர்பான பாரிய பொறுப்புக்கள் உள்ளன. ஆசிரியர்களையும் ,மாணவர்களையும் நெறிப்படுத்துபவர்கள் என்றவகையில் இவர்களின் பங்குகாத்திரமானது.

கற்பித்தலுடன் நின்று விடாமல் மாணவர்களை ஒழுக்க சீலர்களாக வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களின் கையில் உள்ளது.

மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக உள்ள அதிபர்கள் ,ஆசிரியர்கள் இந்த விடயத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டியது அவசியமானதாகும். நடை, உடை, பாவனைமற்றும் செயற்பாடுகள் என்பனவற்றில் பாடசாலைகளுக்கு உள்ளேயும் ,வெளியேயும் கவனமாக நடந்து கொள்ளவேண்டியது அவசியமாகும். பெற்றோர்கள் ,பாதுகாவலர்கள் ஆகியோரைவிட அதிபர் ,ஆசிரியர்களின் கருத்துக்களையே ஏற்பதுடன் அவர்களையே முன்மாதிரியாகக் கொண்டு செயற்படுகின்ற பண்பு மாணவர்களிடம் உள்ளது.

அண்மைக் காலங்களில் பாடசாலைகளில் இடம் பெறுகின்றபாலியல் துஷ்பிரயோகங்களும் மற்றும் நெறி பிறழ்வான நடவடிக்கைகள் தொடர்பாக அதிபர்கள், ஆசிரியர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றமையை அவதானிக்க கூடியதாக உள்ளது.

கடந்தகாலங்களில் இருந்த ஒழுக்காற்று நடவடிக்கைகள் எச்சரிக்கைகள் என்றநிலை மாறி தண்டப் பணம் கட்டுதல் ,கடும் காவல், சிறைதண்டனைஎன்றவாறுநிலைமைமாறியுள்ளது.

அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்காலசமுதாயத்தைஉருவாக்கும் சிற்பிகள் என்பதால் அவர்களும் ஒழுக்கக் கோவைக்குஏற்பநடந்துகொள்ளவேண்டியதுஅவசியமானது.

**பாடசாலைநிர்வாகச் செயற்பாடுகளில் ஒழுக்கத்தின் பங்கு :**

பாடசாலைநிர்வாகக் கட்டமைப்பில் அதிபர் ,பிரதிஅதிபர் ,உதவிஅதிபர் ,பகுதித் தலைவர்கள் என்றஒழுங்கில் பணிப்பகிர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமதுபணிகளைபொறுப்புடன் செய்கின்றபொழுது பாடசாலைகளில் ஒழுக்கம் தொடர்பான செயற்பாடுகள் காத்திரமானவையாக அமையும்.

அதிபரின் பணிப்புரைகளுக்கு கட்டுப்பட்டு பிரதிஅதிபர்கள் ,உதவிஅதிபர்கள் ,பகுதித் தலைவர்கள் ,மற்றும் ஆசிரியர்கள் இயங்கத் தவறும் பட்சத்தில் ஒழுக்கம் தொடர்பானமீறல்கள் இடம்பெறவழிவகுக்கும். நிறுவனத் தலைவர் என்றவகையில் அதிபரைமதித்தல் ,அவரின் வழகாட்டல்களுக்கிணங்கசெயற்படுதல் என்பனஅவசியமானதாகும். அதேபோலபிரதிஅதிபர்கள் ,உதவிஅதிபர்கள் ,பகுதித் தலைவர்கள் ஆகியோரின் பணிப்புரைகள் ,கருத்துக்களைமதித்து செயற்படவேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும்.

தலைமைத்துவத்தினை மதித்தல் என்பது எல்லா நிறுவனங்களுக்கும் பொதுவானது. முரண்படுதல் ,தகாதவார்த்தைகளைப் பிரயோகித்தல் ,செயற்படமறுத்தல் என்பன ஒழுக்கக் கோவைகளின் படிபாரதூரமானகுற்றச் செயல்களாகக்கருதப்படும்.

**வகுப்பறைக் கற்பித்தலுக்கும் மாணவர் ஒழுக்கத்திற்கும் உள்ளதொடர்பு :**

ஒவ்வொரு ஆசிரியர்களும் வகுப்பறையில் மாணவர்களை இனங்கண்டு அவர்களின் ஆற்றலுக்குஏற்ப நெறிப்படுத்தும் முறைகளிலும் கற்பித்தலில் பயன்படுத்தும் நுட்பங்களிலும் வேறுபாடுகாணப்படுகின்றன. மாணவர் மையக் கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டுதேடிக் கற்றல் என்னும் விடயம் அண்மைக் காலகல்விச் சிந்தனைகளில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இருப்பினும் இன்றையநவீனஉலகில் கூட சில ஆசிரியர்கள் வகுப்பறைகளில் விரிவுரை முறைகளைப் பயன்படுத்துவதையும் காணக்கூடியதாக உள்ளது. விரல் விட்டு எண்ணக் கூடியமாணவர்களே இதனைபுரிந்துகொள்ளக் கூடியவர்களாகவும், கிரகித்துக் கொள்ளக் கூடியவர்களாகவும் உள்ளனர். இவர்களேமீத்திறன் உள்ளமாணவர்களாகவும் உள்ளனர். எளிதில் விடயங்களைபுரிந்துகொள்ளக் கூடியவகளாகவும் ,பின் தங்கியவர்களாகவும் ,எழுதவாசிக்க முடியாதவர்களாகவும் தமதுகருத்துக்களை சிந்தித்து வெளிப்படுத்த முடியாதவர்களாகவும் சிலமாணவர்கள் காணப்படுகின்றனர். இவ்வாறான வேறுபாடு காணப்படுவதற்குபலகாரணங்கள் உள்ளபொழுதிலும் மாணவர்களின் இயலளவை இனங்கண்டுபொருத்தமானகற்பித்தல் நுட்பங்களை பயன்படுத்தாமையே இதற்கு முக்கியமான காரணமாக அமைவதுடன் பின்தங்கியமாணவர்கள் என்னும் ஒருபிரிவினர்தோன்றக் காரணமாக அமைகிறது.

ஆரம்பவகுப்புக்களில் இருந்துமேலேசெல்லச் செல்லஒவ்வொருவகுப்பிலும் உருவாக்கப்படும் இவ்வாறானமாணவர்கள் கற்பித்தல் நடைபெறுகின்றபொழுதுபின் வரிசையில் இருந்துகொண்டு ஏனைய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையூறு விளைவிப்பவர்களாகவும் பாடசாலையின் ஒழுக்கவிழுமியங்களைமீறுபவர்களாகவும் உருவாக்கப்படுகின்றனர். இவர்களே பாடசாலைகளின் உள்ளேயும் ,வெளியேயும் ஒழுக்கநடை முறைகளை மீறுபவர்களாகவும் குற்றச் செயல்களைபுரிபவர்களாகவும் மாறுகின்றனர்.

எனவே,சகலமாணவர்களையும் இனங் கண்டுஒவ்வொருவருக்கும் ஏற்றவிதத்தில் பல்மட்டக் கற்பித்தல் (Multi Level Teaching) பரிகாரக் கற்பித்தல் (Remedial Teaching) போன்றவற்றைபயன்படுத்துதல் பொருத்தமானது.

**அழுத்தங்களும் ,பொருத்தமற்றதண்டனைகளும் :**

மாணவர்களின்பெறுபேற்றைஉயர்த்தவேண்டும் என்பதுஉண்மை. புரியாமல் மேற்கொள்ளப்படும் முறையற்றஅழுத்தங்களும் மாணவர்களின் மனதைப் பாதிக்கின்றன. ஆசிரியர்களின் கற்பித்தல் நுட்பங்களில் காணப்படுகின்ற சில தவறுகளாலேயே பின்னடைவான மாணவர்கள் உருவாக்கப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பில் கொடுக்கப்படும் வினாக்களுக்கு பொருத்தமானவிடை அளிக்கவில்லை, தெளிவின்மையால் வீட்டுவேலைகளைசெய்து முடிக்கவில்லை என்பனவற்றுக் குவழங்கப்படுகின்ற பொருத்தமற்றநச்சரிப்புக்களும் தண்டனைகளும் கூட ஒழுக்கத்துக்கு முரணானசிந்தனைகளை உருவாக்குகின்றன. மாணவர்களின் மனநிலையைப் புரிந்துகொள்ளாமல் அவர்களின் இயலாமையைமேலும் வலுப்படுத்துவதில் ஆசிரியர்களின் கற்பித்தல் நுட்பங்களில் ஏதும் பொருத்தமற்றதன்மைகள் உள்ளனவா? எனக் கண்டறிந்து மேற்கொள்ளப்படும் பரிகார நடவடிக்கைகளேசாதகமான முடிவுகளைத் தரும்.

கற்பித்தல் புரியவில்லைஎனக் கூறும் மாணவர்களுக்குவகுப்புக்களில் பலரின் மத்தியில் சூட்டப்படும் மொக்கு, மூளையற்றவன் என்றபட்டங்கள் பொருத்தமற்றதண்டனைகள் என்பவற்றால்தன்மானம் ,அவமானம் என்னும் உள்ளார்ந்தஉணர்வுகள் பீறிட்டெழும் பொழுது எல்லை மீறி அதிபர்கள் ,ஆசிரியர்கள் ,பெற்றோர்கள் ஆகியோரைஎதிர்க்கும் அளவுக்குமாணவர்கள் தூண்டப்படுகின்றார்கள். இடைவிலகல், பாடசாலைகளுக்குவெளியில் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் என்றஉணர்வுடன் வன்முறைகள், சட்டவிரோத நடவடிக்கைகள் போன்றவற்றில் மாணவர்கள்ஈடுபட்டு சீரழியும் நிலைமைகளையும் காணக்கூடியதாக உள்ளது.

மாணவர்களின் அடைவுமட்டத்தை உயர்த்துதல் ,ஆளுமையைவிருத்தி செய்தல், பொதுப் பரீட்சைகளில் சிறந்தபெறுபேறுகளைப் பெறவைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுதுவயது, அவர்களின் இயலளவு (Capacity) போன்றவற்றைகருத்திற் கொள்வது அவசியமானதாகும். மாணவர்களின் மனதைப்புரிந்து கொண்டு உளவியல் ரீதியில் அவர்களின் ஒழுக்கரீதியான பிரச்சனைகளை அணுகுவதேசாதகமான முடிவுகளைத் தரும்.

தண்டனைகளைவழங்காமல் மாணவர்களின் ஒழுக்கச் செயற்பாடுகளைசீர் செய்யமுடியாதுஎனும் கருத்துமுன்வைக்கப்படுகின்ற பொழுதும் அவர்களுக்கு எதிராக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் ,தண்டனைகள் என்பன பொருத்தமானவையா ? சிறுவர் உரிமை, மனித உரிமை என்பனவற்றைமீறக் கூடியவகையில் அமைகிறதா? என்பவற்றை சிந்தித்துப் பார்க்க வேண்டியதுகல்விச் சமூகத்தின் கடமையாகும்

*திரு.கோ.ணசப்பிள்ளை சிறீஸ்கந்தா,*


*உதவிக் கல்விப் பணிப்பாளர்-*
*முகாமைத்துவம்.*

*வலயக் கல்வி அலுவலகம்,*

*திருகோணமலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவராத்திரி நாயகியே நீ அருள வேண்டும்

சகலகலா வல்லியே
சான்றோரின் தலைவியே
ஆயகலைகள் அறுபத்து நான்கையும்
அள்ளிக் கொடுக்கும் ஆனந்த பைரவி
நர்த்தனம் ஆடும் நங்கை நல்லாள்
நாடி வந்தோம் நாயகியே உம்மை

ஆதி லக்ஷ்மியே அழைத்தோம் உம்மை
சந்தான லக்ஷ்மியே சார்ந்தோம் நாமே
கஜ லக்ஷ்மியே கடிதென வந்தோம்
தான்ஜ லக்ஷ்மியே தாரணை செய்தோம்
விஜய லக்ஷ்மியே விரதம் இருந்தோம்
மகா லக்ஷ்மியே மன்றாடினோம் உன்னை
தன லக்ஷ்மியே தந்தோம் எம்மை
கம்பனைக் காக்க காரணமானாய்
எங்களைக் காக்க எப்போ வருவாய்?

உன்னிடம் இருந்தே பிரம்மா வந்தார்
உன்னிடம் இருந்தே விஷ்ணுவும் வந்தார்
உன்னிடம் இருந்தே உருத்திரன் வந்தார்
உன்னிடம் இருந்தே நாங்களும் வந்தோம்

அன்பின் தேவியே
அருளின் காமாட்சியே – உன்னை
எங்கெல்லாம் தேடி
ஏங்கித் திரிகின்றோம்
தக்கனின் யாகத்தில் குதித்த தாயே – நீ
தங்கிய இடமெல்லாம் தேடினோம் நாமே

காஞ்சிபுரம் சென்றோம் காணவில்லை உன்னை
மதுரை சென்றோம் மறைந்து விட்டாய் நீயே
திரு ஆனைக்கா சென்று திரும்பி வந்தோம்
திருக் குற்றாலத்தில் தீவிரமாய் தேடினோம்
திருவாரூர் சென்று திரிந்து பார்த்தோம்
கன்னியா குமரியில் களைத்து விட்டோம்
அம்பத்தூர் சென்று அருகில் பார்த்தோம்
அங்கில்லை நீயே எங்கே சென்றாய்?
உன் அடியவரைக் காண
பிடிவாதம் ஏன் கொண்டாய்?

கோகர்ணம் சென்றோம் கோபித்துக் கொண்டாய் நீ
ஸ்ரீசைலம் பார்த்தோம் சிறிதும் நீ இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரி பார்த்து, சிருங்கேரி பார்த்து
கோலாலப்பூர் பார்த்து, அரசூர் பார்த்தோம்
அத்தனையும் தேடி அங்கும் காணோம்

ஜலந்தரா வந்து,
துவாராவாட் சென்றோம்
பிரபாஷா வந்து பராகத் சென்றோம்
சிம்லா சென்று சிறிது பார்த்தோம்
மாசன ரோவர் சென்று, காஸ்மீரம் சென்று
நேபாளம் வந்து, ஜுவாலாமுகி சென்றோம்
அங்கும் இல்லை அம்பிகை நீயே

சுகந்தா சென்று, காசி சென்று
நைமி சாரண்யம் சென்று
குரு ஷேத்திரம் சென்றோம்
பிரயாகை சென்று, உஜ்ஜயனி சென்று
பிருந்தாவனம் சென்று
அத்தினாபுரம் சென்று அங்கேயும் தேடினோம்
அலைந்து திரிவதை அன்னை நீ காணவில்லை

கன்னியா குப்ஜம், புஷ்கரம்
சேதாரம், பத்ரை உருத்திர கோடி
சாளக்ராமம் மலயாசலம்
எங்கும் தேடி ஏமாற்றமடைந்தோம்

தேவிகா தடத்தில் தேடியும் காணோம்
சஹஸ்தி ராசத்தில் சாடையாய்ப் பார்த்தோம்
வராக சைலத்தை வந்து பார்த்தோம்
இரண்யாஷம் இருந்து பார்த்தோம்
திரிகூட பர்வதம் திரிந்து பார்த்தோம்
ச.்.ய பர்வதம் சாய்ந்து பார்த்தோம்
வைத்திய நாதம் வந்து தேடினோம்
காணவில்லை அவளைக் கண்ணீர் சொரிந்தோம்

வைத்தியநாதம், மகாகாளம்
விந்திய பர்வதம், வேதமுகம்
ஹேமகூடம், அமர கண்டம்
அத்தனையும் தேடி அலைந்து சென்றோம்

கல்கத்தா வந்து காமரூபம் பார்த்தோம்
கண்விழித்துப் பார்த்தாள்
கண்ணெதிரே தேவி

சங்க காலத்தில் கொற்றவை ஆனாள்
சங்க மருவியே நற்றமிழ் செய்தாள்
பல்லவர் வீட்டில் படையாட்சி கொண்டாள்
சோழ நாட்டின் சோதரி ஆனாள்
நாயக்கர் நாட்டில் நல்லாட்சி தந்தாள்
நவீன காலத்தில் எங்கு தான் சென்றாள்?

ஆய கலைகளின் அரசித் தாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கு நலமும், முத்தமிழும்
சொல் விற்பனமும், அவதானச் சிறப்பும்
கவித்துவமும் நல்கி கலைமகள் ஆனாய்
பிரமனின் சக்தியாய் பிராமி யானாய்
மகேஸ்வரி நீயே சிவனைக் கொண்டாய்
முருகப் பெருமானின் கௌரியுமானாய்
விஷ்ணுவின் சக்தி வைஷ்ணவி ஆனாய்
வராக மூர்த்திக்கு வராகியானாய்
இந்திரனவனின் இந்திராணியாய்
சாமுண்டியாகி சங்கரித்து நின்றாய்

திங்களைப் போன்ற திருமுகத் தாயே
ஒன்பது நாளும் உம்மைக் காண
ஏங்கித் தவங்கிடந்து தூங்காது விழித்தோம்
மாலை கட்டி, கோலம் போட்டு,
தீபம் ஏற்றி திருப்பாடல் பாடினோம்

எழுத்துத் திறமை கைவரக் கேட்டோம்
நான்கு வேதங்கள் நல்கக் கேட்டோம்
மகா புராணங்கள் தரவே கேட்டோம்
இலக்கண நூல்கள் இன்னும் கேட்டோம்

அரசியல் நீதி அனைத்தும் கேட்டோம்
நாளும் கோளும் கணிக்கக் கேட்டோம்
அறமுரைக்கும் முறைகள் கேட்டோம்
புலன்களை அடக்கப் புதுவழி கேட்டோம்

தெய்வத்தை வணங்க வழிவகை கேட்டோம்
பறவை ஒலியை விளங்கக் கேட்டோம்
சிற்பம் செய்ய சிறுகல் கேட்டோம்
ஆயுர் வேத அறிவு கேட்டோம்

இதிகாசம், புராணம் இரண்டும் கேட்டோம்
அலங்காரம் தமிழில் கூறக் கேட்டோம்
இனிமையாகப் பேசக் கேட்டோம்
அரங்கில் நடிக்கும் கலையைக் கேட்டோம்

ஆடற் கலையை அறியக் கேட்டோம்
ஸ்வர பேதம் இன்னும் கேட்டோம்
வீணை வாசிக்கும் திறனைக் கேட்டோம்
புல்லாங் குழலில் புகழ் பாடக் கேட்டோம்

தண்ணுமையின் திறமை கேட்டோம்
தாளம் இசைக்க தயவாய்க் கேட்டோம்
வில் வித்தை தனை விரும்பிக் கேட்டோம்
பொன்னை அறியும் இலக்கணம் கேட்டோம்

தேர் ஓட்டும் திறமை கேட்டோம்
யானையின் இலக்கணம் அறியக் கேட்டோம்
குதிரை இலக்கணம் கூடவே கேட்டோம்
நவரத்தினத்தை அறியக் கேட்டோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரூற்றை அறியும் நியமம் கேட்டோம்
மற்போர் கேட்டோம்
மந்திரம், தந்திரம் எல்லாம் கேட்டோம்
பேயோட்டும் வகையும் பன்னை கேட்டோம்

வித்து வேடணம் விரும்பிக் கேட்டோம்
காந்தர்வ வேதம் கைவரக் கேட்டோம்
மக்களை மகிழ்விக்கும் வித்தை கேட்டோம்
நாடி அறியும் தத்துவம் கேட்டோம்

பாம்பின் விடத்தை விலக்கக் கேட்டோம்
இழந்த பொருளை அறியக் கேட்டோம்
மறைத்த பொருளைக் காணக் கேட்டோம்
ஆகாயத்தில் மறையக் கேட்டோம்

வானவெளியில் நடக்கக் கேட்டோம்
கூடுவிட்டு கூடு பாயக் கேட்டோம்
அக்கினி சுடாது இருக்கக் கேட்டோம்
நீரைக் கட்டி நடக்கக் கேட்டோம்
காற்றைக் கட்டும் வித்தை கேட்டோம்
அத்தனையும் கேட்டு அலைந்து திரிந்தோம்
அம்பிகை எமக்கு வரம் தர வேண்டும்

பள்ளிக் கூடம் பெரிதாய் வேண்டும்
படிக்கும் மாணவர் நிறைய வேண்டும்
விஞ்ஞானம் கற்க விளைய வேண்டும்
எண்ணும் எழுத்தும் கைவர வேண்டும்
எண்ணியதெல்லாம் நடக்க வேண்டும்

நல்ல உணவு கிடைக்க வேண்டும்
நலமுடன் வாழ நீ அருள வேண்டும்
அன்பும் அறனும் பெருக வேண்டும்
ஆனந்த வாழ்வு வாழ வேண்டும்

பண்பான கல்வி பயன்தர வேண்டும் - இவர்கள்
பல்கலைக் கழகம் செல்ல வேண்டும்
பாட்டாளி வர்க்கம் இல்லாமல் வேண்டும்
பட்டினிச் சாவு ஒழிய வேண்டும்
பொன்னும் பொருளும் கிடைக்க வேண்டும்
புகழுடன் இவர்கள் உலகாள வேண்டும்
அதற்கு, சரஸ்வதியே நீ அருள வேண்டும்.

ஆக்கம்
திருமதி.ச.கிருபாகரன் (ஆசிரியை)
தி/ஸ்ரீ கோணலிங்க மகா வித்தியாலயம்
இலிங்கநகர்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# “අධ්‍යාපනයේ හෙට දවස”

අධ්‍යාපනයේ හෙට දවස ගැන විශ්වාසයක් නොමැත.අධ්‍යාපනයේ හෙට දවස ස්ථිර හා ශක්තිමත් නැත යැයි සිතේ.හෙට දවසේ අධ්‍යාපනය ගැන කරුණු විමසීමට පෙර අධ්‍යාපනය යනු කුමක්දැයි එහි පරමාර්ථ අරමුණු මොනවාද? අධ්‍යාපනයේ එදා සහ අද තත්වය කෙබඳුද?යන්න විමසා බැලීම අර්ථාන්විතය.

අධ්‍යාපනය යන්න යාවජීව ක්‍රියාවලියකි.ජුලියස් නියරේරේ නැමති අධ්‍යාපනඥ ප්‍රකාශ කරන්නේ අධ්‍යාපනය යනු ගංගාවක ගලාගෙන යන ජලය හා සමාන දෙයකි.ගංගාවේ ඊයේ තිබුණු ජලය අද එතැන නැත අද එතැන ඇති ජලය හෙට එතැන නැත නමුත් සදාකාලිකවම ගංගාවේ ජලය ගලාගෙන යනු ඇත. අධ්‍යාපනයත් සමෙදාම එසේවෙනස් වෙමින් ගලාගෙන යා යුතුයි.එසේ නොවන අධ්‍යාපනය ගැන හෝ එහි අනාගතය ගැන අපට විශ්වාසය නැත.මෙයට කාලයක් ස්ථානයක් හෝ ස්ථිර අවස්ථාවක් නොමැත.අපගේ ජිවිතයේ දෛනික කටයුතු කරගැනීමට ඉවහල් වන සියලුම මහ පෙන්වීම් අධ්‍යාපනය යනුවෙන් කෙටියෙන් හැඳින්විය හැකිය. අධ්‍යාපනය විධිමත් , අවිධිමත් නොවිධිමත් යනුවෙන් විවිධ අංශ මගින් ලැබේ. විධිමත් අධ්‍යාපනය යන්නට පංති කාමරය තුළ,විෂය නිර්දේශයකට හා කාල සටහනකට අනුව කාල පරිච්ජේදවලදී ගුරුවරයෙකු විසින් උගන්වනු ලබන විධිමත් විෂය මාලාවක් අයත් වේ.මීට අමතරව සමාජ ආශ්‍රය මගින් නොයෙක් ජන සන්නිවේදන මාධ්‍ය ඇසුරෙන් හා අත්දැකීම් මාර්ගයෙන් ලබන අධ්‍යාපනය නොවිධිමත් හා අවිධිමත් අධ්‍යාපනයට ඇතුළත් වේ.අංග සම්පූර්ණ බුද්ධිමත් පුද්ගලයෙකු බිහිකිරීම සඳහා මේ සියලු අංශවල අධ්‍යාපනය අවශ්‍ය වේ." අධ්‍යාපනය" යන්නෙන් වැඩි අවධානයක් යොමු වන්නේ විධිමත් අධ්‍යාපනය කෙරෙහිය. අධ්‍යාපනඥයන් අධ්‍යාපනය මෙසේ අර්ථ නිරූපනය කරයි.

“ තමා ගැන අවබෝධයක් ඇති කර ගැනීමට මිනිසෙකුට අවශ්‍ය දැනුම අධ්‍යාපනයයි.”- ***සෝක්‍රටීස්***

“අධ්‍යාපනයෙන් සියල්ලෙන්ම සම්පූර්ණ වූ පෞරුෂයක් නිපදවිය යුතුයි.” –***ඩම්රි ඩග්ලස්***

“අධ්‍යාපනය යනු ශිෂ්‍යයන්ට තමන් වෙසෙන සමාජයේ තමන් ට හිමි තැන ගන්නට මහ පෑදෙන ආකාරයට ඔවුන්ගේ අත්දැකීම් සලසා දීමයි.”-***ර.සී.මුවර්***

“ සමාජ සංස්ථාව විසින් අටවා ඇති විවිධ බැම් වලින් ළමයා නිදහස් කිරීමත් එම නිදහස භුක්ති විඳින්නට මග පාදා දීමත් අධ්‍යාපනය ක්‍රියාවලිය සතු ආවේණික යුතුකමයි”-***රූසෝ***

“ළමයින් අවදානම සහ කුතුහලයෙන් යුතුව පාසල්වලට ඇතුල්ව කුතුහලයන් තොරව ,එහෙත් අවදානම් බව තවදුරටත් ඇතිව පාසලින් පිටවේ” – ***යුගෝන්ලොවියානු අධ්‍යාපනඥයෙක්***

“ළමයින් ප්‍රශ්නාර්ථ ලකුණ ලෙස පාසලට ඇතුළත්ව නැවතීමේ තිතක් ලෙස පාසලින් පිටව යති.”-***නීල් පෝස්ට්මන් හා චාල්ස් වෙන්ගාට්නර්***-

මෙම නිර්වචන දෙස බලන විට විධිමත් අධ්‍යාපනය පිළිබඳව විවිධ දෘෂ්ටිකෝණ වලින් බලා විවිධ නිර්වචන ඉදිරිපත් කර ඇති බව පෙනී යයි.

අධ්‍යාපනය මගින් රටක් බලාපොරොත්තුවන අරමුණු හා පරමාර්ථ ඇත.අරමුණු කෙටිය.එසේම අරමුණු ඉටුකර ගැනීමට එතරම් දීර්ඝ කාලයක් ගත නොවේ.පරමාර්ථ යන්න ට වඩා සංකීර්ණය පරමාර්ථ කරා කෙටි කාලයකින් ළඟාවිය නොහැකිය. අරමුණු හා පරමාර්ථ එකට බැඳි ඇති සංකල්ප දෙකකි. අරමුණු සාක්ෂාත් කර ගැනීම තුළින් පරමාර්ථ කරා ළඟා විය හැකිය. පරමාර්ථය යම් කිසි ක්‍රියාවලියක අවසාන ප්‍රතිඵලය වශයෙන් බලාපොරොත්තු වන දෙයකි.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*අධ්‍යාපනයේ විවිධ අරමුණු ඇත ඒ අතර,*

- මූලික දක්ෂතා ලබාදීම
- ළමයින් තුළ රටට හා දේශීය සංස්කෘතියට ඇල්මක් ඇති කරලීම.
- ළමයින්ගේ ශාරීරික, බුද්ධිමය ,සාමාජීය,සෞන්දාර්යාත්මක හා සදාචාරාත්මක අවශ්‍යතා සපුරාලීම
- ශිෂ්‍යයෙන් වෙනස්වන සමාජ පරිසරයට උචිත වන ලෙස ළමයා ඉදිරියට ගමන් කරවීම.
- ළමයා තුළ විද්‍යාත්මක ආකල්ප හා ශ්‍රමාභිමානය ඇති කිරීම.
- ප්‍රායෝගික කාර්යයන් අත්දැකීම් මගින් පුරුදු කරවීම.

යන කරුණු ප්‍රධාන වේ.අධ්‍යාපනයේ බලාපොරොත්තු වන අරමුණු ඉටු කර ගැනීමෙන් අවසානයේ පරමාර්ථ කරා ළඟාවීම අභිලාශය වේ.එම පරමාර්ථ අතර

- පුද්ගලයාගේ චර්යාත්මක වෙනසක් ඇති කිරීම.
- මෙරට සංවර්ධනයේදී ප්‍රයෝජනවත් වන ක්‍රියාකාරකම් වටහා ගැනීම
- රටට ඵලදායි සම්පූර්ණ පුද්ගලයින් බිහි කිරීම
- ශාස්ත්‍රීය අධ්‍යාපනයට අමතරව වෘත්තීය සූදානමක් ඇති කිරීම.

අධ්‍යාපනය යනු විධිමත් ,අවිධිමත් හා නොවිධිමත් යනුවෙන් විවිධ අංග මගින් ජීවිතයේ විවිධ අවස්ථා වල ලබන අත්දැකීම් බව ඉහත සඳහන් කෙරිණි.දැන් අධ්‍යාපනයේ ඉතිහාසය ගැන විමසා බලමු. විධිමත් අධ්‍යාපනය කෙසේ වෙතත් අධ්‍යාපනය මිනිස් ශිෂ්ටාචාරයේ ඈත අතීතයේ සිටම පැවති බවට සාධක ඇත.දඩයම් යුගය සැළකිල්ලට ගත හොත් එවක සමාජයේ වැඩිහිටියන් විසින් බාල පරම්පරාවට දඩයම් පිළිබඳව සතුන් හා සතුන්ගේ හැසිරීම් රටා පිළිබඳව අවබෝධයක් ලබා දෙන්නට ඇත.මෙය අතීතයේ පැවති අවිධිමත් අධ්‍යපන ක්‍රමයක් මෙන්ම වෘත්තිය අධ්‍යාපනය ලෙස හැඳින්විය හැකිය.ඉන්පසුව විවිධ දර්ශනිකයින් ආගමික නායකයන් බිහි විය.ඔවුන්ගේ දේශන තුළින් සමාජයට කිසියම් මෙහෙයක් උපදේශයක් ඉගෙනීමක් සිදුවිය.බුදුරජාණන් වහන්සේ ,ජේසුස් වහන්සේ ,මහම්මද්තුමා ඒ අතර ශ්‍රේෂ්ඨ අය ලෙස හැඳින්විය හැකිය.

විධිමත් අධ්‍යාපනය ඇරඹීමත් සමඟ එය එක්තරා පංතියකට සීමා විය.හින්දු අධ්‍යාපන සම්ප්‍රදායේ කුල ක්‍රමය පදනම් ව උසස් කුල වලට පමණක් අධ්‍යාපනය සීමා විය.බෞද්ධ අධ්‍යාපන ක්‍රමටේ අධ්‍යාපනය ලැබමේ හිමි කම රට වඩා පුළුල් වීමක් දක්නට ලැබුනද කුල ක්‍රමය දක්නට ලැබුණි.එසේම ආගම මුල් වූ අධ්‍යාපනය ක්‍රමය මෙකල දැකිය හැකි වූ විශේෂ ලක්ෂණයකි.මෙසේ ගුරු ගෙදර , පන්සල හා පිරිවෙන මුල් වී පිළිවෙලින් ප්‍රාථමික, ද්විතියික ,තෘතියික අධ්‍යාපනය ලබා දෙනු දැකිය හැකි විය.පෘතුගීසින්ගේ පැමිණීමත් සමඟම ලංකාවේ අධ්‍යාපනය රටාව වෙනස් වීමකට භාජනය විය.ඔවුන්ගේ ආගම් ප්‍රචාරය හා ඔවුන්ගේ භාෂා වලින් අධ්‍යාපනය ලබා දීම මෙහි දැකිය හැකි විශේෂ ලක්ෂණය වේ.ලන්දේසීන් හා ඉංග්‍රීසින් ද මෙසේ මය.යටත් විජිත යුගය ශ්‍රී ලාංකික අධ්‍යාපනය රටාවේ සන්ධිස්ථානයක් ලෙස හැඳින්විය හැක.කන්නන්ගර වාර්තාව අනුව ස්වභාෂා මාධ්‍යයෙන් අධ්‍යාපනය ලබා දීම හා නිදහස් අධ්‍යාපනය නැවත ක්‍රියාත්මක විය.

යටත් විජිත සමයේ ප්‍රතිඵලයක් ලෙස අප රටට දායාද කොට ගිය අධ්‍යාපනික ප්‍රශ්න රැසක් තවමත් අප රටේ ඉතිරිව පවතී.අධිරාජ්‍යයන්ට යටත්ව තිබූ හෙයින් එම රට වල සූරා කෑමට ලක් වීම හා විවිධ විලාසිතා වැලඳ ගැනීම් නිසා තවමත් අප රටට ගොඩ ඒමට නොහැකි ප්‍රශ්න රැසකට ගොදුරු වී සිටියි.සම්ප්‍රදායික සමාජ ක්‍රමය හා පාසල් රටාව අපෙන් බැහැරව බටහිර රටවල පාසල් ආකෘතිය බැහැර වී ඇත.මෙහි ප්‍රතිඵලයක් වශයෙන් අප රටේ ජීවන කුසලතා සහිත දක්ෂයින් දියුණු රටවල් කරා ඇද ගැනීමේ හැකියාව තවමත් ඔවුන් සතුව පවතී.මේ නිසා ඔවුන්ට බුද්ධිමතුන්ගේ සේවය අ- මුදලකට සූරා ගැනීමට හැකිව ඇත. ඔවුහු මෙසේ කුසලතා වලින් යුතු ශ්‍රමය ආනයනය කර අ- මුදලකට ශ්‍රමය ලබා ගන්නා අතර එම රටවල් සතු යල් පැනගිය යන්ත්‍ර සූත්‍ර සහ විශේෂඥ දැනුම වැඩි මුදලකට අප රටට විකුණති.මෙ නිසා අප රටත් තුන්වන ලෝකයේ වෙනත් රටවලුත් මෙසේ පීඩා විඳිමින් සිටියි.ඔවුන් විසින් සංවිධානය කරන ලද අධ්‍යාපනය බොහෝ විට ලේඛනයට හා මතක තබා ගැනීමට සීමා වූ දැනීම පමණක් ලබාදෙන ස්වරූපයෙන් විය.මෙම සම්ප්‍රදායික බටහිර අධ්‍යාපන ක්‍රමය විසින් නාගරික ජීවිතයක් ගත කිරීම සඳහා බලාපොරොත්තු හා ප්‍රාර්ථනා අප සමාජය තුළ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ජනිත කොට ඇත. ශ්‍රී ලංකාවේ ළමයින් කෘෂිකර්මාන්තය පිළිබඳව හෝ නිශ්පාදන පිළිබඳව අධ්‍යාපනය ලබනුයේ ඉතා අල්ප වශයෙනි.බොහෝ අප රටේ අධ්‍යාපනය ප්‍රායෝගිකා බවින් අ- ය.එසේ ම ළමයින්ගේ හැකියා ,ලැදියා,දක්ෂතා වලට අවස්ථාව දීම දැකීම ද දුෂ්කරය.වැඩිහිටියන්ගේ හා දෙමව්පියන්ගේ බලාපොරොත්තුව වන්නේ ළමයා දොස්තර වරයෙකු හෝ ඉංජිනේරුවරයෙකු කිරීමයි.මෙවන් අවස්ථා වලදී ළමයා අධ්‍යාපනය තුළ අතරමං වෙයි.වැඩි උනන්දුවක් දක්වනුයේ ශාස්ත්‍රිය අධ්‍යාපනය කෙරෙහි බැවින් ඔවුහු කවර හෝ සුදු කරපටි රැකියා සෙවීමෙහි නිරත වී සිටිති.සමාජයේ පිළිගැනීම වී ඇත්තේ ද ආදායමේ අඩුවක් වුවත් සුදු කරපටි රැකියා කරන පුද්ගලයා උසස්ය යන හැඟීමයි.මේ හේතුවෙන් දිනෙන් දින රැකියා නොමැති උගතුන් සංඛ්‍යාව ඉහළ යමින් පවතී.

පෙරදිග ධාන්‍යාගාරය යන විරුදාවලිය ලත් අප රටේ වර්තමානය මෙසේ සැකසීමට ප්‍රධාන හේතුව වී ඇත්තේ යටත් විජිත සමයයි.එහෙත් අප සතු සම්පත් හා අපට ඉදිරියට යා හැකි මං දෑස් ඉදිරියේ දිස් වෙමින් තිබියදී වෙනත් මං ඔස්සේ තවමත් අධ්‍යාපනය ගමන් කරයි.අනුකරණය ට මූලික හේතුව වේ.එදා සිංහල භාෂාවට හා පන්සලට හිමි වූ තැන යටත් විජිත සමයේ ඉංග්‍රීසි භාෂාවට හා පල්ලියට හිමි විය.මෙදා යටත් විජිත සමයෙන් මිදුනද රටේ ආර්ථික ක්‍රමයට ගැළපෙන ස්වභාෂාවට මුල්තැන දෙන නිවහල් අධ්‍යාපන ක්‍රමයක් ,නිවහල් ආකල්ප රටාවක් අප රටේ බිහි කිරීමට තවම අපොහොසත්ව ඇත.

රටේ අනාගතය විසඳීම සඳහා බොහෝ විට අධ්‍යාපනය ඉවහල් වේ. අධ්‍යාපනයෙන් දැනුම පමණක් නොව කුසලතා හා ආකල්පද ඒ හා සමාන්තරව වර්ධනය විය යුතුය. අධ්‍යාපන අරමුණු පිළිබඳව විමසා බලන විට මේ බව පැහැදිළි වේ.එසේ ම දේශියත්වය අගය කරන දේශීය සංස්කෘතියට ඇල්මක් දක්වන පුරවැසියන් බිහිකිරීමද අධ්‍යාපනයේ අරමුණකි.රටේ ආර්ථික තත්වයට ගැළපෙන ලෙස වෘත්තිය අධ්‍යාපනයක් ලබාදෙන්නේ නම් ළමුන් දේශානුරාගයෙන් හා දේශාභිමානයෙන් යුතු වනු ඇත.මෙරට අධ්‍යාපනයේ දී ස්වභාෂාවට හා දේශීය සිරිත්විරිත් වලට ඇති සැලකිල්ල පිරිහී යමින් පවතී.මේවායෙහි වටිනාකම වටහා දීම හා අපේ සංස්කෘතික උරුමයන් පිළිබඳව ළමයාට අවබෝධයක් ලබා දීම මඟින් ස්වදේශීය ආකල්ප වැඩිදියුණු කළ හැක.රටේ ආර්ථික ,සමාජීය,සංස්කෘතික හා සදාචාර යන අංශයන්හි දියුණුවත් සමඟ රටේ සම්පත් උපරිම ලෙස ප්‍රයෝජනයට ගැනීමට හැකිවන පරිදි අධ්‍යාපන ක්‍රමයෙන් උපදේශනයක් සිදුවිය යුතු ය. අධ්‍යාපනයෙන් චර්යාත්මක වෙනසක් බලාපොරොත්තු වෙයි.එසේ නම් අධ්‍යාපනය පොතට පමණක් සීමා නොවිය යුතු ය. රටේ අනාගත දියුණුව සඳහා ඵලදායී ලෙස යොදවා ගත හැකි ක්‍රියාකාරී විය හැකි කරුණු වලින් පෝෂිත විය යුතු ය.රටේ අධ්‍යාපන ප්‍රතිපත්ති අධ්‍යාපන ක්‍රමය කෙරෙහි බලපායි.දිනෙන් දින රටේ රැකියා නැති උගතුන් පිරිස වැඩිවෙමින් පවතී.මෙසේ මානව සම්පත් අපතේ යාම ඔවුන්ගේ පෞද්ගලික දියුණුවට මෙන් ම රටේ සංවර්ධනයට බාධාවකි.රටේ ප්‍රශ්න උද්ගත වීමට ප්‍රධාන හේතුව රැකියා හිඟයයි.ෙ ආකාරයට අධ්‍යාපනය වෙනස් විය යුතු පැත්තට වෙනස් නොවී දිගටම පැවතුනහොත් අධ්‍යාපනයේ හෙට දවස කෙසේ විසඳේද?

T.P.G.L.තෙන්නකෝන්

ශ්‍රී.ල.අ.ප.සේ.III

සහකාර අධ්‍යාපන අධ්‍යක්ෂක



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுடைய உணர்வுகளில்................

சத்தியசாய் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட செயலமர்வில் திருமலை வலயத்தின் தி/முஹம்மதியா வித்தியாலயத்தின் சார்பில் நான் கலந்து கொண்டமையை இட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 12 -13ம் திகதிகளில் நடைபெற்ற இந்த இரண்டு நாட் கருத்தரங்கில் கலந்து கொள்வதன் முன்னர்இருந்த என்னுடைய மனநிலைக்கும், முடிந்த பின்னரான தற்போதைய மனநிலைக்கும் இடையில் நிறைய வித்தியாசங்கள் இருப்பதை என்னால் உணர முடிகின்றது.

எனது பாடசாலையில் தரம் 05 இல் நான் கற்பிப்பதால், புலமைப்பரிசில் பரீட்சைக்காக மாணவர்களை ஆயத்தப்படுவதில் அநேகமான சந்தர்ப்பங்களில் அப்பிஞ்சுகளைத் தண்டனைக்கு உட்படுத்தி இருக்கின்றேன். அவ்வாறு நடந்து கொண்டமையை இட்டுப் பின்னர் பல தடவைகள் வருந்தியும் இருக்கின்றேன். இச் செயலமர்வில் கலந்து கொண்டதன் பின்னர் அந்த மாணவர்களுக்குத் தண்டனை வழங்குவதை நிறுத்தி விட வேண்டும் என முடிவு செய்துள்ளேன்.

அன்பு என்ற ஒன்று தான் இவ் உலகை ஆளும் சக்தி அன்பின் அடிப்படையில் மாணவர்களை வழிப்படுத்த முடியும் என நினைக்கின்றேன். மனித மேம்பாடுகளை வளர்க்கத்தக்க ஐந்து குணாதிசயங்களான சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை ஆகியவற்றின் துணையுடன் கற்றல், கற்பித்தல் முறையினை முன்னெடுத்துச் செல்ல முடியும். பிரபஞ்சத்தின் இணைப்பு அன்பு. இது ஒரு மகாசக்தி எல்லாம் ஒன்று என்ற எண்ணத்தெளிவு என்னுள் தற்போது பிறந்துள்ளது.

சத்தியசாய் கல்வி முறையில் ஆசிரியர் மையக்கல்வி வலுப்படுத்தப்படுவதால் ஆசிரியர்கள் முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டேன். என் மனதைத் தொட்ட இன்னுமொரு விடயம் அமைதி இருக்கை. நாளாந்தக் கற்பித்தல் செயற்பாடுகளின் ஆரம்பத்தில் இந்த அமைதி இருக்கையைக் கடைப்பிடிப்பதன் மூலம் நிறைய விடயங்களைச் சாதிக்க முடியும் என நினைக்கின்றேன்.

எம் அடிமனதின் ஆழத்தில் இருக்கும் எதிர்மறையான எண்ணங்கள், சொற்கள், செயல்களைக் களைத்து எப்போதும் நேரான சிந்தனைகள், சொற்கள், செயல்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை இப்பிஞ்சுகளின் மனதில் எங்கள் கற்பித்தல் திறமையினால் விதைக்கலாம் என நினைக்கின்றேன்.

இங்கு நான் குறிப்பிட்டுக் கூறக் கூடிய இன்னுமொரு விடயம் டாக்டர் கணேசமூர்த்தி ஐயா அவர்களால் வழங்கப்பட்ட பெற்றோரியல் என்ற பகுதி இச் செயலமர்வில் கலந்து கொண்ட ஆசிரிய ஆசிரியைகளில் 90% மானோர் பெற்றோராகவும் இருந்த படியினால் எல்லோருக்கும் இப்பாடப் பகுதி தேவையான ஒன்றாக இருந்தது. ஒரு பிள்ளையின் ஆளுமை வளர்ச்சியில் 90% பங்கு வகிப்போர் பெற்றோர். பாடசாலையில் எங்களிடம் கற்கும் பிள்ளைகளின் மனதை மேம்பாடடையச் செய்வதில் எங்கள் பங்கு ஒரு புறம் இருக்க, வீட்டில் சொந்தப்பிள்ளைகளின் மனதை மேம்பாடடையச் செய்ய முடிந்ததா என்ற கேள்வி என்னுள் எழுகின்றது. இதற்கு இல்லை என்ற எதிர்மறையான ஒரு பதிலைத்தான் என்னால் வழங்கமுடியும். அன்புடன் இறுக்கமான கட்டுப்பாட்டினை விதிப்பதன் மூலம் எங்கள் பிள்ளைகளின் இயல்புகளில் சிறிது சிறிதாக மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எவனொருவன் எவரும் பார்க்காமல் இருக்கும் நிலையிலும் தவறுகளைச் செய்யாமல் இருக்கின்றானோ அவனே உயர்ந்தவன்' சிறுவயதில் இருந்து பழகிய சில தீய பழக்கங்களைக் கொஞ்சம், கொஞ்சமாக விட்டு அவர்களை மாற்ற முயற்சிப்பேன். இவை யாவற்றுக்கும் இச் செயலமர்வு எனக்கு வழிகாட்டியுள்ளது.

இச்செயலமர்வினை எங்கள் திருகோணமலை வலயத்தில் அமைத்துத் தந்த அனைத்து பெருந்தகைகளுக்கும் ஆசிரியர் குழாம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு ஆசிரியர்கள் மத்தியில் இருந்து வந்த வேண்டுகோள் ஒன்றினையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

இவ்வகையான மனித விழுமியங்களை வளர்ப்பதற்கான செயலமர்வுகளை இடைநிலை வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டால் பேருதவியாக இருக்கும். உங்கள் பணிகள் மேலும் தொடர என் மனமார்ந்த ஆசிகள்.

'அன்பே கடவுள் அன்பு தான் இன்ப ஊற்று'


மானிடத் தன்மையைக் கொண்டு – பலர்
வையத்தை ஆள்வது நாம் கண்டதுண்டு
மானிடத் தன்மையை நம்பி – அதன்
வன்மையினாற் புவி வாழ்வு கொள் தம்பி!
மானிடம் என்றொரு வாளும் - அதை
வசத்தில் அடைந்திட்ட உன் இரு தோளும்
வானும் வசப்பட வைக்கும் - இதில்
வைத்திடும் நம்பிக்கை வாழ்வைப் பெருக்கும்

மானிடம் போற்ற மறுக்கும் - ஒரு
மானிடன் தன்னைத்தான் உயிரும் வெறுக்கும்!
மானிடம் என்பது குன்று – தனில்
வாய்ந்த சமத்துவ உச்சியில் நின்று
மானிடருக் கினிதாக - இங்கு
வாய்த்த பகுத்தறிவாம் விழியாலே
வான்திசை எங்கனும் நீபார்! – வாழ்வின்
வல்லமை 'மானிடத்தன்மை' என்ற தேர்

உணர்வுகளுடன்
திருமதி.தேவகி சுணில்
தி/முஹமதியா வித்தியாலயம்,
நிலாவெளி, திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தினை வினைத்திறனாக்கும் பாடசாலை சுயமதிப்பீடு

**பாடசாலை மேம்பாட்டுத் திட்டம் (Programme for school Improvement)**

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் அதனுடன் தொடர்புடைய ஏனைய பயனாளிகள் ஆகியோர் பாடசாலை மேம்பாட்டில் பங்குபற்றத்தக்க ஒருங்கிணைந்த அணுகுமுறையே பாடசாலை மேம்பாட்டுத் திட்டம் ஆகும். பாடசாலையின் பங்காளர்களை ஒன்றிணையச் செய்வதன் மூலமாக பாடசாலையின் தனித்துவமான தேவைகளை இருக்கின்ற வளங்களை கொண்டு வினைத்திறனான முறையில் நிறைவேற்றுதலை வெற்றிகரமான பாடசாலை மேம்பாட்டுத் திட்டமெனலாம்.

**PSI பாடசாலையொன்றில் இருக்கவேண்டிய முக்கிய அம்சங்கள்.**

1.SDC , SMC, அமைப்புக்கள் காணப்படல்

2.PSI தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டிருத்தல்

3.சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டப்பட்டிருத்தல்

4.ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருத்தல்

5.வருடாந்த அமுலாக்கல் திட்டம் தயாரிக்கப்பட்டிருத்தல்.

6.திட்டம் நடைமுறைப்படுத்தப்படல்.

7.கண்காணிப்பு நடவடிக்கைகள் காணப்படல்

8.திட்ட மீளாய்வு செய்தல்

9.பாடசாலை அபிவிருத்தி சங்க மாதாந்த கூட்டம் நடைபெறல்.

**பாடசாலை மேம்பாட்டு வேலைத் திட்டத்தின் நோக்கங்கள்**

1. அனைத்து மாணவர்களிற்கும் தரமான கல்வியை வழங்குதல்.
2. ஒன்றிணைந்த கல்வியினூடாக மாணவர்களின் பல்வேறு தேவைகளை அடையாளங் காணல்.
3. பாடசாலையின் உள்ளக செயற்பாடுகளில் கூடுதலான நெகிழ்வுத் தன்மையை ஏற்படுத்தல்.
4. இது எமது பாடசாலை எனும் உணர்வை அதிபர், ஆசிரியர் மாணவர் சமூகத்தினரிடையே ஏற்படுத்தல்.
5. பெற்றோர்களினதும் ,பிள்ளைகளினதும் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்தல்.
6. பாடசாலைச் செயற்பாடுகளில் சமூகப் பங்களிப்பை அதிகளவில் ஏற்படுத்தல்.
7. தீர்மானம் எடுப்பதில் வெளிப்படைத் தன்மையும் ,வகை கூறலையும் பாடசாலைக்குப் பெற்றுக்கொடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. வளப் பயன்பாட்டில் உச்சப் பயனைப் பெறல்

பாடசாலை மேம்பாட்டுத் திட்டச் செயற்பாடுகள்

1. கல்வியின் இலக்குகளில் கவனத்தை ஊக்குவித்தல்.
2. திட்டமிடலின் சகல கூறுகளிலும் ,ஒருங்குசேர் ஒன்றிணைந்த அணுகு முறையை வழங்கல்.
3. மாற்றத்தினையும் புத்தாக்கத்தையும் ஏற்படுத்த சந்தர்ப்பத்தினை வழங்கல்.
4. மாணவர்களை உயர் அடைவுக்கு இட்டுச் செல்லும் வகையில் கல்விச் செயற்பாடுகளில் மாணவர்களை இட்டுச் செல்லுதல்.
5. தொடர் ஒருங்குசேர் ஆளணி விருத்தி அமையும் வகையில் ஆசிரியர்கள் பாடசாலைத் தலைவர்களால் வழிகாட்டப்படல்.
6. புாடசாலை அபிவிருத்திக் குழுவினதும் ,ஆசிரியர்களினதும் ஒன்றிணைந்த தொடர்பினை வலுப்படுத்தல்.
7. சமூகத்துடனான இணைப்புக்களை வலுப்படுத்தி அதிகவளங்களைப் பெற்றுசிறந்ததோர் கற்றல் சூழலை ஏற்படுத்தல்.
8. கண்காணிப்பு, மதிப்பீட்டுச் செயன்முறையை மேம்படுத்துதல்.
9. பாடசாலை நிதி மற்றும் ஏனைய வளங்களை முகாமை செய்தலை வினைத்திறனுடையதாக்குதல்.
10. பாடசாலைத் தலைவர்கள் பாடசாலை அடைவுகள் பற்றிய – குறிப்பாககற்றல் பெறுபேறுகள், நிதி நிலைமை, சவால்கள் தேவைகள் பற்றிப் பாடசாலை பங்காளிகளுக்கு காலத்துக்கு காலம் அறிக்கையிடல்.

அதிபரின் வகிபங்கு

1. பாடசாலையின் தூரநோக்கினை நோக்கி மாணவரின் கல்விச் சாதனைகளையும் அடைவுகளையும் நெறிப்படுத்துதல்.
2. அத்தகைய சாதனை அடைவுகளை அடைவதற்காக, கலைத்திட்டத்தினை விளைதிறனுடன அமுலாக்குவதற் கேற்ற முறையில் பாடசாலையினை ஒழுங்கமைத்தல்.
3. மாணவர் உயர் அடைவ மட்டத்தினை அடைவதற்காக ஆசிரியர்களின் தேர்ச்சிகளை உயர்த்தும் வகையில் அவர்களை தொடர்ச்சியாக தரங்கணிப்புச் செய்து ஊக்குவித்தல்.
4. மாணவர் அடைவினை உயர்த்தும் முகமாக பௌதீகவளங்களை உபயோகித்துப் பயன்பெறல்.
5. மேற்படி செயற்பாடுகளுக்கு பாடசாலைச்சமூகத்தின் ஒத்துழைப்பையும் அனுசரணையையும் பெற்றுக் கொள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலைகளில் பாடசாலை மேம்பாட்டுத்திட்டத்தினை செயற்படுத்துவதில் காணப்படும் குறைபாடுகள்.**

1. பாடசாலையின் பங்காளர்களை ஒன்றிணையச் செய்வதில் காணப்படும் இடர்பாடுகள்.
2. பாடசாலையின் சுயமதிப்பீட்டினை சரியாக மேற்கொள்ளாமையினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள்.
3. வளப்பற்றாக்குறை, மாற்றீடானவளங்களை பயன்படுத்துவதிலுள்ள பிரச்சினைகள்
4. பாடசாலை மேம்பாட்டுத்திட்டம் பற்றியசரியான விழிப்புணர்வின்மை
5. பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தினை பாடசாலைச் செயற்பாடுகளுக்கு புறம்பான செயற்பாடொன்றாக நோக்குதல்.
6. அடையப் பெறமுடியாத இலக்குகளை தீர்மானித்து இயங்குதல்.
7. முறையான ஆவணங்களை பேணாதமை./ இற்றைப்படுத்தாமை
8. தமது பாடசாலைக்கு பொருத்தமான செயற்பாடுகளை அன்றி ஏனைய பாடசாலைகளில் செயற்படுத்தப்படும் திட்டங்களை தமது பாடசாலைகளிலும் செயற்படுத்த முனைதல்.
9. ஊரிய உரிய காலப் பகுதிகளில் மீளாய்வுமற்றும் முன்னேற்ற ஆய்வுகளை செயற்டுத்தாதமை.
10. கண்காணித்தல் மதிப்பிடல் மேற்பார்வை செய்தல் தொடர்பான சரியான குழுக்கள் அமைக்கப்படாதமை அல்லது அக் குழுக்களின் அசமந்த போக்கு.

பாடசாலையின் செயற்பாடுகளை வெற்றிகரமாக கொண்டு நடாத்துவதற்காக வரையறுக்கப்பட்ட வளங்களையும் குறித்த காலப்பகுதியையும் அடிப்படையாக வைத்து பாடசாலையினால் வரையப்படும் நேர அட்டவணை போன்றதொரு செயற்பாடே பாடசாலை மேம்பாட்டுத் திட்டமாகும். இத்திட்டவரைபு பாடசாலையின் சகல செயற்பாடுகளையும் உரிய காலப்பகுதியில் செயற்படுத்துவதற்கு நினைவுபடுத்தல் சட்டகமாக செயற்படுவதால் பாடசாலையின் செயற்பாடுகள் உரிய உரிய காலப்பகுதியில் நிறைவேற்றப்படுவது உறுதிப்படுத்தப்படுகின்றது.

இங்கு பாடசாலைகள் தமது பாடசாலைகளுக்கேற்ற வகையில் நியதிகளை வரையறுத்துக் கொள்வது அவசியம் ஏனெனில் நடை முறைக்கு சாத்தியமாகாத விடயங்களை திட்டத்தில் காட்டுவதென்பது திட்டத்தின் நம்பகத்தன்மையை குறைக்கின்ற செயற்பாடாகும்.

உதாரணமாக நூலகம் இல்லாத பாடசாலை ஒன்று தனது திட்டத்தில் பெருமளவான நிதியினை பெற்று நூலகம் அமைப்பது என்பதை சேர்த்துக் கொள்கின்றதென வைத்துக்கொண்டால் சிலவேளை அது நடைபெற சாத்தியமாக இல்லாது இருக்கலாம் ஆனால் பாடசாலையின் தற்போதைய தேவை மாணவர்களின் வாசிப்பு பழக்கத்தினை தூண்டக்கூடிய கற்றலுக்கு உதவக்கூடிய நூலகத்தின் செயற்பாடுகளை பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதை அடிப்படையாக கொண்டது. எனவே சாத்தியமான முறையாக வாசிப்பு மூலையொன்றினை ஏற்படுத்தல் என்பதைதனது திட்டத்தில் சேர்த்து கொள்ளுமாயின் அது வெற்றிகரமான செயற்பாடாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை சுய மதிப்பீடு (School Self - Assessment)

SSA என்பது ஒரு பாடசாலையின் பங்குதாரர்கள் தங்களை தாங்களே சுயமாக மதிப்பீட்டினை செய்து கொண்டு பாடசாலையினை முன்னேற்றுவதனை அடிப்படையாக கொண்டது. இங்கு இரண்டு விடயங்களை அடிப்படையாக கொள்ள வேண்டும்.

1. விளைதிறன்
2. வினைதிறன்

எமது கல்வி இருக்கின்ற நிலையிலிருந்து மேலும் முன்னேற வேண்டியிருக்கின்றது அதற்கான கற்றல் சூழ்நிலைகளை மேம்படுத்த வேண்டியிருக்கின்றது. இதற்காக இருக்கின்ற வளங்களையும் பங்குதாரர் அனைவருடைய பங்களிப்புடனும் நோக்கத்தினை அடைய வேண்டியிருக்கின்றது.

- புாடசாலை சுயமதிப்பீடு குறிக்கோள்களை தீர்மானிப்பதற்கான முதற் செயற்பாடாகும்
- புாடசாலை தன்னுடைய தற்போதைய நிலையைகருத்தில் கொண்டுதான் செல்ல வேண்டிய இலக்கினை அடைவதற்கான திட்டத்தினை வகுப்பதற்கு சுயமதிப்பீடு உதவிசெய்கின்றது.
- புாடசாலை தனதுபலம் ,பலவீனம் ,வாய்ப்புக்கள் ,சவால்கள் என்பவற்றினை அறிந்து கொள்ள வாய்ப்பாகின்றது.
- பாடசாலையின் பங்காளர்கள் அனைவரையும் ஒன்றிணைந்து பாடசாலைக் குறிக்கோள்களை அடைவதற்கு காரணமாய் இருப்பது பாடசாலை சுயமதிப்பீடே ஆகும்.

பாடசாலைகள் சுயமதிப்பீட்டினை செய்து கொள்வதில் சுட்டிகள் குறிகாட்டிகளாக செயற்படுகின்றன இருப்பினும் அச் சுட்டிகளைநாம் பொருத்தமான குறிகாட்டிகளாக பொருத்தமான வகையில் நிர்ணயிக்க வேண்டும்.

ஊதாரணமாக பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தில் தரம் 10 இலிருந்து 11 க்குவகுப்பேற்றப்படும் வீதம் என ஒரு சுட்டியினை காட்டியிருப்பின் அது 100 % த்தினையே காட்டும் இச் சுட்டியினைக் கொண்டு அவ்வகுப்பிற்கு மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை தீர்மானிக்க முடியாது. எனவே தரம் 10 இல் கணிதம், தமிழ்,விஞ்ஞானம், ஆங்கிலம்,வரலாறு ஆகிய பாடங்களில் சித்திவீதத்துடன் வகுப்பேற்றப்படும் மாணவர் வீதம் எனசுட்டியினை வரையறுப்போமாயின் அதுகுறைவான வீதத்தினையே காட்டும். எனவே எதிர்வரும் ஐந்து வருடங்களில் அதனை உயர்த்துவதற் கேற்ற செயற்பாடுகளை நாம் சேர்த்துக்கொள்ள முடியும்.

**பாடசாலை சுயமதிப்பீடுச் செயற்பாடு பின்வரும் விடயங்களுக்கு முக்கியம் கொடுப்பனவாக நடைபெறுவது வரவேற்கத்தக்கதாகும்.**

- பாடசாலையின் சுய வெளிப்பாடுகளை பிரதிபலித்தல்
- கூட்டுறவாக பங்காளர்களினால் மேற்கொள்ளப்படல்.
- சான்றுகள் ஆதாரங்களை மையமாக கொள்ளல்.
- கலந்துரையாடல்களின் தரம் பேணல்.
- நேரடியாக பாடசாலை மேம்பாட்டினை ஏற்படுத்துதல்.
- கல்வியின் அடைவ முன்னேற்றத்தினை மையமாக கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலை சுயமதிப்பீட்டறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டியவை**

1. அறிமுகம்
2. நோக்ககூற்று பணிக்கூற்று
3. புாடசாலை அடிப்படை தகவல்கள்
4. பகுப்பாய்வுகள் (தரவுப்பகுப்பாய்வுகள், SWOC பகுப்பாய்வு)
5. பகுப்பாய்வில் பெறப்பட்டு முன்னுரிமைப்படுத்தப்பட்ட பிரச்சினைகள்
6. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள்
   (பகுப்பாய்வுகளிலிருந்து எடுக்கப்பட்ட தீர்மானங்கள் )
7. இலக்குகளை அடைய செய்வதற்காக தீர்மானிக்கப்பட்ட தந்திரோபாயங்கள்.
8. தந்திரோபாயங்களை செயற்படுத்த கூடியதான செயற்பாடுகள்
9. வள ஒதுக்கீடு மற்றும் வளபெறுகைகள் தொடர்பான தேவைப்பாடு

பாடசாலைகளில் பெரும்பாலான மேம்பாட்டுத்திட்டச் செயற்பாடுகள் வெற்றியளிக் காமைக்கான பிரதானகாரணமாக பாடசாலைகள் தங்களைசரியாக இனங்காணாதமையை குறிப்பிடலாம். எனவே பாடசாலைகள் தங்களை சுயமதிப்பீடு செய்துகொள்ளும் போது பின்வரும் கேள்விகளுக்கான பதில்களை ஆராயவேண்டியது அவசியமாகும்.


1. தற்போது எங்கே உள்ளோம்?
2. எங்கு செல்ல வேண்டும்?
3. எப்போது செல்ல வேண்டும்?
4. அங்கே எவ்வாறு செல்லப் போகின்றோம்?
5. அங்கு செல்வதற்கு தேவையான வளங்கள் எவை?
6. வெற்றிக்கான வினையாற்றல் நியதிகள் யாவை?

பாடசாலைசுய மதிப்பீட்டுச் செயற்பாட்டினூடாக பாடசாலைச் செயற்பாடுகள் மறுமதிப்பீடு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன. சான்றாதாரங்கள் தீர்ப்புக்களூடாக சிறந்த நோக்கங்களை பெற்றுக் கொள்ள பாடசாலை சுயமதிப்பீடு உதவுகின்றது. அத்துடன் நாளுக்கு நாள் பாடசாலையின் ஒருங்கிணைந்த செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு காரணமாக உள்ளது எனவேதான் பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டத்திற்கான செயற்பாடுகளை பாடசாலை சுய மதிப்பீடு வினைத்திறனாக்குகின்றது எனலாம்.

இ.நிமலரஞ்சன்,
(PSIஇணைப்பாளர்)
உதவிக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்களை போதைப்பொருள் பாவனையிலிருந்து பாதுகாப்போம்

ஆண்டவனின் சிருஷ்டிப்பில் மனிதப்படைப்பு அபாரமானது. கொள்ளுவதையும், தள்ளுவதையும் பிரித்தறியும் மனித சிந்தனை மாண்பினை ஏற்படுத்துகின்றது. இன்று விஞ்ஞான மனிதன் விண்ணளந்து, மண்ணளந்து புகழ் அளக்கின்றான். பாராட்டுவோம். ஆனால் அவன் காலந்தோறுங் கட்டிக்காத்து வந்த கல்விக்கோட்டைகளும், கலாசாரக் கோட்டைகளும், பண்பாட்டுக் கோலங்களும், சிதைக்கப்பட்டு வருகின்றன. காரணம் என்ன? வகை தொகையற்ற போதைப் பொருள் பாவனைகளும் போதைப் பொருள் கடத்தல்களுமே ஆகும். இன்று போதைப் பொருள் வர்க்கத்தில் ஆசியாவின் கேந்திர நிலையமாக இலங்கை மாறி உள்ளது. குறிப்பாக ஆப்கானிஸ்தானிலிருந்து ஏனைய நாடுகளுக்கு **பிறவுன் சுகர்** எனும் போதைப் பொருளினை கடத்தும் மத்திய நிலையமாக இலங்கை வரலாற்றுப் பதிவினை செய்துள்ளது. வரலாறு தவறு செய்யலாம். ஆனால் வரலாற்றுத் தவறினை இலங்கை செய்வது நியாயமா? **ஹெரோயின், அபின், மோபின்** , **ஹொக்கையின்** போன்ற மிக மோசமான போதைப் பொருட்கள் சமூகத்தின் இறுக்கமான கட்டுப்பாடுகளை தகர்த்தெறிகின்றன. 'ஒரு நாட்டின் மூலவளமே இளைஞர் சக்தி தான். அவர்கள் சிந்தனைச் சிற்பிகள். உழைக்கும் வர்க்கத்தினர் இளைஞர்களை முதலீடாகக் கொள்ளாத பொருளாதாரம் முறையான ஒன்றல்ல' என்கின்றார் ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான்கீமூன். இந்தப் பெறுமதி மிக்க ஒப்பற்ற இளைஞர் வளம் குறுகிய இன்பந்தரும் போதைக்கு அடிமையாகி குற்றச் செயல்களின் இருப்பிடங்களாக மாறி உள்ளன. இன்றைய எண்ணற்ற துஷ்பிரயோகங்களின் பின்னணியில் இளைஞர்களே உள்ளனர்.

இன்னுமொரு பக்கம் இந்தப் போதைப் பொருள் விநியோகத்திற்கும், பாவனைக்கும் மாணவர்களை இலக்கு வைத்திருப்பதே பெரும் பாவச் செயலும், அபாயச் செயலுமாக உள்ளது. இலங்கையில் திருமணமாகாத சுமார் நாற்பத்தைந்து (45%) வீதத்தினர் போதைக்கு அடிமையாகி உள்ளனர். அவர்களுள் அறுபது வீதத்தினர் (60%) மாணவர்கள் என்கின்றது. ஆய்வுகள், பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு அளவுக்கதிகமான பணமும், சுதந்திரமும் கொடுப்பதனால் தீய நண்பர்களின் சகவாசம், வயதுக்கு ஒவ்வாத பிரிவினரின் சகவாசம் என்பவற்றால் பிள்ளைகள் கெட்டுப் போகின்றார்கள். அண்மைக்காலமாக இந்தப் போதைப் பொருள் பாவனையும், விற்பனையும் பாடசாலையை அண்டிய பிரதேசங்களை மட்டுமன்றி சில பாடசாலைகளுக்குள்ளும் ஊடுருவி உள்ளமை தெரிய வந்துள்ளது. பாடசாலையை அண்டிய பிரதேசங்களிலுள்ள கடைகளில் குடிபானமாகவும், உண்டி வகைகளாகவும் இவை விற்பனை செய்யப்படுகின்றன. இதனை இலகுவாகப் பெற்று இன்பம் அனுபவிக்கும் மாணவர்களிடத்தில் தன்னம்பிக்கை குறைகின்றது. படிப்பில் ஆர்வம் குறைகின்றது. விளையாட்டுக்களில் ஆர்வம் குறைகின்றது. இந்த மாணவர்கள் பெற்றோர், ஆசிரியர்களிடத்தில் சண்டையிடுகின்றனர். வாக்குவாதம் செய்கின்றனர். குரூரச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

இவை தவிர பாடசாலை விட்டு இடை விலகியோர், தொழில் வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகள், போரால் பாதிக்கப்பட்டவர்கள் போன்றோர் மனச்சோர்வுடன் வாழ்கின்றனர். இவர்களது இந்த இயலாமையை பயன்படுத்திக் கொள்ளும் ஒரு தரப்பினர் திட்டமிட்டு போதைப் பொருள் விற்பனையை மேற்கொண்டு அவர்களது எதிர்காலத்தையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூனியமாக்குகின்றனர். மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் கரையப் பாயும் என வாளாவிருந்து விடலாமா? இந்தப் பாதகச் செயல்களை எல்லாம் கழுவிச் செல்லும் முழு நீரலைகளாக யார் மாறப் போவது? காலத்தின் கேள்வி இதுவல்லவா?

ஆரோக்கியமான மாணவர் சமுதாயமே தேசத்தின் புதுப் பொலிவிற்கு வழிவகுக்கும். ஆனால் தேசத்தையே மாற்றியமைக்கும் சக்தி கொண்ட மாணவர் சக்தி இளமைக் காலத்திலேயே போதைச்சக்கரத்தில் உழன்று வாழ்வை சூனியமாக்குகின்றன. போதைவஸ்த்தானது புதிய வடிவத்தில் இவர்கள் மத்தியில் பரவி வருகின்றன. சில மருந்து வகைகளை போதைக்காக பயன்படுத்தி வருகின்றார்கள். போதை வஸ்துகளைப் பெற்றுக் கொள்வது இலகுவானது என்பதனாலேயே இத்தகைய முயற்சிகளை மாணவர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள். முக்கியமாக சாதாரணதர, மற்றும் உயர்தர மாணவர்களே அதிகளவில் இந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். குறிப்பாக கொழும்பு மாவட்டத்திலேயே எழுபத்தொரு வீத (71%) மாணவர்கள் போதைக்கு அடிமையாகி உள்ளனர். அடுத்து கம்பஹா மாவட்டத்தில் 22% மானோர் போதைக்கு அடிமையாகி உள்ளனர் என்கிறது தரவுகள். அதே போல் யுத்தத்திற்கு பின்னர் வட மாகாணத்திலும் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளமையை தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன சுகாதார அமைச்சின் ஆண்டறிக்கை.

இந்த உலகம் அறிவுக்கு என்றும் தலை வணங்கும். ஆற்றலுக்கு செவிசாய்க்கும். எனவே தான் அறிவைப் பெறும் வழிகளும் கட்டுப்பாடின்றி திறந்தே கிடக்கின்றன. ஆனால் இன்றைய மாணவர் சமூகமோ விஷமிகளின் சூட்சும வலைக்குள் மிக இலாவகமாகவே விழுந்து பள்ளிப் பருவத்தை தொலைத்து விடுகின்றது. நூறு அற்பமான இளைஞர்களை தாருங்கள் சிற்பிகளாக்கித் தருகின்றேன் என்றார் சுவாமி விவேகானந்தர். ஆனால் இன்று சிற்பிகளான மாணவர்களே அற்பமானவர்களாக மாற்றப்படுகின்றார்கள். பெண் மாணவிகள் கர்ப்பமானவர்களாக மாற்றப்படுகின்றார்கள். எதுவும் அறியாத பெண்பிள்ளை ஒன்று பிள்ளையைச் சுமக்கும் அவலம் தொடர்கின்றது. தர்ம உபதேசத்திற்கும் அஹிம்சைக்கும் பெயர் பெற்ற இலங்கையில் இன்று நடப்பதெல்லாம் என்ன? கொலையும், கொள்ளையும், வன்புணர்வுமே ஆகும். பெற்ற தாயையும் தந்தையையும் பிள்ளையே நஞ்சூட்டிக் கொல்லும் அவலம். காதலிக்கு சட்டை வாங்கித்தர மறுத்த தாயைக் கொன்ற தனயன் என்று பட்டியல் நீளவே செய்கின்றன. இங்கே கவலை அளிக்கும் விடயம் என்னவென்றால் இவர்கள் அனைவரும் மாணவர்களாக இருப்பதேயாகும். மாண்புடைய, மாட்சிமையுடைய மாணவர்கள் எல்லாம் புண்பட்டுக் கிடக்கின்றார்கள். பண்பட்ட மாணவர் சமுதாயத்தை படைக்க முன் வருவது யார்? எப்போது?

ஒரு சதம் இல்லாதவன் ஏழை அல்ல எந்த ஒரு நோக்கமும் இல்லாதவனே ஏழையாகும். இன்று மாணவர்களும் நோக்கங்கெட்டு தூரதரிசனமின்றி சீரழிக்கப்படுகின்றார்கள். ஒரு சமுதாயத்தின் மாற்றம் பாடசாலை எனும் அடித்தளத்திலிருந்தே கட்டியெழுப்பப்படுகின்றது. ஆனால் அந்தப் பாடசாலைகளையே சின்னா பின்னமாக்கும் வகையிலேயே போதைக் கலாசாரம் தலை தூக்கி உள்ளது. மாற்றத்தைப் படைக்க வேண்டிய மாணவர்களின் மனப்பாங்கு மாற்றமே இன்றைய தேவையாக உள்ள போதும் அவர்களது பாதை வலுக்கட்டாயமாக மாற்றப்படுகின்றது. நெஞ்சில் உரமும், நேர்மைத்திறனும், துணிச்சலும், தற்றுணிவும் பிறர்நலப் பரோபகாரமும் நிறைந்த மாசில்லா மணிகளான மாணவமணிகளாக ஒளிர வேண்டிய எங்கள் மாணவச் செல்வங்களின் எதிர்காலமே இருண்டு போயுள்ளது.

சிதைந்து போன குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளும், நலிவடைந்து போன பண்பாட்டுக் கோலங்களும், அநாகரிகமான காட்டுமிராண்டி வாழ்க்கை முறைக்கே நாம் திரும்பிச் செல்ல காரணமாகின்றன. பரபரப்பான ஒவ்வொரு நாளையும் வேகமாகவே கழிக்க முற்படும் குடும்பச் சூழலால் குழந்தைகள் மீதான பெற்றோரின் பார்வைக் குறைப்பு, கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறைக்கு கொடுத்த விடுதலையின் விளைவு, தனிக் குடும்பத்தில் ஏற்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகச் சீரழிவுகள்,, மனச் சோர்வுகள் என்பன மாணவர்களின் நெறி பிறழ்வுக்கு காரணமாக அமைகின்றன. முறையான கட்டுக் கோப்புக்களுடனும் , கலாசார விழுமியங்களுடனும் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய மாணவர்கள் பாதை மாறிச் செல்கின்றனர். பாடசாலைகளுக்குள் நுழைந்துள்ள அடிதடிக் கலாசாரம், பல்கலைக்கழகம் வரை நீண்டு சென்றுள்ளது. புரிந்துணர்வு, சகோதரத்துவம், விட்டுக் கொடுப்பு, சகிப்புத்தன்மை போன்ற உயர்ந்த மனித விழுமியப் பண்புகள் மண் மூடிப் போயுள்ளன. அறிவியல் விருத்தி என்ற வகையில் நவீன செலுலர் தொலைபேசிகளும், இணையத் தொடர்புகளும் **வட்சப், டுவிட்டர், வைபர், ஐ எம் ஓ, யூடியூப், பேஸ்புக், ஸ்கைப்** போன்ற தொடர்புகளும் மனித வாழ்க்கையை திசைமாறச் செய்துள்ளன. இவற்றுடன் கூடவே பணம் உழைக்கும் நோக்கில் படமாகும் சினிமாக்கதைகளில் வரும் பாத்திரப் படைப்புக்களும், குடிகாரனாகவும், வில்லனாகவும் சிருஷ்டிக்கப்படுகின்றார்கள். முக்கியமாக கதாநாயகன் கூட நாகரீகத்தை விரும்புபவனாக, குடிகாரனாக, அடிதடிகளில் ஈடுபட்டு ரவுடிஸம் செய்பவனாக இருப்பதையே இளவட்ட பள்ளி மாணவிகள் விரும்புகின்றனர். அத்துடன் சினிமாக்களில் கூட பாடசாலைகளிலும், வெளியினிலும் மாணவர்கள் குடிப்பதை பெசனாக மாற்றி உள்ளனர். அத்தகைய முயற்சிகள் இலங்கையிலும் மிக வேகமாகவே பரவியிருக்கின்றன. எனவே தான் வடகிழக்குப் பகுதிகளில் குறிப்பாக வடபகுதி மாணவர்கள் மிக இலாவகமாகவே போதைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். கலாசார சீரழிவுச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இப்பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து விற்பனையாகும் போதைப் பொருட்களின் வடிவங்களை மிகச் சூட்சுமமாகவே **ஐஸ்கிறீம், வெற்றிலை** போன்றவற்றுடன் **பான்பராக்** மற்றும் போதைப் பொருட்களை விற்பனை செய்கின்றனர். இவற்றை சாதாரணதர, உயர்தர மாணவர்கள் மட்டுமன்றி இடைநிலைப்பிரிவு மாணவர்களுங் கூட வாங்கிச் சுவைப்பதில் ஆர்வங் காட்டுகின்றனர். போதை ஏறப் பெற்ற இந்த மாணவர்கள் அடிதடி, திருட்டு, கொள்ளை, கொலை, வன்புணர்வு போன்ற பல்வேறு குற்றச் செயல்களைச் செய்கின்றனர். இதுவே இன்று இளங் குற்றவாளிகள், சிறுவர் குற்றவாளிகள் அதிகரிக்க காரணமாகியுள்ளது.

பாடசாலை போன்ற அறச்சாலைகளின் பணிகளின் தேக்கமே சிறைச்சாலைகளின் இளங்குற்றவாளிகள் எண்ணிக்கை உயரக் காரணமாயுள்ளது எனலாம். எனவே நாம் விழிப்பாக இருக்க வேண்டிய காலம் கனிந்துள்ளது. பாடசாலை மாணவர்களைப் போதைப் பழக்கத்திற்கு உள்ளாகச் செய்வதற்காக பாடசாலைக்குள் போதைப் பொருட்கள் செல்லுவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். பாடசாலைக்கு எதிரில் நிறுத்தி வைக்கப்படுகின்ற வாகனங்களை திடீர் சோதனை செய்தல் வேண்டும். பாடசாலை இடைவேளையின் போது வெளியில் வரும் மாணவர்கள் அருந்துவதற்காக விற்பனை செய்யப்படுகின்ற சிற்றுண்டி வகைகள் , மாங்காய் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களையும் சோதனை செய்தல் வேண்டும். பாடசாலை அதிபரின் ஒத்துழைப்புடன் மாணவர் தலைவர்களைக் கொண்டு பாடசாலைக்குள் செல்லும் மாணவர்களின் பொதிகள், பேனை, பென்சில், பெட்டிகள் போன்றவற்றை சோதனையிட்டு டொபி மற்றும் இனிப்பு பண்டங்களை உள்ளே கொண்டு செல்லப்படுவதை தவிர்த்தல் வேண்டும். அத்துடன் பாடசாலை நேரங்களில் மாணவர்கள் சீருடையுடன் பாடசாலைக்கு வெளியே நடமாடும் போது பொலிஸாரின் கண்காணிப்பை பெற்றுக் கொள்வதும் அவசியமாகும்.

பாடசாலைச் சூழலில் வெளியாள் எவருக்கும் அலுவல் இல்லை எனினும் பாடசாலை நடைபெறும் நேரங்களிலும், பாடசாலை இடைவேளைகளின் போதும் பாடசாலைக்கு எதிரிலும் அண்மையிலும் வாகனங்களை எவரும் நிறுத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூற வேண்டும். பாடசாலை தேவைகளுக்கு வருகின்ற வாகனங்களை வேறு இடங்களில் நிறுத்தி வைப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்தில் இறக்குவதற்கும், முடிகின்ற நேரத்தில் அந்த வாகனங்கள் பிள்ளைகளை ஏற்றிச் செல்வதற்கும் அனுமதித்தல் வேண்டும். பாடசாலை மற்றும் கல்வி நிலையங்கள் ஆகியவற்றுக்கு பெண் பிள்ளைகள் சென்று வரக்கூடிய சுதந்திர சூழலை உருவாக்கும் வகையில் சட்டவிரோதமாக ஒன்று கூடி நிற்கும் இளைஞர்களை கைது செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டு ரீதியான கலாசாரத்தை கட்டிக்காத்து, நீண்டகால வரலாற்றைக் கொண்ட தமிழினத்தை பாரம்பரியத்தை நிலைநாட்டி, சமூகச் சீரழிவுகளை திட்டமிட்டு மேற்கொள்ளும் சக்திகளை பலவீனப்படுத்தி எமது இளைய மாணவ சமுதாயத்தின் வெற்றியை நிலைநாட்ட போதைப்பொருள் பாவனையைத் துடைத்தெறிவதற்கு தனித்தனியே தூரநின்று செயற்படாது புறக்காரணிகளை புறந்தள்ளி ஒன்றுபட்டு செயற்படுவதே உத்தமமானதாகும். பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்களையும், இளஞ்சமூகத்தினரையும் புரிந்தவர்களாக அதே நேரம் மாணவர்கள் இளம் சமூகத்தினரையும், பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் கனம் பண்ணுபவர்களாகவும் தமது எதிர்காலத்தை கருத்தில் கொண்டவர்களாகவும் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை வழி தவறாது முன்னெடுக்க வேண்டிய கடப்பாடுகளைக் கொண்டிருக்கின்றார்கள். ஆக மொத்தத்தில் இன்றைய மாணவ சமூகம் போதைப் பொருள் என்கிற விஷவலைக்குள் விழுந்து கலாசார புரள்வுக்கு அகப்பட்டு புறம் தள்ளப்படாது பாதுகாக்க வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் தலையாய பணியாகும்.

திருமதி.சந்திரகலா சௌந்தரராஜன் (ஆசிரியர்)

தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி,

திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொற்பஞ்சம் ஒழித்திடுவோம்

ஆளுமை மிகு மனித சமூகத்தின் பலம் "அறிவு" இவ் அறிவுக்கு அடிப்படையாக அமைவது வாசிப்பு. அறிவுசார் சிந்தனையாற்றல் உருவாவதற்கு பரந்த வாசிப்புத் திறன் அவசியம். வாசிப்பதன் மூலமும் கேள்வி ஞானத்தாலும் நாம் அறிந்து கொண்டவற்றை ஆராய்ந்து உய்த்துணரக் கற்றுக் கொள்கிறோம். அங்கு அறிவு பெருகுகிறது. இதனையே 'கற்றனைத்து ஊறும் அறிவு' எனச் சிறப்பிக்கப்படுகிறது.

'எண்ணக் கருக்களைப் பெறவும், கொள்கைகளில் நின்று முடிவுகளை உய்த்தறியவும் விதிகளை நன்கு அறியவும் மொழி பெருமளவில் பயனளிக்கிறது' என ரஷ்ய நாட்டு அறிஞர் லூரியா குறிப்பிடுகிறார். உறவை வளர்க்கவும், அறிவைப் பெருக்கவும், கற்றல் - கற்பித்தலில் ஈடுபடவும், கலந்துரையாடவும், கருத்தினைப் பரிமாறவும், விவாதிக்கவும் என அனைத்திற்கும் பயன்படும் முக்கிய ஊடகம் மொழியாகும். அம் மொழியினை விருத்தி செய்யும் திறன் வாசிப்பாகும். அவ்வாசிப்பினை வளர்க்கும் இடம் நூலகமாகும். இதனாலே தான் 'வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்' என பிரான்சிஸ் பேகன் குறிப்பிடுகிறார் போலும், சைகை, எழுத்துருவம் எனத் தொடங்கும் மொழிவளர்ச்சி வாசிப்பின் மூலம் ஊற்றாகப் பிரவாகிக்கிறது.

'எனக்கு நீங்கள் பிறந்த நாள் பரிசு தர விரும்பினால் ஒவ்வொருவரும் ஒரு புத்தகத்தை அனுப்பி வையுங்கள்' என ரஷ்யப் புரட்சியாளர் லெனின் குறிப்பிடுகிறார். இவரது வாசிப்பாற்றலை உலகறியச் செய்வதற்காகவே ரஷ்யாவிலுள்ள லெனின் நூலகம் (Lenin Library) விளங்குகிறது. ஒரு புரட்சியாளனே வாசிப்பினைத் தனது கூரிய ஆயுதமாக்குகிறான். இதிலிருந்து அறிவைக் கட்டுடையாமல் ஊடுகடத்துவதற்கும், உணர்ந்து கொள்வதற்குமான ஒரு உன்னத கருவியாக வாசிப்பு கொள்ளப்படுகிறது.

'இயலாமை என்பதையே இல்லாமல் செய்வேன்' என்று முழங்கிய மாவீரன் நெப்போலியன் கூட தான் செல்லும் போர்க்களங்கள் அனைத்துக்கும் தன்னுடன் ஒரு நூலகத்தையே கொண்டு செல்வானாம். ஓடும் குதிரையின் மீதமர்ந்து உறங்கி ஓய்வெடுக்கும் நெப்போலியன் பதட்டம் தரும் போர்ச் சூழலில் கூட நூல்களுக்கும், வாசிப்புக்கும் அத்தனை முக்கியத்துவம் கொடுத்திருக்கும் போது நாகரிக வளர்ச்சியடைந்து, நவீன தொழில்நுட்ப யுகத்தில் வாழும் இன்றைய மனிதன் வாசிப்பினையும், நூலகத்தினையும் முழுமையாகப் பயன்படுத்துகின்றானா? என்றால் அங்கு 'முழுமை' எனும் பதம் விலகி ஓடிவிடுகிறது. தமது தேவைகளுக்கு ஏற்ப நுனிப்புல் மேயும் நிலையே இங்கு காணப்படுகிறது.

வாசிப்புப் பழக்கமானது சிறுபராயம் தொடக்கம் பழக்கப்படுத்தப்பட வேண்டிய ஒன்று பிள்ளையின் ஆளுமை விருத்தியில் வாசிப்பு அதீத செல்வாக்குச் செலுத்துகின்றது. கண்களால் காணுவதை மூளை அறிந்து பொருளுணரும் போது அங்கே வாசிப்பு நிகழ்கிறது. இதில் மூளை கண்ணுக்குச் சொல்லுதல், கண் - மூளைக்கும் சொல்லுதல் எனும் இரு உளவியல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இதனால் வரிவடிவத்திலுள்ள சொற்களை ஒலி வடிவமாக்கி உச்சரித்தல் மூலம் வாசித்தல் பயிற்சி ஆரம்பமாகிறது. இன்றைய கல்விப் புலத்திலும் ஆரம்பப்பிரிவு முதற்கொண்டு வாசிப்பின் அவசியம் மிக முக்கியமாக உணர்த்தப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அறிவுத்திறன், மொழித்திறன், பார்வை நலம், கேள்வி நலம், மனநலம், சூழல் நலம் என்பன ஒரு சிறந்த வாசிப்புக்கு இன்றியமையாதனவாக உள்ளன என அழுடந எனும் அறிஞர் குறிப்பிடுகிறார். ஆரம்பப் பாடசாலை மாணவர் முதற்கொண்டு பல்கலைக்கழக விரிவுரையாளர் வரை அனைவரிடமும் வாசிப்புப் பழக்கம் மிகைப்பட வேண்டும். ஆழமாகவும், கருத்தூன்றியும் வாசிக்கும் வாசிப்பே அறிவுக்கும், ஆய்வுக்கும் வித்திடும்.

உலக நாடுகளைப் பொறுத்தவரை அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கூட இன்று வாசிப்பு மட்டம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. எமது நாட்டினைப் பொறுத்தவரையில் கல்விக் கொள்கையில் தொடர்பாடல் தேர்ச்சிகள் மூலமாக எண்ணறிவு, எழுத்தறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை எனும் நான்கு தூண்களையும் துணையாகக் கொண்டு செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தூன்றிய வாசிப்பு, செம்மையாக எழுதுதல், பயனுள்ள கருத்துப் பரிமாற்றம் என்பன முக்கியத்துவப்படுகின்றன. குறிப்பாக ஆரம்பக்கல்வியில் வாசிப்பின் முக்கியத்துவத்தினை உணர்த்துவது மூலமான மௌன வாசித்தல், உரத்து வாசித்தல் என்ற சொற்பதங்களினூடாக மொழி விருத்தி செய்யப்படுகிறது. ஆயினும் ஆரம்பப்பிரிவில் காட்டப்படும் அக்கறையும், அம்மாணவர்களிடமிருக்கும் வாசிப்புப் பழக்கமும் வகுப்புக்கள் அதிகரித்துச் செல்லும் போது வீழ்ச்சியடைந்து செல்வது ஒரு கவலைக்குரிய விடயமாகவே உள்ளது
.

பாடசாலைகளில் வாசிப்பினை மேம்படுத்துவதற்காக அரசினாலும், ஏனைய நிறுவனங்களினாலும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதும், உதவிகள் புரிவதும், நேரசூசியில் நூலகப் பாடம் இடம்பெறுவதும் குறிப்பிடக்கூடியன. ஆயினும் இன்று நூலக வாசிப்புப் பயன்பாடு எத்தனை பாடசாலைகளில் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன? மாணவர் கைகளில் தவழ வேண்டிய அரிய பனுவல்கள் பாடசாலை நூலகங்களிலும், வீடுகளிலும் மூலை முடுக்குகளில் எல்லாம் ஆதரவற்று கிடக்கின்றன. இன்று அநேகமானவர்களிடையே வாசிப்பதும், நூலகங்களைப் பயன்படுத்துவதும் குறைவாக இருப்பதற்கு போட்டி மிகு உலகில் இதற்கென நேரம் ஒதுக்குவதற்கு முடியாமல் உள்ளதாக சில கருத்துகளும் வெளிப்பட்டன. எனினும் வாசிப்பு என்பது இளையவர் முதல் முதியவர் வரை பழக்கப்படுத்தப்பட வேண்டிய ஒன்று என்பது குறிப்பிடப்படுகிறது. குறைந்த வாசிப்பால் பிள்ளைகளிடையே மொழி விருத்தி தகர்த்தப்படுகின்றன. இதனால் மாணவரிடையே சொற்பஞ்சம் ஏற்படும் நிலை உருவாகி வருகின்றது.

மாணவர்களிடையே மொழி விருத்தி தடைப்படுவதற்கும், தேர்ச்சியடையாமலும் இருப்பதற்கு தனியே அவர்களை மட்டும் குறை கூறிட முடியாது. இலக்கணப் பிழையற ஆசிரியர்களும், ஏனையோரும் பேசுவார்களாயின் அதனைப் பிள்ளைகளும் பின்பற்றுவர். இலக்கணப் பிழையறப் பேசிப்பழகுவர், நல்ல இலக்கியங்களை பிழையற வாசிப்பார். இங்கு ஆசிரியர், அறிஞர் யாவருக்கும் வாசிப்பு அவசியம் என உணர்த்தப்படுகின்றது. எனவே, பேச்சு மொழி விருத்தியிலிருந்து எழுத்து மொழி ஆக்கத்துக்கு மாணவரை அழைத்துச் செல்லும் பெரும் பொறுப்பு ஆசிரியர்களிடமும் இருப்பதால் அவர்கள் இங்கு பெரும்பங்கு வகிக்கின்றனர்.

ஆரம்ப வகுப்பு முதல் மாணவரிடம் வாசிப்புப்பழக்கம் ஊக்குவிக்கப்பட வேண்டும். இரண்டாம், மூன்றாம் பிரிவுகளில் அது ஒரு சிறந்த நூலகப் பயன்பாட்டிற்கு இட்டுச் செல்லும். இது தளர்வுறும் போது மொழிவிருத்தியும் தொய்வுநிலை அடையும். தாய்மொழியில் அறிவுமட்டம் அதிகரிக்கப்பட வேண்டுமெனில் வாசிப்பு மட்டம் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

'நல்ல நண்பனைத் தேர்ந்தெடுத்த பின் அடுத்து நாம் தேர்ந்தெடுக்க வேண்டியது நல்ல புத்தகங்களையே' என கால்.'.போர் எனும் அறிஞர் குறிப்பிடுகிறார். சிறந்த நூல்களே முழுமையான கல்வியை வழங்குகிறது. இதனைப் பிரதிபலிப்பதாகவே ஒக்டோபர் மாதம் வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று வீட்டுக்கொரு பத்திரிகை வாங்கும் பழக்கம் அருகிவிட்டது. பெரியவர்கள் வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு முன் தூங்குகின்றனர். இவ்வாறான சூழலில் வளர்ந்து வரும் சிறுவர்களும், இளைஞர்களும், காட்டூன்கள் , கேம் விளையாட்டுக்கள், இணையத் தொடர்பாடல், முகப்புத்தகம், குறுஞ்செய்தி எனத் தம் பொழுதை வீணே கழிக்கின்றனர். இணையத் தளத்தின் ஊடாக பத்திரிகை வாசிப்பது இன்று வழக்கமாயிருந்தாலும் வீடுகளில் கைகளில் தவழும் நாளிதழ்களில் வாசிப்பதன் ஊடாகக் கிடைக்கும் இரசனைகளை இதில் காண முடியாது என்றே கூறலாம். முழுமையான, வளமான வாசிப்பு இன்று நலிவடைந்தே காணப்படுகின்றது. தமது அறிவு விருத்திக்கும் வாழ்க்கைக்கும் உதவாத நூல்களும் இன்று உலவுகின்றன. இளைஞர்கள் இதனையே வாசிக்க விழைகின்றனர். இது ஒரு வேதனையான விடயமாகவே உள்ளது.

வாசிப்புக்குத் தரமான நூல்கள் தேவை. ஒரு காலத்தில் நூல்கள் அறிவுப் பொக்கிஷங்களாக இருந்தன, மிளிர்ந்தன. இதனால் 'கண்டது கற்கப் பண்டிதனாவான்' எனும் பழமொழி பொருத்தமுடையதாக இருந்தது. ஆனால் இன்று அவ்வாறான தெள்ளிய நூல்களை வாசிக்கும் தொகை அருகியே விட்டது எனலாம். சிறந்த நூல்களைக் கற்பதன் அவசியம் பண்டைக்காலம் தொட்டு உணர்த்தப்பட்டு வருகிறது. இதனை

'கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணி பல – தெள்ளி தின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே
பாலுண்குருகிற் தெளிந்து'

என நாலடிப் பாடல் குறிப்பிடுகிறது. நீருடன் கலந்த பாலைப் பிரித்து உண்ணும் அன்னம் போல நல் நூல்களைத் தெரிந்து வாசித்தலே சிறப்புடையது. இன்றைய யுகத்தில் நிமிடத்துக்கு நிமிடம் மில்லியன் கணக்கில் உருவாகும் உலக இணைய நூலுருவாக்கத்தில் அவற்றைப் படித்து முடிந்தவுடன் மனதை விட்டு நீங்கி விடுபனவாகவே நூல்கள் உள்ளன. இவை நுனிப்புல் மேயும் நிலையையே காட்டுகின்றன.

எனவே, ஒரு நோக்கத்துடன் நூல்களை வாசித்து ருசிக்க வேண்டும். சிலவற்றை விழுங்க வேண்டும், இன்னும் சில சமிக்கப்பட வேண்டும்' என உலகப் புகழ் தத்துவ மேதை பிரான்சிஸ் பேகன் கூறியது போல் சிறந்த நூல்களைத் தேடி வாசிப்போம். தாய்மொழியை வளமாக்குவோம். சொற்களை விருத்தி செய்வோம்.

திருமதி.சிவகௌரி மோகன் (ஆசிரியை)

தி/அல் மின்ஹாஜ் மு.ம.வி

மட்கோவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்டத்தில் மனிதவள முகாமைத்துவம்
## (Human Resources Management in School level)

மாறிவரும் உலகில் மாற்றம் ஒன்றே மாறாதது என்ற கருத்தின் படி ஆசிரியர் மாணவருக்கிடையில் இடம்பெறும் கற்றல் செயற்பாடுகள் யாவும் விரைவாக மாற்றம் பெறுகின்றன. ஆசிரியர் பணி மிகவும் சிக்கல் தன்மை கொண்டதாகவும் அமைகின்றது. வகுப்பறைக்குரிய ஆசிரியர்களை நாங்கள் எவ்வாறு உருவாக்குதல் என்பது பற்றிய மீள் சிந்தனை செய்ய வேண்டிய தேவை உள்ளது. அந்த வகையில் பாடசாலைகள் தீர்மானிக்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ள குறிக்கோள்களை அடைவதற்கு பல்வேறு வகையான முகாமைத்துவ தொழிற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செயல்படுத்துவதற்கு பொருத்தமான செயலமைப்பு அல்லது நிர்வாகக் கட்டமைப்பு தேவைப்படுகின்றது. அவ்வாறு அவற்றிற்கு அடிப்படையான பல்வேறு வளங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. வளங்களை குறிக்கோள்களை அடைவதற்கு ஏற்றதாக பயன்படுத்தும் போது வினைத்திறன், விளைதிறனை உறுதிப்படுத்துவதற்கான உபாயங்கள் நுட்பங்கள் நடவடிக்கைகள் முகாமைத்துவம் எனப்படும்.

ஒரு பாடசாலையின் பணியாற்றும் ஆசிரியர், ஏனைய ஆளணியினரைக் கொண்டு குறிக்கோள்களை அடைவதற்கு வினைத்திறனுடனும் விளைதிறனை அடையும் வகையில் நிர்வகிப்பது மற்றும் வழிப்படுத்துவது, கட்டுப்படுத்துவது மனித வள முகாமைத்துவம் எனப்படும். பாடசாலைகளில் ஆசிரியர்கள் மிக முக்கியமான மனிதவளமாக கருதப்படுகின்றனர். இவர்களை முகாமை செய்வதற்கு மனிதவள செயலமைப்பு தேவைப்படுகின்றது. அதாவது மனித வளத்தை நிர்வகிப்பதற்கான விதிமுறைகளையும் நியமங்களையும் உருவாக்குதல். அதற்கான வரவு செலவுத்திட்டத்தினை தயாரித்தல், பயன்படுத்தல், பரிசோதனை செய்வது, மீள் பரிசீலனை செய்வது மனித வள அறிக்கைகளை தயாரிப்பது மேலும் மனித வள விருத்தியை ஏற்படுத்துவது போன்ற அனைத்தையும் ஒழுங்காக செயற்பாடு செய்வது மனித வள செயலமைப்பு ஆகும். இந்த செயலமைப்பை பயன்படுத்தி அதற்கமைவாக மனித வள முகாமைத்துவம் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. இவ்வாறு முகாமைத்துவம் ஒழுங்குபடுத்தப்படும் போது மனித வள அபிவிருத்தி என்பது கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

பாடசாலைகளில் மனித வள செயலமைப்பை ஒழுங்குபடுத்தல், மனித வள முகாமைத்துவத்தை மேற்கொள்ளல், மனித வள அபிவிருத்தியை உறுதிப்படுத்தல் என்ற மூன்றும் ஒன்றிணைந்ததாக அமையும்.

பாடசாலை முகாமையாளர்கள் (அதிபர்கள்) மனித வள முகாமைத்துவத்தை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் மேற்கொள்வதற்கு பின்வரும் அடிப்படைகள் முக்கியமானவை

- எண்ணக்கரு உருவாக்கம் (Concept)
- அமுலாக்கமும் ஆற்றுப்படுத்தலும் (Implementation & Performance)
- மதிப்பீடு செய்தல் (Evaluation)
- சூழல் பற்றிய ஆய்வு செய்தல் (SWOT)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிப்படையில் பாடசாலை ஒன்றின் மனித வள முகாமைத்துவம் பின்வரும் அடிப்படைகளில் அதாவது செயல்முறை கொண்டு மேற்கொள்ளமுடியும்

❖ வேலை பற்றி விளங்கிக் கொள்ளல்

பாடசாலையில் மேற்கொள்ள வேண்டிய வேலைகளை விளங்கிக் கொள்வதும் அவற்றிற்கு தேவையான தகுதிகளை இனங்காண்பதும் முக்கியமானதொன்றாகும். அதிபர்கள், ஆசிரியர்கள் மட்டுமன்றி ஏனைய ஊழியர்களுக்கான வேலைகளை விளங்கிக் கொள்ளல் அவசியம்

❖ தெரிவு செய்தலும் பணியில் அமர்த்தலும்

தகுதியுடையவர்களை தெரிவு செய்வதற்கு பொருத்தமான விளம்பரங்களை செய்வதும் அவசியம். தேவையாயின் நிறுவனத்திற்குள்ளிருந்தும் வெளியேயிருந்தும் அவர்களைத் தெரிவு செய்யலாம். அவ்வாறு தெரிவு செய்யும் போது பணியாளர் / ஊழியரின் புரிந்துணர்வை விளங்கிக் கொள்ள வேண்டும் . அவர்கள் நிறுவனங்களில் சேர்ந்து பணியாற்றுபவராக கருத வேண்டும். அவர்களது தகைமை / திறன்களுக்கு ஏற்ப வேலையை வழங்க வேண்டும். கடமைகள், பொறுப்புக்கள், அதிகாரங்கள் என்பவற்றை வரையறை செய்ய வேண்டும். அவர்களிற்கேற்ப இடவசதியும், பிற வசதிகளையும் வழங்க வேண்டும். அவர்கள் மிகச் சிறந்த தரத்தில் பணியாற்றக் கூடியதாக வேலைகள் வழங்க வேண்டும்.

❖ பதவி உயர்வும் இடமாற்றமும்

பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியர்களில் தகைமை, ஈடுபாடு, முனைப்பு, ஊக்கம், என்பவற்றிற்கு ஏற்றதாக தெளிவான திட்டமொன்றை பதிவேடுகளில் பதிந்து அதன் அடிப்படையில் தர ஒழுங்கு ஒன்றை தீர்மானிக்க வேண்டும். அதன் அடிப்படையில் பதவி உயர்வுகளை தீர்மானிக்கலாம். இவ்வாறு தேவையான பயிற்சிகளை வழங்கி பதவி உயர்வினை ஊக்குவித்தல் வேண்டும். இவ்வாறே சில சமயங்களில் ஆசிரியர்கள் தொழில் திருப்தியின்றி இருப்பர். தனியாக பணியாற்றும் ஊக்கமின்றி இருப்பர். அந்நபரை தேவையான இடத்திற்கு இடமாற்றம் செய்தல் வேண்டும்.

❖ பயிற்சியும் அபிவிருத்தியும்

பாடசாலையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றதாக போதுமான பயிற்சி வழங்கி பதவி உயர்வுகள் வெகுமதிகள் வழங்கப்பட வேண்டும். தொழிலில் இருக்கும் காலம் முழுவதும் ஏதோ ஒரு வகைப் பயிற்சி வழங்குவது அவசியம். இதனால் பாடசாலைத் தரத்தினை உயர்த்தல் விரயங்களைக் குறைக்க முடியும். பிணக்குகளைத் தவிர்த்து சமநிலையைப் பேண முடியும்.

❖ ஆற்றுகை ஆய்வு ∴ தரங்கணிப்பு

ஆசிரியர்களின் வெவ்வேறு செயலாற்றங்களை அவதானித்து வகைப்படுத்தி புள்ளியிட்டு பதிவேடுகள் பேணப்பட வேண்டும். அதற்கான மேற்பார்வையாளர்கள் பயன்படுத்த வேண்டும். முடியுமாயின் சுய மதிப்பீட்டிற்கு இடமளிக்க வேண்டும். தேவையான பேட்டி காணல், சகபாடிகளின் மதிப்பீடு, அவதானிப்புப் படிவம் போன்றவற்றையும் வைத்துக் கொள்ளலாம். இவ்வாறு செய்வதன் மூலம் ஆற்றுகை பற்றிய மதிப்பீட்டைச் செய்ய முடியும். இதன்படி பதவி உயர்வை வழங்கலாம். விருப்பமான இடமாற்றத்தை வழங்கலாம். பலவீனமானவராக இருந்தால் மீண்டும் பயிற்சி, வழிகாட்டல், ஆலோசனை என்பன வழங்கப்பட வேண்டும்.

❖ ஊழியர் நல மேம்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் ஊக்கத்துடனும் விருப்பத்துடனும் பணியாற்றுவதற்கு அவர்களைப் பாதுகாப்பதும் ஊக்குவிப்பதும் அவசியம் இதற்கு இரண்டு வகையான ஊக்குவிப்பு முறைகளை கையாளலாம்.

1. சட்ட ரீதியான நலன்புரிச் சேவை வழங்கல்
   உதாரணம் :- ஓய்வறை, சீருடை, குடிநீர், மலசலக்கூடம், முதலுதவி, மருத்துவ வசதி (தேநீர் காலை), சிற்றுண்டிச் சாலை
2. சுயமுனைப்பிலான நலன்புரிச் சேவை
   உதாரணம் :- போக்குவரத்து, வீட்டு வசதி, முதுமைக் காப்புறுதி, உயர்கல்விக்கான மானியம், உடைக்கான மானியம் போன்றவற்றை வழங்கல்
3. சுய பிரச்சனைகளுக்கான ஆலோசனைகளும் தீர்வுகளும்


❖ மனிதவளத் திட்டமிடல்

பாடசாலை ஒன்று தமது ஆசிரியர்களுக்கு தேவையான தெளிவான திட்டமொன்றை தயாரித்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் அமர்த்துவது மேலதிக ஆளணியினர்களை அகற்றுவது உத்தம வினைத்திறனை உறுதிப்படுத்துவது போன்றவற்றை இத்திட்டமிடலில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறான திட்டங்கள் பற்றி ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும்.

மனித வள முகாமைத்துவத்தை பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்த வேண்டுமாயின் முழுமையான அதிகாரம் கொண்ட பாடசாலை அதிபர்கள் மட்டுமே நிறைவேற்ற முடியும். அந்த வகையில் தற்போது பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தின் ( P. S. I ) மூலம் மனித வள முகாமைத்துவம் மேற்கொள்ளும் போது பாடசாலை அதிபர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருப்பதால் பாடசாலை மட்டத்தில் மேற்கொள்வது சாத்தியமற்றதொன்றாக வேண்டியுள்ளது. மேலும் அரச பாடசாலைகளில் அரசினால் வழங்கப்படும் மட்டுப்படுத்தப்படும் அதிகாரங்கள் கல்வி அமைச்சினால் வெளியிடப்படும் சுற்று நிருபங்களுக்கு அமைய மேற்கொள்வதனால் முழுமையான வினைத்திறனுடன் மனித வள முகாமைத்துவத்தை மேற்கொள்ள முடிவதில்லை என்றே கூற வேண்டும்.

**திருமதி I.M. முரளிதரன்**
**அதிபர் (SLPS)**
**தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகாவித்தியாலயம்**
**திருகோணமலை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வடிவங்களில் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டுப்புறத் தொழிற் பாடல்கள்

கிழக்கிலங்கையில் வாழும் நாட்டுப்புற முஸ்லிம்கள் தங்கள் ஜீவாதாரத் தொழில்களாக விவசாயத்தையும் மீன்பிடித்தலையும், பாய், பெட்டி, உமல், இழைத்தலையுமே பிரதான தொழில்களாகச் செய்து வந்தனர். இயற்கையோடு ஒன்றித்து அதன் இனிய தாலாட்டுக்கு தொழில்களை மிகவும் கண்ணியமாக மதித்து வாழ்ந்தனர். நீரும், நிலமும், வயலும், வனமும், வானும், கடலும் இவற்றில் வாழும் ஜீவராசிகளும், பட்சிகளும் இவர்களுடைய இயற்கை வாழ்விற்கு சதா துணைபுரிந்து கொண்டிருந்தன. இத்தொழில்களை இவர்கள் தங்களுடைய வாழ்வியலுக்காகவே செய்தனர். அன்று இவர்கள் வர்த்தக நோக்கில், இத்தொழில்களைச் செய்யவில்லை. எளிமையும், இரசனையும், எழிலார்ந்த பண்பாட்டுக் கூறுகளும் உள்ள தொழில்களாகவே இவைகள் இருந்தன. இத்தொழில்கள் தங்களை வாழவைக்கும் இறைவனின் நன்கொடைகளாகவே கருதினர். இதனால் இத்தொழில்களை ஆரம்பிக்கு முன் இறையில்லங்களுக்குள் காலடி எடுத்து வைக்கும் பயபக்தியுடனேயே வயல்வெளிகளுக்கும், கடலுக்கும் செல்வார்கள். இவர்களுக்கு தங்கள் தொழில்கள் மேல் அளவு கடந்த மரியாதையும், பக்தியும் இருந்தமையே இதற்கு காரணமாகும்.

**விவசாயம்**

இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்களின் விவசாயச் செய்முறைகள் எல்லா இடங்களிலும் ஒத்த தன்மை உடையனதாகவே இருந்தன. உழவுதல், வரம்பு கட்டுதல், விதைத்தல் , வேலி அடைத்தல், வேளாண்மை வெட்டுதல், சூடடித்தல் ஆகிய முறைகள் தான் இங்கிருந்த எல்லா விவசாயிகளிடமும் இருந்தன.

விவசாயம் செய்யும் காணி அல்லது வயல் ‘வட்டை’ எனும் பெயராலேயே பொதுவாக அழைக்கப்பட்டது. இப்பகுதியில் சேனைக்காட்டு வட்டை, சோலை வட்டை, அலியாண்ட வட்டை, கரைவாகு வட்டை, வளைந்த வட்டை, காத்தாண்ட வட்டை, செட்டியா வட்டை, அலிக்கம்ப வட்டை எனப் பல வட்டைகள் இருந்தன. சுமார் 30 – 40 ஏக்கர்களைக் கொண்ட ஒருமித்த காணித்துண்டு ‘வெளி’ எனப்படும். சில நூற்றுக்கணக்கான ஏக்கர்களைக் கொண்ட பிரதேசம் ‘கண்டம்’ எனப்படும்.

இன்னும் இப்பகுதிகளில் சில வட்டைகள் தாவரங்கள், பறவைகள், மிருகங்கள், மனிதர்களின் பெயர்களைக் கொண்டும் அழைக்கப்பட்டன. உதாரணமாக பூலாக்காடு. அல்லிமூலை, குரக்கன் சேனை, வம்மிச் சோலை, இலுக்குச் சேனை, அரசையடி, காஞ்சிராக்குடா, பன்றித்தீவு, மாட்டுப்பளை, வக்காத்தீவு, கயற்றயடி, சங்கத்தாம் பள்ளம், மானாம்வட்டை ஆகிய வட்டைகளைக் கொள்ளலாம்.

மேலும் தென்கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம் மக்களால் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்து வந்த விவசாயப் பூமிகளை மேட்டுவெளி, பள்ளவெளி, புரன்வெளி, சாதாளவெளி, சம்புக்களப்பு, உகாமுனை, துவரங்குடாமுனை, கடுக்காமுனை, குடாக்கரை, வள்ளக்குண்டு, அவரிப்பிட்டி, குளக்கட்டுப்பள்ளம், சாட்டுவான் மூலை, ஏத்தாலை, முனை ஏத்தாலை, மண்தண்டை சங்கடிவத்து போன்ற அழகிய பெயர்களாலும் அழைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் தங்களின் விவசாயப்பூமிகளை இரு போகங்களாகச் செய்து வந்தார்கள். மழையை நம்பிச் செய்யும் பூமிகளை மானாவாரிப் போகமென்றும், ஆறு குளங்களிலிருந்து நீரைப் பெற்றுச் செய்யும் பூமிகளை மாரிப்போகமென்றும் அழைத்தார்கள்.

இவர்கள் தங்கள் வயல்களுக்கு, நீர் தேங்கி நிற்பதற்கு ஏற்றவாறு வரம்புகள் கட்டுவார்கள். வரம்புகளை எளிதாகக் கட்டுவதற்கு வயல்களை வரவைகளாகப் பிரித்துக் கொள்வார்கள். இவ்வரவைகளில் விசாலமான வரவைகளை 'போட்டா' வரவையென்றும், மிகச் சிறிய வரவைகளை 'கனட்டி' என்றும் நீளமான வரவைகளை 'நெடுங்கண்ணி' வரவையென்றும் அழைப்பார்கள். இவர்கள் செய்த வேளாண்மைகளை அறுவடை செய்து அவ்வேளாண்மைகளை சூடுகளாகக் குவித்து வைக்கும் வரவையை 'சூட்டடி வரவை' அல்லது 'களவெட்டி வரவை' என்று சொல்வார்கள். வேளாண்மை செய்வதற்கு முன் இந்நாட்டுப்புற முஸ்லிம்கள் தங்கள் வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வயல்களிலிருக்கும் புற்கள் எல்லாம் தண்ணீரால் அவிஞ்ச பின்னர், வயல்களை விதைப்புக்கு தயார்படுத்துவார்கள். இவர்கள் தங்கள் வயல்களை எருமை மாடுகளால் மிதித்துப் பண்படுத்துவார்கள். எருமை மாடுகளைப் பிணையல்களாகப் பிணைத்தெடுத்து வயல்களில் விட்டு மிதிப்பார்கள். இதனால் வயலிலுள்ள புற்களெல்லாம் அழிந்து வயல் விதைப்புக்கு ஏற்றவாறு ஆகிவிடும். நான்கு சோடி எருமை மாட்டு பிணையல்களை ஒரு 'தொடுவை' என்று கூறுவார்கள்.

இவர்கள் தங்கள் வயல்களுக்கு நொறுங்கன், சீனட்டி, வெள்ளைப் பெருநெல், இளங்கலையன், பச்சைப் பெருநெல், பறவைகலையன், முருங்கைக்காயன், குருவிநெல் ஆகிய இன நெல்களையே செய்தார்கள். இவைகளில் சில இனம் மூன்று மாதமும், நான்கு மாதமும் கொண்டதாக இருக்கும். இந்நெற்களில் நொறுங்கன், சீனட்டி ஆகிய நெல் இனங்கள் சோற்றுக்கு மிகச் சுவையான நெல்லினமென்று எல்லோரும் கூறுவார்கள். இவர்களினால் வயல்களில் பக்குவமாகச் செய்யப்பட்ட வேளாண்மைகள் வெட்டும் காலம் இப்பகுதிகளிலுள்ள வயல்களெல்லாம் கலியாண வீடுகள் போன்று தான் இருக்கும். வட்டைகளில் விளைந்துள்ள வேளாண்மைகளை வெட்டுவதற்கு முன்னர் இவர்கள் கூடி கந்தூரி, நிய்யத்து முதலான சமயச் சடங்குகளை சிறப்பாக செய்து விட்டே வேலைகளைத் தொடங்குவார்கள். வேளாண்மை வெட்டும் காலத்தை இவர்கள் வெட்டுக்குத்துக் காலம் என்று சொல்வார்கள்.

வேளாண்மைகள் வெட்டி களவெட்டி வரவைகளில் சூடு வைப்பார்கள். இச்சூடுகளை எருமை மாடுகளைக் கொண்டு, வயல்களில் வைக்கப்பட்ட சூடுகளை மீண்டும் பிரித்தெடுத்து, செருக்கி துப்பரவு செய்யப்பட்ட களவெட்டிகளில் போட்டு மிதிப்பார்கள். மிதிக்கப்பட்ட கதிர்களை வேலைக்காரன் கம்புகளினால், வேலை செய்யும் ஆட்கள் நெல்லையும் வைக்கோலையும் வெவ்வேறாகப் பிரித்தெடுப்பார்கள். சூடுபோடும் காலங்களில் வயல்களில் பெண்கள், 'புளிச்சப் பணியாரம் சுடுவார்கள். இப்பணியாரங்களை இரவையில் சூடு போடும் வேலையாட்கள் வாங்கி, அவைகளை எருமைப்பாலில் ஊற வைத்து சாப்பிடுவார்கள்.

வேலையாட்கள் வேளாண்மைச் செய்யும் காலங்களில் இங்குள்ள வட்டைகளில் பல நாட்கள் தங்கிருந்தே வேலைகளைச் செய்வார்கள். இதற்காக வயல்களில் புரை, அட்டாளைப் பறன், ஒத்தாப்பு, காவற்பறன் என்று வித்தியாசம், வித்தியாசமான பறன்களைக் கட்டி இருப்பார்கள். இதில் 'புரை' என்பது ஒரு சிறு குடில் போல் அறுக்கையாகக் கட்டப்பட்டு, இவர்கள் தங்கிப் படுப்பதற்கு ஏற்றவாறு தட்டிகள் கட்டி அத்தட்டிகளை களிமண்ணால் பூசி மெழுகி வைத்திருப்பார்கள். பொதுவாக வயல்வேலைகள் தொடங்கி விட்டால், இவர்கள் வயல் வேலைகள் முடியும் வரை இப்புரைகளிலே தங்கியிருப்பார்கள். இவர்கள் தங்கி இருக்கும் காலங்களில் இப்புரைகளை வளைத்து சூரைச்செடி, நாடஞ்செடி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொச்சி, வழுதிலை, பீக்கை, பயிற்றை, வெண்டி, சீரக்கொச்சிக்காய் போன்ற மரக்கறிகளை நாட்டி இருப்பார்கள்.

இன்று, இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் எம்மிடையே இல்லாவிட்டாலும், இவர்களின் விவசாயச் செய்கைகளின் எச்சங்கள், எங்கள் பகுதிகளில் இன்றும் அழியாது வாழ்ந்து கொண்டிருக்கின்றன. எண்ணற்ற கஷ்டங்களையும், நஷ்டங்களையும், துன்பங்களையும் , துயரங்களையும், விசாரங்களையும், வேதனைகளையும் தங்களின் வாழ்வியலூடே அனுபவித்து, அவைகளை மனோ வலிமையுடன் எதிர்த்துப் போராடி வெற்றி கண்டு, இயற்கையின் எழிலோடு ஒன்றித்து வாழ்ந்த இந்நாட்டுப்புற முஸ்லிம்களின் வாழ்வியல் புனிதமானது. சதா விடாமுயற்சியே துணையாகக் கொண்டு, திறந்த மேனியராய், 'சிறுவால்' என்னும் உடுப்போடு வயல்களிலும், சேனைகளிலும் வாழ்ந்து திரிந்த இம்மக்களின் பண்பு மகத்தானது. தகிக்கும் வெய்யிலையும், கொட்டும் மழையையும் வாழ்க்கையில் மன உறுதியோடு எதிர்த்துத் தாங்கி, இவ்விவசாயத் தொழிலை உயிரினும் மேலாக மதித்து வந்த இவர்கள் மானிட நேசமுள்ளவர்களாக இருந்தார்கள். இத்தொழிலில் ஒருவருக்கொருவர் உதவி செய்யும் பண்புள்ள மனிதர்களாக இருந்தார்கள்.

இப்பொழுது நாங்கள் இவர்களின் விவசாயம் சம்பந்தப்பட்ட நாட்டுப்புறப் பாடல்களைப் பார்ப்போம். இப்பாடல்கள் எல்லாம் அவர்களின் மண்வளச் சொற்களிலேயே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

1. நடவாக் கிடாமாடும்
நானுமிந்தப் பாடுபட்டால்
காயாப் புழுங்கலுமென்
கண்மணியும் என்ன பாடோ?

2. மூலயில வெள்ளாம
முறுக விளஞ்சிரிக்கி
அள்ளித் துவையா கண்டார் - ஒனக்கு
அளந்துதர நான் வாறன்

3. ஆலயடி வரவ
அதக்கடுத்த நீள்வரவ
கதிர்விளஞ்சி நெல்விளைவு — நான்
காவலுக்கு போய் வாறன்

4. அலிக்கம்ப வட்டயில
அஞ்சேக்கர் செஞ்சிரிக்கன்
தாலிக்கொடி வாங்க — என்ர
தங்கமயில் நாகூருக்கு

5. காவற் பறணில்
கண்ணுறங்கும் வேளயில
கண்ணான மச்சிவந்து — என்ர
காலூண்டக் கனாக் கண்டேன்

6. சீனட்டி நெல்லும்
செல்ல இறால் ஆணமும்
பொத்துவில் ஊரும் - இப்ப
பொருந்தினதோ வன்னிமைக்கு

7. போட்டா வரம்பால
புறா நடந்து போறது போல்
நாட்டாருக்கெல்லாம் - இப்ப
நடவரம்போ என் சடலம்

8. கதிரு கொடல
காயடக்கம் வெள்ளாம
பண்டி நெருக்கம் - என்ர
பாடெல்லாம் போகுதுகா

9. ஏத்தால வெள்ளாம
இளங்கொடல பூங்கதிரு
மாட்டால அழியுதென்டு — என்ர
மன்னவர்க்கு செல்லிருங்க

10. அத்தியடி வரவ
அதுக்கடுத்த நீள் வரவ
கதிர்பழுத்து நெல் வெளவு—நான்
காவலுக்கு போய்வாறன்

11. சூடுபோட்டு நெல்லளந்து
சொரிஞ்சி குமிச்சிரிக்கன்
ஆருக்காகத் தங்கம் - எல்லாம்
ஆசக்கிளி ஒனக்குத் தாங்கா

12. பொழுது கிளம்பி
பூமி இந்தச் சூடு சுட்டா
வெள்ளாம வெட்டுகிற—மச்சான்ட
மேனியெல்லாம் என்ன ஆகும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் தங்கள் வயல்களை எருமை மாடுகளைக் கொண்டு மிதித்து பண்படுத்தியே செய்தனர். இவர்கள் எருமை மாடுகளை 'கிடா மாடுகள்' என்றும் அழைத்தனர். வயல்களை மிதித்து பண்படுத்தும் போது விவசாயிகள் தங்களுடைய களைப்பினைப் போக்கிக் கொள்வதற்காக, பாடல்களைப் பாடிக் கொண்டே மாடுகளை மேய்த்துக் கொண்டிருப்பார்கள். இப்பாடல்கள் எல்லாம் கற்பனை வளம் மிக்கதாகவும், கருத்துச் செறிவுள்ளதாகவும் இருக்கும். இப்பாடல்களில் அதிகமாக இவர்களின் கஷ்டங்கள், சூழலின் தாக்கம், இறை நம்பிக்கை, சமயத்தின் உறுதி, என்பன இடம்பெற்றிருக்கும். அப்படியான ஒரு நாட்டுப்புறப் பாடலைப் பார்ப்போம்.

**வயல் மிதிக்கும் போதும் பாடும் பாடல்**

ஓஹோ!.. ஓ ..! ஓ..!
ஓடி... ஓடி.. நடந்திருங்க...
என்ர சீதவிகாள் - நீங்க
உசாராக நடந்திருங்க..
என்ர சீதவிகள்..
சார்பாத்து நடந்திருங்க..
நீங்க அசந்திரமா நடந்திரணும் சீதவிகாள்
கட்டிகள மிரிச்சிரிங்க சீதவிகாள் - நீங்க
என்ர கக்கிசத்த போக்கிருங்க சீதவிகாள்
புல்லுகள மிரிச்சிரிங்க சீதவிகாள்
நீங்க, பொறுமையோட நடந்திருங்க சீதவிகாள்
ஓஹோ!.. ஓ ..! ஓ..!
வெள்ளாம விளஞ்சிரணும் சீதவிகாள்-நீங்க
வெசயா நடந்திருங்க சீதவிகாள்
மய்யதீனாண்டவர்ர கந்திரிய நாங்க,
மறக்காமக் குடுத்திருவம் சீதவிகாள்
போட்ட மொள ஊட்டுக்குள்ள சீதவிகாள்
போடி வந்து ஏசுவண்டா சீதவிகாள்
என்ர சீதவிகாள்... நீங்க..
சாரோடு போயிரணும் சீதவிகாள்...
ஓஹோ!.. ஓ ..! ஓ..!
அல்லா தொணயால சீதவிகாள்
நீங்க அவசரமா நடந்திரணும் சீதவிகாள்
அயாத்துநபி தொணயால சீதவிகாள்
பணியாரமும் பாலுக்குள்ள சீதவிகாள்
நாங்க பசியாற வேணுமடா சீதவிகாள்
ஓஹோ!.. ஓ ..! ஓ..!
பொன்னாங்கண்ணி பிக்க வேணும் சீதவிகாள்
பொழுதும் ஏறிக் போகுதிரா சீதவிகாள்
போட்டி போட்டு நடந்திருங்க சீதவிகாள்-என்ர
பொடியனும் சவுத்திற்ராண்டா சீதவிகாள்
மீனும் வடிக்கணுன்ரா சீதவிகாள்-எங்களுக்கு
மிஞ்சினது கண்ணீர்தான் சீதவிகாள்
ஏழ மனம் சிரிச்சிரணும் சீதவிகாள் - நீங்க
எட்டிப்போட்டு நடங்கடா சீதவிகாள்
ஓஹோ!.. ஓ ..! ஓ..!

| | | |
|---|---|---|
| பாடல் உதவி | - | மர்ஹூம் சிக்கந்தர் சின்னத்தம்பி (நூலாசிரியரின் தந்தை) |
| கல்வி | - | படிக்கவில்லை |
| தொழில் | - | விவசாயம் |
| வயது | - | இறக்கும் போது 85 |
| ஊர் | - | நிந்தவூர் |

இதைப்போன்று இந்நாட்டுப்புற முஸ்லிம்கள் சூடு போடும் போதும், பாடல்கள் பாடுவார்கள். அக்காலத்தில் வயல்களில் குவித்து வைக்கப்படும் சூடுகளை இரவில் தான் அடித்து நெல்லையும் வைக்கோலையும் பிரித்து எடுப்பார்கள். ஆறு. ஏழு பேர் சேர்ந்து சூடடிப்பார்கள். இவர்கள் எருமை மாடுகளைக் கொண்டே சூடடிப்பார்கள். குவித்து வைக்கப்பட்டிருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூட்டைப் பிரித்து, ஒழுங்குபடுத்தப்பட்ட களவெட்டியில் போடுவார்கள். இதன் பின்னர் நாலு புணையல் மாடுகளை அதன் மேல் ஏற்றி வளைத்து வளைத்து சாய்ப்பார்கள். இப்படி மாடுகளை சாய்ப்பவரே பாடல்கள் பாடுவார். இப்படிப்பட்ட பாடலொன்றைப் பார்ப்போம்

## சூடு மிதிக்கும் போது பாடும் பாடல்

ஓ!... ஓ!.. ஓஹோ...!
கடகத்திக்க மூணுடா..
கைப்பெட்டிக்க ரெண்டிடா..
ஆகப் போக அஞ்சிரா..
அவசரமா.. நடங்கடா..
ஓ!... ஓ!.. ஓஹோ...!
வாரிக்காலா..
வளஞ்ச கொம்பா
வைக்கலப் பெருக்கி...
வளஞ்சி நடடா
ஓ!... ஓ!.. ஓஹோ...!
களவெட்டியச் சுத்தி,
காவலிருக்கு,
பேய்கள் வராம
அவுலியா இரிக்காரு
அரக்கச் சுத்தி வளஞ்சி வாங்கடா
ஓ!... ஓ!.. ஓஹோ...!
எறச்சிக் கறியோட சேர்த்துப் பொட்டிய
எலவான்ட செய்யது எடுத்திக்காராண்டா..
சோறும் திங்கணும், சோம்பலப் பாராம
சுறுக்கா நடங்கடா, களவெட்டி கனத்திட
ஓ!... ஓ!.. ஓஹோ...!

சிக்கந்தர் அவுலியாவே, எங்கிட
சேகுசல்லி மவுலானாவே
அயாத்து நபி அப்பாவே
களவெட்டி நெறம்ப – கனக்கப்
பொலியப் பெருக்கித்தாங்க..
ஓ!... ஓ!.. ஓஹோ...!
அல்லாட பேரால நாங்க
அடுத்தமுற கந்துரிய
நல்லாக் குடுப்பம், பொலிய
நயமாகத் தந்திருங்க
எட்டி நடங்கடா உசாராக..
ஏழடப் பொளப்பெல்லாம் பொலிஞ்சிர
வயக்காரன் வாறாண்டா களத்துக்குள்ள
வளஞ்சி நடங்கடா வாட்டியோட..
ஓ!... ஓ!.. ஓஹோ...!
போடி படுக்காண்டா பறன்மேல
புசுக்கெண்டு வருவாண்டா களத்துக்குள்ள
ஓடி நடங்கடா.. தங்கங்களா
ஒண்டாக எல்லாரும் வேகமாக
ஓ!... ஓ!.. ஓஹோ...!

| | | |
|---|---|---|
| பாடல் உதவி | - | மர்ஹூம் முகையதீன் பாவா (BMW_) |
| கல்வி | - | முற்றாகப் படிக்கவில்லை |
| தொழில் | - | விவசாயம் |
| வயது | - | 80 |
| ஊர் | - | நிந்தவூர் 01 |

**மீன் பிடித்தல்**

இப்பகுதிகளில் வாழ்ந்த அக்கால நாட்டுப்புற முஸ்லிம்கள் தங்கள் ஜீவனோபாயத்திற்காக ஆறு, குளம், கடலில் மீன்பிடித்தொழிலைச் செய்து வந்தனர். இவர்கள் தங்கள் வயல் சேனைகளுக்குப் பக்கத்திலுள்ள ஆறு, குளம், கடலில் மீன்பிடித்தொழிலைச் செய்து வந்தனர். இவர்கள் தங்கள் வயல், சேனைகளுக்குப் பக்கத்திலுள்ள ஆறு குளங்களில் போய் மீன்களைப் பிடித்து வந்து தங்களுடைய தேவையளவிற்கு எடுத்துக் கொண்டு, மிஞ்சியதை தங்கள் உறவினர்களுக்கும் அயலவர்களுக்கும் அன்பளிப்பாகக் கொடுத்து வந்தனர். இவர்கள் வயல்களில் தங்கியிருந்து வேலை செய்யும் போது, இரவில் சூடு போடும் காலங்களிலும் குளங்களிலும் ஆறுகளிலும் தேவையான மீன்களைப் பிடித்து கறி சமைப்பார்கள். இம்மீன்கறிகள் ருசியாகவும் சுவையாகவும் இருப்பதற்காக, ஆற்றோரங்களில் வளர்ந்து நிற்கும் பிப்பிலியங்காய்களை அல்லது புளியங்காய்களைப் பறித்து வந்து போட்டு கறிகளைச் சமைப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மீன்பிடியும் வலைகளும் (ஆறு,குளம்)**

இவர்கள் ஆறு, குளங்களில் மீன்களைப் பிடிப்பதற்கு கீழ்வரும் மீன்பிடி வலைகளையும், பொறிகளையும் பாவித்து வந்தார்கள். வயல்களில் விவசாய வேலைகள் தொடங்கும் காலங்களில் இவர்கள் தங்கியிருக்கும், புரை, பறன், காலைகளில் இவைகளைத் தங்கள் கையோடு கொண்டு போய் வைத்திருப்பார்கள்

1. அத்தாங்கு
2. கைவலை
3. இடியத்தாங்கு
4. கரப்புக்கூடை
5. பொறிக்கூடை

**1. அத்தாங்கு**

இது நாலடி அல்லது ஐந்தடி நீளமான கம்பையெடுத்து, அதை நன்றாகச் சீவி வளைத்தெடுத்து, கூம்பு வடிவில் நூலால் பின்னியெடுத்த வலையை இதில் கட்டியெடுப்பார்கள். இந்த கூம்பு சுமார் ஐந்தடி உட்குவிந்து நீளமாக இருக்கும். இதனால் ஆறு குளங்களில் வாழும் மீன்களை வடித்து எடுப்பார்கள். முக்கியமாக விரால், குறட்டை, பனையான், கெழுத்தி, சுங்கான், ஆரல், செப்பலி, செத்தல், பொட்டியான், விலாங்கு, வாளை, கொக்கிசான், மணலை, கணையான், உழுவை, இறால் போன்ற மீனினங்கள் இப்பகுதிகளிலிருந்த ஆறு குளங்களில் நிறைவாக வாழ்ந்தன.

**2. கைவலை**

இது சுமார் பத்துப் பதினைந்தடி அகலமான நீர்ப்பரப்பில் எறிந்து மீன்பிடிக்கக் கூடியதாக அமைத்திருப்பார்கள். வலையை கூம்பு வடிவில் நூலினால் பின்னி, அதன் அடியில் பாரத்திற்காக ஈயத்தால் செய்த கட்டிகளைக் கட்டியிருப்பார்கள். மீன்பிடிக்க, இதை அஞ்சாறு பட்டுகளாக முன்னங்கையில் கொசுகியெடுத்து மீன்கள் வரும் போது அவைகள் மேல் தூக்கியெறிவார்கள். எறியப்பட்ட வலை மீன்களை மறித்து வைத்துக் கொண்டிருக்கும். பின்னால் எறிந்த வலையை மெதுவாக கரைக்கு இழுத்தெடுத்து மீன்களைப் பிடித்து, கூடையில் போடுவார்கள்.

**3. இடியத்தாங்கு**

இது அத்தாங்கைப் பார்க்கிலும் ஐந்தாறு மடங்கு பெரிதாக இருக்கும். இதுவும் நூலினால் பின்னப்பட்டு, இதைப் பத்துப் பதினைந்தடி, நீளமான கம்பை வளைத்தெடுத்து, அதில் இறுக்கமாகச் சேர்த்து கட்டியிருப்பார்கள். இதுவும் ஓரளவு கூம்பு வடிவாகவே பின்னப்பட்டிருக்கும். இதை இவர்கள் ஆறு, குளங்களில் கொண்டு போய் ஒரு இடத்தில் கெட்டியாகப் புதைத்து விட்டு, புதைத்த பகுதியிலுள்ள நீரில் கம்பினால் அடித்தடித்து மீன்களை புதைத்து வைத்த அத்தாங்கடிக்கு கொண்டு போய்ச் சேர்ப்பார்கள். அதிகமாக விரால் மீன்களை அந்த அத்தாங்கிலேயே பிடிப்பார்கள்.

**4. கரப்புக்கூடை / பொறிக்கூடை**

இவை இரண்டும் மூங்கில் தடிகளினால் அல்லது சிறு கம்புகளினால் உருளையாக கூம்பு வடிவில் அமைக்கப்பட்டிருக்கும். இவைகளைக் கொண்டு ஆறு குளங்களில் குத்திவிட்டு பின்னர் குத்திய இடத்திற்குள் கரப்புக்கூடை உள்ள இடங்களில் கைகளை உள்ளே விட்டு கைக்கரப்புப் பார்த்து மீன்களைப் பிடிப்பார்கள். பொறிக்கூடைகளை எப்பொழுதும் நீர் ஓடி வரும் திசையில் ஓடைகளை மறித்து சாய்த்துக் குத்தியிருப்பார்கள். ஓடையில் ஓடி வரும் மீன்களை இதற்குள் போனால் வெளிவர முடியாமல் பொறி வைத்திருப்பார்கள். பொறிக்கூடைகளை இரவில் வைத்துவிட்டுப் போனால், காலையிலேயே பொறிக்கூடையில் பட்ட மீன்களை வந்து எடுப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடலில் மீன்பிடித்தல்**

இப்பகுதிகளில் உள்ள கடலோரக் கிராமங்களில் வாழ்ந்து வந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் கடலில் தோணிகளில் போய் மீன்பிடித்து அம்மீன்களை பணத்திற்கு விற்று வாழ்க்கை நடாத்தினார்கள். இத்தொழிலிலும் இவர்களின் சீவியத்திற்கு முக்கிய தொழில்களில் ஒன்றாக இருந்தது. கடற்கரையிலிருந்து சுமார் 1000 யார் தூரத்திற்குள் தோணிகளில் சென்று மீன் பிடித்தார்கள். இவர்கள் இப்படிச் சென்று மீன் பிடித்தலை கரைவலை மீன் பிடித்தல் என்பார்கள். இவர்கள் கடலில் மீன்களை வளைந்து பிடிப்பதற்கு கயிற்றினாலும், முறுக்கு நூலினாலும் வலைகள் பின்னி வைத்திருப்பார்கள். வலைகளைத் தோணியில் ஏற்றிக் கொண்டு போய் கடலில் வரும் மீன்களை வளைந்து விட்டு, வலைக்கால்களை கரையில் நிற்கும் தொழிலாளர்களின் கையில் கொண்டு வந்து கொடுத்து வலையை இழுக்கச் சொல்லுவார்கள். கடலில் நிற்கும் தோணியிலிருக்கும் தண்டையலின் கையில் மீன் மடியின் சுருக்குக் கயிறு இருக்கும். வளைந்த மீன்கள் எல்லாம் மடிக்குள் வந்து சேர்ந்தவுடன் தண்டையல்மடியின் வாயைச் சுருக்கி விட்டு, தோணியிலிருந்து மடியைக் கழற்றி விடுவார்.

கரைவலையின் நீளத்தை கம்பான் என்ற சொல்லால் அழைப்பார்கள். ஒரு கம்பான் நூறு பாகங்களாகும். இதன்படி தோணியின் இரு வலைக்கால்களும் சுமார் ஆயிரம் பாகங்களாகும். ஒரு தோணியில் மீன்பிடிப்பதற்கு வசதியாக சுமார் நாற்பது அல்லது ஐம்பது தொழிலாளர்கள் இருப்பார்கள். ஒரு தோணியில் கூட்டாகத் தொழில் செய்பவர்களை 'தத்தி' என்று கூறுவார்கள். இவர்கள் கரைவலைத் தோணி மூலம் கடலில் கீரி, பாரை, சூரை, கிளவள்ளு, பாரைக்குட்டி, கும்புளா, ஓலைவாயன், வெளவால் பாரை, அறுக்குளா, தோரா, சீலா, கூடை, ஊலா, கணவா, காரல், நெத்தலி, சாளை போன்ற மீன்களைப் பிடிப்பார்கள்.

**அம்பாப் பாடல்கள்**

ஏலேலம்... ஏலேலம்..
ஓவேலம்.. ஓவேலம்..
ஏலடி .. ஏலேம்..
ஏலச் சிலாமாய் ..
கள்ளச் சிலாமாய் ..
கலம்பக் கயிறு
முப்பிலிக் கயிறு
தேடாக் கயிறு
தேடி இழுடா
ஏலேலம்.. ஏலேலம்..
ஓவேலம்.. ஓவேலம்..
சாஞ்சி .. இழுடா...
சவியா ... இழுடா..
தாள மரத்தப் பாத்து இழுடா..
கிண்ண மரத்தக் கேட்டு இழுடா
சின்னப் பொடியா..
சேந்து இழுடா..
மண்ண ஒதச்சி
மாஞ்சி இழுடா...
ஏலேலம்... ஏலேலம்..
ஓவேலம்.. ஓவேலம்..
ஏலடி .. ஏலம்
ஏலச் சிலாமாய்..
ஓவேலம்.. ஓவேலம்..
ஆழிக் கடலில்

கள்ளச் சிலாமாய்...
கயித்த இழுடா
அலியின் சவிய
அல்லாஹ் தருவான்..
ஓடி இழுடா..
உசாரப் புடிடா
ஏலேலம்.. ஏலேலம்..
ஓவேலம் .. ஓவேலம்..
கடலப்பார்ரா..
கறுப்படிக்கிது
புள்ளப் பார்ரா..
அள்ளிப்போகிது..
அல்லாஹ் .. தருவான்
அணச்சி இழுடா
ஏலேலம்... ஏலேலம்..
ஓவேலம்.. ஓவேலம்..
ஏலடி ஏலம்..
ஏலச் சிலாமாய்..
மருக் கொழுந்து..
மல்லிக முல்ல
நேத்து வடிச்ச
ஆத்துக் கெழுத்தி
வளஞ்சி இழுடா
வடிவா இழுடா
ஏலேலம்.. ஏலேலம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வை நம்பி
சள்ளையும் தள்ளி..
சவியா இழுடா
ஏலேலம்.. ஏலேலம்..
ஓவேலம்.. ஓவேலம்..
ஏலடி .. ஏலம்..
ஏலச் சிலாமாய்..

ஓவேலம்.. ஓவேலம்...
ஏலடி ஏலம்
ஏலச் சிலாமாய்
கள்ளச் சிலாமாய்..
கயித்த இழுடா
ஏலேலம்.. ஏலேலம்..
ஓவேலம் .. ஓவேலம்

பாடல் உதவி - எம்.மீராலெவ்வை ( கரைவரைத் தண்டயல் )
கல்வி - 3ம் வகுப்பு
வயது - 58
ஊர் - நிந்தவூர் - 12

ஏலேலோ ... வலை..
ஓவேலோ.. வலை
ஐயோடா வலை
ஆடோடா வலை
நாகூர் சிறப்பையும்
நல்ல ஒலியயிம்..
பள்ளி வடிவையும் ..
பாருங்க.. மக்களே..!
தூணுக்கு தூணங்கே..
தொங்கும் விளக்கையும்...
தங்கக் கொடத்தையும்...
வெள்ளிக் கொடத்தையும் ..
ஐயோட .. வலை ..
ஆடோடா .. வலை ..
எங்கிட ஊரில் பஞ்சமாம்
ஏழச் சனங்களும் மிச்சமாம்
சந்திக்கு சந்தியில் கூட்டமாம்
சாகிற கிழவியும் ஓட்டமாம்
ஏலேலோ .. வலை ..
ஓவேலோ.. வலை
ஐயோடா .. வலை ..
ஆடோடா.. வலை..
கொட்டிக் கெழக்கிங்கு போறேங்கா..
கோவித்துக் கொண்டாரு பண்டாரம்
அவிச்சி உரிச்சி தட்டி போட்டதும்..
அதச் சிரிச்சிக்கி திண்டாரம் பண்டாரம்
ஏலோலோ.. வலை...
ஓவேலோ.. வலை..
ஐயோடா .. வலை ..
ஆடாடோட .. வலை

பள்ளிக்குள்ள நல்லாப்
பாருங்க... மக்களே
ஏலேலோ.. வலை
ஓவேலோ .. வலை
ஐயோடா .. வலை ..
ஆடோடா .. வலை ..
ஓடாத .. ஓடாத கோழிக்குஞ்சே,
ஓட்டங்கள் காட்டாத கோழிக்குஞ்சே,
எட்டுப் பணம் வித்த காலத்தில
கட்டி வளத்தேனே கோழிக்குஞ்சே
ஏலேலோ .. வலை
ஓவலோ .. வலை ...
சாலுவ காட்றான் தண்டயல் ..
சள்ளயிம் தள்ளிற்ரான் தண்டயல்..
அள்ளி இழுங்கடா தம்பிகாள்..
அல்லாவும் தந்திற்ரான் ஏழைக்கு..
புள்ளுமடிக்கிது பாருடா..
பொத்தி இழுங்கடா சள்ளய
வெள்ளி தெரியிது பாருடா..
வெற்றி நமக்கினு அள்ளுடா
சூடல் கொதிக்கிது பாருடா..
சுறுக்கா இழுங்கடா சள்ளய..
மடிதாங்கி கொண்டாடா மம்மதோ..
மலபோல வருகிது மீன்மடி
ஏலேலோ வலை..
ஓவேலோ.. வலை..
ஆடாடோட .. வலை

பாடல் உதவி - மீ.இஸ்மாலெவ்வை (கரைத்தண்டயல்)
கல்வி - வகுப்பு 04
ஊர் - நிந்தவூர் - 01
வயது - 72



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாய், உமல், தட்டு இழைத்தல்**

இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம் ஆண்கள் தங்களின் வாழ்வாதாரங்களுக்கு வயல்களிலும், சேனைகளிலும், கடலிலும் உழைத்து வந்த போது, பெண்கள் வீடுகளிலிருந்து பாய், உமல், தட்டு இழைத்து இவர்களின் பொருளாதாரத்திற்கு உறுதுணை செய்தார்கள். களப்பு, அல்லை, ஆற்றுப்படுக்கைகளை அண்டிய சதுப்பு நிலங்களில், அக்காலத்தில் பலவிதப்பட்ட பன்கள் செழிப்பாக வளர்ந்தன. இப்பன்கள் புல் இனங்களைச் சேர்ந்ததாகும். இப் பன்கள் பெரியதாக நீண்டு வளர்ந்து வரும் தன்மை கொண்டவையினால் இவைகள் பாய், தட்டு, உமல்கள் இழைப்பதற்கு வசதியாக இருந்தன. இம்மக்கள் இப்பன்கள் வளர்ந்து செழிப்பாக நிற்கும் இடங்களுக்கு சென்று இப்பன்களை இவர்கள் பிடிங்கி வந்து, அவைகளை வெய்யிலில் காயவைத்து எடுப்பார்கள். பன்கள் வெய்யிலில் நன்றாகக் காய்ந்த பின்னர், அவைகளைத் தரம் பிரித்து கழிவுகளை அகற்றி விட்டு, நல்லவைகளை தங்கள் தொழிலுக்கு எடுப்பார்கள். இப்பன்கள் ஐந்து வகைப்படும். அவைகள் கற்பன், வேடப்பன், கிராம்பன், புற்பன், சாப்பைப் பன் என்று கூறுவார்கள். இப்பன்களை இவர்கள் 'பருத்திமனை' என்னும் பன்களைப் பதப்படுத்தி எடுக்கும் பொறியின் மூலமாக சீர்படுத்தி, வாட்டியெடுத்து பின்னர் தங்கள் தேவைக்கேற்றவாறு கிழித்தெடுத்து பாய், தட்டு, உமல் போன்றவைகளை இழைப்பார்கள். பாய்களுக்கு பல பெயர்கள் உண்டு.

**பாய்களின் பெயர்கள்**

1. அத்திராசி
2. வட்ட அத்திராசி
3. நெரிஞ்சிப் பூ அத்திராசி
4. விடிவெள்ளி அத்திராசி
5. மயிலிறகு அத்திராசி
6. தாரா அடிக்கூட்டம்
7. கருக்குருவிக் கூட்டம்
8. கண்மலர்க் கூட்டம்
9. ஒத்தக் கொடிப் பாய் கூட்டம்
10. வால்வெள்ளிக் கூட்டம்
11. வீணைப் பொட்டிப்பாய்
12. சீப்புச் கண்டாங்கி
13. மஸ்குட்டிப் புழுப்பாய்
14. பொருதுப்புணி
15. தப்புப் புணி
16. தாராக்கால்
17. தாமரைக்கொடி
18. சித்துப்புணி
19. மைக்கண்
20. முத்துச்சரியன்
21. கண்டாங்கி

இப்பாய்களை இழைத்து பணத்திற்கு விற்று, தங்கள் பொருளாதாரத்தை இவர்கள் சீர்படுத்திக் கொண்டார்கள். இப்பொழுது பாயிழைக்கும் தொழிலோடு சம்பந்தப்பட்ட இம்மக்களின் நாட்டார் பாடல்களைப் பார்ப்போம்.

1. முடக்குப் புணியெடுத்து
மோடியான பாயிழைச்சி
படுக்கைக்கு போட்டிரிக்கன் - என்ர
பத்தரிப்பு ராசாவுக்கு

2. முத்துச் சரியன்
முழுதுமது கண்டாங்கி
அத்தனையும் பூத்தான் - இப்ப
அவர் படுக்கும் பாயெல்லாம்

2. அல்லயில பன்புடுங்கி
ஆவரணப் பாயிழைச்சி
படுக்கைக்கு போட்டிரிக்கன் - என்ர
பச்ச இஞ்சி வாயாருக்கு

4. பன்னுக்குப் போன
பச்சக்கிளி வட்டயில
மேயிதுகா ராசா – அத
மெல்லப் போய்க் கூட்டிக்காகா

இப்பகுதிகளில் வாழ்ந்த நாட்டுப்புற முஸ்லிம்கள் பல தரப்பட்ட உடைகளையும் அணிகலன்களையும் உபயோகித்து வந்தார்கள். வறுமைக்கோட்டில் வாழ்ந்த இம்மக்கள் அதிகமாக நூலாடைகளையும் வெள்ளியினால் செய்யப்பட்ட நகைகளையுமே விரும்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்தார்கள். நாகரீக வாழ்க்கையின் நிழல் கூடத் தெரியாத இவர்கள் இயற்கையின் சூழலுக்கேற்றவாறு தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள். எழிலான கிராமங்களில் வாழ்ந்த இம்மக்கள் இயற்கையின் இனிய தாலாட்டில் கண்ணயர்ந்தார்கள். இவர்களிடம் ஒழுக்கமும், உயர்ந்த பண்புகளும் இறைபக்தியுமே நிறைவாக இருந்தன. இவர்களைப் படாடோபங்களும் பகட்டுகளும் என்றும் பாதிக்கவில்லை. இப்பகுதிக் கிராமப்புறங்களில் வாழ்ந்த ஆண்களும், பெண்களும் உடம்பை ஒழுங்காக மறைத்து ஒழுக்கப் பண்போடு வாழ்ந்தார்கள். இதற்கு ஏற்றவாறு இவர்கள் உடைகளை அணிந்தார்கள்.

## முடிவுரை

தமிழன்றி வேறெந்த மொழியும் பேச முடியாதவர்களாகவுள்ள மட்டக்களப்பு முஸ்லிம்களை, 'முஸ்லிம் தமிழர்கள்' என்று ஏன் அழைக்கக்கூடாது என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது. முஸ்லிம்கள் தமிழர்கள் தான் என்று கூறுகின்றவர்கள் உண்மையில் முஸ்லிம்களின் பூர்வீகம், வரலாறு பற்றியும், முஸ்லிம்கள் இப்பிரதேச வாழ்க்கையோடு ஒன்றிணைய வந்த காலச் சூழலையும் அதற்கான பின்னணியையும் விளங்காதவர்களே. தமிழர்களின் பசுமையான நிலங்களை, கபடமாக கவர்ந்து தம்மை அவற்றில் இருக்கச் செய்து கொண்டவர்களே இப்பிராந்தியத்தில் வாழும் பெருந்தொகை முஸ்லிம்கள் என்ற பழிச்சொல் இவர்களின் மீது சுமத்தப்பட்டு வருகிறது. இப்பிரதேச வரலாற்றில், முஸ்லிம் மக்களின் பூர்வீகம் தெளிவாகக் கூறப்படாதது போனதே இதற்குக் காரணமாகும். இப்பிராந்தியம் பற்றி எழுதப்பட்ட நூல்களும் முஸ்லிம்கள் பற்றிய தெளிவையும் அவை கொடுக்கவில்லை. உதாரணத்திற்கு 1921ல் முதலியார் S.O.கனகரத்தினம் அவர்கள் 'மட்டக்களப்பு மாவட்டம்' பற்றிய தகவல்களைத் திரட்ட வந்த போது முஸ்லிம்கள் இம்மாவட்டத்தில் ஏறத்தாழ நாற்பது (40%) சத விகிதத்தினராக இருந்தனர். ஆனால் அவர்கள் பூர்வீகம், வாழ்க்கை முறை பற்றி விளங்கிக் கொள்ளக்கூடியளவு குறிப்புக்கள் அங்கில்லாது போனமையே பெருங்குறைபாடாகும். முஸ்லிம் மக்கள் பேசும் மொழி, பேசும் முறை என்பனவும் மரைக்கார் முறை கொண்ட பள்ளிவாசல் நிர்வாகமுறை என்பன தமிழர்களின் வரலாற்றிலிருந்து பிரிக்கமுடியாதபடி இரண்டறக் கலந்திருக்கின்றன.

ஆயினும் இப்பிரதேச முஸ்லிம்களின் வரலாறு தனித்துவமான பல அம்சங்களை கொண்டிருக்கின்றது என்பதில் ஐயமில்லை. இதனால் இப்பிரதேச முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியங்களை முடிந்தளவு கோர்வை பண்ணுவது இன்று அவசியமாகின்றது. இக்கோர்வையில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதற்கு இடமுண்டு. ஏனெனில் இப்பிரதேச முஸ்லிம்கள் பற்றிய வரலாற்றுச் சம்பவங்கள் அனுமானமாகவே எழுதப்பட வேண்டியனவாக இருக்கின்றன.

எனவே கிழக்கிலங்கை நாட்டுப்புற முஸ்லிம்களின் பூர்வீகம் பற்றிய கருத்துக்களையும், முறையான சான்றுகளையும் கள ஆய்வுகளின் மூலம் தேடியெடுத்து, இம்மக்களின் வரலாற்றுப் பாரம்பரியங்களை ஆவணப்படுத்திட அறிஞர்களும், ஆய்வாளர்களும் முயல வேண்டும்.

எஸ்.முத்துமீரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ඉගෙනුම්-ඉගැන්වීම් සාර්ථක කර ගැනීමට ඉගෙනුම් ආධාරක

ඉගෙනුම්-ඉගැන්වීම් ක්‍රියාවලිය වඩාත් සාර්ථක කර ගැනීම සඳහා සහය කර ගත හැකි සෑම භෞතික මානව සාධකයක්ම ඉගෙනුම් ආධාරකයක් වශයෙන් සැලකිය හැකිය. ආධාරක භාවිතයේ මූලික අරමුණවිය යුත්තේ සිසුන්ගේ ඉගෙනුම පහසු කරලීමයි.වර්තමාන ගුරුවරයා ඉගෙනුම් ආධාරක භාවිතයට හුරු වී ඇත්තේ ඉතාමත් අල්ප වශයෙනි.එයට හේතුව ඉගෙනුම් ආධාරක සපයා ගැනීමට ඔහු දක්වන උනන්දුව අ-_ වීමයි මේ නිසා දරුවාට යමක් නිවැරදි ලෙස අවබෝධ කර දීමට නොහැකි වී තිබේ.අත්දැකීම් ද ලබා දීමට නොහැකි වී තිබේ.අනිවාර්‍යයෙන්ම ඉගෙනුම්-ඉගෙන්වීම් ක්‍රියාවලියේදී හොඳ ඉගෙනුම් ආධාරක භාවිතයක් අවශ්‍ය වේ.

මිනිසා ඇස කන නාසය දිව හා සම යන පංච ඉන්ද්‍රියන් මගින් ඉගෙනුම් අත්දැකීම් ලබා ගනියි.ඉන්ද්‍රියන් කිහිපයක් ඒකාබද්ධ වීමෙන් වඩා සාර්ථක නිවැරදි ඵලදායි හා ස්ථාවර ඉගෙනුමක් ලබන බව පර්යේෂණ වලින් හෙළි වී ඇත.එම නිසා ඉගෙනුම් කාර්යයේදී හැකි සෑම අවස්ථාවකදීම නිවැරදි අවබෝධය සඳහා එකී ඉන්ද්‍රියන් වැඩි ගණනක් භාවිත කිරීමට අවස්ථාව ලබා දිය යුතුය. ඉගෙනුම් ආධාරක භාවිතයෙන් අපේක්ෂා කරන්නේද එසේ ඉන්ද්‍රියන් කිහිපයක් සම්බන්ධ කරමින් ඉගෙනුම් අත්දැකීම් සැපයීමයි.ඉගෙනුම් ඉගැන්වීම් කාර්යය වඩාත් ඵලදායි වන්නේ ශිෂ්‍යයාට සෘජු අත්දැකීම් ලබා දීම මගින්ය. එනම් පංච ඉන්ද්‍රියන් හරහා සැබෑ වස්තු හා සිද්ධිය පිළිබඳ සෘජුවම අන්තර් ක්‍රියා මගින් සඵල අත්දැකීම් ලබා දීමයි.එසේ සෘජු ප්‍රාථමික අත්දැකීම් ලබා දිය නොහැකි අවස්ථා වලදී පමණක් ඒ සඳහා වෙනත් ආධාරක භාවිතා කල යුතුය.එසේ භාවිතා කරනු ලබන ආධාරක වල ඵලදායිතා තිවුතාවය එඩ්ගාර් ඩේල්(Edgar Dale-1954) පෙන්වා දෙන්නේ පහත සඳහන් ආකාරයට ය.ඵලදායිතාව අනුව ඔහු එය වර්ග කර පෙන්වා ඇත.

### එඩ්ගා ඩේල් 1954 අත්දකීම් කේතුව (Dalee's cone of experiences)

**පළමු වන කාණ්ඩය-ක්‍රියාකාරී අත්දැකීම්(Activity Experience)**

1. සෘජු සඵල අත්දැකීම් (Direct Purposeful)
2. අනුනිර්මිත අත්දැකීම් (Contrived)
3. නාට්‍යමය අත්දැකීම් ( Dramatic)

**දෙවන කාණ්ඩය-ප්‍රදර්ශන අත්දැකීම් (Display experiences)**

4. ආදර්ශනගත අත්දැකීම් (Demonstrations)
5. අධ්‍යයන චාරිකා ආශ්‍රිත අත්දැකීම් (Study Tours)
6. ප්‍රදර්ශන ආශ්‍රිත අත්දැකීම් (Exhibits)
7. අධ්‍යාපනික රූපවාහිනි හා චලන චිත්‍ර ආශ්‍රිත අත්දැකීම් (Educational Television and movie)
8. පටිගත කිරීම්,රේඩියෝ ,අචල චිත්‍ර අත්දැකීම් ( Recordings , Radio , Still Pictures)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**තෙවන කාණ්ඩය–සංකේතිය අත්දැකීම් ( Symbolic Experiences)**

9. දෘශ්‍ය සංකේතගත අත්දැකීම් (Visual Symbolic experiences

**10.** වාචික සංකේතගත අත්දැකීම් (Verbal Symbols)

***එඩ්ගා ඩේල් 1954 අත්දකිම් කේතුව (Dalee's cone of experiences)***




**ඩේල්ගේ පර්යේෂණ අනුව සාර්ථක ඉගෙනීමක් සඳහා වැඩි බලපෑම් සහිත අත්දැකීම් පහළින් ම සඳහන් කර ඇත.ඒ සෘජු සඵල ක්‍රියාකාරී අත්දැකීම් ය.එම අත්දැකීම් දෛනික ජීවිතයේ සැබෑ දවස හා සිදුවීම් හෝ සැබෑ ස්වාභාවිකත්වයට ඉතාමත් සමීප ද්‍රව්‍ය හා සිද්ධීන් ය.ඉගෙනීම පිළිබඳ අවම බලපෑම් ඇති කෙරෙන අත්දැකීම් වන්නේ කේතුවේ ඉහළින්ම දක්වා ඇති වාචික සංකේත මගින් තොරතුරු සන්නිවේදනය කිරීමයි.**

**උදා–චාට් , රූප සටහන් , ප්‍රස්ථාර , ගාන්ට් සටහන් හා වචන මගින් ඉගෙනීම**

**සාර්ථක ඉගෙනීමක් සිදුවන්නේ ක්‍රියාකාරී ඉගෙනුම් ක්‍රමවේද මගින් ස්වයං අත්දැකීම් ලැබීමෙන් ය.ඩේල් පෙන්වා දෙන්නේ ගුරුවරු මෙන්ම උපදේශකවරුන් විසින් උපදේශනාත්මක ක්‍රියාකාරකම් සැලසුම් කිරීමේදී හා ක්‍රියාත්මක කිරීමේදී පදනම් කරගත යුත්තේ සැබෑ ජීවිත අත්දැකීම් සඳහා සිසුන් යොමු කිරීමටය.ඉගෙනුම් ආධාරක තෝරා ගැනීමේදී ඒවා සකස් කිරීමේදී මෙන්ම භාවිතය පිළිබඳව දැනුමක් හා අත්දැකීම් ලබා ගැනීම අත්‍යවශ්‍ය වේ.එසේ නොවීමෙන් ගුරුවරුන්ගේ අරමුණු ඉටුකර ගැනීම අපහසු වන අතර ශිෂ්‍යයන් ද ව්‍යාකූලත්වයට පත් විය හැකිය.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ගුරුවරයාට යොදාගත හැකි ඉගෙනුම්-ඉගැන්වීම් ආධාරක

ගුරුවරයා අදාළ පාඩම ඉගැන්වීමට උපකාර කර ගන්නා එසේම ශිෂ්‍යයා ඉගෙනීම් අත්දැකීම් ලබා ගැනීමට ආධාර කර ගන්නා සියලු සම්පත් අයත් වේ.ඉගෙනුම්-ඉගැන්වීම් ආධාරක වර්ගීකරණයක් පහත සඳහන් වේ.

1. දෘශ්‍යමය උපකරණ (Visual Materials)

- කළු ලෑල්ල ( Black Board)
- කොළ ලෑල්ල ( Green Board)
- චුම්බක පුවරුව ( Magnetic Board)
- ප්ලෑනල් පුවරුව ( Flannel Board)
- දැන්වීම් පුවරුව ( Notice Board-Bulletin Board)

2. චිත්‍රමය ද්‍රව්‍ය(Graphics Materials)

- ඡායාරූප ( Photographs)
- පින්තූර ( Pictures)
- චිත්‍ර ( Drawings)
- රූප සටහන් / චාට් සටහන් ( Diagrams and Charts)
- පෝස්ටර් ( Posters)
- ප්‍රස්ථාර( Graphs)
- සිතියම් ( Maps)

3. ප්‍රක්ෂේපණ ද්‍රව්‍ය හා උපකරණ (Projected materials and Equipments)

- විනිවිදක (Transparencies)-අධි ශීර්ෂ ප්‍රක්ෂේපකය.(Over Head Projector)
- කදා (Slides)- කදා ප්‍රක්ෂේපකය (Slide Projector)
- සේයා පට (Films/Film Strips)-සේයා පටප්‍රක්ෂේපකය (Film Projector)
- වීඩියෝ කැසට්පට(Video Cassettes)
  DVD,VCD
  පරිගණක වැඩසටහන්
  } බහු මාධ්‍ය ප්‍රක්ෂේපකය (Multimedia Projector)

4. ශ්‍රව්‍ය ආධාරක හා උපකරණ (Audio Materials and Equipments)

- ශබ්ද පට(Audio Tapes/Audio Cassettes)-පට ධාවකය(Tape recorder, Cassette Player)
- ශබ්ද තැටි(Records)-තැටි ධාවකය(Record Player)
- සංයුක්ත තැටි(CD,DVD)-සංයුක්ත තැටි ධාවකය(CD Player)
- ගුවන් විදුලි වැඩසටහන්(Radio Programmes)-ගුවන් විදුලිය(Radio)

5. ශ්‍රව්‍ය දෘශ්‍ය හා උපකරණ (Audio Visual Materials and Equipments)

- රූපවාහිනී වැඩසටහන් (TV Programmes) - රූපවාහිනිය(Television)
- වීඩියෝ කැසට්පට(Video Cassettes)-වීඩියෝ පට ධාවකය(Cassette Player)
- වීඩියෝ සංයුක්ත තැටි(vcd)- vcd player
- ඩිජිටල් වීඩියෝ සංයුක්ත තැටි(DVD)- DVD player
- පරිගණක වැඩසටහන්(Computer Programms)-Computer
- චිත්‍රපට(Films)- සිනමා ප්‍රක්ෂේපකය(Cinema Projector)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6.** ආකෘති (Models)

- කුඩා කළ ආකෘති(Diminished Models)
- විශාල කළ ආකෘති(Enlarged Models)
- හරස්කඩ ආකෘති (Cross –Sectional Models)
- ක්‍රියාකාරී ආකෘති(Working Models)

**7.** නිදර්ශන/නිරූපණ(Demonstrations)

**8.** මුද්‍රිත ද්‍රව්‍ය හා අනුරූපිත ද්‍රව්‍ය(Printed and Duplicated Materials)

**9.** ප්‍රදර්ශන / නිරූපන (Demonstrations)

**10.** සැබෑ ජිවිත අත්දැකීම්(Real-Life Experiences)

- විවිධ නාට්‍ය(Dramas)
- ක්ෂේත්‍ර චාරිකා(Field Trips)

T.P.U.L.තෙන්නකෝන්


සහකාර අධ්‍යාපන අධ්‍යක්ෂක

කලාප අධ්‍යාපන කාර්යයාලය

ත්‍රිකුණාමලය



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொடர்பாடலும் தீர்மானம் எடுத்தலும் (communication & Decision Making)

பாடசாலை என்பது மிகச் சிக்கலான நிறுவனம். அது இடையறாது மாற்றங்களுக்கு உள்ளாகி விருத்தியடைந்து செல்கின்றது. மாணவர் தொகை குறைவாகக் காணப்படும் ஒரு பாடசாலையில் கூட தொடர்பாடல் மற்றும் தீர்மானமெடுத்தற் செயன்முறை காணப்படும். தமது தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்து கொள்வதால், அதிபர் வினைத்திறன் மிக்க முகாமையாளராக மாற முடியும். ஆசிரியர் தமது கற்பித்தலில் சிறந்த தேர்ச்சி பெறவும் முடியும்.

அதிபரின் வகிபாகத்தில் முகாமை சார்ந்த நலிவுகள் ஏற்படுவதற்கு தொடர்பாடல் கட்டமைப்புக்களின் குறைபாடுகள் காரணமாகலாம். மனித இடைத் தொடர்புகளில் கருத்துக்கள், தகவல்கள், உணர்வுகள் போன்றவை வெற்றிகரமாகப் பரிமாற்றம் செய்யப்படாமையினாலும் முகாமைக் குறைபாடுகள் ஏற்படலாம். தொடர்பாடலுக்கும் தீர்மானம் எடுத்தற் செயன்முறைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. பாடசாலையின் தலைவர் என்ற வகையில் அதிபர் எடுக்க வேண்டிய தீர்மானங்கள் பலவாகும். தீர்மானம் எடுக்காவிடின் யாதேனும் பணியை முன்னெடுத்துச் செல்ல முடியாது. எனவே பாடசாலைத் தலைவர் என்ற வகையில் ஆய்ந்தோய்ந்து பார்த்து விவேகமாக தீர்மானங்களை எடுத்தல் வேண்டும்.

**தொடர்பாடலும் தொடர்பாடற் செயன்முறையும்**

தொடர்பாடல் என்பதை வரைவிலக்கணப்படுத்துவது எளிமையான ஒரு பணியல்ல. தொடர்பாடற் செயன்முறையை, பாடசாலை நிருவாக அடுக்கமைப்பில் மேலிருந்து கீழ் நோக்கி அனுப்பப்படும் கட்டளைகள் அல்லது பாடசாலைக்குத் தகவல் கிடைத்தல் அல்லது பாடசாலையில் நபர்களுக்கு இடையே பரிமாற்றமடையும் வார்த்தைகள் என மாத்திரம் கருதி விட முடியாது. தொடர்பாடல் என்பது குறைந்த பட்சம் இரண்டு தனியாள்களுக்கு இடையே நிகழும் ஓர் ஆளிடைச் செயற்பாடு என எளிமையாக விளங்கலாம்.

தொடர்பாடல் என்பது பிரதானமான மூன்று கூறுகளின் இடைச் செயற்பாடாகும். செய்தியை வழங்குபவர் - செய்தி – செய்தியைப் பெறுபவர் என்பனவே அவையாகும். செய்தியை உருவாக்கி கடத்துபவரே செய்தியை வழங்குபவர் ஆவர். அவர் கடத்தும் தகவலே செய்தியாகும். அச்செய்தியைப் பெற்று அதற்கு அர்த்தம் கற்பித்துத் துலங்கல் காட்டுபவரே செய்தியைப் பெறுபவராவார். தொடர்பாடற் செயன்முறையை நேராகவன்றி, வட்டக் கோலத்தில் நிகழுதல் வேண்டும். செய்தியை வழங்குபவரால் வழங்கப்படும் செய்தி யாதேனும் ஊடகத்தின் ஊடாக செய்தியைப் பெறுபவருக்கு அனுப்பப்படுகின்றது. செய்தியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவரின் துலங்கல் மீளக் கிடைத்தல் வேண்டும். எனவே தொடர்பாடல் என்பது கருத்தை வெளியிடுவது மாத்திரமல்ல. மாறாக அது கருத்துப் பரிமாற்றமாகும். தொடர்பாடல் மூன்று வகைப்படும். வாய்மொழித் தொடர்பாடல், எழுத்து மூலத் தொடர்பாடல், சைகை மூலம் மேற்கொள்ளப்படும் வாய்மொழி மூலமல்லாத் தொடர்பாடல் என்பனவே அவையாகும்.

**தொடர்பாடல் திசைகளும் தொடர்பாடலின் முக்கியத்துவமும்**

தொடர்பாடலானது நடைமுறையில் ஒரு திசையில் மட்டுமோ இரண்டு திசைகளிலுமோ நிகழக்கூடும். ஒரு திசையில் மாத்திரம் நிகழும் தொடர்பாடலில், செய்தியை அனுப்புபவர் அதனைப் பெறுபவரிடமிருந்து பின்னூட்டல் பெறாது செய்தியை அனுப்பிக் கொண்டிருப்பார். செய்தியைப் பெறுபவர் அச்செய்தியை அனுப்பியவருக்கு பின்னூட்டல் வழங்கும் வேளைகளில் இரு திசைத் தொடர்பாடல் அதாவது இரு வழித் தொடர்பாடல் நிகழும். ஒரு திசையில் மாத்திரம் நிகழும் ஒரு வழித் தொடர்பாடல் சில அனுகூலங்களையும் கொண்டது. குறைந்த செலவு, குறைந்த கால விரயம், செயன்முறையின் எளிமை ஆகியன அவையாகும். தொடர்பாடலின் செம்மை, நம்பகத்தன்மை, கவனம், உறுதிப்படுத்தக்கூடிய தன்மை, ஆளிடைத் தொடர்புகளுக்குத் துணையாதல் போன்றவை இருவழித் தொடர்பாடலின் சில அனுகூலங்களாகும்.

மேலும் தொடர்பாடலானது நிலைக்குத்தாகவும், கிடையாகவும், மேல் நோக்கியும், கீழ் நோக்கியும் நிகழும் என்பது இனங்காணப்பட்டுள்ளது. சர்வாதிகார நிருவாக அமைப்புக்களிலேயே மேலிருந்து கீழ் நோக்கிய தொடர்பாடல் காணப்படும். கீழிருந்து மேல்நோக்கிச் செல்லும் தொடர்பாடலில் ஜனநாயகப் பண்புகள் மிகையாகக் காணப்படுகின்றமை. ஆராய்ச்சிகள் மூலம் அறியப்பட்டுள்ளது. தொடர்பாடலின் போது செய்தியானது சங்கிலி, சகல வழி, சக்கரம் (Chaun, All Channel, Wheel) எனும் மூன்று வகைகளில் அனுப்பப்படுவதாக சு.பண்டா (முகாமைத்துவ கோட்பாட்டுகள்) குறிப்பிடுகிறார். மேலும் சங்கிலிக் கோலத்தின் போது மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும் ஒழுங்காகச் செய்தி செல்லும். சக்கர அதாவது வட்டக் கோலத்தின் போது செய்தியை அனுப்புபவர் வட்டத்தின் மத்தியிலும் ஏனையோர் வட்டத்தின் பரிதியிலும் இருப்பர். மத்தியில் இருப்பவர் தனித்தனியே ஒவ்வொருவருடனும் செய்தியைப் பரிமாறிக் கொள்வார். சகல வழிக்கோலத்தின் போது செய்தியானது வெவ்வேறு மட்டங்களில் இருப்போருடன் கிடையாகவும், நிலைக்குத்தாகவும் அனுப்பப்படும். இது சிறப்பாகத் தொடர்பாடல் நிகழும் வெற்றிகரமான ஒரு முறை என்பது இனங்காணப்பட்டுள்ளது.

**வெற்றிகரமான தொடர்பாடலுக்குத் தடையாக அமைபவை**

இவற்றை தனியாள் மட்டத்தடைகள் நிறுவனம் சார்ந்த தடைகள் என பிரதானமாக இரண்டு பிரிவுகளாக வகுக்கலாம். பெரும்பாலான ஆளிடை முரண்பாடுகளுக்குக் காரணமாக அமைவனவும் இத்தொடர்பாடல் குறைபாடுகளாகும். கூறப்பட்டவற்றைச் சரியாக விளங்கிக் கொள்ளாமை, மன முறிவு, பிரச்சனை தொடர்பாக வெளிப்படையாகக் கருத்துப் பரிமாற்றத்துக்கு வாய்ப்புக் கிடைக்காமை, செவிமடுப்பவரால் செவிமடுத்த கருத்தைப் புரிந்து கொள்ள முடியாமை போன்ற தொடர்பாடல் குறைபாடுகள் உருவாகக் காரணமாகாலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடும் செய்தியைத் தெளிவாக முன் வைப்பதற்காக விளக்கங்கள் அளிக்கப்படும் போது நேரத்தை முகாமை செய்ய முடியாத நிலை ஏற்படும். இதன் விளைவாக தொடர்பாடலுக்குத் தடை ஏற்படும். தகவல்கள் பொருளற்றவையாக இருத்தல், வார்த்தைப் பிரயோகக் குறைபாடுகள், பண்பாட்டு வேறுபாடுகள், செவிமடுப்பவரின் உள்ளத்தில் வேறு விடயங்கள் குடி கொண்டிருப்பதால் இவ்விடயங்களைக் கிரகிக்க முடியாமை போன்றவை தொடர்பாடலுக்குத் தடையாக அமைவனவாகும்.

**தொடர்பாடலினூடாக உருவாகும் மனிதத் தொடர்புகள்**

தாங்கள் கூற வேண்டுமெனக் கருதுபவற்றைத் தெரிவு செய்து கொள்வதும், அவற்றைத் தெளிவான மொழியில் தெளிவாகவும், எளிமையாகவும், சுருக்கமாகவும் வெளியிடுவதுமே தொடர்பாடலின் அடிப்படையாக அமையும். யாதேனுமொன்றைச் சுருக்காமக வெளியிடுவது எளிதானதல்ல. அதற்காக அதிக நேரம் முயற்சித்தல் வேண்டும். தாங்கள் பாடசாலையில் தொடர்பாடல் தலைவர் என்ற வகையில் உயிரோட்டமான ஒரு தொகுதியினருடன் பணியாற்றுகின்றமையே அதற்கான காரணமாகும். இம்மானுடத் தொடர்பைப் பாடசாலையில் தொடர்பாடல் தலைவர் என்ற வகையில் உயிரோட்டமான ஒரு தொகுதியினருடன் பணியாற்றுகின்றமையே அதற்கான காரணமாகும். இம்மானுடத் தொடர்பைப் பாடசாலையில் விளைதிறனுடன் கூடிய வகையில் பேண வேண்டுமாயின், எதனையும் தெளிவாகவும், எளிமையாகவும், சுருக்கமாகவும் வெளியிடும் ஆற்றலை அதிபர் கொண்டிருத்தல் வேண்டும். அதிபர் பாடசாலையில் உள்ளோருடன் மேற்கொள்ளும் தொடர்பாடற் செயன்முறை வெற்றிகரமாக அமைவதில் அவரது ஆளுமை பெரிதும் பங்களிக்கும்.

மனித வளத்தில் அடங்குவதாக குறிப்பிட்ட சகலருடனும் அதிபர் மேற்கொள்ளும் தொடர்பாடற் செயன்முறையானது அவர்கூறும் செய்தியில் மாத்திரமன்றி அச்செய்தியைச் செவிமடுப்பர் உருவாக்கிக் கொள்ளும் கருத்துக்கள், மனப்பாங்குகள் உணர்வுகளிலும் தங்கியுள்ளது என்பதை மனதில் இருத்திக் கொள்ளல் வேண்டும். செய்தியைக் கூறுபவர் அதனைச் செவிமடுப்பவரின் பின்னூட்டலைப் பெறுவது இன்றியமையாததாக அமைவதற்கான காரணம் இதுவாகும். எனவே செய்தியைக் கூறுபவர் திறந்த மனதுடன் இருத்தல் வேண்டும். அத்தோடு அச் செய்தியைச் செவிமடுப்பவர் தொடர்பாக முழுக் கவனத்தையும் செலுத்துதல் வேண்டும். இவை இரண்டும் மிக முக்கியமானவையாகும்.

**அதிபரின் தொடர்பாடற் பண்புகள்**

அதிபர் என்ற வகையில் வெற்றிகரமாக செயற்படுவதற்கு, உயரிய தொடர்பாடற் பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அதிபரது வகிபாகம் தற்போது சிக்கார்ந்தும் விரிவடைந்தும் வருகின்றது. எனவே அதிபர்கள் தொடர்பாடல் திறன்களை நன்கு விருத்தி செய்து கொள்ளல் வேண்டும். அதிபர்களுக்கான கைநூலில் தொடர்பாடல் முகாமைப்பணி பின்வருமாறு தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளது.

- தேசியக் கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் தெளிவுபடுத்தல்
- அமைச்சுச் சுற்றுநிருபங்கள், திணைக்களச் சுற்றுநிருபங்களை தெளிவுபடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிரதேசப் பொதுமக்களது கருத்துக்களையும், எதிர்பார்ப்புக்களையும் அறிந்து கொள்ளல்
- கற்றல் தொடர்பாக, பெற்றோரதும் பொதுமக்களதும் பொறுப்பை உணர்த்தல்
- ஆசிரியர் குழாத்துடன் தொடர்பாடலுக்கான சூழ்நிலையை உகப்பானதாக்கல்
- அவரவரது பொறுப்புக்கள் பற்றி ஆசிரியர்களுக்கு நினைவூட்டல்
- தெளிவான தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்தல்
- ஆசிரிய குழாத்தினை ஒத்துழைப்புக்கு வழிகோலத்தக்க வகையில் ஒழுங்குபடுத்தல்
- கோட்ட, வலய, மாவட்ட , மாகாண, தேசிய மட்டக் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டு ஏனைய பாடசாலைகளுடன் தொடர்புகளை உருவாக்கிக் கொள்ளல்

இப்பணிகளை பாடசாலையில் நடைமுறைப்படுத்துகையில் தொடர்பாடற் செயன்முறை முக்கிய இடத்தைப் பெறுகின்றமையை விளங்கிக் கொள்ளலாம். தற்போதைய பாடசாலைத் தொகுதியில் அதிபரின் பொறுப்பு சிக்காலனது என்பதை வலியுறுத்திப் குறிப்பிட வேண்டியுள்ளது. தர உள்ளீடுகளின் பங்களிப்பு, பாடசாலை மட்டக் கணிப்பீடு, சில பாடங்களை ஆங்கில மொழியில் கற்பித்தல்,

- அந்தந்த ஆசிரியர்களின் சமூகப் பின்னணி, பெறுமானங்கள், வாழ்க்கைக் குறிக்கோள்கள், இலக்குகள், பண்பாட்டுப் பின்னணி பற்றிய விளக்கம்
- பரிவுடன் செவிமடுத்தல்
- உறுதிப்பாடு
- முரண்பாடான கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்
- சொல்லப்படாதவற்றைக் கூடச் செவிமடுக்கத்தக்க 'மூன்றாஞ் செவி' யையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- செய்தியை வழங்குவதற்குப் பொருத்தமான சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ளல் போன்ற திறன்களை அதிபர் கொண்டிருத்தல் வேண்டும்.

02. **ஆசிரியர் குழாத்துடனான தொடர்புகள் :-**

பாடசாலையின் குறிக்கோளை அடைவதற்காக, அதிபர் பங்கேற்பு முகாமையினூடாகத் தமது ஆசிரியர் பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். பாடசாலையின் இலக்கை அடைவதற்கு இது இன்றியமையாதது. ஆசிரியர் குழுக்கூட்டங்கள் நடத்தப்படும் திகதிகள், உத்தேச நிகழ்ச்சி நிரல் போன்றவற்றை ஆசிரியர்கள் முன்கூட்டியே அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

"ஆசிரியர் குழுக்கூட்டம் என்பது அதிபர் மாத்திரம் பேசுகின்ற ஏனையோர் யாவரும் செவிமெடுக்கின்ற ஒரு கூட்டமல்ல. அது ஆசிரியருக்குத் தமது கருத்துக்களை தெரிவிப்பதற்காக ஒரு சந்தர்ப்பமாக அமைதல் வேண்டும்." என அதிபர்களுக்கான கைநூலில் கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் குழுவினரின் பால் பூரணமாக கவனஞ் செலுத்தி உயிரூட்டமாகப் பங்கேற்று எளிதாக கலந்துரையாடுவதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொள்ளலே மிக முக்கியமானதாகும். எனவே கூட்டங்களை நன்கு திட்டமிட்டு நன்கு நடத்திச் செல்லல் வேண்டும். பாடசாலை சிறியதாக இருந்தால் என்ன பெரியதாக இருந்தால் என்ன ஆசிரியர் குழுக் கூட்டத்தை நடத்த முன்னர் அதற்கான முன் ஆயத்தங்களைச் செய்து கொள்ள வேண்டும். கலந்துரையாட வேண்டிய விடயங்களை உள்ளடக்கிய நிகழ்ச்சி நிரல், காலம் ஆகியவற்றை உள்ளடக்கி வேண்டிய விடயங்களை முழுமையான திட்டத்தை வகுத்துக் கொள்ளல் வேண்டும். கூட்டத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டுமாயின் அது தொடர்பான அறிவித்தலை முன்கூட்டியே ஆசிரியர்க்கு வழங்குதல் வேண்டும்.

வேலைப்பளு மிக்க வேளையில் ஆசிரியர் ஒருவர் தங்களது முன்னிலையில் வந்து கூறுபவற்றைக் கூட தாங்கள் கவனமாக செவிமெடுத்தல் வேண்டும். செய்தியை/தகவலை சரியாகக் கிரகித்துக் கொள்ளாவிடின் அதனால் விபரீதமான விளைவுகள் ஏற்பட இடமுண்டு. ஆசிரியர் கூறுபவற்றை சரியாக விளங்கிக் கொள்ளாமையால் ஏற்படும் சிக்கல் நிலைமை காரணமாக எதிர்காலத்தில் நடைமுறையில் அவரது ஒத்துழைப்பை பெற முடியாத நிலையும் உருவாகக்கூடும்.

### 03. <u>மாணவருடனான தொடர்புகள்</u>

மாணவருடன் தொடர்பாடுவதற்குப் பொருத்தமான சந்தர்ப்பங்களைப் பற்றி கவனஞ் செலுத்தல் வேண்டும். காலைக்கூட்டம், வகுப்பறைகளுக்குச் சென்று மாணவருடன் கலந்துரையாடல், ஆசிரியர் வருகை குறைவான நாட்களில் கற்பித்தற் பணிகளில் ஈடுபட சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். மாணவர் தலைவர்கள் நியமிக்கப்பட்டிருப்பின் அவர்களுடன் தொடர்பாடுவதற்கான கூட்டங்களையும் நடத்த வேண்டும்.

### 04. <u>சமூகத்துடனான தொடர்புகள்</u>

ஒரு பாடசாலையின் சமூகம் பாடசாலையைப் பொறுத்த மட்டில் ஒரு பாரிய வளம் என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும். பாடசாலைக்கும், சமூகத்துக்கும் இடையில் சிறந்த தொடர்பும் ஒற்றுமையாகச் செயற்படும் ஆற்றலும் காணப்பட வேண்டியது அவசியமாகும். அரசினால் பாடசாலைக்குக் கிடைக்கும் வளங்கள், ஒதுக்கீடுகளை மாத்திரம் நம்பியிருப்பது வெற்றி கரமான அதிபரின் பண்பாக மாட்டாது. இயன்றளவுக்கு அயற் சமூகத்துடன் தொடர்புபட்டு பாடசாலைக்கு உதவி ஒத்தாசைகளைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பாகவும் பாடசாலையின் ஊடாகச் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுதல் தொடர்பாகவும் கவனஞ் செலுத்துதல்.

### <u>முறை சார்ந்த முறையில் தொடர்பாடல் முறைகள்</u>

இவற்றை தொடர்பாடல் உத்திகள் எனவும், தொடர்பாடல் சாதனங்கள் எனவும் குறிப்பிடலாம். எந்தவொரு பாடசாலையும் ஆசிரியர்கள், மாணவர்கள், சமூகத்தவர்கள் ஆகியோருடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்காக, வெவ்வேறு உத்திகளையும் சாதனங்களையும் பயன்படுத்துகின்றது. எல்லாவற்றையும் பாடசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைப்படுத்துவது சாத்தியமானதல்ல. எனவே பாடசாலையின் பருமன், பாடசாலையில் இருக்கக்கூடிய வளங்களின் அளவு, பாடசாலைப் பண்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தொடர்பாடல் உத்திகளையும் சாதனங்களையும் தெரிவு செய்து கொள்ளலாம்.

**தொடர்பாடல் சார்ந்த பௌதீக வளங்கள்**

பாடசாலை தொலைபேசி வசதி, பொது அழைப்புத் தொகுதி (Public Addressing System) போன்றவை காணப்படாதிருக்கக் கூடும். எனினும் கலந்துரையாடல்கள், கூட்டங்கள், அறிவித்தற் பலகைகள், அறிவித்தல் ஏடு போன்றவற்றின் மூலம் பாடசாலையில் ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் தகவல்களை அறிவிக்கலாம். மேற்படி ஆவணங்களை முறையாக, பராமரிப்பது அவசியமாகும். உதாரணமாக அறிவித்தல் ஏட்டில் தாள்கள் போயிருக்கக் கூடும். அதனை அடிக்கடி மாற்றிப் புதிய அறிவித்தல் ஏடுகளைப் பயன்படுத்த வேண்டியும் ஏற்படும். இந்நிலைமைகளைத் தவிர்ந்த ஒரு தனிப்புத்தகத்தில் தகவல்களை, அறிவித்தல்களை ஒழுங்காகப் பதிவு செய்து பேணி வருதல் வேண்டும். மேலும் அறிவித்தலில் அடங்கியுள்ள சகல அடிப்படை அம்சங்களையும் அறிந்து கொண்டமையை உறுதிப்படுத்தும் வகையில் கையொப்பத்தையும் பெற்றுக் கொள்வதும் அவசியமாகும்.

**தீர்மானமெடுத்தல்**

பாடசாலையின் பொறுப்புக்கள் சிக்கார்ந்தவையாக மாறியுள்ள தற்காலத்தில் ஆசிரியரின் வகிபாகம் பாடசாலைத் தொகுதி தொடர்ந்தும் மாற்றத்துக்கு உள்ளாகி வருகின்றது. அவ்வாறாக மாற்றத்துக்கு உள்ளாகும். 'அதிபர் வகிபாகத்தை' நன்கு விளங்கிச் செயற்பட வேண்டுமாயின் அதிபர்கள் சகல அம்சங்களிலும் விழிப்புப் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும். அதிபரைப் பொறுத்தமட்டில் பிரச்சினை தீர்த்தல் மற்றும் தீர்மானமெடுத்தல் செயன்முறை ஓர் அறை கூவலாகும்.

பாடசாலையின் முதல் நிலைத் தலைவர் என்ற வகையில் அதிபர் எடுக்க வேண்டிய பல தீர்மானங்கள் உள்ளன. தீர்மானமின்றி முன்னெடுக்கப்படும் பணிகள் தோல்வியிலேயே முடிவடையும். அதிபரின் தீர்மானமெடுத்தற் செயற்பாடு ஆளுக்காள் வேறுபடக் கூடுமாயினும் பாடசாலை முகாமையாளர் ஒவ்வொருவரும் பயனுடைய வகையிலும் பொருத்தமான வகையிலும் தீர்மானமெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார் என்பதை மறுக்க முடியாது.

**தீர்மானமெடுத்தற் செயன்முறையை இனங்காணல்**

தீர்மானமெடுத்தற் செயன்முறை, பிரச்சனை தீர்த்தல் ஆகியன பரஸ்பரம் பாடசாலைத் தொகுதியுடன் பின்னிப் பிணைந்துள்ள இரு அம்சங்களாகும். பிரச்சினை தீர்த்தலானது வெவ்வேறு பாடசாலைகளில் வெவ்வேறு மட்டங்களில் காணப்படுகின்றது. பாடசாலையின் தலைவர் என்ற வகையில், அதன் பல்வேறு பரப்புக்கள் சார்ந்த முரண்பாடுகளைத் தீர்த்துப் பயனுறுதி மிக்க நியாயமான தீர்மானங்களை எடுக்கும் ஆற்றலை அதிபர் கொண்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தலைமைத்துவம் என்பது சர்வாதிகாரப் பாங்கானது அல்ல. மாறாக ஒரு தொகுதி அங்கத்துவரிடையே செயற்படும் ஆற்றலே முக்கியமானதாகும்.

கலைத்திட்ட உள்ளடக்கம், கல்விக் குறிக்கோள்கள், கணிப்பீடும் மேற்பார்வையும், புறவாரித் தொடர்புகள், நிதி நிருவாகம், மாணவரைக் குழுக்களாக்கல், ஆசிரியர்களையும் ஏனைய பணியணியினரையும் பெறல், கற்பித்தல் முறைகளும் உத்திகளும் நேரசூசி, வெவ்வேறு பொருள்களையும் உத்திகளையும் பயன்படுத்தல், சமுதாயத் தொடர்புகள், பாடசாலையில் பௌதீக வள மேம்பாடு, மேல் மட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்தல் போன்ற பல அம்சங்கள் தொடர்பாக தீர்மானமெடுக்கும் பொறுப்பு அதிபரையே சாரும்.

<u>தீர்மானமெடுத்தலில் பங்குகொள்வோர்.</u>

பாடசாலையில் தீர்மானமெடுத்தற் செயன்முறையின் தலைவன் என்ற வகையில் அதற்குரிய அதிகாரம் அதிபரையே சாரும். எனினும் அதிபருக்குத் தனது தனிப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாகச் சர்வாதிகாரியாகத் தீர்மானமெடுத்துச் செயற்படும் அதிகாரம் கிடையாது. தான்தோன்றித்தனமான இறுக்கமான கட்டுப்பாட்டைக் கொண்ட தலைமைத்துவமானது மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் அனுகூலமானதாக அமையாதிருக்கக் கூடும். எனவே அதிபரின் சொந்த விருப்பப்படி எடுக்கப்படும் திர்மானங்கள் அதிக வரவேற்பைப் பெறாத நிலை உருவாகக் கூடும் என்பதை மறுப்பதற்கில்லை.

<u>அதிபர் தனியாகத் தீர்மானம் எடுத்தல்</u>

பாடசாலையில் தனியாக தீர்மானம் எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்திய வேளைகளில் வெற்றிகரமான பெறுபேறுகள் கிடைத்தனவா என்பது தொடர்பான உங்களது அனுபவங்களை நினைவு கூர்ந்து இவ்விடயங்களின் பால் கவனஞ் செலுத்துதல் வேண்டும். தலைமைத்துவ கோலங்களுள் ஒன்றான சர்வாதிகார தலைமைத்துவக் கோலத்தை செயல் ரீதியில் நடைமுறைப்படுத்துதல் முடியுமா/ முடியாதா என சற்றுச் சிந்தியுங்கள். சர்வாதிகாரத் தலைவர் பாடசாலையில் ஒவ்வொரு தனியாளின் முன்னிலையிலும், அதிகாரத்துவம், முறைசார் தன்மை, நெகிழ்ச்சியின்மை, சட்டத்தில் உள்ளவாறு ஏற்றுக்கொள்கின்றமை, வலுக்கட்டாயப்படுத்தல், அதிகாரத் தோரணை ஆகிய எண்ணக்கருக்கள் ஊடாகவே நோக்கப்படுவார். இவ்வாறான தலைவர்கள் பெரும்பாலும் தனது தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முனைவர். அதன் விளைவாக பாடசாலையில் பதற்றம், மனத்தாக்கங்கள் போன்றவையே உருவாகும். மாறாக பாடசாலையின் குறிக்கோள்களை அடையத்தக்க வகையில் செயற்படக்கூடிய மகிழ்ச்சிகரமான சூழ்நிலை உருவாக மாட்டாது. இவ்வாறான பின்னணியில் அதிபருக்கு தான் தனிப்பட்ட வகையில் எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்படும். கூட்டாகப் பொறுப்பு வகிக்காமையே இதற்கான காரணமாகும். எனினும் சனநாயக கருத்துக்களைக் கொண்ட அதிபர் மரபு பேணும் அதிபராகவன்றி, இதமான ஓர் அதிபராகச் செயற்பட்டால் அவர் தனது ஆசிரியர் குழாத்தினரின் ஆற்றல்களையும் வலிமைகளையும் இனங்கண்டு பொருத்தமானவரிடம் பொறுப்புக்களை ஒப்படைத்து, குழு ஈடுபாட்டுக்கு மதிப்பளித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் அனுகூலமான சூழ்நிலையை உருவாக்கி குறித்த குறிக்கோளை அடைவதில் கண்ணுங்கருத்துமாக இருப்பார்.

**பங்கு கொண்டு கூட்டாகத் தீர்மானம் எடுத்தல்**

பாடசாலையில் தீர்மானங்கள் எடுக்கும் போது அதிபர் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும். பெற்றோருக்கும் மென்மேலும் வாய்ப்புக்களை வழங்கி அனுகூலமான பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கும் நிலைமை பிரதானமான பண்பாகும். இவ்வாறான வழிவகைகள் காரணமாக பொறுப்பு வாய்ந்தோருக்கு வெவ்வேறு வழிகளில் தகவல்கள் கிடைப்பதோடு நடைமுறைப்படுத்தத்தக்க பல தீர்மானங்களை எடுக்கவும் வாய்ப்பு கிடைக்கின்றது.

எனினும் பங்கேற்று தீர்மானம் எடுத்தலில் கூட, இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும் அதிகாரியும் அதனை நடைமுறைப்படுத்தும் போது தேவையான வகையில் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் அதிபரே கொண்டிருத்தல் வேண்டும். பங்கேற்று தீர்மானம் எடுத்தலின் போது பங்குகொள்ளும் தரப்பினருக்கு தீர்மானம் எடுத்தற் செயன்முறையும் பங்குபற்ற வாய்ப்பளிப்பதால் அத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக அவர்களது இணக்கப்பாட்டை எளிதாகப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் தீர்மானங்களின் பயன் உறுதியும் அவற்றை நடைமுறைப்படுத்தத்தக்க தன்மையும் மேன்படும். மேலும் பலரின் பங்குபற்றலுடன் எடுக்கப்படும் தீர்மானங்கள் பெரும்பாலோனோரினால் ஏற்றுக் கொள்ளப்படும் யாதேனும் பிரச்சினை உருவாகியுள்ள போது அப்பிரச்சினை தொடர்பான தகவல்களை அறிந்து வைத்துள்ள பலர் ஒன்று சேர்ந்து அதிபரின் தலைமையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் அதிபர் தனிப்பட்ட வகையில் எடுக்கும் தீர்மானங்களை விட நேர்மையானவையாகவும், திருத்த மானவையாகவும், விளைதிறன் மிக்கனவாகவும் அமையும்.

**கூட்டாகத் தீர்மானம் எடுத்தலின் பல்வேறு கண்ணோட்டங்கள்**

***கூட்டாகத் தீர்மானம் எடுத்தலின் நன்மைகள்***

1. **தரம் உயர்ந்த தீர்மானங்களை எடுக்க முடிதல்**

   தீர்மானம் எடுக்கப்படும் விடயம் தொடர்பாக அத்தீர்மானமெடுத்தலில் பங்குகொள்வோரின் அறிவு, கருத்துக்கள், தகவல்கள் போன்றவை பங்களிப்புச் செய்வதால் தனியே எடுக்கும் தீர்மானத்தை விட கூட்டாக எடுக்கும் தீர்மானம் தர முயர்ந்ததாக இருக்கும்.

2. **நன்கு ஆய்ந்தோய்து தீர்மானமெடுக்க முடிதல்**

   குழுவின் வெவ்வேறு தனியாட்களின் கண்ணோட்டம், கருத்துக்கள், அனுபவங்கள், குறிக்கோள்கள், மாற்று வழி வகைகள் இனங் காணப்பட்ட பிரச்சினையில் இது வரை வெளிக் கொணரப்படாத அம்சங்கள் ஆகியவற்றை வெளிக் கொணர்ந்து வெற்றி கரமான முடிவுகளை எடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **போதிய விளக்கத்தைப் பெற்றுத் தீர்மானம் எடுத்தல்**

தீர்மான விடயம் தொடர்பாக அதிபரை விட ஆசிரியர்கள் கூடுதலான விடயங்களை தேடிப் பெறக்கூடியவர்களாக இருப்பர். எனவே அவ்வாறான விடயங்கள் தொடர்பாக முடிவெடுக்கும் போது ஆசிரியர்களை பங்கு கொள்ளச் செய்வதால், தீர்மானம் எடுக்க வேண்டிய விடயங்கள் பற்றிய பின்னணியை எளிதாக விருத்தி செய்து கொள்ள வாய்ப்பு கிடைக்கும். எனவே போதிய விளக்கத்துடன் தீர்மானம் எடுக்க இது துணையாக அமையும்.

4. **பல்வேறு தீர்வு வழிகளை முன் வைக்கக் கூடியதாக இருத்தல்**

ஒரு பிரச்சினை தொடர்பாக தனியொருவரால் முன் வைக்கப்படும் தீர்மானம் பொருத்தமற்றதாக அமையக்கூடும். இவ்வாறான சந்தர்ப்பத்தில், குழுவாகச் செயற்படுமிடத்து பல மாற்றுத் தீர்மானங்களை முன் வைக்கும் வாய்ப்பு கிடைக்கின்றது.

5. **கூடிய ஊக்கத்துடன் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருத்தல்**

எடுக்கப்படும் முடிவுகளில் தாமும் பங்களிப்புச் செய்துள்ளமையினால் அவற்றை நடைமுறைப்படுத்தும் போது அதனைத் தனது பணியாகக் கருதி அதிக ஊக்கத்துடன் செயற்பட முனைவர்.

6. **எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் நடத்திச் செல்வதில் பங்களிப்புச் செய்தல்**

இறுதி வரையில் மேற்பார்வை செய்து பின்னூட்டல் வழங்கி உரிய பணிகளை உச்ச விளைதிறன் கிடைக்கும் வரையில் செயல் ரீதியில் அனைவரும் பங்களிப்புச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

**<u>கூட்டாகத் தீர்மானம் எடுத்தலின் அனுகூலங்களும், பிரதிகூலங்களும்</u>**

**கூட்டாகத் தீர்மானம் எடுத்தலின் அனுகூலம்**

1. குழுவினால் எடுக்கப்படும் திர்மானம் மிகச் சிறப்பாக அமையும் வகையில் ஒவ்வொருவரும் தனித்தனியே பங்களிப்பச் செய்யத் தக்கதாக இருத்தல்.
2. மிகப் பொருத்தமான தீர்வைக் கண்டறிவதற்காக ஒவ்வொருவரும் முயற்சிக்கும் நிலை உருவாதல்.
3. பங்கு கொண்டு பிரச்சினைகளைத் தீர்த்து, தீர்மானங்களை எடுப்பதால் குறித்த பணிகளை நடைமுறைப்படுத்துகையில் உயர்வான ஊக்கலுடன் தொடங்கக்கூடிய நிலை உருவாதல்.
4. குழுவாகத் தீர்மானம் எடுக்கும் போது அறைகூவல்களை எதிர் கொள்ள தயாராக இருக்கும் நிலை உருவாதல்.
5. கூட்டாகவே தீர்மானம் எடுக்கப்படுகின்றமையால் தனியாக தீர்மானம் எடுக்கும் போது ஏற்படத்தக்க தவறுகள், குறைபாடுகள் போன்றவை தவிர்க்கப்படும் நிலை உருவாதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தனித்தனியாகத் தீர்மானம் எடுப்பதற்காக உருவாக்கப்பட்ட குறிக்கோள்கள், தீர்வு வழிகள் ஆகியன தொடர்பாக குழுவின் ஒவ்வொருவரும் கருத்து தெரிவிப்பதால் அவற்றை மதித்து இறுதித் தீர்மானத்தை எடுக்க வாய்ப்பு கிடைத்தல்.

**கூட்டாகத் தீர்மானம் எடுப்பதன் பிரதிகூலங்கள்**

கூட்டாகத் தீர்மானம் எடுத்தலானது பல அனுகூலங்களையும் மட்டுமன்றி ஒரு சில பிரதிகூலங்களையும் கொண்டுள்ளது. அதிபர் கவனமாக செயற்பட்டு அவ்வாறான நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

1. ஒவ்வொருவரும் தத்தமது அறிவின் வலிமையின் படி தீர்வுகளை முன் வைப்பர். அவ்வாறான தீர்வுகளைக் கொண்டு இறுதித் தீர்மானம் எடுப்பது கடினமானதாக அமைய இடமுண்டு.
2. தீர்மானம் குழு நிலையில் கூட்டாக எடுக்கப்பட்டமையால் ஒரு சில அங்கத்தவர்கள் தமது பொறுப்புகளிலிருந்து விடுபட முனைய இடமுண்டு.
3. பொதுத் தீர்மானத்திற்கு இணக்கம் தெரிவித்த போதிலும் சில ஆசிரியர்கள் மறைமுகமாக தமது சொந்தத் தீர்மானத்தையே நடைமுறைப்படுத்த முயற்சி செய்ய இடமுண்டு.
4. கூட்டாகத் தீர்மானம் எடுக்கும் செயன்முறையானது நேரம் வீண் விரயமாவதற்கான பிரதானமான ஒரு காரணமாக அமைய இடமுண்டு.
5. குழு நிலையில் தீர்மானம் எடுத்த போதிலும் வலிமை மிக்கோர் எடுக்கும் தீர்மானங்கள் மேனிலைப் படவும், நலியோரின் தீர்மானங்கள் இயல்பாகவே கீழ்ச் செல்லலும்.

கூட்டாகத் தீர்மானம் எடுக்கும் செயன்முறை பல அனுகூலங்களையும், சில பிரதிகூலங்களையும் கொண்டுள்ளது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. எனினும் உங்களது பாடசாலையில் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது கூட்டாகத் தீர்மானம் எடுத்தலின் அனுகூலங்களையும் கவனத்திற் கொண்டு புத்திசாலித்தனமாகவும் சமயோசிதமாகவும் அதனைக் கையாளுதல் வேண்டும். அதாவது பிரதிகூலமான நிலைமைகளை இனங் கண்டு சமயோசிதமாகவும் புத்திசாலித்தனமாகவும் இறுதி முடிவை எடுத்தல் வேண்டும் என்பதை மனதில் இருத்திக் கொள்ளுங்கள்.

திருமதி-மர்ளியா சக்காப்
உதவி அதிபர்,
ஜமாலியா மு.மு.வி
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனத் தடை
## மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை

டிக் .. டிக் .. டிக் என்ற ஒரு சிறு ஓசை, பரீட்சை மண்டபத்தின் மயான அமைதியை குலைத்துக் கொண்டிருந்தது. சற்றே தன் தலையை நிமிர்த்தி அண்ணார்ந்து பார்த்தான் ரவி, மதியம் 12 மணி என்றது கடிகாரம் மெல்ல படபடக்கத் துவங்கியது நெஞ்சு. பரீட்சை முடிவுற இன்னும் ஒரு மணித்தியாலம் மாத்திரமே பாக்கி இருந்தது. குறித்த நேரத்திற்குள் எல்லாக் கேள்விகளுக்கும் பதிலளிக்க முடியாது போயிடுமோ? என்ற அச்சம் அவனது உள்ளத்தை எச்சரித்தது.

அவசர அவசரமாக எதையாவது எழுதி, இடைவெளிகளை நிரப்பி விட வேண்டும் என்ற எண்ணத்தில் எதையோ எழுத ஆரம்பித்தான். ஆனால் எதையுமே அவனால் எழுத முடியவில்லை. உள்ளங்கை வியர்வையில் நனைந்த அவனது பேனாவுடன், அவனது சிந்தனையுமே கையை விட்டும் நழுவிச் சென்றது.

ரவியின் வாழ்க்கையில் நடந்த இச்சிறு சம்பவம், எமது வாழ்க்கையிலும் எப்போதாவது நடந்திருக்கலாம் அல்லது இனியும் நடக்கலாம். இதனை ஆங்கிலத்தில் Mental Block (மனத் தடை) என்று அழைப்பார்கள்.

மனத்தடை என்பது 'சாதாரணமாக ஒருவரால் செய்ய முடிந்த ஒரு காரியத்தை பதற்றப்படுவதால், அதனை இலகுவில் நினைவிற் கொள்ளவோ அல்லது, சிந்திக்கவோ இயலாத நிலை' என oxford என்ற ஆங்கில அகராதியும் The free Dictioneary என்ற இணைய அகராதியும் குறிப்பிடுகின்றன.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மனம் மிக முக்கிய பகுதியாக விளங்குகின்றது. ஏனெனில், மனம் தான் அவனது உடல், நடத்தை மற்றும் உணர்ச்சி என்பவற்றை ஆளும் ஆற்றல் மிக்கதாகவுள்ளது. சிலபோது மனம், ஒருவர் தான் விரும்புகின்ற ஒன்றைச் சரியாகச் செய்யவிடாது தடுத்து விடுகிறது அல்லது தடைகளை விதித்து விடுகிறது.

'அந்த நேரம் பார்த்து என்ட கையும் ஓடல்ல, காலும் ஓடல்ல' என்ற வார்த்தையை அடிக்கடி பலரும் பேசுவதைக் நாம் கேட்டுள்ளோம். இந்நிகழ்ச்சி ஏதோ ஒரு நெருக்கடியான, பதற்றமான சூழ்நிலையில் ஏற்பட்டிருக்கலாம். அதாவது பதற்றமான ஒரு சூழ்நிலையை நாம் எதிர் கொள்ளும் போது எங்கள் செயற்பாடுகள் திடீரென நின்று விடுகின்றன அல்லது மெதுவாக நடைபெறுகின்றன. அப்போது, எந்தவொரு காரியத்தையும் நிதானமாக, சிறப்பாக சிந்தித்துச் செயலாற்ற இயலாது அவதியுறுகிறோம். சில சமயங்களில் மாற்று வழிகளைத் தேடி நம் காரியங்களைச் செய்து முடிக்க முயலுகின்றோம். அதுவும் சில வேளை கை கூடாமல் போய் விடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை மண்டபத்தில் ரவிக்கு ஏற்பட்ட இறுக்கமான சம்பவம் கூட ஒரு பதற்றமான சூழ்நிலையால் நிகழ்ந்ததேயாகும். இவ்வாறான சம்பவங்கள் எங்கள் வாழ்விலும் பல நெருக்கடிகளையும், தோல்விகளையும் ஏன்! இழப்புக்களையும் ஏற்படுத்தி விடுகின்றன. இதனால், கிடைக்க வேண்டிய நல்ல வாய்ப்புக் கூட எமக்குக் கிட்டாமல் போன சந்தர்ப்பமும் உண்டு. அது ஒரு பரீட்சைப்பெறுபேறாகவும் இருக்கலாம் அல்லது ஒரு போட்டியின் வெற்றிப் பரிசாகவும் இருக்கலாம் அல்லது வேறு ஏதாவது பெறுமதி மிக்க விலை மதிக்க முடியாத ஒன்றாகவும் இருக்கலாம்.

பெரும்பாலும் பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்கள் இவ்வாறான நெருக்கடியான சூழ்நிலைகளை அடிக்கடி சந்திப்பதை அனுபவ வாயிலாக நாம் காண்கிறோம். சிலவேளைகளில் திறமையான மாணவர்களானாலும் பரீட்சைமண்டபத்தில் எதிர்பாராமல் எதிர்கொள்ளும் பதற்ற சூழ்நிலையினால் பரீட்சையை நன்றாக எழுத முடியாத ஒரு நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்படுவதுடன், பரீட்சையில் குறித்த வெட்டுப் புள்ளிகளைப் பெற முடியாமலும் போய் விடுகின்றன. இவ்வாறான நிலைக்கு ஏன் இம்மாணவர்கள் தள்ளப்படுகின்றார்கள்? என எங்களிலும் அநேகமானவர்களுக்கு இன்னும் புரியாத புதிராகவே உள்ளது.

இது பற்றிய பல ஆய்வுகள் மேற்கத்தைய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட போதும், குறிப்பாக உளவியலாளர்கள் நீண்ட கால ஆராய்ச்சியின் முடிவில் இப்பிரச்சினை ஏற்பட பிரதான காரணமாக அமைவது 'மனத்தடை' என்பதையே வலுவாக நம்புகிறார்கள். மேலே கூறப்பட்ட வரைவிலக்கணமும் இவ்விடயத்தை ஓர் உளவியல் கண்ணோட்டத்திலேயே அணுகியுள்ளதை நம்மால் அவதானிக்க முடிகிறது.

அதாவது மனத்தடை என்பது பதற்றமான மனநிலையின் எதிர்விளைவு என்பதை வரைவிலக்கணம் குறிப்பிடுகிறது. அகச்சூழல் மற்றும் புறச்சூழலில் நிகழும் சம்பவங்கள் எமது மனதை வெகுவாகக் கவர்கின்றன அல்லது பாதிக்கின்றன. இதனால், நம் மனவெழுச்சி தூண்டப்படுவதுடன், சில வேளை அசாதாரணமான, பரிச்சயமற்ற நிலமைகளால் நாம் பதற்றமடைகிறோம். அப்பதற்றம், நாம் சாதாரணமாக செய்யக் கூடிய எந்தவொரு காரியத்தையும் நினைவிற்கொண்டு அல்லது சிந்தித்துச் செயலாற்ற முடியாத ஒரு தடையை நம் மனதில் ஏற்படுத்துகிறது. இதுவே 'மனத்தடை' என உளவியலாளர்கள் விளக்குகின்றார்கள்.

மனத்தடை ஏன் ஏற்பட வேண்டும்? என்ற கேள்விக்கான ஆராய்ச்சியின் முடிவில், பின்வரும் காரணிகள் மனத்தடையை ஏற்படுத்துவதாக மனோதத்துவவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

- பதற்றம் (Tension)
- பயம் அல்லது பீதி (Afraid or in panic)
- அழுத்தம் (Pressure)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வேலைப்பளுக்கள் (Multiasking)
- கோபம் (Angry)
- அச்சுறுத்தல் (Threat)
- தனிமை உணர்வு (Feelings of loneliness)
- பாதுகாப்பின்மை (Insecurity)
- குழப்பமான உணர்வு (Confusion)
- நம்பிக்கை இழத்தல் (Loss of confidence)

இவற்றில் ஒன்றால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்களால் ஒருவர் ஆட்கொள்ளப்படும் போது அவருக்கு மனத்தடை ஏற்படுகிறது.

இவ்வாறான விடயங்களே பரீட்சை மண்டபத்திலும் ஒரு மாணவனின் செயற்பாட்டில் தாக்கம் செலுத்துகின்றன. இக்கட்டுரையின் துவக்கத்தில் கூறப்பட்ட சிறு சம்பவம் இதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். பரீட்சை முடிவுற ஒரு மணித்தியாலயம் மாத்திரமே மீதமிருந்த போது குறிப்பிட்ட அந் நேரத்திற்குள் மீதமிருந்த ஏனைய கேள்விகளுக்கும் பதிலளிக்க முடியாமல் போய்விடுமோ என்ற குழப்பத்தில் பீதியடைகிறான், அம்மாணவன். இதனால் அவன், தன்னம்பிக்கையை இழந்தது மட்டுமல்லாது, பதற்றமான ஒரு சூழ்நிலைக்குள்ளும் தள்ளப்படுகிறான். பின்பு அச்சம் அவனது நெஞ்சை கவ்விக் கொள்ள, மனத்தடை சிந்தனையின் ஒளியை மூடிக்கொள்கிறது. பரீட்சையில் கேள்விகளுக்கு பதிலேதும் எழுத முடியாமல் திணறுகின்றான் அவன்.

இவ்வாறே பல மாணவர்கள் பரீட்சை மண்டபத்தில் நெருக்கடியான, முன்னனுபவமற்ற, அசாதாரண சூழ்நிலைகளைச் சந்திக்கும் போது அச்சப்படுகிறார்கள். அவ்வச்சம் அவர்களது உள்ளத்தில் வீணான குழப்பங்களை (Confusion) உண்டு பண்ணி, அவர்களைப் பதற்றம் (Tension) அடையச் செய்கின்றது. பின்பு, அப்பதற்றம் சாதாரணமாக செய்யக்கூடிய எந்தவொரு காரியத்தையும் நினைவிற்கொண்டு அல்லது சிந்தித்துச் செயலாற்ற முடியாதவாறு ஒரு தடையை அவர்களது மனதில் ஏற்படுத்துகிறது. இதனால் திறமையான மாணவர்களாலும் பரீட்சையைச் சிறப்பாக எதிர்கொள்ள முடியாமல் தவிக்கிறார்கள்.

பொதுவாக மனித மூளை மற்றும் மனம் (நினைவாற்றல்) என்பது மிகச் சிக்கல் நிறைந்தவையென உளவியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள். மூளைக்கும் மனதிற்கும் இடையில் ஒரு தொடர்பை ஏற்படுத்தி நினைவாற்றலை அதிகரிக்கச் செய்கின்ற அட்ரேநலின் (Adrenalin) என்ற சுரப்பி பதற்றமான சூழ்நிலையில் சுரப்பது குறைவதால், மனிதர்கள் சாதாரணமான விடயத்தைக் கூட இலகுவில் நினைவிற்கொள்ளவோ அல்லது சிந்திக்கவோ இயலாது அவதியுறுகிறார்கள் என்பதை மனோதத்துவவியலாளர்கள் ஆராய்ச்சியினூடாகக் கண்டுபிடித்துள்ளனர். இதனாலே தான் நாம் பதற்றமடையும் போது நமக்கு மனத்தடை ஏற்பட்டு, சிந்தித்துச் செயலாற்ற முடியாமல் சிரமப்படுகிறோம்.

இனி, மனத்தடையை எவ்வாறு எதிர்கொள்வது? என்பது பற்றி ஆராய்வோம். இதனை எதிர்கொள்ள சில அற்புதமான எதிர்வினைகள் மற்றும் செயல்முறையின் ஒருங்கிணைப்பு முறை நமக்கு உதவுகிறது. அது, நாம் சாதாரண அல்லது பதற்றமடையாத ('normal' mode



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and not stressed) நிலையில் இருக்கும் போது சிறப்பாக செயற்பட்டு நினைவாற்றலை அதிகரிக்கிறது. ஆகவே, நாம் அதற்காக என்ன செய்ய வேண்டும்? என்பதைப் பார்ப்போம்

- ஆழமாக மூச்சை இழுத்து மெதுவாக வெளிவிடல்
- தியானம், யோகா, உடற்பயிற்சி போன்றவற்றில் ஈடுபடல்
- நன்றாக தூங்குதல்
- நன்றாக ஓய்வெடுத்தல்
- நகைச்சுவையான விடயங்களை நினைவிற்கொண்டு வரல்
- நேர்மறை எண்ணங்களை (Positive Thinking) வளர்த்தல்
- நல்லவற்றையே சிந்தித்தல்
- மாற்று யோசனைகளை அல்லது திட்டங்களைக் கையாளுதல்
- முன்கூட்டியே திட்டமிடல்
- தேவையானவைகளை முன்கூட்டி ஆயத்தப்படுத்திக் கொள்ளல்
- சற்று முன்கூட்டியே செல்ல, பழக்கப்படுத்தல்
- உற்சாகமான, திறமையான நண்பர்களுடன் பழகுதல்

இது போன்ற விடயங்களை நாம் நமது வாழ்வில் நடைமுறைப்படுத்தும் போது மன அழுத்தங்கள், மனத்தடை போன்றவற்றிலிருந்து விடுபட்டு சிறந்த நினைவாற்றலுடன் சிந்தித்து செயலாற்றலாம்.

**உசாத்துணைகள்**

Stiles.S (2008.May 15) Mind Blocks. Retrieved April 10, 2010, from http://ezinearticles.com/?Mind-Blocks&id=1178998

It's a Mental Block – My Mind's Gone Blank. Retrieved from http://www.memory.foundation/amental block - my mind

A.R.M.பைசல்
BSW (Hons) M.A.Sociology (Kelaniya)
ஆங்கில ஆசிரியர்
தி/தி/அறபாத் மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமும் பயிற்றுவிப்பாளர்களும் அவர்களின் பண்புகளும்

இறைவனால் படைக்கப்பட்ட சிறந்த படைப்பு மனித படைப்பாகும். அதிலும் உன்னதமான உருப்படியான அமைப்பாக அப்படைப்பு அமைய வேண்டும் என்பதற்காக குடும்பங்கள் ஆக்கப்பட்டுள்ளன. அக் குடும்பத்தில் பல்வேறு அமைப்புகள் சமூகத்தில் காணப்பட்டாலும் அதில் பெற்றோர்கள் என்பவர்களே மிகவும் பாரிய பொறுப்பாளிகளாகக் காணப்படுகின்றனர். இவ்வாறான பெற்றோர்கள் ஒரு சிறந்த பரம்பரையை உருவாக்குவதில் பயிற்றுவிப்பாளராகத் திகழ்கின்றனர். ஒரு மனிதன் தனது வாழ்வில் மூன்று வகையான பெற்றோர்களை சந்திக்கின்றான். முதலாவதாக 'தன்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையர், இரண்டாவதாக தன்னை வளர்த்து பராமரித்த பெற்றோர் மூன்றாவதாக தனக்கு அறிவூட்டிய பெற்றோர்' ஒரு குழந்தையின் வாழ்வில் பெற்றெடுத்த தந்தையை விட பயிற்றுவித்த தந்தையே கூடிய பாதிப்பை ஏற்படுத்துகின்றார். ஆதலால் பெற்றெடுத்த தந்தையே பயிற்றுவிப்பாளராக இருந்தால் அதன் தாக்கம் இன்னும் பலமாக இருக்கும்.

ஒரு ஆண் வீட்டில் ஒரு தந்தையாகவோ அல்லது பாடசாலையில் ஒரு ஆசிரியராகவோ அல்லது பள்ளிவாசலில் ஒரு இமாமாகவோ அல்லது சமூகத்தில் ஏதோ ஒரு பொறுப்புள்ள அங்கத்தவராகவோ இருக்க வேண்டும். ஒரு பெண் ஒரு வீட்டின் தாயாகவோ அல்லது பாடசாலையில் ஆசிரியராகவோ அல்லது சமூகத்தில் பொறுப்புள்ள ஏதோ ஒன்றில் அங்கத்தவராகவோ இருக்க வேண்டும். மொத்தத்தில் நாம் ஒவ்வொருவரும் பெற்றோராகவும், பயிற்றுவிப்பாளராகவும் இருக்கின்றோம். இதனால் நாம் பெற்றிருக்க வேண்டிய சில அடிப்படைப் பண்புகளை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இப்பண்புகளில் இஹ்லாஸ் எனும் மனத்தூய்மை ஒரு மு.்மினின் செயற்பாடுகளுக்குரிய முக்கிய அளவு கோலாகும். மனத்தூய்மை இல்லாத எந்தச் செயலையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்ளமாட்டான். அவனின் திருப்திக்காகவென ஒரு செயலை செய்கின்ற போது தான் அதில் பரகத் இருக்கின்றது. இதனால் தான் மனிதர்களுக்கெல்லாம் முதன்மைப் பயிற்றுவிப்பாளராக விளங்கிய நபி (ஸல்) அவர்கள் இப்படிப் போதித்தார்கள். 'செயல்கள் அனைத்துக்கும் எண்ணங்களை வைத்தே கூலி வழங்கப்படும். ஒவ்வொரு மனிதருக்கும் தான் நாடியதே கிடைக்கும்'. இந்த அடிப்படையிலேயே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது தோழர்களைப் பயிற்றுவித்தார்கள்.

எனவே பெற்றோர்களும் ஆசான்களும் தமது பயிற்றுவித்தல் மூலம் ஒரு சிறந்த ஸாலிஹான பரம்பரையை உருவாக்க வேண்டும் என்றும் அதன் மூலம் அல்லாஹ்வின் பூரண திருப்தி கிடைக்க வேண்டும் என்றும் நல்லெண்ணம் கொள்வது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர், பயிற்றுவிப்பாளர்களிடம் காணப்பட வேண்டிய முக்கிய பண்புகளில் இன்னொன்று இறையம்சமாகும். எனவே ஒவ்வொரு பெற்றோர்களும், பயிற்றுவிப்பாளர்களும் எல்லா நிலையிலும் (இரகசியத்திலும் பரகசியத்திலும்) தான் செய்யும் அனைத்துக் காரியங்களிலும் அல்லாஹ் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வுடனும், தங்களின் இலட்சியம், சிந்தனைகள், நடத்தைகள், பழக்கவழக்கங்கள் அனைத்தும் இறைவனைச் சார்ந்த செயற்பாட்டுடன் தன்னை அமைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறே அல்லாஹ்வின் ஏவல் விளக்கங்களைப் பேணிக் கொள்ளும் மனோபக்குவமும் அவசியமாகின்றது. அப்போது தான் அவர்களால் பயிற்றுவிக்கப்படுகின்ற பிள்ளைகளும் இறைவனைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள்.

இப்பயிற்றுவிப்பாளர்களிடம் முதலில் அல்குர்ஆன், ஹதீஸ் மற்றும் இஸ்லாத்தின் அடிப்படைகள் பற்றிய அறிவுப்பின்னணி இருக்க வேண்டும். இவைபற்றிய தெளிவு இல்லாதபோது குழந்தைகளுக்கு இஸ்லாத்தைத் தெளிவுபடுத்தவோ விளங்கவோ அவர்களால் முடியாமல் போகும். அத்துடன் குழந்தை வளர்ப்பின் அவசியம். குழந்தைகளின் இயல்புகள், அவர்களின் அடிப்படைத் தேவைகள், பிள்ளையின் வழிகேட்டிற்கான காரணிகள், பயிற்றுவித்தல் முறைகள், சிறுவர் உளவியல் போன்றன பற்றிய அறிவுப் பின்னணியைக் கொண்டிருப்பது அவசியமாகும். பயிற்றுவிப்பாளர்கள், பெற்றோர்கள் குறிப்பாக குழந்தைகளின் வயதெல்லை அவ்வயதெல்லைக்கு ஏற்ற அவர்களின் இயல்புகள், தேவைகள், அவை எவ்வாறு மாற்றமடைகின்றன? அத்தகைய மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் அவர்களை எவ்வாறு வழிப்படுத்துவது போன்ற விடயங்களில் போதியளவு அறிவையும் செயற்பாடுகளையும் கொண்டிருக்க வேண்டும். இன்று மேற்கு உலக நாடுகள் இதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதுடன் பயிற்றுவிப்பாளர், பெற்றோர்களுக்கு இது சம்பந்தமான பயிற்சிப்பட்டறைகளையும் நடத்துகின்றன. மேலும் பயிற்றுவிப்பாளர்கள், பெற்றோர்கள் சமகால உலக நிகழ்வுகள் பற்றியும் அறிந்திருக்க வேண்டும். எனவே தன்னை தகுதியானவராக ஆக்கிக் கொள்வது அவசியமாகும். குழந்தை வளர்ப்பு பற்றிய நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றை வாசிக்கலாம். வானொலி கேட்கலாம். தொலைக்காட்சி நிகழ்வுகளை பார்க்கலாம். வாசிப்பு பிரியமுடையவராகவும் நாளாந்த செய்திகளை அறியக்கூடியவராகவும் இருக்க வேண்டும்.

பிள்ளையின் சமகால கேள்விக்கு விடையளிக்கக் கூடியவராக இல்லாவிட்டால், பிள்ளைகள் பெற்றோர் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் மீது நம்பிக்கை இழந்து விடுவார்கள்.

அடுத்த பண்பாக கொள்ளக்கூடியது சிறந்த முன்மாதிரியாகும். ஒரு விடயத்தை அறிவினால் கற்றுக் கொள்வதற்கு கண்களினாலேயே கற்றுக் கொள்கின்றனர். இந்த உண்மையை பெற்றோர்களும், பயிற்றுவிப்பாளர்களும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். குழந்தைகள் எப்போதும் பெரியவர்களை பின்பற்றி நடப்பதில் அதிக ஆர்வம் கொண்டிருப்பார்கள். இது அவர்களின் இயல்பாகும். இந்த உண்மையை பெற்றோர்களும், பயிற்றுவிப்பாளர்களும் புரிந்து கொள்ள வேண்டும். எனவே பெற்றோர், பயிற்றுவிப்பாளர் என்ற வகையில் எமது சொல்லும் செயலும் முரண்படக்கூடாது. இவ்வாறு முரண்படும் போது அது குழந்தைகளிடத்திலும் முரண்பாட்டை தோற்றுவிக்கும். இஸ்லாம் சொல்லும், செயலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்படுவதைக் கண்டிக்கின்றது. அது அல்லாஹ்விடத்தில் மிக வெறுப்புக்குரிய விடயம் என எச்சரிக்கின்றது. இதனை கீழ்வரும் அல்குர்ஆன் வசனம் விளக்குகிறது.

'விசுவாசிகளே! நீங்கள் செய்யாதவற்றை ஏன் (பிறருக்கு) சொல்கின்றீர்கள்? இவ்வாறு நீங்கள் செய்யாதவற்றைப் பிறருக்குச் சொல்வது அல்லாஹ்விடத்தில் மிக வெறுப்புக்குரிய விடயமாகும்' பயிற்றுவிப்பாளர், பெற்றோர்களிடத்தில் முன்மாதிரி இல்லாத போது குழந்தைகளுக்கு தாம் செய்கின்ற எந்த உபதேசமோ, பயிற்றுவித்தலோ, நன்மையளிக்க மாட்டாது எமது முன்னோர், மூதாதையர் தங்கள் குழந்தைகளுக்காக சிறந்த முன்மாதிரியாகவே வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். அழகிய பண்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். இப்படியான சிறந்த முன்மாதிரியான பயிற்றுவித்தல்களினால் தான் ஒரு சிறந்த பரம்பரையை உருவாக்க முடியும்.

பொறுப்புணர்வு என்ற அம்சம் பயிற்றுவிப்பாளரிடமும் பெற்றோரிடமும் காணப்பட வேண்டிய பண்பாகும். இதனை நாம் உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும். பொறுப்புக்கள் இல்லாத எந்த மனிதனும் உலகில் இருக்க முடியாது. குறிப்பாக பெற்றோர்கள், பயிற்றுவிப்பாளர்கள், ஆசிரியர்களிடமும் இப்பொறுப்புணர்வில்லாத போது சமூகத்தில் அதன் பாதிப்பு பாரதூரமாக அமையும். ஏனெனில் சமூக சீர்திருத்தத்தில் இவர்களின் பங்களிப்பு தட்டிக் கழிக்க முடியாததாகும். இந்த உண்மையையே நபியவர்கள் இவ்வாறு உணர்த்திக் காட்டினார்கள். 'நீங்கள் ஒவ்வொருவரும் மேய்ப்பாளர்களே நீங்கள் உங்கள் பொறுப்பிள்யுள்ளவைப் பற்றி வினவப்படுவீர்கள்.

எனவே பெற்றோர்கள் தமது குழந்தைச் செல்வங்கள் அல்லாஹுத்தாலா எம்மீது சுமத்திய அமானிதம் என்ற உணர்வுடன் செயற்பட வேண்டும். அந்த அமானிதத்தை அல்லாஹ்வின் திருப்தியை பெறக்கூடிய வகையில் பேணிப் பாதுகாத்து சமூகத்திற்கு பிரயோசனமானவர்களாக வளர்த்து நெறிப்படுத்தி விடுவதும், அவர்களுக்கு சிறந்த முன்மாதிரியை வழங்குவதும் தமது தலையாய கடமை என ஒவ்வொரு பெற்றோரும், பயிற்றுவிப்பாளர்களும், ஆசிரியர்களும் உணர வேண்டும். அத்துடன் ஒவ்வொரு நாளும் பிள்ளைகளின் சீர்திருத்தம் பற்றிய கவலையும், அக்கறையும் பெற்றோரிடமும் பயிற்றுவிப்பாளர்களிடமும் ஏற்பட வேண்டும். அவர்களின் நலனிற்கும் எதிர்கால வாழ்விற்கும், அவர்களின் சீர்திருத்தங்களுக்காகவும் பாடுபடுவது அனைவரினதும் கடமையாகும் என்பதை மனதார ஏற்று செயற்படுவதை பொறுப்புணர்வு என்பதன் மூலம் விளங்கி செயற்பட வேண்டும்.

இவர்களின் அடுத்த பண்பாக இரக்கம், அன்பு கொண்டவர்களாக திகழ வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் தமது பெற்றோரிடமும் இதனை எதிர்பார்க்கின்றது. பெற்றோர்களிடம் இது கிடைக்காத போது மற்றவர்களிடம் அதனைத் தேடிச் செல்கிறது.

குழந்தைகள் கடினமாக நடந்து கொள்கின்ற பெற்றோர்களை ஒரு போதும் விரும்புவதில்லை. தன்னுடன் புன்னகை புரிகின்ற தனது தலையை தடவி ஆறுதல் படுத்துகின்ற தன்னை முத்தமிடுகின்ற, தன்னோடு சேர்ந்து விளையாடுகின்ற, தனக்கு அன்பளிப்புக்கள் வழங்குகின்ற, தனது பிழைகளை அன்பாகச் சொல்லி திருத்துகின்ற,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் தங்கள் விவகாரங்கள் பற்றி விசாரிக்கின்ற, கலந்தாலோசிக்கின்ற, இரக்கமுள்ள பெற்றோர்களையே விரும்புகின்றனர்.

உண்மையிலேயே இத்தகைய பண்புகளைப் பெற்றிருக்காதவர்களால் பிள்ளைகளை நல்லவர்களாக வளர்ப்பது சிரமமாகும். ஏனெனில் குழந்தைகளின் சீரான உடல், உள வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் பெற்றோர்களின் அன்பு இன்றியமையாததாகும். நபி (ஸல்) அவர்கள் சிறந்த பயிற்றுவிப்பாளர்களாக வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். கீழ்வரும் சம்பவங்கள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும். இமாம் புஹாரி (றஹ்) அவர்கள் கூறுகிறார்கள். ஒரு முறை நபியவர்கள் ஹஸன் (றழி) அவர்களை முத்தமிட்டார்கள். இதனைக் கண்ட அக்ரம் பின் ஹாபிஸ் என்ற மனிதர் என்னிடம் 10 குழந்தைகள் இருந்தும் அவர்களில் ஒருவரையும் முத்தமிட்டது கிடையாது என்றார். இதனைக் கேட்ட நபியவர்கள் 'யார் இரக்கம் காட்டவில்லையோ அவர் இரக்கம் காட்டப்படப்படமாட்டார்? என்றார்கள். இதிலிருந்து பெற்றோர், பயிற்றுவிப்பாளர்கள் அன்பும் இரக்கமும் உடையவராக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பயிற்றுவிப்பாளர்களின் மற்றைய பண்பு பொறுமையும், நிதானமும் ஆகும். அல்லாஹ் இந்த இரண்டு பண்புகளையும் விரும்புகின்றான். குறிப்பாக குழந்தை வளர்ப்புக்கு இவை மிக அவசியமானதாகும். பொதுவாக குழந்தைகளின் இயல்புகள் இவ்விரு பண்புகளையும் பெற்றோர்களிடம் எதிர்பார்த்து நிற்கின்றன.

பெற்றோர் அல்லது பயிற்றுவிப்பாளர். பொறுமையையும் நிதானத்தையும் இழக்கின்ற போது அவர்களிடம் கோப உணர்வு ஏற்படுகின்றது. இதனால் அவர்கள் குழந்தைகளுடன் வன்மையாகவும், கடினமாகவும் நடந்து கொள்கிறார்கள். அப்போது குழந்தைகள் சிறு தவறுகளைச் செய்தாலும் கூட அவர்களை கடுமையாக தண்டிக்கின்றார்கள். மன்னிப்பு கேட்டாலும் கோபம் குறைவதில்லை. இது பிள்ளைகளின் நடத்தையில் எதிர்வினையை ஏற்படுத்தக் கூடியதாகும்.

எனவே பெற்றோர், நிதானமாகவும் பொறுமையாகவும் நடந்து கொள்ள வேண்டும். இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள். நபியவர்கள் அஷ்ஜ.'. பின் அப்து கைஸ் என்ற தோழரைப் பார்த்து 'உம்மிடம் அல்லாஹ் விரும்புகின்ற இரண்டு பண்புகள் இருக்கின்றன அவை பொறுமை, நிதானம் என்பனவாகும் என்றார்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கவனத்தில் கொண்டு தாம் கொடுத்த கட்டளைகளை மீண்டும் ஞாபகப்படுத்தி அதனை செய்விக்க முனைய வேண்டும். பல தடவைகள் செய்யாவிடத்து தண்டனை பற்றி சிந்திக்கலாம். இவ்வாறு குழந்தை பருவத்தில் நிதானமாக செயற்பட வேண்டும்.

மேலும் பயிற்றுவிப்பாளரின் இன்னுமோர் பண்புகள் நீதியாக நடந்து கொள்ளல் ஒரு மு.'.மினைப் பொறுத்தவரையில் எல்லா விவகாரங்களிலும் நீதியாக நடந்து கொள்ள வேண்டும். குழந்தை வளர்ப்பில் ஈடுபடக்கூடிய பெற்றோர்கள். பயிற்றுவிப்பாளர்கள், ஆசிரியர்கள் நீதியாகவும் உண்மைத் தன்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும். எத்தகைய நிழலும் இல்லா மறுமை நாளில் தனது அர்ஷின் கீழ் நிழல் கொடுக்கின்ற ஏழு மனிதர்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியாக நடந்து கொண்ட அரசரும் ஒருவராவார். பொதுவாக எல்லாப் பிள்ளைகளும் ஒரே அறிவுத்தரத்தை, திறமைகளைக் கொண்டிருப்பதில்லை என்பதை பெற்றோர் அறிந்து கொள்ள வேண்டும். அவர்களை சரியாக நெறிப்படுத்த வேண்டும். பாரபட்சம் காட்டாமல் அவர்களுக்கு உதவ வேண்டும்.

எனவே மேற்கூறப்பட்ட பண்புகளான மனத்தூய்மை, இறையச்சம், அறிவு, சிறந்த முன்மாதிரி, பொறுப்புணர்வு, இரக்கம் அன்பும், பொறுமை, நிதானம் உளக் கட்டுப்பாடு, கோபப்படாமை , உண்மை பேசல், நீதியாக நடத்தல் , விட்டுக் கொடுத்தல் மேன்மை போன்றவை ஒரு பயிற்றுவிப்பாளர்: பெற்றோர்கள், ஆசிரியர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகள். இவற்றினை கடைப்பிடித்தால் எமது எதிர்கால குழந்தை செல்வங்களின் எதிர்காலத்திற்கு சரியான பாதையை காட்டமுடியும் என்பதைக் கூறினால் அது மிகையாகாது.

ஆக்கம்

திருமதி.பௌசுல் அமீர் றிஸானா

ஆசிரியர்

தி/ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# මත්ද්‍රව්‍ය නිවාරණය හා අධ්‍යාපනයේ කාර්යභාරය

වර්තමාන ශ්‍රී ලංකාවේ වැඩි අවධානයක් යොමු වී ඇති මාතෘකාවක් වන්නේ මත්ද්‍රව්‍ය නිවාරණයයි.මෙය එතරම් බැරෑරුම් මාතෘකාවක් වීමට හේතු රාශියක් බලපා ඇත.මත්ද්‍රව්‍ය භාවිතය සම්බන්ධ වර්තමාන තත්ත්වය විවිධ ආයතනයන්ගේ සංඛ්‍යාත්මක තොරතුරු අනුව විග්‍රහ කර බලන විට මූලික ලෙස දුම්වැටි මත්ද්‍රව්‍ය සහ මද්‍යසාර වශයෙන් වෙන් වෙන් වශයෙන් හඳුනා ගත හැකිය.ඒ අනුව 2012 වර්ෂයේ ලෝක සෞඛ්‍ය සංවිධානයේ දත්ත වලට අනුව හඳුනාගෙන ඇත්තේ තරුණයින් අතර දුම්කොළ භාවිතය 8.5% ක් ද දුම්වැටි භාවිතය 1.5% ක්ද බවයි.ඒ අතරින් දුම්කොළ භාවිතය පිරිමි දරුවන් අතර 15.7% ක්ද දුම්වැටි භාවිතය2.8%ක් ද ගැහැණු දරුවන් අතර දුම්කොළ භාවිතය 5.4% ක් හා දුම්වැටි භාවිතය 0.3% ක් ද ලෙස දක්වා ඇත.(Who 2011 Survey)[1] අන්තරායකර ඖෂධ පාලක ජාතික අධිකාරිය මගින් 2013 දී කුලියාපිටිය ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාසයේ සිදු කරන ලද සමීක්ෂණයකට අනුව අවුරුදු 15 හා ඊට වැඩි පිරිමි ජනගහනයෙන් මද්‍යසාර භාවිතය 46.36%, දුම්වැටි භාවිතය 24.8% (NDDCB Survey 2013)[2] ද වන බව පෙන්වා දී ඇත.මෙම දත්තය එක් ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාසයක වුවද සමස්ථ ශ්‍රී ලංකාවේම තත්ත්වය මෙසේ බව පෙනී යයි.මෙහි ඇති වැදගත්කම වන්නේ ලෝක සෞඛ්‍යය සංවිධානයේ දත්තවලට අනුව මෙම තොරතුරු වයස අවුරුදු 13 ත් 15 ත් අතර නව යොවනවන් සම්බන්ධ වීමයි.NDDCB වාර්තාව අනුව අවුරුදු 15 ට වැඩි පිරිස අතර පාසල් සිසුන්ද ඇත.මෙම අවධියේදී සිදුවන මත්ද්‍රව්‍ය හා දුම්වැටි භාවිතයේ ආරම්භය බොහෝ විට එයට ඇබ්බැහි වීම දක්වාම විහිදී යයි.එම නිසා වයස අවුරුදු 13 සිට පාසල් හැර යන වයසේ සිසුන් දක්වා සිසුන් මත්ද්‍රව්‍ය භාවිතයෙන් වලක්වා ගැනීමේ කාර්යය අධ්‍යාපනයේ වගකීමක් වේ.

දෛනිකව ශ්‍රී ලංකාව තුළ දවාලන රුපියල් මිලියනගණනක් වූ මුදල රට තුළ ඉතිරි කර ගැනීමට බෝ නොවන රෝග සඳහා දෛනිකව රජය වැය කරන අති විශාල මුදල් ප්‍රමාණයත් ආරක්ෂා කර ගනිමින් සෞඛ්‍යමත් ජාතියක් ගොඩනැගීමේ මූලික හැකියාව ඇත්තේ පාසලටයි.සිසුන් මත්ද්‍රව්‍ය නිවාරණය පිළිබඳව හොඳින් දැනුවත් කිරීම මෙහිලා ප්‍රමුඛතම කාර්යයයි.ඒ සඳහා ප්‍රවේශ වීම ඉතාමත් සැලකිල්ලෙන් සිදු කළ යුතු කාර්යයකි.මන්ද යත් අප ගන්නා එක් වැරදි පියවරක් ඔස්සේ තව තවත් සිසුන් මේවා අත්හදා බැලීමට පෙළඹීම සිදුවිය හැකිය.


මත්ද්‍රව්‍ය නිවාරණය සම්බන්ධයෙන් සිසුන් දැනුවත් කිරීමේදී සිසුන් අනුකරණයට පොළඹවන වීර චරිත , වෙළඳ ප්‍රචාරයන් බවත් මත්ද්‍රව්‍ය හා දුම්වැටි භාවිතය මගින් වීරයන් වීමට උත්සහ දරන්නේ වෙන කිසිවකින් තම හැකියාවන් පෙන්වීමට නොහැකි පුද්ගලයින් බවත් පෙන්වා දීම සහ මත්ද්‍රව්‍ය යකෙක් හෝ රකුසෙක් ලෙස පෙන්වා ඒවා භාවිත කරන්නන් වීරයින් බවට පත් කිරීම වෙනුවට මත්ද්‍රව්‍ය භාවිතය වීරයෙකු වීමේ නොහැකියාව වසා ගැනීමේ මෙවලමක් ලෙස භා කරන බව සිසුන්ට අවබෝධකරවීම මගින් වඩාත් සාර්ථකව මෙම කාර්යය සිදු කළ හැකිය.

එසේම නිවසේ පරිසරය තුළ සිසුන්ට මත්ද්‍රව්‍ය භාවිතය සඳහා ලැබෙන දිරිගැන්වීම අපමණය.නිවසේ එදිනෙදා ලැබෙන දිරිගන්වන සුළු වචන භාවිතය සහ නිවසේ සතුටුදායක අවස්ථා සඳහා යොදා ගන්නා දේවල් බව තහවුරු කර ගන්නා අතර තමාගේ සතුටුදායක අවස්ථා සැමරීම සඳහාද ඒවා යොදා ගැනීමට පෙළඹේ.එසේම මාධ්‍ය මගින් නිතරම පෙන්වන මද්‍යසාර හා දුම්වැටි භාවිත කරන ආකර්ෂණීය නළුවන් ද සිසුන් මේවා අත්හදා බැලීමට යොමු කරවන සාධකයන් වේ. මෙම මත්ද්‍රව්‍ය මද්‍යසාර හා දුම්වැටි වටා ඇති සියලුම ක්‍රියාකාරකම් අලුතින් යම් පිරිසක් භාවිතය සඳහා යොමු කරවා ගන්නා සූක්ෂම ආකාරයේ උපක්‍රමයන් බවත් තමාගේ දක්ෂකම හා වීරත්වය වන්නේ ඒවා සත්‍ය ලෙස අවබෝධ කරගනිමින් කටයුතු කිරීම බවත් සිසුන්ට වටහා දීම මත්ද්‍රව්‍ය හ දුම්වැටි නිවාරණය සඳහා සිසුන් වෙත ලබා දිය හැකි නිවැරදිම ප්‍රතිශක්තිකරණය වේ.ඒ සඳහා පාසල් මත්ද්‍රව්‍ය නිවාරණ කමිටු බලගන්වා සිසුන් මත්ද්‍රව්‍ය නිවාරණ කටයුතු සඳහා සක්‍රියව දායක කර ගැනීමෙන් මත් උවදුරෙන් තොර පාසල් පරිසරයක් සකස්කර ගැනීම විදුහල්පතිවරුන්ගේ ප්‍රමුඛ වගකීමක් වේ.

පී.ඩබ්.එන්.පී ගුණසේකර(Dip in NCOE, BA,PGDEM,Med)
සහකාර අධ්‍යාපන අධ්‍යක්ෂ,
මත්ද්‍රව්‍ය නිවාරණ ඒකකය
අධ්‍යාපන අමාත්‍යංශය



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'என் பிள்ளை .......... சிறுகதை'

'என்ன பிள்ளை இண்டைக்கு பள்ளிக்குப் போற நோக்கம் இல்லப்போல இருக்கு' என்று தாயார் முணுமுணுத்துக் கொண்டே தன் வேலைகளைத் தொடங்கி விட்டார். ஆனால் அவர் வாயோ ஓயவில்லை. 'வெள்ளெண எழும்பி படித்தால் தானே மனதில் பதிய, எங்களுக்காக படிக்க வேண்டாம். உங்கட எதிர்காலத்திற்காக படியுங்க எங்களை எங்கட தாய் தகப்பன் ஒழுங்காக படிப்பித்து இருந்தா இண்டைக்கு இப்படி கஸ்ரங்களை அனுபவிக்க வேண்டி வராது'.

'பிள்ளை.. நான் வீட்டு வேலைக்கு போக வேணும். அவ ரீச்சர் நேரத்திற்கு வரச் சொல்லுறா. உன்னை பள்ளிக்கு அனுப்ப முதலே என்ர அரைவாசி சக்தி முடிஞ்சு போகுது. கெதியாக வெளிக்கிடு, புட்டு அவிச்சு வைச்சிருக்கன். பழைய கறி இருக்கு. எடுத்துச் சாப்பிடு இப்படியே கதை ஓயாமல் தன் வேலைகளை ஓய்வுக்கு கொண்டு வந்து விட்டு செல்வதற்கான ஆயத்தங்களை செய்கிறார் தாய் மீனாச்சி.

மகளோ அசைந்த மாதிரி இல்லை. 'என்ன பிள்ளை ஏன் ஏதாவது வருத்தமா? அம்மாவை கஸ்டப்படுத்தாதே. கெதியா எழும்பம்மா. ஏன் தயங்கிறா, பள்ளியில ஏதாவது பிரச்சனையா? இல்லை இண்டைக்கு உங்களை ரீச்சர் வரட்டாம். நீங்க வராட்டி என்னை வகுப்பறைக்குள் விட மாட்டினம் என்னம்மா செய்ய? 'ஏன் பிள்ளை என்ன பிரச்சனை' நான் எல்லாப் பாடத்திலையும் குறைவாம். உங்களைக் கூப்பிட்டு கதைக்கப் போகினமாம். ஏன் பிள்ளை நீ ஒழுங்கா படிச்சு புள்ளியை எடுத்தா ஒரு பிரச்சனையும் இல்லை. உன்னைப் படிக்க வைக்கத் தானே நான் அடுத்தவை வீட்டு சட்டி பானை கழுவி வீடு வாசல் பெருக்கி உடுப்புத்தோச்சு பத்தாதென்று இரவிலே இடியப்பம் அவிச்சு விற்கிறன். இதுக்கு மேல என்ர கஸ்ரம் உனக்கு நான் எப்படி விளங்கப்படுத்துகிறது?

'ஏன் ரீச்சர்மார் படிப்பிக்கேக்குள்ள என்ன மகள் செய்யிறனி, இனி அவையள் கூப்பிட்டு எது கதைச்சாலும் எனக்கு அழுகை வந்து விடும். உலகத்துப் பிள்ளை எல்லாம் கெட்டித்தனமாய் படிக்க என்ர கஸ்ரத்தைப் பார்த்தும் என்ர பிள்ளை மட்டும் படிக்கேல்ல என்று நினைக்கவே வயிறு பத்தி எரியுது. நான் வேலைகளை செய்து முடிச்சுப் போட்டு பள்ளிக்கூடம் விடுகிறதுக்கு முதல் வந்திர்றன். நீ இப்போ போ. உன்னை தனிய விட்டு வேலைக்குப் போக முடியாது. உலகம் கெட்டுப் போய்க்கிடக்கு. நொடிப் பொழுதிலே எல்லாம் நொருங்கிப்போம். ஆண்டவன் தந்ததும் பெண்பிள்ளையைத் தந்து உலகத்து சுமை எல்லாம் என்னில சுமத்தி இருக்கிறானே'.

'அம்மா அம்மா! தேவை இல்லாமல் கதையாதேங்கோ. உங்களை வரச் சொன்னா வாங்கோ. ரீச்சரோட தேவையில்லாத கதை ஒன்றும் கதைக்க வேண்டாம். என்ன சொன்னாலும் கேட்டு விட்டு வாங்க. நான் இப்ப பள்ளிக்குப் போறன். 'சரி சரி நீ போ. நான் நிலைமையைப் பார்த்து வாரன்.

மீனா பள்ளிக்கு வரும் வழியிலே ஆயிரம் எண்ணம். அவை யாவும் எங்கள் வீட்டு நிலைமை யாருக்கு விளங்கும். இதை பிள்ளைகளுக்கு முன்னால் இண்டைக்கு அம்மா வந்து சொல்லப் போறா. ரீச்சர் வேற மற்ற பாட ரீச்சருக்கு சொல்லுவா. இப்படியே கதை பரவும். இன்றைக்கு எத்தனை பாடம் வெளியில் நிற்பதோ தெரியாது. யார் இந்த பள்ளிக்கூடத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு பிடிச்சது. எனக்கு அம்மாவோட வீட்டில் இருக்கத் தான் விருப்பம். ஒரு பிள்ளையாய் இருந்தும் எனக்கு ஆறுதல் இல்ல. இந்தப் படிப்பால.

வாசல் வரை சென்றதும் வாசலில் நுழைந்ததும் வகுப்பாசிரியர் கண்டுவிட்டார். 'உன்ர அம்மாவுக்கு உன்னைப் பார்க்க நேரமில்லை. வரச் சொன்னா வரா. யாருக்கு உழைக்கிறார் என்று தெரியல்ல. அப்படியே அசையாமல் நின்று ஆசைக்குப் பேசி முடிந்ததும் புத்தக பையை கழற்றி வைக்கு முன் மௌன அஞ்சலி செலுத்தியது போதும் போய் புத்தகப்பையை வைச்சிட்டு இரண்டு பாடம் எழும்பி நில்லு. இது என்ன தலையிடி விடிய அது தான் அந்த மனுசியை நேரத்துக்கு வா' என்றனான்.

அடுத்த பாட ஆசிரியர் 'சரி சரி எழுப்பி விட்டும் பிரயோசனம் இல்லை. சரி சரி இடத்தில இரு. என்ர பாடம் பெயில் தான் இரு. அடுத்த பாட ஆசிரியர் வர முதலே நீ பிள்ளை மாணவ தலைவியிட்ட போ. எனக்கு உன்னைக் கவனிக்க முடியாது. வயது போன காலத்தில உயிரை வாங்கிறியள். 'இப்படியே கேட்டுக் கொண்டிருந்த மீனாவுக்கு வெறுப்பு அதிகரித்து விட்டது.

இருந்தாலும் அடுத்த பாட ஆசிரியர் என்னருகில் வந்து 'என்னம்மா கொப்பியை பார்ப்பம். ரீச்சர் தந்தது எழுதி இருக்கிறியா? நீ என்ர பாடத்திற்கு என் மேசையில் என் அருகில் கதிரையைப் போட்டு இரு. வீட்டுப் பாடமாய் தந்த கேள்விகள் எல்லாம் ஆறுதலாய் பார்த்து எழுதின என்றாலும் விடை எழுதி ரீச்சருக்கு காட்ட வேணும். என்ன குஞ்சு அம்மா பாவமடி. உன்னை படிப்பிக்க படுகிற பாட்டை நான் தினமும் அயல் வீட்டில் பார்க்கிறன் என்று சொன்ன மாத்திரத்தில் ஆசிரியர் கண் கலங்கி விட்டது. என் கண்கள் என்ன சும்மாவா இருக்கும். சுமை நெஞ்சை அழுத்த கண்ணீர் கசிய ஒன்றும் பிந்தவில்லை.

அம்மா எப்ப வருவார். எங்க அம்மா பாவம். என்ன நடக்கப் போகுதோ. அதிபரிட்ட தான் அனுப்புறாங்களோ தெரியாது. அம்மா தைரியம் இல்லாதவ. யார் எதைச் சொன்னாலும் கேட்டிட்டு வருவார்.

எட்டாம் பாடம் தொடங்கி விட்டது. எனக்கு அம்மாவின் அப்பாவி முகம் அடிக்கடி வந்து போகும் வரும் பாதை வழியில் கதைத்து மறிப்பவர் என்று ஆயிரம் வீட்டாரும் ஓடி ஆங்காங்கே முறிவடையும். ஆதங்கம் பொங்கி வழிகிறது. அம்மாவைக் காணவில்லை. எட்டி எட்டிப் பார்த்து இதயம் சிதறிப் போச்சு. அப்பாடா வந்திட்டா. இனி என்ன நடக்கப் போகிறதோ ஓடிப் போய் அன்பான ஆசிரியரிடம் 'எனது வகுப்பாசிரியரை ஒன்றும் கதைக்க வேண்டாம் என்று சொல்லுங்கோ ரீச்சர். அம்மா பாவம் நொந்து போயிடுவா. அவவுக்கு நான் தான் உலகம் எனக்கு நீங்க படிப்பிக்காட்டில் பரவாயில்லை. அம்மாவை அவமானப் படுத்தாவிட்டால் சரி. நான் இனிப் படிப்பன். உங்கட சொல்லைக் கேட்பன்' எனக் கெஞ்சி மன்றாட முன்னரே வகுப்பாசிரியரைத் தாயார் சந்தித்து விட்டார்.

'ஏன் ரீச்சர் என்ர பிள்ளை ஏதாவது பிழை செய்ததோ? இல்லை உங்கட பிள்ளை ஒண்டும் படிச்சு வாறதில்லை. படிப்பிக்கும் போது கவனிக்கிறதும் இல்லை. எல்லாப் பாடத்திலும் மாக்ஸ் குறைய. ஏதாவது நல்ல ரியூசனுக்கு அனுப்புங்கோ' ஏன் ரீச்சர் இங்கு ஒரு தரும் நல்லா படிப்பிக்க மாட்டினமோ? அதுக்காக சொல்லேல்ல உங்கட நன்மைக்கு தான் சொல்லுறம். வீட்டுப்பாடம் ஒன்றும் செய்து வாறேல்ல. 'எனக்குத் தெரிஞ்சா நான் சொல்லிக் குடுத்திருப்பன். எனக்குத் தெரியாத படியால் தானே பள்ளிக்கு அனுப்புகிறன். இது என்ன கதை ரீச்சர், படிச்சிக் கொடுக்கிறது தானே ரீச்சர்ற வேலை: ரியூசனுக்கு அனுப்புங்கோ' நான் படிச்சுக் கொடுக்கிறது எண்டா நானும் இனி பள்ளியில் சேந்தெல்லோ படிச்சுக் கொடுக்க வேணும்'

'நான் என்ர பிள்ளையை பள்ளிக்கு ஒரு நாள் தவறாமல் அனுப்பி இருக்கிறன். பத்து வருசமாக படிப்பிக்காமல் கவனிக்காமல் இருந்திட்டு இப்ப என்னைக் கூப்பிட்டு ரியூசனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுப் படிப்பியுங்கோ எண்டா என்ன கதை. நான் இதை அதிபர் அம்மாவிடம் கதைக்காமல் போகமாட்டன்'

பள்ளிக்கூடத்திலையும் என்ர பிள்ளைய கவனிக்கேல்ல எண்டா என்ன கதையிது அப்ப ரீச்சர் ஏன் கவனிக்கப் பண்ணல்ல. முன்னுக்கு இருக்கிற நான்கு பேருக்கு படிப்பிச்சிருப்பா. வகுப்பிலே இருக்கிற 16 பிள்ளை. இதுகளையும் கவனிக்க முடியாட்டி என்ன செய்யுறது. இதுகள் சம்பளத்தையும் எடுத்துக் கொண்டு ஏழைகள் எங்கள் வயிற்றில் எல்லா அடிக்குதுகள்.

பணக்காரப் பிள்ளைகள் ஏன் வாயைத் திறப்பான் எண்டு தனிப்பட்ட வகுப்புக்களில் படிச்சு நல்ல புள்ளியும் எடுக்குதுகள். நான் இந்த மூன்று மாதத்துக்குள்ள என்ன செய்யிறது. எனக்கு கடவுள் தான் துணை செய்ய வேணும். வேலைக்குப் போற ரீச்சரிட்ட கேட்டுப் பார்ப்பம் கொஞ்சம் அவவின்ர பாடத்தையாவது படிப்பிச்சு விடச் சொல்லி. இதுக்கு மேல என்ன தான் செய்யுறது.

அதிபரையும் சந்திக்காமல் போறேல்ல. அதிபர் வாசலில் வாங்க அம்மா. என்ன பிரச்சினை இருந்து கதையுங்கோ. ஐயா இப்படி என்ர பிள்ளை குறைய புள்ளி எல்லாப் பாடத்திலையும் எண்டு ரீச்சர்மார் குறை சொல்லினம்.

நானா படிப்பிக்கிறது. நான்கு, ஐந்து இடத்தில் அனுப்பி படிப்பிக்க எனக்கு வழியில்லை. பிள்ளையை பள்ளிக்கு ஒழுங்காக அனுப்பேல என்டால் என்ர பிழை தான். எனக்கு நெஞ்சு முழுக்க சுமை. பிள்ளைக்கு சாப்பாடு கொடுக்கவும் ஆரோக்கியமாக பேசவும் தான் முடியும். படிப்பிக்கிறது ரீச்சரிட வேலை தானே. அதை இவையள் என்னைச் செய்யச் சொன்னா நான் என்னய்யா செய்வன். ஏதோ நீங்க தான் பார்த்து செய்யுங்கோ. நீங்கள் பிள்ளையை படிக்க வையுங்கோ. வீட்டில படிக்கிறதை கவனியுங்கோ, ஊக்கப்படுத்துங்கோ. எல்லோரும் முயற்சி செய்தால் தான் வெற்றி கிடைக்கும். சரி ஐயா நான் வாறன் நான் என்ர அறிவுக்கு கதைச்சிருக்கிறன். ஏதும் பிழை என்டா மன்னியுங்கோ.

அம்மா வீட்டை வந்ததும் என்னவோ கதைச்சனி. நான் உன்னை இப்படி ஒரு நாளும் பார்த்ததே இல்லை. நான் படிப்பன். நீங்கள் கவலைப்படாதேங்கோ என்று துள்ளிக் குதித்து மகிழ்ந்தாள். மறுகணம் பாடசாலைக்கு போனால் என்ன நடக்குமோ மீண்டும் ஏங்கிக் கொண்டே படுக்கைக்கு சென்றாள் மீனா.

திரு.அழகுராஜா ஹரிகரன்,
ஆரம்பக்கல்வி (SP-TR), BED Dip SLPS
பிரதி அதிபர்
தி/குளக்கோட்டன் த.வி
தம்பலகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி முகாமைத்துவ தகவல் செயலமைப்பு (EMIS)
# (Educational Management Information System)

முறைசார் கல்வி அமைப்புக்களில் தகவல்களை முகாமை செய்தல் முக்கியமான ஒன்றாக அமைகின்றது. அந்த வகையில் தகவல் என்பது ஒரு இயற்கை வளம் அல்ல. அது வினைத்திறன், மற்றும் விளைதிறன் மிக்கதாக விருத்தி செய்யக் கூடியது. எனவே தான் தகவலை வளமாக மாற்றும் போது பாடசாலைகளில் செலவு பயன் உறுதி (Cost effectiness) உறுதிப்படுத்தப்படும். இங்கு தரவு (Data) ஒழுங்கான செய்முறைக்குட்படுத்தி அதனைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு உண்மை நிலையைத் தெளிவுப்படுத்துவதுடன் முடிவுகளை மேற்கொள்ள உதவும் அடிப்படையாகப் பயன்படும் வளமாக தரவுகள் பயன்படும் இந்தத் தகவல் வளமானது பாடசாலை முகாமைத்துவத்தில் பல்வேறு வகையான முடிவுகளை மேற்கொள்ள உதவியாக உள்ளது. மரபு வழியாக முகாமைத்துவத் தகவல் செயலமைப்பு (Management Information system) என்பதற்குப் பதிலாக தற்போது தகவல் தொடர்பாடல் தொழினுட்ப செயலமைப்பு (Information Communication Teachnology System) ஒன்றினூடாகப் பயன்படுத்தப்படுகின்றது.

தகவல் முகாமைத்துவம் என்பது ஒழுங்கான தகவல் செயலமைப்பை (Information System) உருவாக்கிக் கொள்வதை வலியுறுத்துகின்றது. இதன்படி தகவல்களைப் பெறுதல், தகவல்களை ஒழுங்கமைத்தல், பாதுகாத்தல், தேவைக்கேற்ப முடிவுகளை எடுப்பதற்கு பயன்படுத்தல் மீண்டும் சேமித்தல், தேவைக்கேற்ப புதுப்பித்துக் கொள்ளல் போன்ற எல்லாவற்றிற்கும் பொருத்தமான செயலமைப்பு ஒன்று உருவாக்குவதைக் குறிக்கும். தகவல்கள் நிறுவனத்தின் தேவைக்கேற்றவாறு மாற்றத்தக்கன. படிநிலைகளுக்கும் பரப்பக் கூடியன. நிறுவனத்தின் சிக்கனங்களுக்கும் பாடசாலையில் விரயங்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாகவும் தகவல்களை முகாமை செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். கணனி – வன்பொருள் (Hard ware) மென்பொருள் (Software) தொடர்பாடல் வலையமைப்பு (Comminication Network System) தகவல் வழங்கல், பயிற்சி பெற்ற ஆளணியினர், ஆகியோரைப் பொருத்தமான வகையில் ஒன்றிணைப்பது தான் தகவல் செயலமைப்பு (Information System) எனப்படும்.

பாடசாலைகளில் தகவல் செயலமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் பின்வரும் நன்மைகளைப் பெறக் கூடியதாக இருக்கும்.

- பாடசாலை அதிபர்கள், பிரதி உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலக ஊழியர்கள், வலயக் கல்வி அலுவலர்கள், கல்வித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களம் ஆகியோரது வினைத்திறனை அதிகரிக்க தகவல் முகாமைத்துவ செயலமைப்பு (MIS) உதவுகின்றது.

- பாடசாலைகளில் செயபடுகின்ற பணிக்குழுக்கள் ஒவ்வொன்றிலும் உற்பத்தித்திறன் அதிகரிக்கும்.

- பாடசாலைகளினது ஒவ்வொரு பகுதிகளினதும் அல்லது துறைகளினதும் வினைத்திறன் அதிகரிக்கும். இதனால் நிறுவனத்தின் முழுமையான விளைத்திறன் அதிகரிக்கும்.

உதாரணமாக பாடசாலை கோட்டம், வலய அலுவலகம் ஆகிய ஒவ்வொன்றினதும் வினைத்திறனை உயர்த்திக் கொள்வதற்கு உதவுகின்றது. பாடசாலைகளில் பௌதீக வளம், மனித வளம், நிதி வளம் தொடர்பாக ஒன்றிணைந்த பயன்களை உறுதிப்படுத்துவதற்கு தகவல் முகாமைத்துவம் அடிப்படையானது ஆகும்.

பாடசாலைகளில் அதிபர், பிரதி அதிபர் எல்லாத் தகவல்களையும் நல்ல தகவல்களாக மாற்றி வகைப்படுத்தி பகுப்பாய்வு செய்து தேவைக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பாடசாலைக்குரிய நல்ல தகவல்களைப் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

- ❖ கால எல்லை பற்றிய விபரம்
- ❖ எதிர்பார்க்கப்படும் தகவல்கள்
- ❖ எதிர்வு கூறலுக்கு உதவியாக இருக்கும் தகவல்கள்.
- ❖ பல்வேறு வகையான நிதி மூலங்கள் பற்றிய தகவல்கள்
- ❖ பாடசாலையின் கட்டமைப்பு பற்றிய தகவல்கள்
- ❖ தேவையான தரவுகளை மாத்திரம் கொண்டிருத்தல்

பாடசாலைகளில் தமது தகவல்களை பயன்படுத்தும் போது பின்வருவன உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

- ❖ குறித்த தேவைக்குரியதை வழங்கல்.
- ❖ முழுமையான தகவல்களை வழங்கல்
- ❖ கையாளுவதற்கு ஏற்றதாக வழங்கல்
- ❖ நம்பகரமானதாக இருத்தல்
- ❖ சரியான நபருக்கு வழங்கல்
- ❖ மேலதிக தகவல்களை வழங்காதிருத்தல்
- ❖ சரியான ஊடகத்தைக் கையாளுதல்
- ❖ செலவு வினைத்திறனைக் கொண்டிருத்தல்
- ❖ போதுமான பயிற்சியைக் கொண்டிருத்தல்

பாடசாலைகளில் திட்டமிடல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் சேமிப்பதற்கும் பகிர்ந்தளிப்பதற்கும், பகுப்பாய்வு செய்வதற்கும் தகவல்கள் உரியவாறு முகாமை செய்யப்படுவது அவசியமாகின்றது. மனித வளம், நிதி வளம், பௌதீக வளம், சக்திவலு, பெற்றோர்கள் தொடர்பான தகவல்கள், பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்க விழுமியங்கள் பாடசாலை தொடர்பான சூழல் பற்றிய ஆய்வுகள் என்பன முக்கியம் பெறுகின்றன.

பாடசாலை அதிபர் ஒருவர் தகவல் செயலமைப்பு தொடர்பான பின்வரும் உப பகுதிகள்/ செயலமைப்புக்கள் பற்றிய விளக்கத்தை கொண்டிருக்க வேண்டும்.


- அடிப்படை எண்ணக்கரு (Basic Concept)
  முகாமைத்துவ தகவல் செயலமைப்பு பற்றிய விளக்கத்தைப் பூரணமாகப் பெற்றுக் கொள்ளல்.
- தொழில் நுட்பம் (Technology)
  மென்பொருள், வன்பொருள், தகவல் தொடர்பாடல், தகவல் தொழில்நுட்பம், போன்ற அறிவினைக் கொண்டிருத்தல்
- பிரயோகித்தல் (Applied)
  தொழில்நுட்பம், தந்திரோபாயங்கள், நுட்பங்கள் என்பவற்றைப் பற்றிய பிரயோக அறிவைக் கொண்டிருத்தல்.
- அபிவிருத்தி நிலை (Development level)
  பல்வேறு பிரச்சனைகள் ஏற்படும் போது அவற்றிற்குத் தீர்வு காணும் ஆற்றலைக் கொண்டிருப்பதை இது குறிப்பிடுகின்றது. தீர்வு காண்பதற்குத் தகவல்களைப் பயன்படுத்துவதே பாடசாலை மட்டத்தில் முக்கியமானது.
- முகாமைத்துவ நிலை (Management Stage)
  அதிபர்கள், பாடசாலைத் தலைவர்கள் என்ற வகையில் எதிர் கொள்ளக்கூடிய சிக்கலான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு இவற்றைக் கையாளும் முறையே இது குறிப்பிடுகிறது.

எதிர் காலத்தில் பாடசாலைகள் தகவல் முகாமைத்துவம் தொடர்பாக மிக உயர்ந்த தரத்தினையும், பணிகளையும் ஆற்ற முடியும். அதற்குப் போதுமான கல்வியும், ஈடுபாடும் முதலீடும் தேவைப்படும் இவ்வாறு வளர்ச்சியடையும் போது தகவல் சார்ந்த குற்றங்கள் தகவல் ஒழுக்கக் கேடுகள் தொடர்பான பிரச்சனைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும். இதன் அடிப்படையில் இன்றைய கால கட்டத்தில் தகவல் மூலவள முகாமைத்துவம் (Information Resource Management) உலக தகவல் முகாமைத்துவம் (Global Information) தகவல் செயலமைப்பு திட்டமிடல் (Information System Planning) நடைமுறைப்படுத்தலும் திட்டமிடலும் போன்ற செயற்பாடுகளிற்கு முகாமைத்துவ தகவல் செயலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்ததொன்றதாக அமைகின்றது.

திருமதி I.M.முரளிதரன்
அதிபர். ( SLPS )
தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகாவித்தியாலயம்
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## "පංති කාමර ඉගැන්වීමේ කාර්යක්ෂමතාවය වැඩි දියුණු කිරීම සඳහා සැළකිය යුතු කරුණු"

- *ගුරු අධ්‍යාපනයේ මූලික අරමුණ*

පංති කාමරයේ ඉගෙනුම්-ඉගැන්නුම් කටයුතු වල කාර්යක්ෂමතාවය වැඩි දියුණු කිරිම අධ්‍යාපන ක්‍රමයක අගුඑලය ලෙස සැලකෙන ශිෂ්‍ය සාධනය කෙරෙහි ඍජු ලෙස බලපායි.පාසල් කළමනාකාරණය හා පංති කළමනාකරණය හේතු කොට ගෙන පංති කාමර ඉගෙනුම්-ඉගැන්වීම් කටයුතු කෙරේ ඇති වන බලපෑම් ශිෂ්‍යයින්ගේ අධ්‍යාපනික තත්වයන් නඟාලීමට හේතු වෙයි. ගුරුවරුන් පුහුණු කෙරෙන ආයතනවලත් මූලික අරමුණ වනුයේ මේ පංති කාමර ඉගෙනුම්-ඉගැන්වීම් අවස්ථා කාර්යක්ෂම කිරීම පිණිස අවශ්‍ය වන නිපුණතාවය හා ආකල්ප ගුරුවරුන් තුළ වර්ධනය කිරීම ය.

අප රටේ ඇති ගුරු අධ්‍යාපන ආයතන විවිධාකාර වන අතර ඒවා මගින් විවිධ තරාතිරම් වල ගුරුවරුන් සඳහා පුහුණු පාඨමාලා ඉදිරිපත් කෙරේ.උපාධිධාරින් සඳහා විශ්වවිද්‍යාල වලින් හා ජාතික අධ්‍යාපන ආයතනයේ ගුරු අධ්‍යපන ආයතනය මගින් ද අ.පො.ස උසස් පෙළ සමත් වූවන් සඳහා අධ්‍යාපන විද්‍යා පීඨ මගින් ද අභ්‍යාසලාභි ගුරුවරුන් සඳහා ජාතික අධ්‍යාපන ආයතනයේ දුරස්ථ අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව හා ගුරු විද්‍යාල මගින් ද විවිධ ආකාරයේ පාඨමාලා ඉදිරිපත් කරනු ලැබේ.මේ පාඨමාලා ස්වභාවය,සන්ධාරය ශිල්ප ක්‍රම හා කාල සීමාව ලෙස එකිනෙකට වෙනස් වූ ද එක අරමුණක් වශයෙන් සියලුම පාඨමාලා වල පොදු බවක් දක්නට ලැබේ.දක්ෂ ගුරුවරයෙකු වශයෙන් කටයුතු කිරීමට අවශ්‍ය දැනුම හා නිපුණතා ලබා දීමේ අරමුණ මේ සියලුම ආයතන වලට පොදුවේ මේ නිසා මේ හැම ආයතනයක්ම ගුරුවරුන් තුළ ප්‍රගුණ කරන්නට අපේක්ෂා කරන දැනුම හා හැකියා හේතුකොට ගෙන පංති කාමරය තුළ කෙරෙන කටයුතු වල ප්‍රගතියක් බලාපොරොත්තු වන බව තේරුම් ගැනීම දුෂ්කර නැත.

පංති කාමරයේ ප්‍රගතිය හා පංති කාමරයේ කාර්යක්ෂමතාවය යනුවෙන් අප මෙහි දී අදහස් කරනුයේ පංති කාමරයේ ඉගෙනුම් කටයුතු වල ඇති වන ප්‍රගතියයි.ගුරුවරයාගේ ඉගෙනුම් කටයුතු වල ස්වභාවය මත පංති කාමරයේ අනෙක් සියලුම කටයුතු රඳා පවතියි. ළමයින් උදාසීන වන්නේ හෝ කාර්යක්ෂම වන්නේ හෝ ගුරුවරයා අනුගමනය කරන ඉගැන්වීමේ ප්‍රවේශය අනුවය.නව මං සෙවීම විවිධ කරුණු ගවේෂණය ළමුන් තුළ දිරිගැන්වෙන්නේ ඉගැන්වීමේ දී ගුරුවරුන් අනුගමනය කරන ප්‍රවේශයේ ප්‍රතිඵල වශයෙනි.ගුරුවරයා උදාසීනවත් ම ළමයින්ගේ කටයුතු වලද උදාසීන බවක් ඇති වේ.ගුරුවරයා උද්යෝගිවෙත් ම ළමයින්ගේ කටයුතු ද උද්යෝගිමත් වේ.ශිෂ්‍ය ක්‍රියාකාරකම් කුමන අයුරින් බලපාන්නේද යන්න තේරුම් ගැනීමට වැඩි අටුවා ටීකා අවශ්‍ය නොවේ.එය අත්දැකීමෙන් ම අපි පසක් තර ඇත්තේමු.

- *එදිනෙදා පාඩම් වලට සූදානම් වීමේ වැදගත්කම*

ගුරුවරයෙකුගේ ඉගැන්වීමේ කාර්යක්ෂමතාව කෙරේ බලපාන එක වැදගත් කරුණක් නම් ඔහු කෙතරම් නම් තම පාඩම් සඳහා සූදානම් වන්නේද යන කරුණයි.පාඩම් සඳහා සූදානම් වීම වැදගත් වන්නේ තම පාඩම් හා අදාළ සියලුම ක්‍රියාකාරකම් සැළසුම් කිරීමට එමගින් ගුරුවරයෙකුට අවස්ථාව ලැබීම නිසාය.පුහුණුව ලබන බොහෝ ගුරුවරුන් පාඩමට සූදානම් වීම දෙස බලනුයේ පුහුණු පාඨමාලාවේ අවශ්‍යතාවයක් ලෙස පමණී.පාඩමට සූදානම් වූ බවට සාක්ෂියක් වශයෙන් පෙන්නුම් කළයුතු පාඩම් සටහන ඔවුන් සළකනුයේ පාඨමාලාව හැදෑරීමේ දි සම්පූර්ණ කළයුතු අවශ්‍යතාවක් ලෙස



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ය.එසේ වුවද පුහුණුකරුවන් පාඩම් සටහන සළකනුයේ වැදගත් දක්ෂතාවක් ගුරුවරුන් තුළ පුහුණු කිරීමට යොදා ගැනෙන මා හැහි අභ්‍යාසයක් ලෙස ය.මේ අභ්‍යාසය දිගටම කරවීමෙන් ගුරුවරුන් තුළ පාඩම් සටහන් ලිවීමේ පුරුද්ද් ප්‍රගුණ කරවන්නට අදහස් කරන්නා සේම මෙම අභ්‍යාස දිගටම කර වීමෙන් සූදානම් වීම හා පාඩම් සටහන ලිවීම ගැන කිසියම් ආකාරයක ආකල්ප වර්ධනයක් සිදු වෙතැයි ද අපේක්ෂා කරනු ලැබේ.පාඩම් වලට කල් තියා සූදානම් වීමෙන් එසේ කළ බව දැක්වීමට පාඩම් සටහන් ලිවීමක් ඇත.බද්දෙන් ගැලවීම සඳහා කරන ක්‍රියාවක් ලෙස බොහෝ පුහුණුලාභීන් සළකන නිසා පුහුණුවෙන් පසුවත් මේ සම්බන්ධ අපේක්ෂිත පුහුණුව නොලබා පාසල් වලට පත්වීම ලැබ යන බොහෝ ගුරුවරුන් හැම ගුරු අධ්‍යාපන පාඨමාලාවක ම දක්නට ලැබේ.මෙයින් සිදු වන්නේ ඔවුන් පුහුණුව ලබන ගුරු පුහුණු පාඨමාලාව අන්‍යයන් හමුවේ අවතක්සේරුවට ලක් වීමත් එම ගුරුවරුන් සාර්ථක පුහුණුවක් නොලැබීමෙන් ය.

පාඨමාලාවට සූදානම් වීම හා ඒ සඳහා පාඩම් සටහන් ලිවීම සාර්ථක ගුරු පුහුණුවක් සඳහා අදාළ වන්නේ කෙසේ ද? ගුරු පාඨමාලාව වලදී ඉගෙන ගන්නා බොහෝ මූලධර්ම හා න්‍යාය ප්‍රායෝගික වශයෙන් පන්ති කාමරයට යෙදීමේ අවස්ථාව පුහුණුලාභී ගුරුවරුන්ට ලබා දෙනුයේ ප්‍රායෝගික ඉගැන්වීම් පුහුණුව කෙරෙන කාලය තුළදී ලියනු ලබන පාඩම් සටහන් වල තමන උගත් මූලධර්ම හා න්‍යාය ප්‍රායෝගික අවස්ථා වලට යෙදීමේ පරිචය පිළිබිඹු විය යුතුය. කිසියම් ගුරුවරයෙක් සැබවින්ම තමන් උගත් මූලධර්ම හා න්‍යාය පංති කාමරය තුළ භාවිත කිරීමට කැමැත්තක් දක්වන්නේ නම් බොහෝ කරුණු ගැන ඔහුට සිතන්නට සිදු වේ.එම ගුරුවරයාගේ කල්පනාව මෙහෙයවිය යුතු ඇති අංග මෙසේ ය.

1. පාඩම ඉගැන්වීමෙන් කුමන චෛෂයික වර්ධනයක් අපේක්ෂා කරන්නේද?
2. පාඩම නිසා කුමන අන්දමේ ආවේදනීය වර්ධනයක් අපේක්ෂා කරන්නේද?
3. පාඩම හේතු කොටගෙන කිසියම් ආකාරයක දක්ෂතාවන් ප්‍රගුණ කරන්නේද?
4. යථෝක්ත වර්ධනය සඳහා කුමන ආකාරයේ විෂය කරුණු තෝරා ගත යුතු ද?
5. කුමන අන්දමේ ප්‍රවේශයක් පාඩම් සම්බන්ධයෙන් අනුගමනය කළ යුතු ද?
6. පාඩම සංවර්ධනය සඳහා කුමන පියවර අනුගමනය කළ යුතු ද?
7. පාඩම කුමන ඉගැන්වීමේ ක්‍රම යොදා ගෙන සංවර්ධනය කළ යුතු ද?
8. පාඩම සංවර්ධනය සඳහා කුමන උපකරණ යොදා ගත යුතුවේ ද?
9. පාඩම හා සම්බන්ධයෙන් කුමන ඇගයීමක් සංවිධානය කළ යුතු ද?
10. පාඩම අවසානයේ කුමන අන්දමේ පැවරුමක් වෙත ළමයින් යොමු කළ යුතු ද?
11. ළමයින් සම්බන්ධයෙන් කුමන උපස්ථම්භන වැඩ පිළිවෙළක් අනුගමනය කළ යුතු ද?

පාඩමක් සැලසුම් කිරීමේදී හා එයට සූදානම් වීමේදී යථෝක්ත කරුණු ගැන තම සැලකිල්ල යොමු කරන ගුරුවරයෙකු පාඩමේ හැම පැත්තක් ගැනම තම අවධානය කරන්න වෙයි.එසේ යම්කිසි ගුරුවරයෙකු පාඩමේ හැම අංගයක් ගැනම තම සැලකිල්ල යොමු කරන්නේ නම් එම පාඩම සතුටුදායක පාඩමක් වීමේ සම්භාවිතාව වැඩි වේ. මේ අන්දමේ සූදානම් වීමක් තුළ දී පාඩම සංවර්ධනය කරන විට මතු වන හැම අන්දමකම ගැටලු කෙරේ කල්තියා සිතා බැලීමෙන් පන්ති කාමරය තුළ මතුවන ඕනැම අන්දමේ ගැටලු අවස්ථාවකට මුහුණ දීමේ හැකියාව එම ගුරුවරයාට ලැබේ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***පාඩම සඳහා අරමුණු තීරණය කිරීමේ වැදගත්කම.***

විෂය කරුණු හොඳින් දන්නා ගුරුවරයෙකුට වුවත් පාඩම සතුටුදායකව කළ හැකි වන්නේ කල්තියා තම පාඩමට අරමුණු තීරණය කළ හොත් පමණි.නොඑසේ නම් පාඩමක් ඉගැන්වීමෙන් ළමයින් තුළ ප්‍රගුණ කෙරෙනුයේ එවෙලේ ඉස්මතු වී වැදගත් යැයි පෙනෙන අහඹු දක්ෂතා පමණි.නමුත් සාක්ෂාත් කරගත යුතු ප්‍රජානන හැකියා ආවේදනීය ලක්ෂණ හා මනෝචාලක දක්ෂතා කල්තියා නිගමනය කෙරෙන්නේ නම් ඒ අපේක්ෂිත වෙනස්කම් ළඟා කර ගනු පිණිස පාඩම් සැලසුම් කොට සංවර්ධනය කරන්නට ගුරුවරයාට ඉඩකඩ ලැබේ.එය සතුටුදායක පාඩමක ලක්ෂණයක් වෙයි.

පාඩම් සඳහා අරමුණු ලියන්නට තැත් කරන ගුරුවරුන්ට නොයෙකුත් ගැටලුවලට මුහුණ දෙන්නට සිදුවේ පාඩමකට ලියන අරමුණුවලින් පිළිබිඹු විය යුත්තේ පාඩමක් හැදෑරීමෙන් ළඟා වෙන ඉගෙනුම් ඵල බව බොහෝ විට ගුරුවරු අමතක කරති.සමහර ගුරුවරුන් තම පාඩමේ අරමුණු වශයෙන් ඉගෙනුම් ක්‍රියාවලියේ යම් යම් අංග ගෙන හැර දැක්වීමට පෙළඹෙන බව පෙනේ.පහත දැක්වෙන ප්‍රකාශන දෙස බලන්න.

1. පෙළපොත අධ්‍යනය කරමින් කරුණු ගොනු කරයි.
2. ගණිත ගැටලු 3ක් විසඳයි.
3. වගුවක් අධ්‍යනය කරයි.
4. පරික්ෂණයක් සඳහා අවශ්‍ය ගැටලුවක් පිළියෙල කරයි.
5. අසන ප්‍රශ්නවලට වාචික පිළිතුරු දෙයි.

මේවා පාඩම් සටහනක ඇතුළත් වන අරමුණු වලට නිදසුන් ලෙස කෙනෙකුට ගෙන හැර දැක්විය හැක.එහෙත් මේ ප්‍රකාශ වලින් දැක්වෙන්නේ ඉගෙනුම් ඵල නොවේ.කිසියම් ඉගෙනීමක් නිසා ඇතිවෙන හැසිරීමේ නොවේ. මේ ප්‍රකාශන සියල්ලෙන්ම කියවෙන්නේ ඉගෙනුම්-ඉගැන්වීම් අවස්ථාවක දක්නට ලැබෙන ක්‍රියාකාරකම් කිහිපයකි.මේවා ඉගෙනුම් ක්‍රියාවලිය හා සම්බන්ධ නිදසුන්ය.පාඩමකට සූදානම් වන ගුරුවරයෙකුගේ අවධානය මූලිකව යොමු විය යුත්තේ මේ ක්‍රියාවලිය සම්බන්ධයෙන්ම නොවේ. ක්‍රියාවලිය ගැන අමතක නොකරන ගමන් ම එම ක්‍රියාවලිය හේතු කොටගෙන සාක්ෂාත් කෙරෙන ඉගෙනුම් ඵල ගැන ප්‍රධාන අවධානය යොමු කිරීම ඉතාම අවශ්‍ය වෙයි.පාසල් අධ්‍යාපනය හදාරන ශිෂ්‍යයින්ගේ චර්යාවන්හි අපේක්ෂා කරන දිගුකාලීන වෙනස්කම් කරා යාමට ඉවහල් වන කෙටි කාලීන වෙනස්කම් පාඩම් සටහනක දැක්වෙන අරමුණු වලින් පැහැදිලි වේ.විනාඩි 30 ක් 40 ක් පමණ වන කාලච්ඡේදයක් තුළ ක්‍රියාත්මක වන පාඩමකින් අපේක්ෂා කරනුයේ කෙටිකාලීන ප්‍රතිඵල කිහිපයකි.ශිෂ්‍යයෙකුගේ ජීවිත කාලය තුළ දී මුණගැසෙන අපරිමිත සංඛ්‍යාවක් වූ මෙවැනි පාඩම් සමූහයක් හේතු කොටගෙන ගොඩනැගෙන මේ සියලු ම ඉගෙනුම් ඵල දිගුකාලීන අරමුණු හා බැඳේ.එම නිසා ගුරුවරයෙකුගේ විශේෂ අවධානය යොමු විය යුත්තේ දිගුකාලීන අරමුණු හා බැඳෙන මෙම කෙටිකාලීන ඉගෙනුම් ඵලයන් කෙරෙහි ය.

- ප්‍රජානන අරමුණු
- ආවේදන අරමුණු
- මනෝචාලක අරමුණු
- සමාජ කුසලතා

පාඩම සඳහා අරමුණු ලිවීම චර්යාමය ස්වරූපයෙන් සුවිශේෂී ලෙස ලිවිය යුතුයි යන්න අධ්‍යතන යුගයේ අනුගමනය කෙරෙන පිළිවෙලයි. අරමුණු චර්යාමය විය යුත්තේ ශිෂ්‍යයා තුළ ඇති වන ඉගෙනුම් ඵලයක් වශයෙන් ගුරුවරුන් වන අපට නිරික්ෂණය කල හැක්කක් විය යුතු නිසාය.

T.P.G.L.තෙන්නකෝන්
ශ්‍රී.ල.අ.ප.සේ.III
සහකාර අධ්‍යාපන අධ්‍යක්ෂක



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்புறவியல் பற்றிய ஒரு கண்ணோட்டம்

நாட்டார் வழக்காற்று பற்றிய பின்னோக்கிய தேடல் முக்கியமானதொன்று, "நாட்டார்" என்னும் பதம் யாரைக் குறிக்கின்றது; என்ன பொருளில் வெளிப்படுத்துகின்றது? என்பது பற்றிய திட்ட வட்டமான அறிவுத்தெளிவு இருப்பது அவசியம்.

நாட்டார் என்பது Folk என்பதற்கான ஆங்கில மாற்றுப் பதமாகும். (Tranceference) இது வெறும் மொழிப் பெயர்ப்பன்று. இது கலைச் சொல்லாக ஆங்கில எழுத்துப் பாரம்பரியத்தில் வரும் Folk என்பதற்கான தமிழ் வடிவம்.

இது பற்றிய சிந்தனைத் தேடல் முதலில் ஐரோப்பிய பாரம்பரியத்தில் ஏற்பட்டது. பின்னர் ஜேர்மனிய நிலையிலே இத்துறை பற்றிய சிந்தனை ஆர்வம் தோன்றியது. அம்மொழியில் Folk என்பது சாதாரண மக்களைக் குறித்து நிற்கின்றது. அத்துடன் ஒரு சமூகத்தின் ஒரு குழு நிலைப்பாட்டையும் குறிக்கின்றது. 19 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழில் மயமாக்கல். கைத்தொழில் மயமாக்கல் என்று கூறப்படுகின்ற நகரமயமாக்கல் காரணமாக சமூகம் குழும நிலையில் மாற்றம் அல்லது மாறுதல் அடையத் தொடங்கியது. இந் நிலையில் முன்னர் நிலவிய குழு வாழ்க்கை பற்றிய தரவுகளை மீட்டிக் கொள்வது அதாவது ஜனரஞ்சகமான பழமையை தேடுவதாயிற்று. இது ஜேர்மனியை மையமாக வைத்து நடைமுறைப்படுத்தப்படலாயிற்று.

இங்கிலாந்தில் 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சமூக மாற்றத்திற்கு முன்னர் நிலவிய பழக்க வழக்கங்கள் பற்றி இத்துறை சிறந்து காணப்பட்டது. சாதாரண மக்கள் நிலைமைகளைக் குறிப்பதான இந்த Folk என்னும் எண்ணக் கருவில் ஓர் ஒருமைப்பாடு காணப்படும். அதாவது குறித்த அந்த குழும மக்கள் அனைவரும் சாதாரண தன்மையில் ஓர் ஒருமைப்பாடு உடையவர்கள். இந்த நாட்டார் மக்களின் பண்பாடு என்பது எப்பொழுதும் அந்த மக்களின் செந்நெறி (Classical) சாதானைகளிலிருந்து பிரித்துப் பார்க்கக் கூடியதாகயிருக்கும்.

செந்நெறியில் பண்பாடு நாட்டார் பண்பாட்டில் இருந்துதான் ஊக்கம் பெறுகின்றது என்பதும் மேலும் செந்நெறிப் பண்பாட்டில் நாட்டார் தனிமங்கள் (Elements) உண்டு என்பதும் உண்மையே. எனினும் அது பற்றிய அறிவு அறிக்கையைப் பொறுத்த வரையில் செந்நெறி சார்ந்தவை சாஸ்திரிய நிலைப்பட்டவை என்றும் நாட்டார் நிலை சார்ந்தவை சாஸ்திரிய நிலைப்படாதவை என்றும் கருதப்படும் ஒரு நிலை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிமானது வளர்ச்சியடைய மக்களது பண்பாடுகளில் செந்நெறிப் பண்பாட்டையும் நாட்டார் பண்பாட்டையும் இருமுனைப்படுத்திப் பார்க்கும் பண்பு காணப்படுகின்றது. இவ்வாறாக வரலாற்றுப் பாரம்பரியமுள்ள சமூகங்களில் உயர்நிலைப்படாத மக்கள் குழுமத்தினை "நாட்டார்" என்று சொல்வது போன்று " நாட்டார்" என்பதை ஒரே சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட மட்டத்து வாழ்க்கை முறையாகவும் கொள்ளலாம்.


தமிழில் நாட்டார் என்பது எவ்வெவ் சமூக மட்டத்தைக் குறிக்கின்றது என்பது பற்றிய ஒரு தெளிவு இருத்தல் அவசியம். வரலாற்று ரீதியில் நோக்குகின்ற போது Folk என்னும் அடையை நாம் " நாடோடி" கிராம, நாட்டு, நாட்டார் என்னும் பதங்கள் கொண்டு சாற்றி வருகின்றோம். இவற்றுள் நாடோடி என்னும் சொல் முற்றிலும் பொருத்தாது. மற்றையவற்றுக்குள் நாட்டார் என்பது Folk என்பதற்கான மாற்றீட்டுப் பதமாக இலங்கையில் வழக்கில் இருந்து வருகிறது.

நாட்டார் என்னும் பதம் தமிழகத்தில் சாதிக் குழுமத்தைக் குறிப்பதற்கு வழங்கும் பதமாகும். ஆகவே தமிழகத்தில் "நாட்டுப்புற" எனும் தொடர் Folk ஐக் குறிக்கப் பெரிதும் பயன்படுகிறது.

**திரு. மயில் வாகனம் திருச்செல்வம் ஆசிரியர்**
**தி/தி/புனித சூசையப்பர் கல்லூரி,**
**திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன வலிமை வேண்டும்

'மனம் கொண்டது மாளிகை' என்ற பொன்மொழிக்கமைய மனமானது எப்பொழுதும் நல்லதையே நினைக்க வேண்டும். மனம் என்ற உறுப்பு எம்மிடத்தே இல்லாத போதிலும், எம்மனத்தால் செய்யக்கூடியவை எண்ணற்றவை

'வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றவை எல்லாம் பிற'

என்ற திருவள்ளுவரின் குறள் ஆனது ஒரு செயலானது ஒருவனுடைய மனதின் உறுதியே ஆகும். மற்றைய எல்லாம் வேறானவை என்று கூறுவதன் மூலம் மனதின் உறுதியை எடுத்துக் காட்டுவதாய் அமைகின்றது. எம்மில் பலர் உலகத்தை திருத்துவதிலேயே கவனம் செலுத்துகின்றனர். தத்தம் மனதை திருத்த முயற்சிப்பதில்லை. விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே மனத்தை திருத்துவதற்காக முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள். ஒரு பொழுதில் தன்னலம் நிறைந்த மனம் தியாகம், நிறைந்த மனமாக மாற்ற முடியும். கண்டபடி அங்குமிங்கும் அலையும் மனம் புத்தரின் மனம் போல் அமைதி பெற முடியும். இப்பலன்களை அனுபவிக்க நாமே முயற்சி எடுக்க வேண்டும். எம் மனத்தினாலேயே இன்பமும், துன்பமும் கூட அமைகின்றது. எம் மனநிலையைப் பொறுத்தே இன்ப, துன்ப மனநிலை மாற்றமடைகின்றது.

ஒருவனுக்கு தோல்வி வரலாம். ஆனால் ஒரு போதும் தோல்வி மனப்பான்மை வந்து விடக்கூடாது. ஏனெனில் தோல்வி மனப்பான்மை மனத்தில் வந்துவிட்டால் சலிப்புற்று மீண்டும் முயற்சி செய்ய முடியாது துவண்டு விடக்கூடும்.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் தோல்வி மனப்பான்மை உடையவராக இருந்திருந்தால் அவருக்கு ஏற்பட்ட அடுக்கடுக்கான தோல்விகளைக் கண்டு துவண்டு இருப்பார். அவர் மனத்தில் நினைத்த இலக்கை அடையும் வரை முயற்சிகளை நிறுத்தாமல் தொடர்ந்து மனவலிமையுடன் போராடியதனால் தான் ஜனாதிபதி என்ற வெற்றி இலக்கைத் தொட்டார். இதற்கு அவரது மனோவலிமையே காரணமாகும்.

சோதனைகள் அனைத்தும், சாதனைகளாக உருவெடுப்பதற்கும் எமது மனமே காரணமாக அமைகின்றது. பற்பல சோதனைகள் வந்த போதிலும் அவற்றைத் தாங்கி மனத்தில் வலிமை கொண்டு போராடியதன் விளைவுதான் எமது மகாத்மா காந்தியடிகள், மார்ட்டின் லூதர்கிங் போன்ற பலர் தோன்றி பாரத நாட்டிற்கு விடுதலையும், கறுப்பினர்களுக்கு விடிவும் கிடைத்தது. இவை அனைத்திற்கும் காரணம் அவர்களிடத்தே இருந்த மனவலிமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரைப்பழி வாங்கும் எண்ணமானது ஒரு சில நாள் இன்பத்தையே வழங்கக் கூடியதாகும். அவ்வாறேயன்றி பழிவாங்கும் எண்ணத்தைக் களைந்து பொறுமையுடன் இருந்து மனோ வலிமையை வளர்த்தால் பல நாள் இன்பத்தைப்பெற முடியும். கோபம் கொள்வதற்கு மனவலிமை தேவையில்லை. ஆனால் கோபம் வராமல் தடுப்பதற்கு மனவலிமை வேண்டும். உண்மை பேசி உத்தமனாய் நடப்பதற்கு எமக்கு மனவலிமை வேண்டும்.


ஒரு யானையானது மனிதனை விட பலம் மிகுந்ததாகும். ஒரு குதிரை மனிதனை விட அதிக வேகம் பொருந்தியதாகும். ஒரு கழுதையோ மனிதனை விட உழைப்பில் சிறந்ததாகும். அவ்வாறு யானை பலத்தாலும், குதிரை (வேகத்தாலும), கழுதை உழைப்பாலும் மனிதனை விட வேகத்தாலும் சிறப்பாக காணப்படுகின்ற போதிலும் அவற்றைக் கட்டி ஆள்வது மனிதனேயாவான். அவனது திறமைக்கு காரணம் அவனிடத்தே காணப்படும் மனவலிமை என்ற சக்தியே ஆகும்.

இவ்வாறான மன வலிமையைப் பெறுவதற்காக யோகா பயிற்சிகளும், விரதங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. மனவலிமை பெற்று இம்மண்ணில் சிறப்புற வாழ்வோம்.

ஜெ.ஹேசிகா
தரம் -13 கலைப்பிரிவு
தி/சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாறி வரும் உலகம்

மாறிவரும் உலகம் - தினம்
மாற்றம் தரும் உலகம்

ஊறிவரும் அறிவு – அது
உண்மையதன் தெளிவு

காடுசார்ந்த வாழ்க்கை - இன்று
கற்பனையாய் ஆச்சு

மேடுபள்ளம் திருத்தி உலகம்
மேன்மை பெறலாச்சு

நிலவை பார்த்து ரசித்த - இனிய
காலம் இன்று இல்லை

நிலவின் மூல ஆய்வே - இன்று
மனித அறிவின் எல்லை

நடந்து திரிந்த மனிதன் - இன்று
நலமாய் பயணங் கொண்டான்

நடந்து நடந்து பார்த்து - இன்று
நலத்தைத் தேடும் நிலைமை

இயற்கை தந்த பரிசை – நாம்
இரக்கம் இன்றி அழித்தோம்

மயக்கம் தரும்பல வேஷம் - அவற்றை
மனதில் பூண்டே வாழ்ந்தோம்

அடிப்படைத் தேவைகள் எல்லாம் - அன்று
அழகிய வாழ்வைத் தந்தன

நடப்பதும் பாய்வதும் கூட – உடல்
நலத்தின் பயிற்சிகள் ஆயின

கல்லை எறிந்த மனிதன் - இரும்புக்
குண்டை எறிதல் கண்டோம்

வில்லால் வாழ்ந்த மனிதன் - இன்று
எல்லாம் இழந்து நின்றான்

இயற்கை தந்த காடு - இன்று
எல்லாம் எங்கே போச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்கையான உலகம் - அதில்
மனிதன் வாழலாச்சு

உடலில் சொகுசு கண்டோம் - எங்கள்
உளத்தின் வலுவைக் கொன்றோம்

திடமாய் இருந்த உடலில் - பெயர்
தெரியா நோய்கள் கொண்டோம்

சைக்கிள் மிதித்தால் கவலை – அது
சமூகம் தந்த நிலைமை

பைக்கிள் சென்றால் பவுசு – உடலில்
நோய்கள் பெற்றன சொகுசு

ஏடுகள் அனைத்தும் மறைந்தன - இன்று
எங்கும் கணிணிகள் நிறைந்தன

ஈபுக் படிக்கும் காலம் - இதனால்
உடலம் கொழுப்புக் கோலம்

தொந்தி கூட இன்று – உடலில்
தொங்கும் அங்கம் ஆச்சு

சர்க்கரை என்றால் மனிதன் - உடனே
அக்கரை செல்வதும் ஏனோ?

அக்கறை இல்லா வாழ்வில் - நாங்கள்
அடைந்த பயன் இது தானோ?

ஓடிச் சென்று செய்தி – சொன்ன
காலம் இன்று எங்கே?

உள்ளங்கையில் போனை – வைத்துச்
சேதி சொல்வாள் தங்கை

நடந்து சென்ற பணிகள் - புரிந்து
வாழ்ந்த காலம் எங்கே?

நடந்தால் தான்நீ இருப்பாய் - என்று
நோய்கள் சொல்வது இங்கே

மாறுதல் என்பது இதுதானே - இந்த
மாற்றம் தந்ததும் நலந்தானோ?


நன்றாய்ச் சிந்தி மனிதா – நாளைய
சந்ததி வாழ்ந்திட மனிதா

இன்றே செயல்படு வாய்நீ - இந்த
உலகை நிமிர்த்திட வாநீ

குலேஸ்வரன் ஸதுர்ஷன்
தரம் - 09
தி/சாம்பல்தீவு த.ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாவர வளங்களைப் பாதுகாப்போம்

இறைவனின் படைப்புக்களில் உலகத்தில் விஞ்சி நிற்பது தாவரங்களேயென்பதை யாராலும் மறுக்க முடியாது. உலகில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் தாவர வளங்களையே அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றதென்பது விஞ்ஞானம் கண்ட உண்மை.

இயற்கையையொட்டி வாழ்ந்த அக்கால மக்கள் தாவரங்களை அரிய செல்வம் எனக்கருதி அவற்றைப்பாதுகாத்து வந்தனர். இன்று நாம் தாவர வளங்களின் பயன்களை அறிந்திருந்தும் அதனைப் பாதுகாப்பதில் பாராமுகமாக இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

உலகின் தாவர வளங்கள் அழிவுறும் போது புவி வெப்பம் அதிகரித்து அதனால் உயிர்ச் சூழலியல் மிக மோசமான விதத்தில் பாதிப்படையும். மண் வளத்தைப் பாதுகாப்பதிலும், காலநிலையைச் சீர்குலையாமல் பேணுவதிலும், உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், நோய்களுக்கு நிவாரணம் அளிப்பதிலும் தாவரங்களின் பயன்கள் கொட்டித்தான் கிடக்கின்றன.

இத்தாவரங்கள் மிருகங்கள், பறவைகள், ஊர்வன போன்ற ஜீவராசிகளின் இருப்பிடங்களாக திகழ்கின்றன. அழகிய பூக்களின் தேனை உண்ண வரும் வண்டினங்கள் தான் எத்தனை எத்தனை? பூத்துக் குலுங்கும் காய் கனிகளை உண்டு மகிழ வரும் பட்சிகள் தான் எத்தனை? கீரைகளாகவும், காய்கனிகளாகவும், கிழங்குகளாகவும் எனப்பல்வேறு முறைகளில் பயன்தரும் தாவரங்களை வளர்த்துப் பாதுகாக்காமல் அவற்றை அழித்து அவற்றின் பயன்களை இழந்தவர்களாக நாம் மாறிக் கொண்டிருக்கின்றோமென்பது தான் உண்மை.

பசுமையான தாவரங்களைக் காண்பதில் குளிர்ச்சியடையும் கண்களையும், வண்ண மலர்களை இரசிப்பதில் ஆனந்தமடையும் இதயங்களையும், மரங்களின் கீழ் அமர்ந்து தென்றலின் வருடலில் இளைப்பாறும் தேகங்களையும் இன்று தேடினாலும் காண்பதரிது. அந்த அளவிற்கு தாவர வளங்களின் பயன்கள் அறியாதவர்களாகவும், இயற்கையின் உண்மையான இன்பத்தை அனுபவிக்கத் தெரியாதவர்களாகவும் நாம் இருந்து கொண்டிருக்கின்றோம்.

இன்று தாவர வளங்களைப் பாதுகாக்கக் கூடிய எத்தனையோ நடைமுறைகள் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மரநடுகை தினம், புவியியல் தினம், சுற்றாடல் தினம் என எத்தனையோ தினங்கள். அத்தனை தினங்கள் இருந்தும், ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமாவது நாம் மனமுவந்து மரங்களை வளர்க்க எம்மை முழுமையாக அர்ப்பணிக்கின்றோமா?

புவியின் பசுமைப் போர்வையாக விளங்கும் தாவர வளங்கள் அழிவதனால் உண்டாகும் தீய விளைவுகள் இப்போது கூர்மையாகவும், அழுத்தமாகவும் உணரப்படுகின்றன. இது காலங் கடந்த உணர்வாயினும் அரசும், தனியார் நிறுவனங்களும் விழிப்புணர்வு பெற்று மரநடுகை இயக்கத்தினை உறுதியோடும், ஊக்கத்துடனும் பல முயற்சிகளை மேற்கொண்டு தாவர வளங்களைப் பாதுகாப்பதில் முனைப்பாக இயங்குகின்றன.


மேலும், பொதுமக்களுக்கு வெகுசனத் தொடர்பு சாதனங்கள் ஊடாக அடிக்கடி மரநடுகை பற்றியும், தாவர வளங்களின் பாதுகாப்புப் பற்றியும் அறிவை வழங்கி மக்களின் அறியாமைச் செயல்களை தடுத்து நிறுத்த வேண்டும். பட்டால்தான் புத்தி வரும். ஆனால் நாம் எவ்வளவு தான் பட்டுக் கொண்டாலும் தெளிவற்றவர்களாகவே இருக்கின்றோம். அப்படியல்லாமல் ஒரு மரம் வெட்டப்பட்டால் ஆகக் குறைந்தது இரு மரங்களையாவது வளர்த்து விட திடசங்கற்பம் பூண வேண்டும்.

எனவே நம் முன்னோர்கள் எமக்காக வளர்த்த தாவர வளங்களைப் பேணுவதோடு, எமது சந்ததிகளைக் கருத்தில் கொண்டு எமக்குக் கிடைத்த தாவர வளங்களைப் பேணிப் பாதுகாப்போம்.

மு.மு.முகமட் முதா,
தரம் 05,
ஜமாலியா மு.ம.வி
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாட்டு வேலைவாய்ப்பும் மாணவர் கல்வியும்

இயந்திரமயமான கணனியுகத்தில் மனித வாழ்க்கையும் வேகமாக சுழன்று கொண்டிருக்கிறது. காலவேகத்திற்கு ஏற்ப எமது செயற்பாடுகளும் இயந்திரத்தனமான சிக்கல் நிறைந்ததாக ஆகிக் கொண்டிருக்கும் வேளை, அதனை ஈடு செய்து வாழவும் வேண்டிய சூழ்நிலையில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்றைய காலத்தில் எமது தேவைகள் பல்கிப் பெருகி போட்டி ரீதியில் முன்னேற வேண்டியிருப்பதால், தனக்கு ஏற்படும் பொருளாதார சிக்கல்களை நிறைவு செய்வதற்காக, வேறு மார்க்கங்களை தேடி ஓடுகின்றான். ஒன்று கூடி அன்பில் நிறைய வேண்டிய இல்லற வாழ்வை தொலைத்து விட்டு கடல் கடந்து சென்று உழைக்க முற்படுகின்றான்.

கால வேகத்திற்கு ஏற்ப தானும் சுழன்று முயல்பவன் சமுதாய அந்தஸ்த்தில் முன்னுக்கு வரமுடிகிறது. தவறுபவர்கள் ஈடுகொடுக்க முடியாதவர்கள் சமுதாயத்தில் பின் தங்கி வறுமைக் கோட்டிற்கு கீழ் அவலமான வாழ்க்கையினை வாழ்கின்றனர். இந்நிலையினைப் போக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு கை கொடுக்கின்றது. இன்று ஆண்கள் மட்டுமல்லாமல் பெருமளவிற் பெண்களும் வெளிநாட்டு வேலை வாய்ப்பினை பெற்றுச் செல்வதால் தான் சமுதாயத்தில் பல சிக்கல்கள் உருவாகி உள்ளன. குடும்பங்கள் சிக்கிச் சீரழிந்து கட்டுக் கோப்பு இழந்து, சமுதாயத்தின் கட்டமைப்பு மாறுபட்டு போவது, இந்நிலைமையால் தான் என்பதனை யாராலும் மறுக்கமுடியாது.

ஒரு குடும்பத்தின் வருமானத்தினை ஈட்டும் பொறுப்பு கணவனிடமும் அக்குடும்பத்தை சிறந்த முறையில் கட்டியெழுப்பும் பொறுப்பு மனைவி கையிலும் இருந்தால் தான் பிள்ளைகளின் எதிர்காலம் சிறந்த முறையில் கட்டியெழுப்ப முடியும். வீட்டில் இருந்து கொண்டே வேலைக்குச் சென்று வரும் பெண்களால் தன் குடும்பத்தினை முழுமையாக பராமரிக்க முடியாத நிலையில், வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்பிற்கு பெண்கள் சென்று விட்டால் அந்த குடும்பத்தை எந்தவகையில் பராமரிக்க முடியும் என்பது சிந்திக்க வேண்டிய விடயம்.

தான் பெற்ற பிள்ளைகள் நல்லவனாவதும் கெட்டவனாவதும் அத்தாயின் வளர்ப்பில் தான் தங்கியுள்ளது. இது உண்மையும் கூட. தாய் தன் பிள்ளையின் ஒவ்வொரு அசைவையும் கண்காணிக்க வேண்டும். பிள்ளையை அன்புடன் அரவணைத்துப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உள்ளது. பிள்ளைக்காக தன் நேரத்தை ஒதுக்க வேண்டும். அவனுடைய ஒவ்வொரு செயற்பாட்டினையும் பாராட்டி மதிப்பளிக்க வேண்டும். தவறுவிடும் நேரத்தில் தவறினை சுட்டிக்காட்டி அவன் ஏற்கும் விதத்தில் புத்தி சொல்ல வேண்டும். இத்தகைய பொறுப்புக்களில் தனித்துவமாக நிற்க வேண்டிய தாய், அவர்களை தவிக்கவிட்டு இன்னொருவர் கைகளில் ஒப்படைத்துவிட்டு அவர்களின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்காமல் வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுச் செல்வது மிகவும் பரிதாபத்திற்குரிய விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் குடும்பத்தின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்காக சமூகத்தில் தன் அந்தஸ்தினை உயர்த்துவதற்காக வெளிநாடு செல்கின்றனர். தம் வெளிநாட்டு பயணத்திற்கு பல காரணங்களைக் கூறுவர். தன் பிள்ளைகளை நன்றாக படிப்பிக்க வேண்டும். என் வீட்டு கஸ்டத்தினைக் குறைக்க வேண்டும். என் கணவன் பொறுப்பில்லாதவர் அதனால் குடும்பத்திற்கு தேவையான வருமானத்தினைப் பெறவேண்டும். நல்ல வீடு ஒன்றினைக் கட்டி வீட்டுச் சாமான்களை வாங்க வேண்டும், மற்றவர்கள் வசதியாக வாழ்வதைப் போல நாமும் வாழ வேண்டும் என்ற காரணங்களைக் கூறி தாம் விடும் தவறுகளுக்கு நியாயம் தேடுகின்றனர்.

தனது பிள்ளையின் எதிர்காலத்திற்காக வெளிநாடு செல்லும் தாய் தன் கணவனையோ, உறவினர்களையோ நம்பி ஒப்படைத்துவிட்டுச் செல்கின்றாள். அதன் பின் நடப்பது என்ன? அவளின் எதிர்பார்ப்பு இலட்சியம் எல்லாமே வலுவிழந்து பாதை மாறி போய்விடுகிறது. தன் உழைப்பைக் கொடுத்து பணத்தை வீட்டுக்கு அனுப்புவாள். அத்துடன் அவளின் பொறுப்பு முடிந்து விடும். இங்கு கணவனுக்கு பணம் கிடைக்கும் புதிய தெம்பு வந்து விடும். கைகளின் பணம்புரள தன் கைத்தொழிலை விட்டு விடுவான். தன் தேவைகளையும் ஆசைகளையும் நிறைவேற்றுவான். பணத்தினை அனுப்பினால் எல்லாப் பிரச்சினையும் தீர்ந்து விடும் என்ற ஆதாரமில்லாத நம்பிக்கை நடைமுறை வாழ்க்கையில் பல சிக்கல்களை தோற்றுவித்து விடும்.

பிள்ளைகள் தாயின் அரவணைப்பு, பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் தனித்து விடப்பட்டதை உணரத் தொடங்குகின்றனர். அன்பு காட்ட தாயின் கரங்கள் இல்லாததால் அதற்காக ஏங்கவும் தவிக்கவும் தொடங்குகின்றனர். ஏனைய பிள்ளைகள் தம் பெற்றோருடன் உறவாடி மகிழும் போது தன்னிரக்கம் கொண்டு மனதளவில் ஒதுங்கி இருகத் தொடங்குகின்றனர். அந்த ஏக்கத்தினை இயலாமைக்கு வேறு வடிகாலைத் தேடி தன் மனம் போன படி தன்னிஷ்டப்படி வாழ முற்படுகின்றனர்.

இந்நிலையில் தான் அவர்களுடன் இணையும் நண்பர்கள் அவர்களைத் தவறான நடத்தையில் கொண்டு செல்வதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. அவ்வாறில்லாவிடில் அவர்களின் விரக்தி ஏக்கம் வேறுவழியிற் வெளிப்படுத்தப்படுகிறது. கல்வியில் ஆர்வம் காட்டாமை, வகுப்பறைச் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்த முனையாமை, சக மாணவர்களுடன் சிறிய பிரச்சினை என்றாலும் கோபத்துடனும் அடிதடியில் இறங்குதல், முரண்டு பிடித்தல், தவறான வார்த்தைகளைப் பிரயோகித்தல் என அவர்களின் பண்புகள் நெறிதவறிப் போவதை காணமுடிகிறது.

பெண்பிள்ளைகளாயின் அவர்களின் நிலைமை மிக மோசமானதாக அமைந்து விடும். தாயின் அரவணைப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் பருவத்தில் தாய் அவர்களை விட்டு வெளிநாடு செல்வதானது, பரிதாபத்திற்குரிய விடயமாக அமைந்து விடுகிறது. பெண் பிள்ளைகள் மனம் விட்டு யாரிடமும் எதையும் சொல்ல முடியாத சூழ்நிலையில் தனிமைப்பட்டு ஒதுங்கத் தொடங்குவர். மற்றவர்களோடு சகஜமாகக் கதைக்கத் தயங்குவர். தம் உள்ளத்தினை வெளிப்படுத்தத் தெரியாமல் கூனிக் குறுகுவர். இதனால் அவர்களின் கல்வி மட்டுமல்ல சமூகத்தோடு இணைந்து வாழக்கூடிய பக்குவத்தை தொலைத்து, எதிர்காலத்தை மனத்துணிவுடன் ஏற்றுக் கொள்ளமுடியாமல் தவிப்பர். அது மட்டுமல்லாமல் அன்பை நாடி தவறான பாதையைக் கடைப்பிடித்து தமது வாழ்க்கையை தொலைத்துவிடுவர். சிறிய வயதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லொண்ணாத் துயரத்தினால் தமது வாழ்க்கையைத் முடித்துக் கொள்ளும் நிலைக்குச் செல்வர். இதற்கெல்லாம் மூலகாரணம் எதுவென்று பார்த்தால் பிள்ளைக்குக் கிடைக்க வேண்டிய அன்பு, பாதுகாப்பு, அரவணைப்பு கிடைக்காமை என்பது புலப்படும்.

அது மட்டுமல்லாமல் வீட்டிலும் வெளியிலும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாக வேண்டிய சூழ்நிலைகளும் ஏற்படுகின்றன. வெளியில் சொல்லமுடியாமல் அதிலிருந்து தப்பித்துக் கொள்ள வழி தெரியாமலும் புழுவைப் போல் துடித்து வாழும் பரிதாபநிலை. இவையெல்லாம் ஏன்? பிள்ளைகளின் அடிப்படை உரிமைகள் தேவைகள் கிடைக்காமை என்றால் மிகையாகாது.

பள்ளிப்பருவத்தில் துள்ளி விளையாடும் பிள்ளைகளின் தேவைகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கும் அடுத்து ஆசிரியர்களுக்கும் இருக்கின்றது என்றால் மிகையாகாது. தாயின் பாதுகாப்பு, அரவணைப்புக் கிடைக்காத பிள்ளைகளை இனங்காண வேண்டிய பொறுப்பு ஆசிரியருக்குரியது. பிள்ளையின் சூழ்நிலை, தேவை அறிந்து அதற்குரிய பரிகார நடவடிக்கையோ, தேவையான ஆலோசனையையோ வழங்கி பிள்ளையின் மனதில் நம்பிக்கையினை வளர்க்க வேண்டிய பொறுப்பு ஆசிரியரின் பொறுப்பாகின்றது. வழிதவறும் பிள்ளையை, முடிவெடுக்க முடியாமல் தவிக்கும் பிள்ளையை உரிய பாதையில் வழிநடாத்தி, தன் பணியினை அர்ப்பணிப்புடன் ஆசிரியர் ஆற்றுவார் ஆயின் அச்சமுதாயத்திலும் பிள்ளையின் மனதிலும் நீங்கா இடத்தைப் பிடித்துவிடுவார்.

கல்விப்புலத்தில் உள்ள அனைவருமே கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் பிள்ளைகளின் எதிர்காலம் கல்வியின் மூலம் கட்டியெழுப்ப வேண்டும் என்பதாகும். அதனையே தமது குறிக்கோளாகவும் கொண்டு இயங்குகின்றனர். ஆனால் அக்குறிக்கோள்களைச் சமுதாயத்தில் ஏற்படும் பல நிகழ்வுகள் இடையூறுகளைச் ஏற்படுத்துகின்றன என்பதனை மறுக்கமுடியாது. அதில் ஒன்று தான் சொல்லப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காகப் பெண்கள் செல்கின்றமை. இந்த நிலைமை பிள்ளைகளின் கல்வியில் பாரிய தாக்கங்களை உருவாக்குகின்றது என்பதனை உணர்கின்றோம்.

இவ்விடயம் சார்பாக சமுதாய நலன்விரும்பிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், நிறுவனங்கள், உரிய அமைப்புக்கள், முக்கியமாக பெற்றோர்கள் சாதகமான முடிவுகளை எடுக்கும் பட்சத்தில் மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்படுவதைக் குறைத்துக் கொள்ளலாம். பாடசாலைகளில் அவ்வாறான பிள்ளைகளின் தொகை அதிகரித்துக் கொண்டு தான் செல்கின்றது. ஆனால் அதற்குரிய தீர்வுகள் மட்டும் எடுக்கப்படாமலே தான் இருக்கின்றது.

திருமதி . அ.விஜயராஜ்
தி/தி/அல்.ஹம்றா.ம.வி
நிலாவெளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத் தன்மையின் பண்புகளும் கடமைகளும்

தலைமைத் தன்மை என்ற சொல்லிற்கு நாம் பலவித பொருள் விளக்கங்கள் பெற்றிருக்கின்றோம். ஆனால் நடைமுறையில் தலைமைத் தன்மை என்பது தலைவர் பொறுப்பைக் குறிக்கும். இங்கு தலைவர் மற்றவர்களின் நடத்தையில் பெரும்பாங்கு பெறுகிறார். இவரது நடத்தை மற்றவர்களால் பாதிக்கப்படுவதில்லை. நாம் மேலே குறிப்பிட்ட விளக்கமானது தலைமைத் தன்மை எங்கெங்கு இருக்கின்றதோ, செயற்படுகிறதோ, ஆதிக்கம் செலுத்துதல், திட்டமிடுதல் போன்றவற்றைக் காணலாம். தலைமைத் தன்மையில் கருத்துக்களை உருவாக்கி மற்றவர்களை வழிநடாத்திச் செல்வதை உணரலாம். இங்கு தலைவர் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகச் செயற்பட்டு ஆணைகள் வழங்கி அவ்வாணைகள் செயற்படுத்தப்படுகின்றனவா என்று அறிதல் வேண்டும். இவர் மற்றவர்களின் நடத்தையில் பெரிதும் பங்கேற்கின்றார்.

ஆகவே தலைமைத் தன்மை பல்வேறு விளக்கங்களை நமக்கு அளிக்கிறது எனலாம். தலைமைத் தன்மை என்பது அரசியல் தலைவர்களை மட்டும் குறிப்பிடவில்லை. இது எசமானர், மாணவத் தலைவன், போக்குவரத்து, நெறியாளர், காப்பிட்டு கழக ஆசிரியர், விளையாட்டு குழுத் தலைவர் போன்றவர்களையும் குறிக்கிறது. இது சட்டமன்ற உறுப்பினர்களையையும் அமைச்சர்களையும் குறிக்கும். ஆனால் நாம் தலைமைத் தன்மை என்ற சொல்லைச் சரிவர அறிந்து கொள்ளாமல் குழப்பம் அடைகிறோம். முன்னிலையில் இருக்கும் மருத்துவர் (Leading Doctor) ஒருவரை நாம் சில சமயங்களில் தலைவராக ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் இங்கு அம்மருத்துவர் தனது முறையில் சிறந்தவர் என்பதை மட்டும் குறிப்பிடுகிறது என்பதை நாம் உணருவதில்லை. இதற்கு முன்னால் மன்னர்களையும் நவாப்புகளையும் சான்றுகளாக சொல்லலாம்.

சுதந்திரம் அடைவதற்கு முன் அவர்கள் ஆட்சி புரிந்தது உண்மையே. ஆனால் இப்பொழுது அவர்களிடம் எவ்விதமான அதிகாரமும் இல்லையல்லவா? அவர்களின் பெயர்களுடன் அடைப்பு மொழிகளில் இன்னும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இவை வரலாற்று முக்கியத்துவத்தால் அமைந்தவையே.

ஆண்டர்சன் (Anderson) என்பவரின் கருத்துப்படி இரண்டு விதமான தலைமைத் தன்மை இருக்கிறது. ஒன்று ஆதிக்க நடத்தை, மற்றொன்று கூட்டு நடத்தை. இங்கு ஆதிக்க நடத்தையில் தலைமைத் தன்மை சற்று கடினமான முறையில் செயற்படும். சர்வாதிகாரப் போக்கு காணப்படும் இக்குழுவின் உள்ளேயே உண்டாகி அவை வெளியிடப்படும். அதற்கு மாறாகக் கூட்டு நடத்தையானது எவ்விதமான வன்முறையையும் பெற்றிருக்கவில்லை. இங்கு கூட்டுறவுத் தன்மையைக் காணலாம். இங்கு எல்லா உறுப்பினர்களும் மதிப்பளிக்கப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக்க நடத்தையில் ஒரு சிலர் சிலரை அடக்கி ஆள்வர். தலை முதல் கால் வரை ஆதிக்கத்தின் படிகளைக் காணலாம். ஆனால் கூட்டு நடத்தை எல்லோரும் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கும். தலைமைத் தன்மை என்பது மற்றவர்களை அடக்கி ஆள வேண்டும் என்பதனை மட்டும் குறிப்பிட ஆகாது இங்கு ஒரு விதமான ஒன்று பட வேண்டும் என்ற சூழ்நிலையைக் காணலாம். ஆனால் ஆதிக்கம் என்பது மற்றவர்களை தன் அதிகாரத்தால் அடக்கி ஆளுவது என்று பொருள்படும்.

## தலைவர்களின் ஆளுமைப் பண்புகள்

## (Personality trails of leader)

உளவியலின் சோதனைகளின் வாயிலாகத் தலைவர்களின் ஆளுமைப் பண்புகளை நாம் கண்டறிய முடிந்தது. பல சமூக அறிவியல் அறிஞர்கள் இத்துறையில் நடத்திய எண்ணற்ற சோதனைகள் ஆராய்ச்சியின் வாயிலாக பல முக்கியமான செய்திகளை நாம் பெற்றிருக்கின்றோம். கார்லைல் (Carlyle) வெளியிட்ட உண்மையிலிருந்து கல்வி நிறுவனத்தால் பெற்றோர், பொதுமக்கள் போன்றோர் தலைமைத் தன்மையினைப் பற்றி அறிய வாய்ப்புக்கள் தோன்றியுள்ளன. தலைமைத் தன்மைப் பண்புகளை பெறவும், வளர்க்கவும் இப்போது மாணவர்களுக்கும், பட்டதாரிகளுக்கும், மற்றவர்களுக்கும் பயிற்சி வகுப்புக்கள் கூட நடாத்தப்படுகின்றன. நல்ல நியாயமான முறைகளினால் மனிதர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைப் பயிற்சி அளிக்கப்பட்டால் நல்ல தலைமைத் தன்மையை வளர்க்க முடியும்.

சாதாரணமாகத் தலைவர்களை இரண்டு விதமாக தங்களது தொண்டர்கள் பின்பறறுகிறார்கள். முதலாவதாக தொண்டர்களால் தங்கள் தலைவர்களை கண்முடித்தனமாக பின்பற்றுவர். இங்கு தங்களது தலைவர்களுக்கு மதிப்பு அளிப்பர். மற்றொரு முறையில் தொண்டர்கள் தங்கள் தலைவர்களுக்கு மதிப்பு ஏதும் அளிப்பதில்லை. மேலும் அவர்கள் முக்கியமானவர்கள் என்று கூடக் கருதுவதில்லை. ஆனால் தலைவர்கள் தொண்டர்களினால் தான் உருவாக்கப்படுகிறார்கள் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். மறுக்கமுடியாது. அவர்கள் தங்களது தொண்டர்களின் ஒப்புதலுடன் கூட்டுறவினால் தான் செயல் புரிய முடியும். சில சமயங்களில் மக்கள் கூட்டுத் தன்மையினைப் பற்றிப் பேசலாம். இங்கு கூட ஒரு சிலர் தங்களது ஆக்கிரமிப்புத் தன்மையால் தலைவர்களாக மாறுவர்.

புகழ் பெற்ற மனிதர்களுக்கும், தலைவர்களுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. புகழ் பெற்ற மனிதர்கள் யாவரும் தலைவர்களாக இருக்க வேண்டியதில்லை. பொதுவாக எல்லாத் தலைவர்களும் நுண்ணறிவு மிக்கவர்களாக இருப்பதில்லை. ஒரு மனிதன் தலைவனாக மாறுவதற்கு சமூக சூழ்நிலைகளே காரணமாக இருக்கின்றன. பல்வேறுபட்ட சமூக சூழ்நிலைகள் பல்வேறு வகையான தலைவர்களை நமக்கு அளித்துள்ளன என்பது உண்மையே. கிராமப் புறத்திலுள்ள ஒரு தலைவனுக்கும் நகர்புறத் தலைவன் ஒருவனுக்கும் நிறைய வேறுபாடுகள் இருப்பதைக் காணலாம் இவை அமையக் காரணமாக இருப்பவை மாறுபட்ட சமூகச் சூழ்நிலைகளே.

சமூக உளவியல் தலைவர்களின் ஆளுமைப் பண்புகளை அறுதியிட திட்டமிட்ட சோதனைகளைக் கண்டு பிடித்து வருகிறது. இத்துறையில் எண்ணற்ற இள உளவியலாளர் பல சோதனைகளை நடத்தி வந்தனர். தலைவர்கள் நல்ல ஒற்றுமையுணர்வுடன் மிகுந்த சுமூகமாகத் தொடர்புகள் நிறைந்த குழுக்களில் உருவாகின்றார்கள் என்ற உண்மையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு பிடித்தனர். இங்கு அக்குழுக்களில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களிடம் ஒற்றுமையுணர்வும், நல்ல தொடர்புகளும் இருப்பதால் நல்ல தலைவர்கள் தோன்றுகிறார்கள். தலைவர்கள் தங்களுடைய குழுக்களின் நோக்கங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும். தங்களது தொண்டர்களிடம் நன்மதிப்பைப் பெற்று அவர்களிடம் நம்பிக்கை உணர்வினை வளர்த்தல் வேண்டும். தொண்டர்கள் முன்கூட்டியே அறிந்து அவற்றைப் பூர்த்தி செய்யும் திறன் உடையவர்களாக இருத்தல் போன்றவற்றை தலைவர்களின் தலையாய பண்புகள் என்று அழைக்கலாம்.

இரண்டாம் உலகப்போரின் போது சமூக உளவியலறிஞர்கள் பலர் பல தரப்பட்ட சோதனைகளின் மூலம் தலைமைத் தன்மையினைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடத்தினர். இராணுவத்தில் பணி புரியும் அதிகாரிகள் செயற்கையாக உருவாக்கப்பட்ட போர்ச் சூழ்நிலைகளில் நிறுத்தப்பட்டு ஆராயப்பட்டனர்.

பெரும்பான்மையான தலைமைத் தன்மைப் பண்புகள் கண்டு பிடிக்கப்பட்டு அவற்றின் மூலம் தலைவர்கள் நுண்ணறிவு மிக்கவர் என்றும் சமூகத்தினால் நன்கு அங்கீகாரம் பெற்றவர்கள் என்று தெரிய வந்தது. அவர்கள் பிறர் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர், எதையும் நல்ல முறையில் செய்ய வேண்டும் என்ற பெரும் நோக்கம் கொண்டவர். மனிதர்களிடம் நல்ல செல்வாக்குடையவர் தன்னம்பிக்கை மிக்கவர். அவர்கள் நல்ல உடல் தோற்றத்தையும், சொல் வன்மையினையும் பெற்றிருப்பர். அவர்கள் தன்னிறைவு காணும் திறன், மெய்ப்பாட்டு நிலை, உள உறுதி போன்றவற்றைக் காணலாம். அவர்களில் சிலர் நல்ல உயரத்தைப் பெற்றிருப்பர். ஆனால் சில சமயங்களில் தலைவர்கள் மிகவும் அதிகமான நுண்ணறிவைப் பெற்றிருப்பர். பெரும்பான்மையான உளவியல் சோதனைகள் தலைவர்களின் பண்புகளைக் காட்டிலும் அவரது ஆர்வம் உளப்பான்மை போன்றவற்றையே அதிகம் வெளிப்படுத்துபவைகளாக உள்ளன.

## <u>தலைமைத் தன்மையின் வேலைகள்</u>

## <u>(Functions of leaders)</u>

ஒரு தலைவரின் வேலைகள் அவர் எந்தக் குழுவிற்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்கின்றாரோ அதனைக் கொண்டே அமைகின்றன. இவை தான் ஒரு தலைவரின் கடமைகள் என்று உறுதியிட்டுக் கூற முடியாத நிலை உள்ளது. ஓர் ஆதிக்கவாதக் கொள்கை தலைவருக்கும் அவரது குழுவிற்குமிடையே உள்ள தொடர்பினை ஆராய்வோம். இவர் தனது திட்டங்களை ஆதிக்க வழியில் தனது தொண்டர்கள் பின்பற்ற வேண்டுமென்றே விரும்புவார். அதே போல மக்களாட்சித் தலைவர் தனது தொண்டர்கள் இவ்வாறு தான் செயற்பட வேண்டும் என்ற வழிமுறைகளைக் கடைப் பிடிப்பர்.

## <u>தலைவர் செயல்படுத்துபவர்கள்</u>

## <u>(Leaders of executive)</u>

எந்த ஒரு குழுவின் தலைவராக இருப்பினும் அவர் குழுவின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதையும், செயல்படுத்துவதையும் தன் தலையாய வேலைகளில் ஒன்றாகக் கொள்ளல் வேண்டும். தன் குழுவின் கொள்கைகளையும் நோக்கங்களையும் செயல்படுத்த நெறியாளர் போல செயற்பட்டு அவை நல்ல முறையில் நடைபெறுகின்றனவா என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பார்வையிடல் வேண்டும். உதாரணமாக ஒரு செயற்குழு கூட்டமொன்றில் தலைவர்கள் அதன் உறுப்பினர்களை ஒரு பிரச்சினை குறித்து இவ்வாறு ஆலோசனை/விவாதம் நடத்த வேண்டுமென்று கூறலாம். மேலும் அக்குழுவிலேயே சிறுசிறு குழுக்களை ஏற்படுத்தி பிரச்சினைகளை விவாதிக்கலாம். அதே போல தொழிற்சாலை ஒன்றில் மேற்பார்வையாளர் ஒருவர் தன் உழைப்பாளிக்கு வேலைக்கு பகிர்ந்து அளித்து அவர்கள் சரிவரச் செய்கிறார்களா என்று கவனிப்பார்.

எல்லாச் செயல்களும் நடக்க தலைவரே முக்கிய பங்கை எப்பொழுதும் ஏற்க வேண்டும் என்ற நியதி இல்லை. சில சமயங்களுக்குத் தன் குழுவிலுள்ள சிலருக்குச் சிலவற்றைப் பகிர்ந்தளித்து அவற்றைச் செயற்படுத்த வேண்டிய பொறுப்பை அவர்களிடம் ஒப்படைப்பர். சில சமயத்தில் தலைவர்கள் சிலவற்றைசெயற்படுத்தும் திறமையின்றி இருக்கலாம். இவர் தனக்குத் தெரியாதவற்றில் ஈடுபட்டு துன்பம் அடையலாம். இவர் தனது குழுவின் உறுப்பினர்களையும் துன்பத்தில் ஈடுபடுத்துவர், தன் குழுவின் செயல்கள் நல்ல முறையில் நடைபெற்றவையாக மாறுவர் மேலும் அவர் சில வேலைகளில் பங்கேற்பதால் உறுப்பினர்கள் தங்கள் செயல்களைச் சரிவர செய்ய முடியாது இன்னல் அடைவர்.

## தலைவர் திட்டமிடுபவராவார்

## (The leader as a Planner)

குழுவின் முடிவுகளை அடைய மேற்கொள்ளும் வழிமுறைகளையும் திட்டங்களையும் உருவாக்குபவராக தலைவர் அமைகிறார். தன் குழுவில் உள்ளவரை எவ்வாறு செயற்படுத்த வேண்டும் என்பது பற்றியும் தீர்மானிக்கின்றார். திட்டங்களைத் தீட்டுவதிலும் அவற்றைச் செயல்முறைக்குக் கொண்டு வருவதிலும் தலைவரே முக்கிய பொறுப்பு வகிக்கின்றார். தலைவர் தனது திட்டங்களின் விபரங்கள் பற்றி தனது உறுப்பினர்களுக்கு தெரிவிக்க வேண்டியதில்லை.

## தலைவர் கொள்கை வகுப்பவராவார்

## (The leader as a policy maker)

தலைவர் தன் குழுவின் இலட்சியங்களையும், நோக்கங்களையும் கொள்கைகளையும் வகுப்பவர் ஆகிறார். இது அவருடைய தலைமைக் கடமைகளில் ஒன்றாகும். அலுவல்களில் தலைமையில் இருப்போர் இடும் கட்டளைகள் அவர்களுக்குக் கீழ் இருப்போருக்கு வருகின்றன. பிறகு அங்கிருந்து கீழ் மட்டத்திலுள்ளவர்க்கு வந்து அடைகின்றன. இவை எல்லாம் விருப்பம் இல்லாவிடினும் பின்பற்றுபவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். குழுவின் இலட்சியங்களாக மாறுகின்றன. (ஆ) இங்கு எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து ஆராய்ந்து விவாதித்து தம் குழுவின் கொள்கைகளையும் இலட்சியங்களையும் வகுக்கின்றனர். (இ) மூன்றாவதாக தலைவர் தானே கொள்கைகளையையும் இலட்சியங்களையும் தன் குழுவிற்கு உண்டாக்குவார். இங்கு அவர் தன்னைப் பின்பற்றுபவர்களுடன் கலந்து ஆலோசிப்பதில்லை.

## தலைவர் - செயலில் நிபுணராவார்

## (The leader as expert)

தலைவர் குழுவின் கொள்கைகளையும், திட்டங்களையும் வகுப்பவராய் இருக்கிறார் என்பதை நாம் முன்பே அறிந்தோம். குழுவின் செயலுக்கு வேண்டிய செய்திகளும், திறமைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாகப் பெறக்கூடிய தளமாகத் தலைவர் கருதப்படுகிறார். குழுவின் செயலுக்கு ஆதாரமாக நுட்பமான திறமைகளுக்கு கொள்கலமாக இருப்பவர் தலைவர். சில குழுக்களில் தலைவர்கள் திறமையற்ற சிறுவர்களில் நல்ல விளையாட்டு வீரனாக இருப்பவன் தலைவராக மாறுகின்றான். வயது வந்தோர் தங்களது குழந்தைகளின் மீதும் வயது குறைந்தவர் மீதும் ஆதிக்கம் செலுத்துவர். இதற்குக் காரணமாக அமைகிறது ஒருவர் தன்னுடைய நுட்ப அறிவின் காரணமாகத் தலைவராக உருவாகினால் அவரிடம் அதிகாரம் முழுவதும் குவிய வாய்ப்புகள் அதிகம். அக்குறிப்பிட்ட குழுவில் உள்ளோர் அத்தகைய நுட்ப அறிவினைப் பெறாமல் இருப்பதோடு இதற்குக் காரணமாகவும் அமைகிறது.

## தலைவர் - உள் உறவுகளைக் கட்டுப்படுத்துபவராவார்

## (The leaders as controller of internal relation)

புறத் தொடர்புக் குழுவுடன் தனது குழுத் தொடர்பு கொள்ளும் போது மட்டுமன்றி தனது குழுவின் உள் தொடர்புகளில் கூட தலைவர்கள் வாயிற் காப்பாளனாக இருக்கிறார். தன் குழுவின் உறுப்பினர்க்கிடையே உள்ள உறவுகளை கட்டுப்படுத்துவதும் அவரே. ஒரு சில குழுக்களின் உள் உறவுகள் தலைவர் தம்மாலேயே வழிப்படுத்தப்படுகின்றன. சில குழுக்களில் நடைபெறும் உள் உறவுகளை தணிக்கை செய்பவராக தலைவர் விளங்குவார். மேலும் சில குழுக்களில் தலைவரும் உறுப்பினரும் ஒன்றாகவே காணப்பட வேண்டும்.

## தலைவர் தண்டணைகளையும் பரிசுகளையும் வழங்குபவராவார்.

## (The leader as purveyour of rewards)

ஒரு தலைவர் தன் குழுவை ஒழுங்காகவும், கட்டுப்பாட்டிற்குள்ளும் வைத்துக் கொள்ள கடமைப்பட்டவர். தலைவர் தன் உறுப்பினர்களுக்கு பரிசு, தண்டனை போன்றவற்றை அளிக்கும் அதிகாரம் பெற்றிருப்பார். இதுவே தலைவர் தனது குழுவிலுள்ள உறுப்பினர்களுக்குச் செய்யும் அன்பு தொடர்பான பாக்கியமாகும். நல்ல செயல்களைப் புரியும் உறுப்பினர்களுக்கும் பதவி உயர்வு தந்து மிகுதியான அதிகாரங்களும் அளிக்கப்படும். ஒரு சில வேளையில் ஒழுங்கு நடவடிக்கை மூலம் ஓரிருஉறுப்பினரைக் குழுவை விட்டு வெளியேற்றலாம். இங்குத் தலைவர் நியாயமான நேர்மையான, நீதிபதி போன்று செயற்படல் வேண்டும்.

## தலைவர் -இலட்சியக் கோட்பாட்டினராவார்

## (The leader as ideologist)

தலைவர் சில வேளைகளில் மேலே குறிப்பிட்ட நிலைகளில் மிகவும் திறமையாகச் செயற்படுவார். தனி உறுப்பினரது நம்பிக்கைகள், மதிப்பீடுகள், இலட்சியக் கோட்பாடு ஆகியவற்றின் தோற்றங்களாக தலைவர் விளங்குவது உண்டு. நாம் ஒரு உறுப்பினரின் இலட்சியங்களின் நோக்கங்களை ஆராய்ந்தோமானால் அவை அந்த உறுப்பினரின் சொந்த எண்ணங்களைக் குறிப்பிடாமல் அவர் சார்ந்த குழுத்தலைவனின் எண்ணங்களையே பிரதிபலிப்பனவாய் இருப்பதைக் காணலாம். ஒரு குழு ஏற்கும் கோட்பாடுகள் தனி மனிதனின் கோட்பாடுகளிலிருந்து பெருமளவில் மாறுபட்டு இருந்த போதிலும் கொஞ்சம் கொஞ்சமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயைந்து செயற்படுகின்றன. எமது தலைவர் காந்தி உயரிய நோக்கங்களைப் பெற்றிருந்தார். இவருடைய கருத்துக்களும் ஒரு தனி மனிதனின் கருத்துக்களில் பெருமளவில் வேறுபாடுகள் இருப்பினும் நாளடைவில் இவரது கருத்துக்களைக் கோடிக்கணக்கான மக்கள் தங்களது வாழ்வின் இலட்சியமாக ஏற்றுக் கொண்டனர்.

**தலைவர் - தந்தையின் உருவாவார் (The leaer as father figure)**

தந்தையின் நிலையை ஒரு தலைவர் பெற்றிருக்கிறார். இத்தகுதியின் அடிப்படையில் மற்ற உறுப்பினர்களுடன் செயற்படுவார். மிகவும் அபாயகரமான நேரங்களில் தலைவர் தந்தை போல் குழுவினர்களுக்குப் பாதுகாப்பு, தைரியத்தை அளிக்கின்றார்.

2ம் உலகப் போரிலே ஜேர்மனி வீழ்ச்சியுற்ற காலத்திலும் ஜேர்மனியப் படைவீரர்கள் ஹிட்லரை தகுதி மிக்க ஒரு தலைவராக ஏற்றுப் பணிந்து வந்தனர். ஹிட்லரின் குணங்களை இவர்கள் காணாது தங்களின் ஊகங்களை, உயர்ந்த எண்ணங்களை, அவர் மேல் ஏற்று நம்பிக்கையின்று வழுவாது இருந்தனர்.

**தலைவர் - பிறர் வழி ஏற்பவராவார் (The leader as scapegoat)**

நன்கு போற்றப்பட்டு வந்த தலைவர் திடீரென தன்னைப் பின்பற்றுபவரால் தூற்றப்படுவார் எவ்வாறு தலைவர் தனது உறுப்பினர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்து வருகிறாரோ அதே போல் அவர்களின் குழப்பம், ஏமாற்றம், மனமுறிவு போன்றவற்றிற்கும் அவரே பொறுப்பாக்கப்படுகிறார்.

தங்களது தலைவரால் பழி வாங்கப்பட்டு விட்டதாகவும் எண்ணுவார்.

**தலைவருக்கும் அவரைப் பின்பற்றுவோருக்கும் உள்ள தொடர்பு (Leader and the led)**

- வெற்றி அடையும் தலைவர், தன் குழுவின் உறுப்பினர்க்கு உரிய தகுதிகளை முதலில் பெற்றிருத்தல் வேண்டும். அவர் அக்குழுவிற்குப் பொதுவானவர் என்று கருதப்பட வேண்டும். புதிதாகச் சேரும் ஓர் உறுப்பினரோ மற்றவர்களை விட மாறுபட்ட ஒருவரோ உறுப்பினர்க்கு உரிய தகுதிகளை எளிதில் அடையமுடியாது
- ஒரு தலைவர் சமூகத்தில் திறன்படச் செயற்படுபவராக இருக்க வேண்டும். தன் குழுவைப் பற்றிய எண்ணம் சமூகத்தில் நன்கு நிலவ இவரே காரணமாக அமைகிறார். இவர் தன் குழுவிற்கு ஓர் அடையாளமாக முன் மாதிரியாக மாறுகிறார். இவரே தனது குழுவிற்கு தேவைகள், நோக்கங்கள், எண்ணங்கள் போன்றவற்றை பிரதிபலிப்பவராக இருக்கிறார். இவ்வாறு இருக்க அவர் தன் குழு உறுப்பினரோடு நன்கு தொடர்பு கொள்ள வேண்டியது அவசியமாகிறது
- தலைவர் தன்னை பின்பற்றுவோரின் உளப்பான்மை மதிப்பீடு குழப்பம், மனமுறிவு லட்சியம் போன்றவற்றை நன்கு புரிந்து கொள்பவராக இருக்க வேண்டும்
- ஒரு தலைவர் நடுநிலையர் போன்று செயற்பட வேண்டும். இவர் தனது உறுப்பினர்களிடமிருந்து கிளம்புகின்ற நேர் எதிர்மறை கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் உள்ளவராய் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒருவர் தன் தலைமைத் தன்மையில் நன்கு செயற்பட அவர் ஒழுக்கமற்றவராகவும், எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடியவராகவும் இருக்கக் கூடாது. மற்றவருடன் ஒத்துப் போகும் தன்மையினை அவர் அதிகம் பெற்றிருக்க வேண்டும். இத்தன்மையில் குறைபாடு கொண்ட பல தலைவர் தங்கள் தலைமைத் தன்மையை இழந்து அல்லல் பட்டதை சரித்திரம் நமக்கு தெரிவிக்கின்றது. ட்ராஸ்ட்கி (Trotsky) என்பவர் நுண்ணறிவு திறன் பெற்றிருந்தும் பிறரிடம் அனுசரித்துச் செல்ல தவறியதால் ஸ்டாலினுக்கு எவ்விதத்திலும் ஈடுசெய்ய முடியாதவராக மாறினர்.
- ஒரு தலைவர் எப்போது தன் தவறுகளை மற்றவர்க்கு வெளிவிட வேண்டும், மறைக்க வேண்டும் என்பதை நன்கு உணர வேண்டும். இது மிகவும் முக்கியமான செயலாகும். இக்குணத்தை ஒரு தலைவர் நிரம்பப் பெற்றிருப்பது இன்றியமையாததாகும். அவசரக் காலத்தில் தலைவர் தனது போக்கை மாற்றியோ / திருத்தி அமைத்தோ செயற்பட வேண்டும். இவர் இக்காலங்களில் தான் குழு உறுப்பினர்களை விட நன்கு செயற்பட வேண்டும். அவரது செயல்களையும் எண்ணங்களையும் நம்மால் முன்கூட்டியே அறிந்து கொள்ள முடியாது என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ளாது பார்த்துக் கொள்ள வேண்டியது தலைவரின் கடமையாகும்.
- சில சமயங்களில் தலைவருக்கும், மற்றவர்க்கும் உள்ள தொடர்புகள் சரிவர அமையாவிடில் அக்குழு நன்கு செயற்பட முடியாமல் போகும். அங்கு சோம்பேறித்தனமும் கருத்து வேற்றுமைகளும் குழப்பங்களும் நிறைந்து காணப்பட வாய்ப்பு உண்டாகும். ஆனால் இவ்வுணர்வு பற்றிய வேர்கள் அவர்கள் உள்ளத்தில் ஆழமாக பரவியிருக்கும். ஆகவே தான் எந்தச் சமூகத்திலும் இம்மாதிரியான உளவியல் பண்புகள் மறைந்து செயற்படுவதால் தலைவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள் என்பார். மக்கள் தலைமைத் தன்மையை ஏற்கக் காரணமாய் அமைவது அவர்கள் ஒரு தலைவரின் கீழ் செயற்பட வேண்டும் என்ற அவாவைப் பெற்றிருப்பது தான். அவரே தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வார் என்ற எண்ணத்தையும் பெற்றிருப்பது தான். தலைவரின் குணநலன்களும் செல்வாக்கும் பின்பற்றுபவர்கள் கடமை தவறாதவரகளாகவும் பொறுப்பு மீறாதவர்களாகவும் இருப்பது இன்றியமையாதவையாகும்.

எஸ்.சுபைர்டீன்
ஆசிரியர்
தி/புனித சூசையப்பர் கல்லூரி
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# උපදේශනය(Conseling)

## උපදේශනයේ මූලික සංකල්ප

උපදේශන(Counseling) ක්‍රියාවලිය විවිධ ස්වරූපයෙන් ඉතා දීර්ඝ කාලයක සිට පැවත එන සේවාවකි.ගුරුගෙදර , වෙදගෙදර , යකදුරුනිවස , ගම්පති නිවස පූජනීය ස්ථාන එබඳු මහජනයාගේ ප්‍රශ්න ගැටළු වලදී සහය දුන් ආයතන වේ.නමුත් නූතන උපදේශනය පැරණි උපදේශනයට වඩා වෙනස් වූ ආර්ථික වටිනාකමක් සහිත විද්වත් වෘත්තික සේවාවකි.එය 1905 දී එක්සත් ජනපදයේදී ආරම්භ වූ අතර 1950 දශකයේදී ශාස්ත්‍රීය විෂයක් බවට පත් විය.

## උපදේශනය යනු කුමක්ද?

ඉතා සරල වශයෙන් හඳුන්වනු ලබන්නේ නම් උපදේශනය යනු යම් කිසි ගැටළුවක් හෝ ප්‍රශ්නයක් තිබෙන පුද්ගලයෙකුට හෝ ප්‍රශ්නයක් තිබෙන පුද්ගලයෙකුට හෝ කණ්ඩායමකට එම ප්‍රශ්නය ඔවුන් විසින් ම විසඳා ගැනීමට උදව් කරන එක්තරා සාරවත් ක්‍රියාවලියකි උපදේශනය.

- ❖ උපදෙස් දීමක් නොවේ
- ❖ අවවාද දීමක් නොවේ
- ❖ යමෙකුගේ ප්‍රශ්න වලට වෙනත් අයකු විසින් විසඳුම් දීමත් නොවේ.
- ❖ යමෙකුගේ ප්‍රශ්න වලට වෙනත් අයෙකු විසින් තීරණයක් දීමක් නොවේ.
- ❖ බල කිරීමක් නොවේ
- ❖ පෙළඹ වීම පමණක් නොවේ.
- ❖ තොරතුරු සැපයීම හෝ අධ්‍යාපනය ලබා දීම පමණක් නොවේ.

උපදේශනය ඉන් ඔබ්බට ගිය සංකල්පයකි.උදව් දීම කැමැත්ත පමණක් උපදේශනයේදී ප්‍රමාණවත් නොවේ. උපදේශනයට ඊට අමතරව දැනුම පුහුණුව ,නිපුණතාවය හා පළපුරුද්ද තිබිය යුතුය.

උපදේශනය ක්‍රියාවලියකි.එම ක්‍රියාව හා ප්‍රතික්‍රියා මගින් සේවා ලාභියා තුල ඇතිවෙන වර්ධනය උද්දීපනය හා මුවහත් කරන්නාවූ ක්‍රියාවලියකි. උපදේශනය හා සේවා ලාභියා අතර ඇතිවන වෘත්තීය සම්බන්ධතාවයකින් මතුවන වර්ධනයක් සේවා ලාභියා තුල ඇති විය යුතුය.සේවා ලාභියාගේ ප්‍රස්න හා ගැටළු ඔවුන් විසින් ම විසඳා ගැනීමට ආධාර වන ක්‍රියාවලියකි.

මෙම ක්‍රියාවලියේදී පහත සඳහන් පියවරවල් සම්පූර්ණ වේ.

- ❖ තමන්ගේ ප්‍රශ්න වලට අදාළව තමන් ගැනම අවබෝධයක් ලබා ගැනීම.
- ❖ තමන් ගේ හැකිම් තෝරා බේරා ගැනීම.
- ❖ තමන්ගේ ප්‍රශ්න ගැටළු හඳුනා ගැනීම
- ❖ තමන්ගේ ප්‍රශ්න හා ගැටලු වලට තීරණ ගැනීමේ ශක්තිය වර්ධනය කර ගැනීම.
- ❖ එමඟින් තමන්ගේ ප්‍රශ්න වලට විසඳුම් හඳුනා ගැනීම.
- ❖ එම තීරණය ක්‍රියාත්මක කල හැකි තීරණයක් වීම හා එය ක්‍රියාත්මක කිරීමට එම පුද්ගලයාට මඟ පෙන්වීම.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

උපදේශකවරයා කරනුයේ සේවාලාභියාට සුදුසු තීරණයක් ඔහු විසින් ම ගැනීමට ඔහුට උදව් කිරීමයි.

## උපදේශක (Counseler) යනු කවරෙක්ද?

මනෝ විද්‍යාවේ මූලධර්ම භාවිතා කරමින් මිනිස් චර්යා තේරුම් ගන්නා විශ්ලේෂනය කරන හා එම ක්‍රම ශිල්ප භාවිත කරමින් මිනිස් හැසිරීම් වෙනස් කරන චර්යාවාදී විශේෂඥයෙකුටයි.(Counselior) යන වදන යෙදෙන්නේ.

**ඔහු-**

- සේවා ලාභියාට බලය ලබා දෙමින් උදව් කරන්නෙක් විදිහට ක්‍රියා කරයි.
- තීරණ ගැනීමට ඉඩහරින දිරිදීමක් කරයි.
- තොරතුරු සැපයීම අධ්‍යාපනය ,මඟ පෙන්වීම,පුහුණු කිරීම , චිත්ත වේග පල කිරීමට අවස්ථාව සලසා දෙයි.
- අධ්‍යාත්මික සංවර්ධනයට උදව් කරයි.
- මානසික සෞඛ්‍යය කෙරෙහි වැඩි අවධානයක් යොමු කරයි.
- දුෂ්කරතා හඳුනා ගෙන සහජීවනයෙන් ජිවත් වෙන්න අවශ්‍ය සහය ලබා දෙයි.
- සිතුම් පැතුම් එළියට ගැනීම හඳුනා ගැනීමට උදව් කරයි.(හැඟීම්බර දේවල් මොනවාද කියලා හඳුනා ගන්න.)
- අරමුණු හා සැලසුම් සකස් කර සම්බන්ධතා වර්ධනය කරයි.
- මානසික පීඩනය ආතතිය අ- කිරීමට උදව් කරයි.
- යම් යම් දේ විවිධ ආකාරයට කරන හැටි කියා දෙයි.

### උපදේශනයේ අවශ්‍යතාවය

- මානසික වශයෙන් ගැටලු ඇති වු විට
- කාර්යක්ෂමතාවය අ- වූ විට
- ඖෂධ වලට ඔරොත්තු නොදෙන රෝගී තත්ත්වයක් ඇති වූ විට
- තීරණ ගැනීමේ ශක්තිය නොමැති වූ විට
- බලාපොරොත්තු කඩ වූ විට
- ප්‍රමාණයට වඩා හීන මානය ඇති වූ විට

### උපදේශනයේ අරමුණු.

- ප්‍රතිකාර
- වැළැක්වීම
- සංවර්ධනය
- යොමු කිරීම (මනෝ වෛද්‍යවරයෙකු වෙත)

### උපදේශනයේ දී අනුගමනය කල යුතු ආචාර ධර්ම / මූල ධර්ම

- එකඟත්වය (උපදේශනය බල කිරීමකින් කල නොහැකිය)
- සෑම පුද්ගලයකුම සෙසු අයගේ වෙනස් වූ ඔහුටම ආවේණික වූ පෞරුෂත්වයකින් යුතු බව (සුවිශේෂී බව)
- තමන්ගේ හැඟීම් කුමක් වුවත් ඒවා ප්‍රකාශ කිරීමට හැම සේවා ලාභියෙකුටම අයිතියක් ඇති බව
- සිය කැමැත්ත පරිදි තීරණ ගැනීමට අයිතියක් ඇති බව
- රහස්‍යභාවය රැකීම.
- උපදේශන සම්බන්ධතාවය මිස වෙනත් සම්බන්ධතා ඇති කර නොගැනීම.
- පූර්ව විනිශ්චයන් වලින් තොරවීම



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ ලාභ සත්කාර නොගැනීම
- ❖ ගෞරව කිරීම(ඔහුගේ ගැටළුව ඔහුටම විසඳා ගැනමට ඇති හැකියාව)
- ❖ වගකීම් භාර නොගැනීම (උපදේශනය ලබන්නාට ඉටු කර ගත නොහැකි දේ ඉටු කර දෙන බවට පොරොන්දු නොවීම)
- ❖ පුද්ගල සංවර්ධනය ප්‍රතිකාරයේ ඉලක්කය ලෙස සැලකීම.

***උපදේශකයෙකු සතු ගුණාංග***

1. අනුවේදනීය බව
2. ශික්ෂණය
3. පරිණත බව
4. අනුන් වෙනුවෙන් කාලය කැප කිරීමට හැකි බව
5. ඉවසිලිවන්ත වීම
6. වෙනත් අයෙකුගේ හැඟීම් වලට හා අදහස් වලට ගරු කිරීම.
7. ඕනෑම අයෙකුගේ පුද්ගලික තත්ත්වයට සැලකීම.
8. සමාන්තරව සැලකීම
9. උදව් ලබන අයගේ මානසික ආරක්ෂාව සැලසීම.
10. ලෙන්ගතුකමක් ඇති බව
11. උණුසුම් සහගතව පිළිගැනීම
12. හදවතින් සම්පතවයක් ඇතිකර ගැනීමේ හැකියාව
13. විශ්වාසවන්ත අයෙකු වීම
14. නිර්ව්‍යාජ පුද්ගලයෙකු වීම.
15. අවබෝධ කර ගැනීමේ හැකියාව

එම් .බී.උදයසිරි
ගුරු උපදේශක(උපදේශනය වෘත්තීය මාර්ගෝපදේශන)
කලාප අධ්‍යාපන කාර්යයාලය
ත්‍රිකුණාමලය



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீக்குருவி

"தெங் வெலாவ ஹரி.. லமாய் ஒக்கோம இந்த கன்ன.. அம்மலா தாத்தலா சஹ அனித் கட்டிய ஒக்கோம கருணாகரலா எலிய யன்ன..!"

பரீட்சை மண்டப மேடையில் நின்றிருந்த நிலையப் பொறுப்பாளரின் அறிவிப்பு உச்ச தொனியில் ஒலித்தது. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை ஆரம்பிப்பதற்கு இன்னும் பதினைந்து நிமிடங்கள் மட்டுமே இருந்தன. பரீட்சை நடாத்தும் குழுவினர் நாங்கள் உரிய ஆயத்தங்களை செய்வதில் பரபரப்பாக ஈடுபட்டுக் கொண்டிருந்தோம்.

தமிழ் மற்றும் சிங்கள மொழிமூலம் தோற்றும் மாணவர்கள் எழுதும் பரீட்சை நிலையம் அது. மாணவர்களுடன் வந்திருந்த பெற்றோர் தமது பிள்ளைகளின் சுட்டெண்கள் பொறிக்கப்பட்ட மேசைகளைத் தேடிக் கண்டுபிடித்து அமர்த்துவதிலே பரபரப்பாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

"ஸேர்.. ஒரு நிமி'ம்!"

குரல் வந்த திசையில் ஒரு முப்பது அல்லது முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க பெண் நின்றிருந்தாள். அவளுடைய தோற்றத்தில் ஏழ்மையின் சாயல் படிந்திருந்தது .முகத்திலும் கைகளிலும் கருமையான தழும்புகள் சில இருந்தன. கண்களிலே பதற்றமும் அயர்ச்சியும் தெரிந்தது.

"என்னம்மா.. இன்னும் இங்கயேநிக்கிறீங்க.. எக்ஸாம் ஸ்டார்ட்டாகப் போகுது.. பிள்ளைய விட்டுட்டுகெதியில வெளியில போங்க.."

"இல்ல ஸேர்.. என்ட மகன்.. அவன் அந்தா இருக்கிறான்!" என்று ஒரு சிறுவனை எனக்குக் காண்பித்தாள்.அவன் உருவத்தில் சற்று சிறியவனாக இருந்தும் அளவில் சற்றுப் பெரிதான பாடசாலைச் சீருடையை அணிந்திருந்தான். மண்டபத்திலிருந்த மேசையொன்றில் அமைதியாக அமர்ந்திருந்தான்.

"சரி, அவன்ட நம்பரைக் கண்டுபுடிச்சு உட்கார வச்சிட்டீங்கதானே..?"

"ஓம் கண்டுபுடிச்சிட்டன். அதில்ல ஸேர்.. அவன் வந்து.. வந்து" கூறும்போதே அவளது கண்கள் லேசாய்க் கசிந்தது. அதற்கிடையில் பரீட்சை ஆரம்பிப்பதற்குரிய மணி ஒலித்தது.

"என்னம்மா.. உங்க பிரச்சினை உங்களுக்கு?" என்றேன் சிறிது ஆயாசத்துடன்.

"அல்லாஹ்வுக்காக அவனைக் கொஞ்சம் கவனிச்சுக் கொள்ளுங்க ஸேர்.. ஒங்களுக்கு புண்ணியமாப் போகும்.. அவன்.. அவன் இரவெல்லாம்...."

"சரி.. சரி, எப்பிடியும் எக்ஸாம அவன்தானே எழுதணும்.. சரி, நாங்க கவனிக்கிறம்.. நீங்க தைரியமாப் போங்க!"என்று நான் கூறியதும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தன்மகனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி மனமில்லாமல் வெளியேறினாள் அந்தத் தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு அவளைப் பார்க்க பாவமாக இருந்தது. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்காக ஏன்தான் இந்த பெற்றோர்கள் இப்படியெல்லாம் உணர்ச்சி வசப்படுகின்றார்களோ.. வறிய நிலையில் இருக்கும் திறமையான மாணவர்களைத் தெரிவு செய்து ஊக்குவிப்புத் தொகை வழங்குவதற்காக அரசு ஆரம்பித்த போட்டிப் பரீட்சைதான் இது. ஆனால் ஊக்குவிப்புத் தொகை கிட்டுவதற்கு அருகதையற்ற அரசாங்க ஊழியர்களின் பிள்ளைகளும் களத்தில் இறங்கியதில் இன்று அந்த நோக்கமே மாறிப்போய் விட்டதுதான் உண்மை.

இயல்பாக படித்து திறமையைக் காண்பிக்க வேண்டிய பிஞ்சுப் பாலர்களை ஏறக்குறைய வலுக்கட்டாயப்படுத்தி பரீட்சைக்குத் தயார்படுத்துகின்றார்கள். அதனால்ஓய்வுநேரமும் விளையாட்டுகளும் இன்றி பலவிதமான மனவுளைச்சலுக்கு உள்ளாவதையும் நான் பார்த்திருக்கின்றேன். பரீட்சையை எழுதுவதற்குத் தயாராக அமர்ந்திருக்கும் சின்னஞ்சிறார்களின் முகங்களிலே தெரியும் பதற்றத்தையும் திகிலையும் பார்க்கும்போது பாவமாக இருந்தது.

நேரம் 8:55. பரீட்சை வினாத்தாள்களை வழங்குவதற்கு இன்னும் ஐந்து நிமிடம் மட்டுமே இருந்தது.

அந்த விசாலாமான மண்டபத்தில்சிங்கள மொழிமூல பரீட்சார்த்திகள் ஒருவரிசையிலும் தமிழ் மொழிமூல பரீட்சார்த்திகள் மறுவரிசையிலுமாக மாறிமாறி ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தனர். பரீட்சை மேற்பார்வையாளர்கள் நாங்கள் மாணவர்களின் அனுமதி அட்டைகளை சரிபார்ப்பதிலும் கையெழுத்திடுவதிலும் மும்முரமாக இருந்தோம்.பரீட்சை நிலையப் பொறுப்பாளர் எம்மை மேடைக்கு அழைத்து மாணவர்களுக்கு இரு மொழிகளிலும் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குமாறு பணித்தார். தமிழ் மொழிமூலமான அறிவுறுத்தல்களை நான் வழங்கினேன்.

சிறிது நேரத்தில் வினாத்தாள்கள் வழங்கப்படலாயின. பரீட்சார்த்திகள் வினாத்தாள்களை உரிய முறையில் மடித்து வைத்து தமது சுட்டிலக்கங்களை இட்டதும் துரிதமாக விடையெழுத ஆரம்பித்து விட்டிருந்தனர். மண்டபமே ஊசிவிழும் அமைதியில் ஆழ்ந்திருக்க மேற்பார்வையாளர்கள் நாங்கள் குறுக்கும் நெடுக்குமாக நடைபோட்டவாறிருந்தோம்.

சிறிது நேரம் கழிந்ததும் கடிகாரத்தைப் பார்த்தேன். மு.ப. 9:22 அப்பொழுது எதேச்சையாக காலையில் என்னைச் சந்தித்த அந்தப் பெண்ணின் நினைவு வந்தது.'அவள் ஏன் அப்படி கவலையோடு இருந்தாள்.. என்ன பிரச்சினை.. என்னிடம் ஏதோ சொல்ல வந்தாளே.. அது என்னவாக இருக்கும்..?' என்று யோசித்தபடி அவளுடைய பையன் இருந்த வரிசையை ஞாகபம் வைத்து மண்டபத்தின் மத்திய பகுதியை நோக்கிச் சென்றேன்.

நான் அங்கு போய்ப் பார்த்தபோது தூக்கி வாரிப்போட்டது. ஆம் எல்லோரும் பரீட்சையை மும்முரமாக எழுதிக்கொண்டிருக்க அந்தப் பையன் மட்டும்மேசையில் இடது கையை நீட்டியபடி ஒருக்களித்து உறங்கிக் கொண்டிருந்தான். பரீட்சை வினாத்தாள் பேனையெல்லாம் அப்படியே திறந்தபடி கிடக்க அவனுடைய வாயிலிருந்த உமிழ்நீர் வடிந்து கொண்டிருந்தது. அதுகூடத் தெரியாமல் தன்னை மறந்த ஆழ்ந்த உறக்கத்திலிருந்தான் பையன்.

உடனே நான், "யேய் தம்பீ!.. தம்பீ.. எழும்பு.. எழும்பு" என்று அவனை லேசாய் உலுக்கினேன். சுவாசத்தை தவிர அவனிடம் ஒரு அசைவுமில்லை. இன்னும் வேகமாக அவனை அசைத்தும் அவன் எழுந்திருப்பதாக இல்லை. என்ன செய்வதென்று புரியாமல் சக மேற்பார்வையாளர் ஒருவரை அழைத்து இருவருமாக அவனை "தம்பீ..! தம்பீ!!" என்று எழுப்புவதற்கு முயன்றும் பலனில்லை. 'ம்.. ம்' எனும் மெல்லிய முனகல்களைத் தவிர வேறு எந்தப் பதிலுமில்லை. அப்படியொரு தூக்கத்திலிருந்தான் அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிகழ்ச்சியால் பரீட்சை மண்டபம் சிறிது சலசலப்புக்குள்ளானது. அந்தச் சிறுவனுக்கு அருகிலிருந்த ஏனைய மாணவர்களும் சிறிது குழப்பமடைய ஆரம்பித்தனர். இதையெல்லாம் மேடையில் இருந்து கவனித்துக் கொண்டிருந்த பரீட்சை நிலையப் பொறுப்பாளர் சட்டென இறங்கி வந்தார். அவனுடைய நெற்றியிலும் கழுத்திலும் தொட்டுப் பார்த்தவர் அவனுடைய பாடசாலைச் சீருடையைச் சிறிது தளர்த்தி விட்டார்.

"தாயைக் கூப்பிட்டு விடுவோமா.. ஸேர்?" என்று கேட்டாள் என்னருகிலே நின்றிருந்த சக ஆசிரியை ஒருத்தி.

"இல்ல.. வேணாம்! அவங்களை வீணா பதட்டப்பட வைக்க வேணாம்.. இவன் இரவிரவா முழிச்சிருந்து படிச்சிருப்பான் போல, பாவம்!"

"இப்ப என்ன ஸேர் செய்யிறது..?"

"ம்! ஒண்ணும் செய்ய வேணாம்.!" என்று திரும்பியவர் சட்டென என்னைப் பார்த்து "பொடியனை அப்படியே மேசையில தூங்க விடுங்க.. ஆளைக் கீழ விழுந்திடாம கொஞ்சம் கவனிச்சிட்டிருங்க.. போதும்!" என்றார்.

நான் திடுக்கிட்டேன். 'இந்த மனிசனுக்கு என்ன கிறுக்கு பிடிச்சிட்டுதா?'

"சியானி டீச்சர் இந்த சீலிங் ∴பேன்ட சுவிட்ச்சைப் போட்டு விடுங்க..! நீங்க அவன்ட பேப்பரை எடுத்து ஒரு பைலில போட்டு வச்சுக்கொள்ளுங்க.. மற்றவங்க.. உங்களோட வேலைகளைப் பாருங்க.. அவன் தூங்கட்டும்.. மற்றப் பிள்ளைகள் நீங்க உங்க பரீட்சையை எழுதுங்க..!"என்று கப்பல் ஒன்றின் தலைமை மாலுமியைப் போல ஆணைகளைப் பிறப்பித்தார்.

நான் கோபமும் ஆச்சரியமுமாக அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் அவரோ வெகுநிதானமாக நடந்துபோய் தன் இருக்கையில் அமர்ந்து கொண்டார். பின்பு சிற்றூழியனை சைகையால் அழைத்து ஏதோ கூற அவன் ∴ப்ளாஸ்க்கை எடுத்துக்கொண்டு மண்டபத்தை விட்டு வெளியேறினான். எனக்கு பற்றிக்கொண்டு வந்தது.

'என்ன மனிதர் இவர்..? இதுவே அவருடைய மகனாக இருந்தால் இப்படியெல்லாம் இருப்பாரா?'

மண்டபம் மீண்டும் அமைதியானது. அந்தச் சிறுவன்மட்டும் தொடர்ந்து தூங்கிக் கொண்டேயிருந்தான். எனக்கு அந்தப் பையனை நினைத்து கவலையாக இருந்தது. பாவம் அவன். அவனைப் பார்த்தால் கெட்டிக்கார மாணவனாகத் தெரிந்தான். அவன் பாதியில் விட்டிருந்த வினாத்தாளை எடுத்துப் பார்த்தேன். அவன் எழுதியிருந்தவரை அனைத்து விடைகளும் சரியாக இருந்தன.

நேரம் 9:40 ஆகிக் கொண்டிருந்தது. பரீட்சை முடிவடைய இன்னும் 50 நிமிடங்கள் இருந்தன. பாவம் ஒரு கெட்டிக்காரன் இப்படி அநியாயமாகிப் போகின்றானே.. எனும் கவலையில் எனக்கு வேலையே ஓடவில்லை. மெல்ல நடந்து மண்டபத்தின் வலது ஓரத்திற்கு வந்து அங்கிருந்த யன்னலினூடாக தெரிந்த பாடசாலை மைதானத்தைப் பார்த்தேன்.

வெளியே இலேசாக மழைதூறிக் கொண்டிருந்தது.

விளையாட்டுமைதானத்தை அடுத்திருந்த வகுப்பறைக் கட்டிடமொன்றின் தாழ்வாரத்தின் கீழே அந்தப் பையனின் தாய் தனியாக நின்றிருப்பது தெரிந்தது. அங்கிருந்து இந்தப் பரீட்சை மண்டபத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். பாவம் எத்தனை கனவுகளோடு அவனை இந்தப் பரீட்சைக்காகத் தயார் படுத்தியிருந்திருந்தாளோ. நேரம் ஓடிக்கொண்டேயிருந்தது. அவனை மீண்டும் ஒருமுறை எழுப்பிப் பார்த்தாலென்ன என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றியது. ஆனால் அவனோ இப்போதைக்கு கண்ணைத் திறக்கவேமாட்டேன் என்று குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான். எனக்கு ஏனோ இருப்புக் கொள்ளவில்லை.

'என்ன செய்யலாம்.. என்ன செய்யலாம்..?'

பேசாமல் பைலில் இருக்கும் அவனுடைய வினாத்தாளை எடுத்து மீதி வினாக்களுக்கான விடைகளை நானே செய்து விடுவோமா என்ற விபரீத எண்ணம் கூடத் தோன்றியது. நடந்து மேடைக்கு ஏறி பொறுப்பாளரிடம் சென்றேன்.

"ஸேர், அவனைக் கொஞ்சம் எழுப்பிப் பார்த்திடுவமா?"

"ஏதாவது அசைவு தெரியுதா..?"

"இல்ல.. இன்னும் அதே போலத்தான்"

"கொஞ்சம் பொறுப்பம்.. இன்னும் எவ்வளவு நேரமிருக்கு..?" என்றபடி கடிகாரத்தை பார்த்தார்.

"இன்னும் 45 நிமிசம் இருக்கு.. ஸேர்!"

"அவன்ட பேப்பர் உங்களுக்கிட்டத்தானே இருக்கு.. எப்படி செய்திருக்கானா..?"

"இந்தாங்க ஸேர்.." என்று ஃபைலில் இருந்து அதை எடுத்துக் கொடுத்தேன்.

அதை வாங்கிப் பார்த்தவரின் புருவம் சட்டென உயர்ந்து முகத்தில் ஒரு தெளிவு பிறந்தது. "அட இருபது நிமிடத்துக்குள்ள பாதிக்கேள்விகளுக்கு மேல விடை எழுதியிருக்கிறான்டாப்பா.. ப்ரில்லியண்ட். நல்ல அழகான கையெழுத்து.." என்றார்

"விடையும் எல்லாம் சரியா இருக்கு ஸேர்..! அவனுக்கு ஏதாவது உதவி செய்யேலுமா.."

"சரி, பார்ப்பம்.. முதல்ல நீங்க அங்க போய் நில்லுங்க.." என்று கூறிவிட்டு மீண்டும் அவருடைய அலுவல்களைப் பார்க்கலானார். எனக்கு அவர் மீது கோபம் கோபமாய் வந்தது. வேறுவழியின்றி மேடையை விட்டிறங்கி மீண்டும் அந்தப் பையனின் அருகிலே வந்தேன். அவன் இன்னும் உறங்கிக் கொண்டேயிருந்தான்..

இன்னும் வெறும் 40 நிமிடங்கள்தான் இருக்கின்றன. கடமையிலிருந்த என்னுடைய சக மேற்பார்வையாளர்களும் அவ்வப்போது வந்து அவனைப் பரிதாபத்துடன் பார்த்து விட்டு நகர்ந்தவாறிருந்தனர். நான் அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவனுடைய தாய், "அவன் இரவெல்லாம்.." என்று எதையோ கூற முற்பட்டது என் நினைவில் ஓடியது. சரிதான் அந்த மடப்பெண் இரவெல்லாம் மகனை தூங்கவிடாமல் படிக்க வைத்திருப்பாள் போல. அதுதான் இங்கு வந்து கண்ணைத் திறக்க முடியாமல் தூங்கிக் கொண்டிருக்கின்றான் என்று நினைத்தபோது அவளிலும் எரிச்சல் வந்தது எனக்கு.

நேரம் 9:55 ஆகிவிட்டிருந்தது. இனியும் பொறுக்க முடியாது. ஒன்றில் இவனை எப்படியாவது எழுப்பி எழுத வைக்க வேண்டும். அல்லது அவனுடைய வினாத்தாளையாவது இரகசியமாக பூரணப்படுத்தி விட வேண்டும் என்ற ஆவேசம் உண்டானது எனக்கு. அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.

உறங்கிக் கொண்டிருந்தவன் ஏதோ மந்திரத்திற்கு கட்டுப்பட்டவன் போல மேசையிலிருந்து தலையைச் சிறிது உயர்த்தினான். அப்படியே நிமிர்ந்து சுற்றிலும் நோட்டமிட்டான். அவனுடைய கண்கள் மிளகாய்ப் பழம்போல சிவந்திருந்தன.

"தம்பீ.. என்ன செய்யுது..?" என்று கேட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் வாய்க்குள் ஏதோ முணுமுணுத்தான். என்ன சொல்கிறான் என்று அவனருகே குனிந்து உற்றுக் கேட்டதில் 'பத்துதும்மா.. உம்மா.. பத்துது.. பயமாரிக்கி" என்று ஏதோ சம்பந்தமில்லாமல் சொல்லிக்கொண்டிருப்பது கேட்டது.

எங்கே அவன் மீண்டும் உறங்கி விடுவானோ என்ற பயத்தில் அருகிலிருந்த போத்தலிலிருந்து நீரை உள்ளங்கையில் ஊற்றியெடுத்து அவனுடைய முகத்தில்லேசாய் விசிறிவிட்டேன். சில வினாடிகள் கழிந்ததும் அவன் சிறிது தெளிவு பெற்று, "எங்க என்ட பேப்பர்..?" என்று விடைத்தாளைத் தேடினான்.

"ஆ! கொஞ்சம் இரு, தாறன்" என்று விட்டு அவனை மெல்ல கைத்தாங்கலாக நடத்திமண்டபத்தின் இடதுபுறக் கதவினூடாக வெளியே கொண்டு சென்றேன். அங்கு அவனுடைய முகத்தை நன்றாகக் கழுவிதுடைத்து விடும்போதுதான் கவனித்தேன். அவனுடைய வலது காதோரம் தீப்புண் ஒன்று பச்சையாக இருந்தது.

"என்னடா தம்பி இது உன்ட காதில நெருப்புச் சுட்ட மாதிரியிருக்கு?"

"அதுவா.. ராவு எங்கட மால் நெருப்புப் புடிச்சு பத்திப் பெய்த்துது.. என்ட புத்தகம் உடுப்பெல்லாம் பத்திப் பெய்த்துது. இது ரியாசத்துட ஸ்கூல் உடுப்பு"

"ஆ.. எப்பிடி வீடு பத்திச்சுது?"

"அது.. வந்து.. எங்கட வாப்பா வந்து தூள் வாங்கிறதுக்கு எந்த நாளும் உம்மாவோட காசு கேட்டுச் சண்டை புடிப்பாரு..."

"தூளா..? என்ன தூள்"

"அது வெள்ளையா ஒரு அலுமினியத்தாளில வாங்கி வந்து நெருப்புக்குச்சியால சூடாக்கி உறிஞ்சுவாரு.. பொறவு வேலைக்கும் போகாம ஒரு மூலையில மயங்கிக் கிடப்பாரு.. நேத்து ராவு காசு தரல்லண்டு கோவத்துல வூட்டைப் பத்தவச்சிப்போட்டாரு.. ராவெல்லாம் நாங்க நித்திரையே கொள்ளயில்ல.. மாமா அனுப்புன புது கிரிக்கட் 'பெட் 'அது. அதுவும் சேந்து பத்திட்டு"என்று விசும்பினான் அவன்.

எனக்கு சட்டென்று அவனுடைய தாயின் முகம் நினைவுக்கு வந்தது. பாவம், இதைத்தான் சொல்ல முடியாமல் அவள் தடுமாறினாளா..?

"சரி,நீ விளையாடுறதுக்கு அதே கிரிக்கட் பெட் ஒண்டு நான் வாங்கித் தருவேன். நல்ல பிள்ளை.. நீ ஒடனே போய், மிச்சத்தை எழுதி கெதியா முடிச்சிடு. என்ன எழுதுவாதானே..?" என்று கேட்டேன்.

"ம்ம்..நா எழுதுவேன்!" என்றான் நம்பிக்கையோடு.

"வெரிகுட் போய்!" என்ற குரல் கேட்டு நான் திரும்பிய போது கையில் ஆவிபறக்கும் கோப்பியுடன் புன்முறுவல் பூத்தபடி நின்றிருந்தார் நிலையப் பொறுப்பாளர்.


"இதைக் குடிச்சிட்டு.. பயப்படாம எழுதணும் சரியா.."

கோப்பியைக் குடித்து முடித்ததும் அவன் முகம் தூக்கக் கலக்கம் நீங்கி தெளிவாக இருந்தது. நான் கொடுத்த விடைத்தாளை கையில் வாங்கிக் கொண்டு நம்பிக்கை பொங்க தன் இருக்கைக்கு ஓடிச்சென்றான் அந்த ஏழைத் தாயின் மகன்.

-மூதூர் மொகமட் ராபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொடிமரம் போலவே நிமிரச்செய்குவோம்

நேற்றுவரை புயலெழுந்த எம்மண்ணில்
ஊற்றுவிழி நீர் சொரிந்தோம்.
மாற்றுவழி ஏதுமின்றி மரணித்தோம்.
தேற்றுதற்குக் கூட நாதியற்றுத் தேம்பினோம்.
பட்டுவேட்டியின் கனவில் மிதந்தோம்.
கட்டிய சிறு துண்டும் களற்றப்பட்டோம்.
எட்டுமாம் எல்லாம் என்றிருந்தோம்.
விட்டு எல்லாம் போக விருப்பதைத் தொலைத்தோம்.

எத்தனை துயர் எங்களைச் சூழினும்
எங்களின் சந்ததி தோற்றுமே வீழினும்
அத்தனை இன்பமும் அழிவுற்றுப் போயினும்
அருமருந்தன்ன எம்புலம் மாயினும்
செத்துமே சேரினும் இழிநிலை வாரினும்
செம்மை சேர் வாழ்வது தொலைவென ஆயினும்
சத்தியமாய் தமிழ்ச்சாதியோ கல்வியைக்
கைவிடாதென்று அறிந்திடு உலகமே.

கல்வி என்றதும் எங்களின் இனமதே
நினைவில் வந்திடும் நாளொன்றிருந்தது.
சொல்லி வைத்ததாய் யாரின் கண்பட்டதோ
சொடக்கும் நேரத்தில் கீழ் நிலையாயினோம்.
வெல்லும் வகையதை மீண்டுமே ஆக்குவோம்.
வெந்த வாழ்வினை சீர்மை செய்துமே
தொல்லை அகற்றியே அவச் சொல்லை நீக்குவோம்.
தோன்றும் நன்னிலை தொடர்ந்திடச் செய்குவோம்.

சட்டதிட்டங்கள் ஆயிரம் சொல்லலாம்
தண்டனையது இல்லையென்றாகலாம்
பட்டம் பெற்றவர் பதவியுற்றவர்
எங்கள் மண்ணிலே வீழ்ச்சி காணலாம்
திட்டமிட்டுமே கல்வி தன்னையே
சிதைக்கும் நிலையது தொடர்ந்து போகினும்
வெட்ட வெளியினில் நிமிரும் கொடிமரம் போல
கல்வியைத் தூக்கி நிறுத்துவோம்.

தி.சாந்தகுமார்,

யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கல்வித்துறை எதிர்கொள்ளும் நெருக்கீடுகள்

மனிதன் மனிதனாக வாழ்வதற்கும் மனிதம் முழுமை பெறுவதற்கும் காரணியாகவுள்ள ஒரு வல்லமையான கருவியாகக்கல்வி காணப்படுகிறது. 1948 இல் வெளியிடப்பட்ட சர்வதேச மனித உரிமைச்சட்டத்தின் 26 ஆம் உறுப்புரையில் கல்வி மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகக் கணிக்கப்பட்டுள்ளது. எல்லா நன்மைகளிற்குமான வாயில்களும் கல்வியினாலேயே திறக்கப்படுகின்றன என்பதனை யாரும் மறுப்பதற்கில்லை. கல்வியினைப் பெறுகின்ற வழிகள் வேறுபடுகின்றன ஆயினும் கல்வியினை எல்லோரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமிருக்க முடியாது. அறிதலுக்கு கற்றல், செய்வதற்கு கற்றல், சேர்ந்து வாழ்வதற்கு கற்றல், ஆவதற்கு கற்றல் என கற்றல் தூண்கள் நான்கும் கல்வியின் முக்கியத்துவத்தினை மேலும் விளக்குவனவாகக் காணப்படுகின்றன.

இலங்கையின் கல்வித்துறையைப் பொறுத்தவரை தென்னாசியாவில் முன்னணியில் திகழும் நாடு என்று பெருமை பேசிக்கொண்டாலும் பல இடர்களையும், சவால்களையும் கொண்டதாக இருப்பதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். உலகமயமாக்கலுக்குப் பின்னர் எல்லாவிதமான செயற்பாடுகளும் உலகளவில் நிலைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் எம் நாட்டில் கல்வித்துறைமட்டும் பின்தங்கியே உள்ளது. இலங்கையில் தற்போது 10161 பாடசாலைகள் உள்ளன. அப்பாடசாலைகளில் 250095 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். அதிக ஆளணியினரைக் கொண்ட அரசதுறையாகக் கல்வித்துறை காணப்படுகின்றது. ஆயினும் பாரியளவில் பிரச்சினைகளை எதிர்நோக்கும் துறையாகவும் இத்துறையே காணப்படுகின்றது. பொதுவாக கற்பித்தல் குறிப்பாக பாடசாலை மட்டக்கற்பித்தல் வெற்றியளிப்பதில் பல்வேறு உளவியல், பௌதீக, மனிதவளக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவற்றைப் பேணுகின்ற போது திருப்திகரமான கற்பித்தலைக் காணக் கூடியதாக உள்ளதோடு பரீட்சையின் சித்திகளிலும் முன்னேற்றத்தை எட்டமுடியும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் கல்வித்துறையின் முக்கிய பங்காளிகளான மாணவர்களும், ஆசிரியர்களும் பல்வேறு சவால்களிற்கும் சிக்கல்களிற்கும் முகங்கொடுத்து வருகின்றனர். இன்றைய காலப்பகுதியில் வாழ்கின்ற எமக்கு கல்வித்துறையின் கொள்கைகள், நடைமுறைகள் உலகில் ஏற்படுகின்ற மாற்றங்களிற்கு முகங்கொடுக்கக் கூடியவகையில் உலகின் சவால்களையெல்லாம் முறியடிக்கக் கூடியவகையில் அமைதல் வேண்டும். ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரை கல்வியானது பெரும்பாலும் ஏட்டுக் கல்வியாகவே அமைந்துள்ளதனைக் காணலாம். அண்மைக்காலங்களில் அதனை மாற்றி அமைப்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைப்புக்கள் காட்டப்பட்டு வருகின்ற போதும் முழுமையாக நடை முறைக்கு வரவில்லை என்பதே உண்மையாகும்.

மேலும் கலைத்திட்டமானது பெருமளவு பொருத்தப்பாடற்ற கலைத் திட்டமாகவே காணப்படுகின்றது. மாணவர்களின் நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினைகளோடும் நடை முறைகளோடும் ஒத்துப்போகாத தத்துவார்த்த ரீதியான கல்வித்திட்டம் காணப்படுவதனால் மாணவர்களின் புத்தாக்கம் மற்றும் புறப்பாடவிதான செயற்பாடுகள் போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதனைக் காணமுடியவில்லை.

பரீட்சை முறை முதன்மைப்படுத்தப்பட்டு வருவது மற்றுமோர் பிரச்சினையாகக் கருதமுடிகிறது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை , க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை ,க.பொ.த.உயர்தரப் பரீட்சை எனபரீட்சையைமையப்படுத்தி எமது கல்வித்துறை சுழல்கிறது. இதன் காரணமாக ஓட்டப்பந்தயத்தில் யார் முதலிடம் பெறுவது எனும் நோக்கில் மாணவர்களும், ஆசிரியர்களும் இன்றைய சூழலில் பெற்றோரும் இணைந்து அவதிப்படுவதனைக் காணமுடிகிறது. இவற்றிற்கு மேலாக தரம் 1இல் பிள்ளையை இணைத்துக் கொள்வதற்கும் எழுத்துப் பரீட்சை நடாத்தப்படும் பரிதாபம் இன்னும் எமது நாட்டில் காணப்படுகின்றது.

இலங்கையில் தொழில்சார் கல்விவிளைவு 12 வீதமாகக் காணப்படுகின்றது. தொழிலுக்கு வழிகாட்டுகின்ற அல்லது தொழிலோடு இணைக்கின்ற கல்விநடைமுறை தற்காலத்தில் ஓரளவிற்கு நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகின்றது. இடைக்காலத்தில் மரவேலை, உலோகவேலை, நெசவு போன்ற பல்வேறு தொழிலைப் பெற்றுக் கொள்ளக் கூடிய பாடங்கள் இடைநிலைக் கல்வியில் காணப்பட்டன. ஆனால் அவை பின்னர் காணாமற்போயின. தற்போது தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம், மனைப்பொருளியல் போன்ற பாடத்துறைகள் காணப்படுகின்றன. ஆயினும் ஒப்பீட்டு அளவில் அவற்றின் செயற்படுதிறன் குறைவு என்றே கூறவேண்டியுள்ளது.

அரசியல் காரணிகள் பலவும் இலங்கையின் கல்வித்துறையைப் பாதிப்பதில் அதிகசெல்வாக்கு செலுத்துகின்றன. பாடவிதானம் தயாரித்தல் தொடக்கம் அதிபர், ஆசிரியர் இடமாற்றங்கள் என அவை தொட்டுத் தொடர்ந்து செல்கின்றன. காலத்திற்குக் காலம் அரசுகள் மாறுகின்றபோது கல்வித்திட்டங்களும் நடைமுறைகளும் மாற்றமடைந்து வரும் துர்ப்பாக்கிய நிலமை இங்கு காணப்படுகின்றது. புதிய கல்விக் கொள்கை ஆரம்பிக்கப்பட்டு நடை முறைக்கு வந்து அதன் விளைவுகளை அறிந்து கொள்வதற்கு முன்னமே ஆட்சிக்கு வரும் மற்றுமொரு சாரார் புதிய கல்விக் கொள்ளையொன்றை தாம் முன்வைக்கின்றனர். இது கல்வித்துறையின் வீழ்ச்சிக்கு மற்றுமோர் காரணமாகின்றது. கல்வித்துறையினரின் இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகளின் போதும் காணப்படுகின்ற தேவையற்ற அரசியல் தலையீடுகள் நிலைமைகளை மேலும் சிக்கலுக்குள் தள்ளிவிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1931ல் இலங்கையின் கல்விமுறையில் இலவசக்கல்வி புகுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு 1940ல் இலவசக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையினால் ஏழை மாணவர்கள் பலர் கல்வி கற்று உயர்நிலை பெற்றதோடு நாட்டினை முன்னகர்த்திச் செல்லக்கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர் என்பது உண்மையாகும். ஆனால் இவ் இலவச நடைமுறைகள் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதற்கும் தாராளமாகக் கதவுகளைத் திறந்துவிட்டுள்ளது எனலாம். கட்டட நிர்மாணங்கள், தரஉள்ளீட்டுக் கொள்வனவுகள், இலவசச்சீருடை போன்ற பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும போது சில முதலைகளால் அரசநிதி விழுங்கிஏப்பம் விடப்படுகின்றது. எனவே ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் பற்றாக்குறையாகக் காணப்பட இவ்வாறான மோசடிகள் கல்வித்துறையின் இறங்கு முகத்திற்கு மற்றுமோர் காரணியாக அமைந்துவிடுகின்றது.

கல்வியின் விளைவுகளில் ஒன்று நற்பிரஜைகளை உருவாக்குதல் ஆகும். ஆனால் இன்றைய சூழலில் மாணவர்களும் ஆசிரியர்களும் கற்றல், கற்பித்தலில் ஈடுபட முடியாதளவிற்கு மிகப்பூதாகரமான செயற்பாடாகப் போதைப்பொருள் எனும் கொடிய விசம் காணப்படுகின்றது. நாள்தோறும் பலநூறு கிலோ போதைப் பொருட்கள் கைப்பற்றப்படுகின்றன. அவை பெரும்பாலும் மாணவர்களை இலக்குவைத்தே விற்பனைக்குக் கொண்டுவரப்படுவதனை விசாரணைகள் மூலம் அறியக் கூடியதாக இருக்கின்றது. அத்துடன் மது மற்றும் புகைத்தல் ஆகிய சமுதாய அழிவுக் காரணிகளும் பாடசாலைக்குள் அல்லது கல்விப்புலத்திற்குள் ஆழ ஊடுருவி கல்வித்துறையின் பின்னடைவிற்கு வழிகோலுவதனைக் காணக்கூடியதாக உள்ளது.


எமது நாட்டில் 7600ற்கு மேற்பட்ட தனியார் கல்வி நிறுவனங்கள் (ரியூசன்) இயங்குவதாகக் கூறப்படுகின்றது. இவை இலங்கையின் கல்வித்துறையில் சாதக பாதக நிலைகளை ஏற்படுவதனை அவதானிக்க முடிகின்றது. பெரும்பாலும் கல்வியை வியாபாரம் செய்கின்ற நிறுவனங்களாக அவை அமைந்துள்ளன. (ஒரு சில நிறுவனங்கள் சேவையை நோக்கமாகக் கொண்டுள்ளமையை ஏற்றுக்கொள்ள வேண்டும்) எனவே பாடசாலைகளைப் போன்று ஒழுங்குபடுத்தல்கள் இன்றி ஒழுக்க கலாசார பண்பாட்டு விடயங்களில் அதிக கவனம் செலுத்தலின்றிய நிலையில் கல்வித்துறையின் தளம்பல்களிற்கு அவற்றையும் ஒரு காரணமாகக் கூறமுடியும்.

எனவே மேற் கூறப்பட்டவற்றைத் தொகுத்து நோக்குமிடத்து உலகின் முன்னேற்றகரமான கல்வித்துறைகளைக் கொண்ட நாடுகளோடு விருத்தி கண்டுவரும் எமது நாடானது சமாந்தரமாகச் செல்ல முயன்றாலும் அம்முயற்சிக்குப் பல தடைகள் காணப்படுவதனை நாம் அவதானிக்கலாம். இந்நிலையை மாற்றி உலகின் முன்னணி நாடாகக் கல்வியில் எமது நாடு திகழவேண்டுமாக இருந்தால் பொருளாதாரத் துறையில் உயர்வளர்ச்சியைக் கண்டு அதன்மூலமாக எமது பலத்தில் நாம் காலூன்றுகின்ற நிலையை ஏற்படுத்தி எல்லோரது மனங்களிலும் நேர் எண்ணப்பாங்குகள் உண்டாகி அதன் மூலமாக உயர்நிலை நோக்கி முன்னேற முயலவேண்டும். அவ்வாறானதொரு சூழ்நிலையை உருவாக்க அனைவரும் சேர்ந்தே உழைக்க வேண்டும்.

தி.சாந்தகுமார்,
யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வது நானல்ல.....

"இனி வாழ்பவன் 'நான்' அல்ல

கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்" (கலாத்தியர் 2 : 20)

கிறிஸ்தவ வாழ்வு என்பது எம்பெருமான் இயேசுவின் போதனைகளையும், சாதனைகளையும் நம்முடைய வாழ்வாக்குவதாகும். நான், எனது, என்னுடைய என்ற சுயநலப் போக்கை உதறிவிட்டு,"நாம்" என்ற பொதுநலப் பண்புடன் வாழ எம்மைத் தயாராக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள்,"நாம்" என்ற சிந்தனையுடன் ஒவ்வொரு மானிடரும் வாழும் போது, அங்கு கிறிஸ்துவின் பிரசன்னம் மேன்மையாகி மேலானதாகின்றது. கிறிஸ்து எவ்வாறு வாழ்ந்தாரோ அவ்வாறு வாழ நாம் செய்ய வேண்டியவை:-

- "என்" விருப்பத்துக்கல்ல இறைவிருப்பத்துக்கு முன்னுரிமை கொடுத்தல்
- வரும் துன்பதுயரங்களை நம்பிக்கையுடன் ஏற்றல்
- மனித விழுமியங்களையேற்று, மனச்சாட்சிக்கு ஏற்றபடி வாழல்
- இறைவனுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதன் மூலம் அவரண்டை செல்லும் பாக்கியத்தைப் பெறல்.

கிறிஸ்துவுக்குள் வாழும் வாழ்வு உறவு வாழ்வு. நான் - என்னோடு, நான் - பிறரோடு, நான் - உலகத்தோடு, நான் - கடவுளோடு கொண்டுள்ள உறவு பலமானதாகவிருக்க வேண்டும். இந்த உறவு உண்மைத்தனத்துடன் வாழப்பட்டால்,"நாம்" வாழ்த்திட முடியும். இந்த உறவுக்குள் ஆட்டம் காணப்பட்டால், பலவீனம் உருவெடுத்து விட்டது என்பது தெட்டத் தெளிவாகின்றது.

நான் என்னை ஏற்றுக்கொள்ள எனது குறைகளைப் பார்ப்பதைவிட்டு, நிறைகளைக் காணவும் என்னுள் இருக்கும் உயர்வு – தாழ்வு மனப்பான்மையை அகற்றி தூயாவியின் வெளிப்படுத்தல்கள் செயல்பட இடமளிக்க வேண்டும்.

பிறரோடு கொள்ளும் நல்லுறவுக்கு நற்தொடர்பு அவசியம். சுயநலமற்ற உண்மையன்புடன் பழகி, பிறரில் அக்கறை உள்ளவராகத் திகழும் போது, எனக்கும் பிறர்க்கும் உள்ள உறவு உயிர்பெறுகின்றது. என் விருப்பத்துக்கு, என் சிந்தனைக்கேற்ப பிறரை மாற்ற முனைவது தவறு. பிறரோட கொண்டுள்ள அன்புக்குத் தடையாகவிருக்கும் பொறாமை என்னும் தீயகுணத்தை தீர்த்துக் கட்ட வேண்டும். என் உள்ளத்தில் இருந்து உருவாகும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மையன்பைப் பிரதிபலிப்பதாகவிருக்க வேண்டும். வார்த்தையால் பேசாவிட்டலும் கூட முகத்திலே மலரும் அந்தப் புன்னகையே அன்புறவை வளர்க்கும் அரியசாதனமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என
விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும்
அவர்களுக்குச் செய்யுங்கள்"

(மத்தேயு 7:12)

நான் - என்னோடும், பிறரோடும் கொண்டுள்ள உறவிலே உவகையிருந்தால், எம்மால் உலகோடும் மகிழ்ச்சியான உறவை உருவாக்க முடியும். உலகைத் தந்த அதன் உரிமையாளர் (கடவுள்), அதைப் பாதுகாத்து விருத்தி செய்யும் பாரிய பணியை மனிதனிடம் ஒப்படைத்துள்ளார். இயற்கையைப் பேணிப் பாதுகாத்தல், சூழவுள்ள சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல், சுற்றாடலைப் பாதுகாப்பதற்கென்று பலகைகளில் இடப்பட்ட அறிவிப்புக்களுக்கேற்ப உறவை உறுதிப்படுத்தலாம். உலகோடு கொள்ளும் பகை பிறரது உறவோடு கொள்ளும் பகையும் கூட.

நான் - என்னோடும், பிறரோடும், உலகத்தோடும் கொண்டுள்ள உறவின் அடிப்படையிலேயே, நான் - இறைவனோடு கொண்டுள்ள உறவு பலம் பெறுகின்றது. தன்னை விட்டுப் பிரிந்த மனிதனுடன் மீளவும் உறவைக் கட்டியெழுப்ப பலர் மூலம் பழைய ஏற்பாட்டில் பேசிய இறைவன், முடியாது என்ற நிலையில் இறுதியாகத் தன் ஒரே மகனது வார்த்தைக்கு மானிடர் கீழ்ப்படிந்து செவிமடுப்பர் என்றெண்ணி இயேசு கிறிஸ்து மூலம் தனது உறவை வெளிப்படுத்தினார். அந்த உறவு பலப்படுத்தப்பட்டதாலேயே தூயாவி இன்றும் நம்மோடு, அன்போடு உறவாடிக் கொண்டிருக்கிறார். பாவத்தால் இழந்த உறவைப் பலப்படுத்தி, பகிர்ந்து கொள்ள இயேசுகிறிஸ்து இறுதியில் தன்னையே எமக்காகத் தியாகம் செய்தார். கடவுளோடு நாம் கொண்டுள்ள உறவை வலுப்படுத்த,"செபம்" எம் வாழ்வுக்கு அத்தியாவசியமாகின்றது.


என்னிடம் இருக்கும் ஒவ்வொன்றும் எனக்காக ஆண்டவரால் அருளப்பட்டவை. "எனது" உழைப்பால், முயற்சியால் வந்தது என்றால் இறைவனை மறந்து விடுகின்றேன். "நான்" இருக்குமிடத்தில் நம் இறைவனில்லை. "நான்" மரணித்தால் நம் இறைவன் நம்முள் குடிகொள்வார்.

கிறிஸ்து + அவன் / அவள் (கிறிஸ்தவன் / கிறிஸ்தவள்) என்று பெயளரவிலே நில்லாமல், மற்றவர்கள் இயேசுவை என்னிலே காணக்கூடியதாக எம் வாழ்வு பிரதிபலிக்க வேண்டும். அப்போது தான் மனித மாண்புகள் எம்முள் நிறைந்திடும். நாம் மனுவுருவெடுக்க முடியும். மனிதத்துவம் எம்முள் மலர "இறைவார்த்தைகளை நேசி, குறைகள் உன்னை விட்டு விலகும்" என்ற தூய ஜெரோம் என்பவரின் வார்த்தையை வாழ்வாக்கிடுவோம்.

திருமதி.ஜெயவதனி
மரியதாஸ்
ISA (R.C + N.R.C)
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டிஸ்லெக்சியா

குறைபாடுகள் என்பது நிவர்த்தி செய்யக்கூடியது, நிவர்த்தி செய்ய முடியாதது, சமாளிக்கத்தக்கது என்ற அடிப்படையில் பொதுவாக அமைந்து காணப்படுகின்றது. இதில் டிஸ்லெக்சியா ஒரு கற்றல் குறைபாடு. இது நிவர்த்தி செய்யப்படவேண்டியது மட்டும் அல்ல, தகுந்த காலத்தில் இனங்காணப்படவேண்டியது.

**டிஸ்லெக்சியாவிற்கான வரைவிலக்கணம்**

"டிஸ்லெக்சியா" அல்லது சொற்சிதைவு என்பது மொழியுடன், சம்பந்தப்பட்ட ஊனமாகும். அதாவது "ஒரு மொழியின் சொற்களையும், இலக்கங்களையும் வாசிப்பதிலும் எழுதுவதிலும் உள்ள சிரமமே டிஸ்லெக்சியா" எனப்படுவது.

**டிஸ்லெக்சியாவின் சொற்தோற்றம்.**

டிஸ்லெக்சியா என்பது ஒரு கிரேக்க மொழிச் சொல்லாகும். "DYS" என்றால் Natural Signature for Dyslexia : Disruption of Posterior Reading System சிதைந்த "Fexia" என்றால் வார்த்தை அதாவது "சிதைந்த வார்த்தை" என்பது இதன் பொருளாகும்.

**டிஸ்லெக்சியா நோய பற்றி முன்வைப்படும் கருத்துக்கள்**

இதற்கான காரணம் இன்னும் சரியாகக் கண்டு பிடிக்கப்படவில்லை. பரம்பரை ஒரு காரணமாக இருக்கலாம் என்பதுடன் மூலையின் வளர்ச்சி செயற்பாடு மாறுபட்டிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

மூளையின் வளர்ச்சிச் செயற்பாடு மாறுபட்டிருப்பது என்பது இடது பக்க மூளை சற்றுத் தாமதமாகச் செயற்படுவதால் வலது கண் சொல்லின் ஆரம்பத்திலும் இடது கண் சொல்லின் முடிவிலுமாக இரண்டு கண்களும் ஒரே நேரத்தில் ஒரு சொல்லில் குறிக்கப்படுவதால் இரண்டையும் ஒன்றாகப் பார்க்கின்றார்கள். இதன் காரணமாக எண்ணிலும் எழுத்திலும் குழப்பம் ஏற்படுகின்றது.

ஒரே வார்த்தையில் உள்ள எழுத்துக்களையும் கிட்டத்தட்ட அதே போன்ற ஆனால் வேறு அர்த்தம் தரக்கூடிய வார்த்தையில் உள்ள எழுத்துக்களையும் போட்டுக் குழம்பிக்கொள்வது.

உதாரணம் : கப்பல் - பக்கல்

லொலி– ரொலி

இந் நோயின் தன்மை தொடர்பில் இன்னொரு கருத்து முன்வைக்கப்படுகின்றது. அதாவது எழுவது படிப்பது எல்லாம் மனிதனின் இயற்கையான திறமைகள் அல்ல. பல இலட்சம் வருட பரிணாம வளர்ச்சியின் காரணமாக மிக சமீபத்தில் தான் அவன் கற்றுக்கொண்ட வார்த்தைகள் இவை, எனவே பலருடைய மூளைகள் இன்னும் பாடசாலைக்குப் போகத் தயார் இல்லை என்பதுஒரு சாரரது வாதம், மற்றைய சாரரது வாதம் மரபியல் காரணம் என்பதாகும்.

**உளவியலாளரின் கருத்து**

டிஸ்லெக்சியாவை ஒரு வியாதி என வகைப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்கின்றார் உளவியாளர். அத்துடன் "இது ஓர் ஊனமோ குறைபாடோ அல்ல. நாம் எல்லோரும் எல்லாப் பரீட்சையிலும் முதற்தரத்திற்கு வருகின்றோமா? படிப்பின் முன்னே பின்னே இருக்கின்றோம். அதே போன்று இந்தக் குழந்தைகளுக்கு சற்று விசேட உதவி தேவைப்படுகின்றது. அவ்வளவுதான் என்கின்றானர். அத்துடன் "டிஸ்லெக்சியா" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தையைத் தவிர்த்துவிட்டு RD (Reading Disability) அன்று அழைக்கலாமே என்கின்றார்.

**டிஸ்லெக்சியா நோய் ஏற்படுவதற்கான காரணங்கள்**

- பார்வையில் உள்ள குறைபாடு
- இடது பக்க மூளையில் ஏற்படும் சிறு தாமதம்
- மூளையின் குறுக்குச் செயற்பாடு. அதாவது வலது பக்க மூளைக்கான வேலைகளை இடது பக்க மூளையும் இடது பக்க மூளைக்கான வேலையை வலது பக்க மூளை செயற்படுத்துவதால் ஏற்படும் குறைபாடு.
- நரம்பு மண்டலச் செயற்பாட்டில் ஏற்படும் ஒரு சிறிய மாற்றம்
- மூளையின் வலது, இடது பக்கச் செயற்பாடுகளில் கலவையான ஆதிக்கம்.
- மூளையின் நரம்பு மண்டலத்தின் அல்லது அவற்றின் செயற்பாட்டில் ஒரு சின்ன வித்தியாசம் அல்லது தடுமாற்றம் மட்டுமாகும்.

**டிஸ்லெக்சியாவால் ஏற்படும் பக்க விளைவுகள்.**

- வார்த்தைகளை படிப்பதில் எழுதுவதில் உள்ள சிரமம் இப் பருவத்தில் இதனைக் கண்டு பிடித்து திருத்தாவிட்டால் பிற்காலத்தில் மிகவும் பாதிப்புறுவர்.
- டிஸ்லெக்சியாவால் குழந்தைகளிற்கு எழுதவோ படிக்கவோ முடியாது என்பதல்ல. அதிலுள்ள குழப்பமும் சிரமும்தான் பிரச்சனை.
- உளவியலில் பாதிப்புக்கள் ஏற்படும், தன்னம்பிக்கை குன்றும்.

**டிஸ்லெக்சியாவைக் கண்டறியும் வழிகள்**

1. அகரவரிசை எழுத்துக்களை கேட்பது
2. 07 வயதுக்குட்பட்ட குழந்தையிடம் ஒன்று தொடக்கம் 20 வரை தடங்கலின்றி சொல்லும்படி கூறுதல்
3. விரைவாக வெவ்வேறு எணக்ளைத் தொட்டுக் காட்டுதல்
4. கிழமைகளின் பெயர்களைக் கேட்டல்
5. ஒரே தாளக்கட்டில் ஒலிக்கும் வார்த்தைகளைக் கேட்டல்.
   உ +ம் :- படம், லாடம், மாடம், ஓடம்
6. ஒரே எழுத்தில் தொடங்கும் வார்தைகளைப் புரிந்து கொள்வதில் அவதானித்தல்
   உ + ம் :- பாவம், பாசம்
7. பாடல் ஒன்றை ஒலிக்கவிட்டு அதன் தாளக் கட்டிற்கேற்ப கை தட்டுகின்றார்களா என அவதானித்தல்.
8. பார்த்த இடங்கள் பழகிய மக்களை ஞாபகப்படுத்துகின்றார்களா என அவதானித்தல்.
9. இடம், வலம், மேலே, கீழே, முன்னே, பின்னே, வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய திசைகளைக் குழப்பங்கள் இருக்கின்றதா என அவதானித்தல்.
10. குறிப்பிட்ட நேரத்திற்கு பொறுமையுடன் இருக்கின்றார்களா என அவதானித்தல்.
11. நண்பர்களுடன் கலகலப்பாகப் பேசுகின்றார்களா என அவதானித்தல்.

**டிஸ்லெக்சியாவின் அறிகுறிகள்**

1. எழுத்துக் குழப்பம்
   உ + ம் :- தப்பு – பத்து, பக்கம் - கப்பம்
2. எழுத்தைக் கவிழ்த்து அல்லத புரட்டி எழுதுவது
3. கிறுக்கி எழுதுவது
4. உச்சரிப்புக் குழப்பம்
5. எண்களை நினைவில் வைத்திருக்க முடியாமல் போவது
6. சோம்பலாக இருப்பது
7. பகல் கனவில் மூழ்கி இருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. நன்றாக வாசிக்கும் ரோபது அல்லது எழுதும் குழப்பம்
9. செருப்புக்களை கால் மாற்றிப் போடுவது
10. சப்பாத்து நாடாவைக் கட்ட முடியாது திண்டாடுவது
11. புத்தகப் பையையும், அலுமாரிகளையும் கவனமாக வைத்திருப்பது
12. ஒரு வார்த்தையை எழுத்துக்கூட்டி மந்தமாகப் படிப்பது.
13. புதிய வார்த்தையைக் கண்டு குழப்பம். சரளமாகப் படிக்காமல் ம்...... ம்......... போடுவது.
14. புத்தகத்தில் உள்ள எழுத்துக்கள் பாம்பு போல் கோணல் மாணலாக உணருவது.
15. வாசிக்கும் போது எழுத்துக்களை, வார்த்தைகளை விட்டுவிட்டு வாசித்தல்.
16. பார்வை, மயக்கம், கேள்வி மயக்கம், கால மயக்கம் என்ற சிந்தனையின்மை

***டிஸ்லெக்சியா குறைபாடுள்ள பிரபலங்கள்***

- லியானோ டாவின்ஸி
- வின்ஸ்டன் சேர்ச்சில்
- ஆன் பான்க்ரா / பட (வடதுருவம் தென்துருவம் சென்ற பெண்)
- ஏரின் புரோகோவர் (குடிநீர் மாசடைதல் சம்பந்தமாக ஆராய்ந்த கலிபோர்னியா பெண்)
- அலக்சாண்டர் கிரகம்பெல்
- வால்ட் டிஸ்னி
- ஹென்றி போட்
- கோல்ட் பெரிக்
- வுட்ரோ வில்சன்
- அன்ஸ்டைடன்
- எடிசன்
- ஹெகதா கிறிஸ்டி (எழுத்தாளர்)
- அபிஷேக் பச்சன் (ஐஸ்வர்யாராயின் கணவர்)

இப்படி இந் நோயை வென்று காட்டியவர்கள் ஏராளம். நீங்கள் ஒன்றைக் கவனத்தில் கொள்ளவும். பாடத்தில் கவனமின்றி இருப்பவர்கள் எல்லாம் டிஸ்லெக்சியாவால் பாதிக்கப்பட்டவர்கள் அல்ல. படிப்பது என்பது பல பிள்ளைகளுக்குப் பிடிப்பது இல்லை என்பது தாங்கள் அறியாததா! விருப்பம் இல்லாத வேலையை யார்தான் செய்வார்கள்.
இந்நோய்க் குறைபாடு இரத்த உறவினர்களுக்கு இருந்தால் வரும். ஆனால் இதனை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்துவிடுவது இன்றியமையாதது. முக்கியமாகக் கேட்பது, பார்ப்பது, தொடுவது போன்ற பல்வேறு புலன்களைப் பயன்படுத்தி மொழியைக் கற்றுக்கொள்ள அவர்களுக்குச் சிறந்த பயிற்சி கொடுக்கலாம்.
இம் மாணவர் பலரிற்குத் தனிக்கவனம் தேவைப்படுகின்றது. அப்போது தாம் அவர்களது புரிந்து கொள்ளும் சக்திகேற்ப அவர்களால் கற்றுக்கொள்ள முடியும்.
பாடசாலையில் வரும் பிரச்சினைகள் அவர்களுடைய மனதைப் பாதிக்கலாம். அது சமாளிக்க அவர்களுக்கு உதவி தேவைப்படலாம். கடின முயற்சி செய்து தனிப்பட்ட விதமாகச் சொல்லிக் கொடுக்கும் போது இம் மாணவர்கள் நன்கு எழுதவும் வாசிக்கவும் கற்றுக் கொள்வார்கள்.
இதையெல்லாம் பெற்றோர்களின் கையிலும் பாடசாலை ஆசிரியர்களின் கையிலும் தான் உண்டு. இனங்கண்டு சரியான முறையில் நெறிப்படுத்தினால் சுய மதிப்பீடு உருவாகும். இதற்குப் பொறுமையும் பரிவும் அவசியம்.

கணேசபிள்ளை அகிலன்
ஆசிரிய ஆலோசகர் (விசேடகல்வி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நன்றி நவில்கின்றோம்...

திருகோணமலை கல்வி வலயத்தின் ஆவணப்படுத்தல் பிரிவான CSDI பிரிவின் முலம் வெளிவரும் நித்திலம் சஞ்சிகையானது உங்கள் அனைவரது கைகளிலும் தவழ்ந்து கொண்டு இருக்கின்ற இவ்வினிய சந்தர்ப்பத்தில்,

“காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது”

என்ற திருவள்ளுவரின் வாக்குக்கு ஏற்ப நன்றி தெரிவிப்பது எம் தமிழர்களின் பண்பாடாகும். வருடாவருடம் எமது வலயத்தினதும் வலயப்பாடசாலைகளினதும் சாதனைகளையும் ஆக்கங்களையும் இணைத்து நித்திலம் சஞ்சிகை வெளியிடுவதற்கு உயிரோட்டமான சிந்தனைகளையும் வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கி வரும் எமது வலயத்தின் தலைமை திரு.என்.விஜேந்திரன் அவர்களுக்கு எமது நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துகொள்கின்றோம்.

எமது வலயத்தின் முன்னால் வலயக்கல்வி பணிப்பாளரும் தற்போதய மேலதிக மாகாண கல்விப் பணிபாபாளருமான திரு.ஏ.விஜயானந்தமூர்த்தி அவர்களது தூரநோக்கான நித்திலம் சிந்தனையை நினைவுபடுத்தி நன்றி தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். அதே வேளை CSDI பிரிவின் இணைப்பாளராக இருந்து எமது வலயத்தின் ஆவணப்படுத்தல் எனும் சிறப்புக்குரிய பணியை நெறிப்படுத்திய முன்னால் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி.சி.சிவநிர்த்தானந்தா அவர்கள் எமது கல்வி வலய வரலாற்றில் இடம்பிடித்துக்கொண்டமையை நினைவு கூர்ந்து நன்றி கூறுகின்றோம்.

நித்திலம் எனும் சஞ்சிகையை வருடாவருடம் வெளி வரவும் செல்நெறி காலாண்டு இதழை பாடசாலைகளில் தவிழவிடுவதற்கு பெரும் பங்கினையும் உழைப்பினையும் வழங்கும் எமது அன்புக்குரிய இதழாசிரியர் திரு.ஆர்.நிமலரஞ்சன் உதவிக் கல்விப்பணிப்பாளர் அவர்களை இத்தருணத்தில் முகவரி இட்டு குறிப்பிடுவதிலும் பாராட்டுவதிலும் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இச்சஞ்சிகைக்காக வாழ்த்துரைகளை வழங்கிய கௌரவ கல்வி அமைச்சர் (கி.மா), கல்விச்செயலாளர் (கி.மா), மாகாண கல்விப் பணிப்பாளர் (கி.மா), மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளை பகிர்ந்து கொள்கின்றோம். மற்றும் ஆசிச்செய்திகளை வழங்கிய சர்வமத பெரியார்களுக்கும் எமது நன்றிகள்.

இச்சஞ்சிகையின் உள்ளடக்கத்தில் அடங்கியுள்ள ஆக்கங்களையும் ஆய்வு கட்டுரைகளையும் வழங்கி உதவிய சிரேஷ்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்வியலாளர்கள், பிரதி, உதவி,கோட்ட கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். இக்கல்விச் சஞ்சிகையின் முழுமைப்படுத்தலுக்கு தேவையான நிதியுதவிகளை வழங்குவதற்கு உதவி புரிந்த எமது கணக்காளர் திரு.அன்ரன் நிமலேஷ் அவர்களுக்கும் எமது செயற்பாடு வெற்றியடைய ஒத்துழைப்பு வழங்கிய முகாமைத்துவ உதவியாளர்கள் சிற்றூழியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

இச்சஞ்சிகை நிவர்த்தி பெற செவ்வைபார்த்துதவிய எமது வலயத்தின் ஆசிரிய ஆலோசகர்களுக்கும் அன்புடனான நன்றிகள். மேலும் இன்றைய நிகழ்விற்கு மண்டப ஏற்பாடு உதவிகளை ஒழுங்குபடுத்தி தந்த [redacted] கல்லூரி அதிபர் [redacted] அவர்களுக்கும் அவர்தம் பாடசாலை சமுகத்தினருக்கும் கலை நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி தந்த ஆசிரியர், மாணவர்களுக்கும் நன்றிகள். இம்மலரை அச்சிட்டு வெளியிட்ட அச்சகத்தினருக்கும் மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

[illegible] கோ செல்வநாயகம் (JP)
வலயக் கல்விப் பணிப்பாளர் (திருகோணமலை)
வலயக் கல்வி அலுவலகம், திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TEACHERS, STUDENTS AND PARENTS RAPPORT



It takes a village...of teachers, students and parents working together to help students to reach their potential. This types of collaboration should works well not only in the fields of students' learning process but also students' discipline, health promotion activities, schools' development activities, keeping school environment clean etc.

Strong, positive relationship between teachers, students and parents help to drive the well success of our community and well development of the School.



CSDI Unit Zonal Education Office, Trincomalee.

Print by: New Sky Printers

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org